Ф
6579
Ф. 6579

உ

மீனம்பாள் துணை.

உபேந்திராசாரியார் என்னும்

சைனமாமுனிவர் செய்த

# ஜினேந்திர மாலை,

## மூலமும்—உரையும்.

இஃது,

தஞ்சைமா நகரம்

தி. சாமிநாத ஜோசியரால்

பார்வையிடப்பட்டு,

சென்னை-ஞ்ளை

முனிசாமி முதலியார்

அவர்களால்,

சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1921.

உ

கடவுள் துணை.

# காண்ட அட்டவணை.


| காண்டம் | பக்கம் | காண்டம் | பக்கம் | காண்டம் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| அஃக | 201 | சிவகா | 74 | மங்க | 133 |
| ஆற்று | 198 | சுரிகை | 162 | மாக | 102 |
| உண்டி | 121 | தாது | 62 | மரண | 115 |
| கணைக் | 126 | நட்ட | 85 | மழை | 199 |
| காம | 137 | நலங் | 91 | மாரி | 204 |
| கீழ்நீ | 174 | படை | 182 | முலகா | 71 |
| சகுன | 130 | பிணிங் | 107 | யாத | 192 |
| நில்லி | 163 | மகப் | 141 | | |


அகாண்டட்டவணை-முற்றிற்று.

# செய்யுள் அட்டவணை.


| செய்யுள் | பக்கம் | செய்யுள். | பக்கம் | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அங்க | 78 | அலவ | 93 | ஆடுமே | 121 |
| அங்க | 205 | அலவ | 93 | ஆடுவி | 33 |
| அஞ்ச | 67 | அலவ | 382 | ஆட்டி | 79 |
| அட்ட | 121 | அல்ல | 106 | ஆணைய் | 137 |
| அட்டி | 93 | அவிட் | 190 | ஆணில் | 192 |
| அத்து | 15 | அழலோ | 111 | ஆண்ட | 37 |
| அந்த | 82 | அறை | 166 | ஆதித் | 24 |
| அந்நி | 103 | அற்ற | 139 | ஆய்ந் | 39 |
| அப்போ | 165 | அன்று | 38 | ஆய்ந் | 110 |
| அரச | 81 | ஆங்கா | 76 | ஆய்ந் | 166 |
| அரவ | 104 | ஆடத | 115 | ஆய்ந் | 172 |
| அரவ | 135 | ஆடர | 62 | ஆரல் | 23 |
| அரவ | 162 | ஆடவ | 137 | ஆருட | 95 |
| அரிய | 8 | ஆடிர | 10 | ஆருட | 185 |
| அருக் | 62 | ஆடுகி | 22 | ஆருட | 100 |
| அருக் | 136 | ஆடுதே | 14 | ஆருட | 161 |
| அருக் | 180 | ஆடுதே | 71 | ஆழிசூ | 3 |
| அருங் | 83 | ஆடுதே | 73 | ஆழியு | 39 |

| செய்யுள். | பக்கம். | செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|---|---|
| ஆழ்வா | 66 | உதய | 103 | ஏற்றி | 32 |
| ஆறிர் | 157 | உப்பு | 177 | ஏறிய | 85 |
| ஆறினே | 95 | உமிழ் | 309 | ஏறிய | 146 |
| ஆறின் | 57 | உரைத் | 112 | ஏறிற் | 106 |
| ஆறின் | 183 | உரைத் | 131 | ஏன்ற | 161 |
| ஆனைச் | 83 | உரைத் | 168 | ஐந்தா | 188 |
| இந்தி | 204 | உருந் | 123 | ஐந்தி | 28 |
| இந்து | 148 | உள்ளு | 155 | ஐந்தி | 134 |
| இந்து | 142 | உள்ளு | 165 | ஐந்தி | 163 |
| இயம் | 171 | ஊரு | 93 | ஐந்தி | 183 |
| இயன் | 150 | ஊர் | 88 | ஐந்து | 4 |
| இரட் | 123 | எச்ச | 133 | ஐந்து | 17 |
| இரஸ் | 90 | எடுத் | 207 | ஐந்து | 188 |
| இரவி | 16 | எட்டா | 116 | ஐந்தொ | 100 |
| இரவி | 42 | எட்டா | 119 | ஒத்த | 104 |
| இரவி | 22 | எட்டி | 87 | ஒருங் | 203 |
| இருசா | 20 | எட்டி | 148 | ஒற்றை | 189 |
| இருகு | 130 | எட்டி | 151 | ஒன்பா | 90 |
| இருசு | 314 | எட்டு | 110 | ஒன்பா | 187 |
| இருநி | 197 | எண்ணை | 172 | ஒன்றி | 167 |
| இருபா | 29 | எண்ணை | 304 | ஒன்றி | 195 |
| இருபா | 190 | எப்பா | 96 | ஒன்று | 109 |
| இருபா | 98 | எருத | 115 | ஒன்று | 152 |
| இருமூ | 99 | எருதி | 79 | ஒன்றொ | 305 |
| இறப்பு | 4 | எருதெ | 40 | ஒன்னு | 103 |
| ஈங்கு | 127 | எழுந் | 198 | ஒங்கு | 208 |
| ஈரா | 88 | எழுமோ | 95 | ஒதிய | 106 |
| ஈரிட | 160 | எழுவ | 11 | ஒரை | 87 |
| உச்சு | 38 | எழுவ | 17 | ஒரை | 138 |
| உச்சு | 120 | எறிதே | 33 | ஒரை | 141 |
| உச்சு | 201 | என்று | 167 | ஒரை | 149 |
| உடம் | 99 | என்று | 169 | ஒரை | 158 |
| உடம் | 145 | என்னே | 147 | ஓர்த் | 168 |
| உடும் | 142 | எட்சி | 159 | கடக | 80 |
| உடை | 209 | ஏர்ப | 146 | கடய | 104 |
| உண்ட | 7 | ஏர்பி | 92 | கண்ட | 129 |
| உதய | 18 | ஏழின் | 143 | கண்ட | 147 |
| உதய | 21 | ஏழுமு | 192 | கதிரு | 156 |
| உதய | 101 | ஏழெ | 82 | கதிர் | 40 |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| கதிர் | 40 | கொஞ் | 13 | சென் | 164 |
| கதிர் | 43 | கொட் | 98 | சேய் | 13 |
| கதிர் | 193 | கொட் | 180 | சேய் | 74 |
| கயிற் | 9 | கொட் | 184 | சொல் | 151 |
| கரிய | 178 | கொட் | 203 | சொல் | 171 |
| கருங் | 125 | கொம் | 102 | சொன் | 21 |
| கலக | 78 | கொறி | 31 | சொன் | 196 |
| கலையெ | 88 | கோல் , | 22 | ஞாயி | 119 |
| கவிழ் | 108 | கோல் | 304 | தடமுத | 61 |
| கவிழ் | 187 | கோலி | 80 | தண்ம | 139 |
| கழுத் | 207 | சங்க | 76 | தத்த | 191 |
| காடு | 34 | சந்தி | 32 | தலைநா | 206 |
| காடு | 34 | சந்தி | 73 | தலைநோ | 113 |
| காடு | 34 | சந்தி | 74 | தலைமு | 111 |
| காடு | 35 | சந்தி | 139 | தலையா | 194 |
| காட் | 303 | சந்தி | 153 | தலையா | 205 |
| காண | 150 | சனியெ | 158 | தலையே | 112 |
| காணு | 89 | சார | 176 | தன்னி | 141 |
| காணி | 300 | சாற் | 175 | தன்னி | 200 |
| காய் | 11 | சிவதி | 181 | தன்னே | 163 |
| காரி | 30 | சிரவு | 36 | தாது | 9 |
| காரி 91 காரி | 73 | சிரவு | 97 | தாது | 63 |
| காரி | 135 | சிலையா | 14 | தாது | 63 |
| காரி | 152 | சிறுகு | 94 | தான் | 171 |
| காரி | 174 | சிறுப | 74 | தான் | 86 |
| காரி | 200 | சினங் | 72 | திங்க | 117 |
| கார் | 167 | சீயத் | 79 | திரண் | 143 |
| குடமீ | 174 | சீருடை | 201 | திரிவ | 182 |
| குடங் | 26 | சுடர் | 118 | தீக்கோ | 124 |
| குடங் | 35 | சுமை | 82 | தீக்கோ | 202 |
| குடியோ | 118 | சுழலு | 17 | தீயகோ | 149 |
| குதிரை | 94 | சுழலு | 193 | தீய்க் | 196 |
| குன்று | 185 | சுற்ற | 218 | துத்தி | 31 |
| கூகை | 130 | செங் | 32 | தூதன் | 178 |
| கூம்பு | 28 | செங் | 75 | தூதுவ | 15 |
| கூவத் | 179 | செங் | 179 | தூருகு | 71 |
| கூறுஞ் | 181 | செம் | 66 | தேரோ | 188 |
| கேழ் | 3 | செம் | 101 | தேவர் | 77 |
| கைப் | 122 | செத் | 128 | தேவர் | 126 |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம் |
|---|---|---|---|---|---|
| தொகு | 300 | நெற் | 94 | புந்தி | 21 |
| தோல் | 73 | நேர் | 90 | புந்தி | 92 |
| நட்பா | 105 | பகரு | 169 | புந்தி | 102 |
| நட்பா | 192 | பகலே | 36 | புந்தி | 170 |
| நல்ல | 105 | பகலோ | 90 | பூங்கு | 144 |
| நல்ல | 179 | பகல் | 18 | பூசம் | 154 |
| நல்ல | 109 | பகை | 138 | பூமக | 36 |
| நள்ளி | 198 | பகை | 140 | பூரா | 155 |
| நற்கோ | 162 | படை | 7 | பெண்டி | 11 |
| நன்பொ | 97 | பண்டி | 30 | பொன் | 69 |
| நன்று | 170 | பத்தி | 177 | பொன் | 70 |
| நாக | 16 | பயிர் | 126 | பொன் | 84 |
| நாக | 131 | பாற் | 301 | பொன் | 176 |
| நாக | 303 | பிரிதி | 154 | போத | 37 |
| நாட் | 22 | பருதி | 25 | போற் | 113 |
| நால் | 77 | பனிம | 135 | மக்க | 68 |
| நாழி | 96 | பாக | 182 | மடவா | 145 |
| நாள | 104 | பாக | 186 | மண்ண | 204 |
| நாற் | 27 | பாத | 26 | மதிக் | 159 |
| நாற் | 85 | பாம் | 102 | மதிபொ | 11 |
| நாற் | 92 | பார் | 19 | மதிய | 134 |
| நாற் | 160 | பார் | 105 | மதியர் | 186 |
| நாணு | 29 | பார் | 184 | மதியி | 85 |
| நான் | 142 | பால் | 305 | மதியு | 138 |
| நிலைகொ | 5 | பிணிக் | 108 | மதியு | 144 |
| நிலைகொட் | 5 | பிணியா | 107 | மதிவெ | 99 |
| நிறை | 88 | பிருட் | 11 | மந்த | 26 |
| நிற்ப | 98 | பிருட் | 199 | மரண | 110 |
| நினைத் | 89 | பிறந் | 153 | மரண | 116 |
| நினைத் | 110 | பிறை | 156 | மறிசு | 62 |
| நின்ற | 95 | பின்னெ | 90 | மறம | 89 |
| நின்று | 188 | பீதக | 202 | மன்னி | 197 |
| நின்று | 190 | புகர் | 25 | மாடு | 301 |
| நீசத் | 20 | புகர் | 30 | மாணிக் | 68 |
| நீரா | 124 | புகர் | 193 | மால | 27 |
| நீரா | 199 | புகர் | 81 | மால | 149 |
| நீர்க் | 128 | புகை | 72 | மால | 135 |
| நீர்பி | 175 | புந்தி | 13 | மாறி | 173 |
| நூலைத் | 303 | புந்தி | 20 | மீனம் | 78 |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| முடியா. | 302 | வண்ண | 75 | வில்லே | 199 |
| முந்தி | 133 | வந்த | 8 | வில்லோ | 705 |
| முன்னே | 186 | வந்த | 180 | வில்லோ | 171 |
| மூக்கு | 302 | வந்த | 185 | விளம் | 170 |
| மூதா | 86 | வந்தா | 137 | வினவு | 146 |
| மூதூண் | 21 | வலக் | 209 | வெங் | 67 |
| மூழிம் | 71 | வல்லூ | 131 | வெக் | 133 |
| மூன்றி | 91 | வன்க | 112 | வெஞ் | 301 |
| மூன்று | 100 | வாத | 113 | வெய் | 14 |
| மூன்று | 156 | வாழ்வே | 302 | வெய் | 15 |
| மூன்று | 206 | வாளி | 184 | வெய் | 18 |
| மூன்றை | 187 | வாள் | 108 | வெய் | 24 |
| மேட | 10 | வானோ | 107 | வெள் | 23 |
| மேனோ | 209 | விதிச | 87 | வெள் | 69 |
| யாத் | 192 | ருரும் | 305 | வெள் | 109 |
| யாழ் | 23 | விலங் | 12 | வெள் | 127 |
| வகுக் | 196 | விலங் | 126 | வெள் | 140 |
| வட்ட | 91 | வில்த | 25 | வெள் | 17 |
| வட்ட | 114 | வில்லி | 16 | வெந் | 27 |
| வட்ட | 302 | வில்லி | 80 | வைய | 304 |


செய்யுளட்டவணை

முற்றிற்று.

உ



கடவுள் துணை.

இஃது

# சிறப்புப் பாயிரம்.

உரையாசிரியார்செய்த.

தமது

## வழிபடுகடவுள்வாழ்த்து.

வெண்பா.

சோதிடத்தைசைனமுனி சொற்சினேந்திரநூல்தன்
மாதிடத்தையானுரைக்க வல்லனோ-மாதிடத்தைக்
கொள்ளவரானின்றப் பொருடிருடிக்கொண்டொளித்தக்
கள்ளபிரானின்றுரையாக் கால்.

இதன்பொருள்.

பார்வதாதேவியார் பரமசிவனது இடப்பாகத்தைப் பெருவதற்காக அப்பார்வதா தேவியார்க்குத் தவநிலையாகிய ஞானநெறியை வருவித்தருளிய சப்தகோடி மஹா மந்திரத்திற்கும் முதன் முதற் பொருளாயுள்ள பிரணவமந்திரத்தை ஆதியிலே பரமசிவனிடத்திலே களவுசெய்து அப்பரமசிவனது கண்ணிலேதானே ஒளித்திருந்த மாயாமயக் கள்வனாகிய முருகக்கடவுள் அடியினன் மனத்திலேநின்று சொல்லாதவிடத்துக் கலைக்ஞானம் அறுபத்துநான்கிலுள் ஒன்றாகிய சோதிட சாஸ்திரத்தைச் சைனமாமுனிவா

தமிழிலே மொழிபெயர்த்தாகிய ஜினேந்திரமாலையென்னும் மஹா வல்லபத்தினையுடைய இந்தப் பிரபந்தத்தை உரைசெய்தற்கு என்னுளாந்தரமோ - என்றவாறு. கண்காணுது ஒளித்திருக்கிற ஒருவனை மாயமாய் இருக்கிறுன் என்றற்குகண்ணிலே ஒளித்துக்கொண்டானே என்கிறதுஉண்டு முருகக்கடவுள் பரமசிவனதுகண்ணிலே மெய்மையாகவே ஒளித்துக்கொண்டிருந்தமையால் மாயத்திலே மாயமாய் இருக்கிறுன் என்பதுகொண்டு மேற்படி கடவுட்குமாயம்யான்என்றும் ஒருபெயர் வேதாகமங்களிலே முறையிடுகின்றன ஆகவே மாயாமயக்கள்வனுகிய முருகக்கடவுள் என்று வருவித்துரைத்தாம் இதிலே மாயாமயன்என்றது ஒளித்திருத்தலின் தொழிற்பெயராகவும் கள்வன்என்றதுகளவு செய்தலின் தொழிற்பெயராகவும் முருகக்கடவுள் என்றது நினைப்பித்தலின் தொழிற்பெயராகவும் பொருளமைத்துக்கொள்க, இச்செய்யுள் உரைப்பாடத்திற்குக் கடவுள்வாழ்த்து ஆதலன்றியும் அதற்கே அவையடக்கமும் இந்நூற்குற் சிறப்புப்பாயிரமுமாக வந்தனகாண்க, இந்நூல் நட்டமுட்டிசிந்தனையாம் ஆதலால் நிறுத்தமுறையே களவுசெய்தலின் தொழிலைக்கொண்டும் நினைப்பித்தலின் தொழிலைக்கொண்டும் கடவுள் வாழ்த்தியதாகக்கண்டு கொள்க நட்டமாவது களவுபோன பொருளைக் குறித்துச் சொல்லுவதாம் முட்டியாவது ஒளித்துவைத்து கேட்கின்ற பொருளைக்குறித்துச் சொல்லுவதாம் சிந்தனையாவது நினைத்தபொருளையுங் காரியத்தையுங் குறித்துச் சொல்லுதாம், ஈண்டு கூறிய நட்டமுட்டு சிந்தனையை வடநூலார் (நட்ட முட்டி சிந்தநா) என்பர்.

சிறப்புப்பாயிர முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# ஜினேந்திரமாலை.

மூலமும் - உரையும்.

இஃது

## பாயிரம்

நூலாசிரியர்செய்த

தமது

## ஏர்ப்புடைக்கடவுள்வாழ்த்து.

வெண்பா.

1. ஆழிசூழ்வையத்து மண்டத்துமப்புறத்து
மூழிசூழ்பொய்கடந்த வும்பரினும் வாழியவெ
றென்னரியாவேனத்தரியா னீண்டொழியா வெவ்வுயிர்க்குந்
தன்னளியான் மாதஞ்சரண்.

இதன்பொருள் கடல்சூழ்ந்த பூமி-அந்தரசுவர்க்கம் - என்கிற திரிலோகங்களாலும் ஆகாமிய சஞ்சித பிராரத்தவம்என்கிற மும் மலங்களாகச் சூழ்தற்பெற்ற-ஸ்தூல-சூக்ஷம-காரணம் என்கின்ற சரீரத்திரயத்தையும் வெறுத்த மகத்துக்களாலும் மனத்தினலே தியானிக்கவும் வாக்கினலே துதிக்கவும் அரிதானவனும் அளவற்ற ஜீவகோடிகளை பாதுகாக்குதற்குறிய சீவகாருண்யனும் ஆகிய அருகதேவனது திருவடிகளை எடுத்தநூல் குறைவின்றி முடிதற் பொருட்டு வணங்குகின்றனன்—எ-று. மனத்திலே தியானிக்கவும் வாக்கினலே துதிக்கவும் அரிதாதலின் காயத்தினலே வணங்குவ தும் என்பது கருத்து. 1

அவையடக்கம்.

2. கேழ்வலியஞானத்தின் கேழ்விவழியொழுகி
மேலைசூமென்ஞான்று முற்றுணர்ந்த-நாவலர்தம்

பாதஞ்சரணைப் பாத்தொடுப்பன்பன்னூலின்
வேதத்துண மெய்ப்பொருளையான்.

இ-ள். அறம்-பொருள்-இன்பம்-வீடு-ஆகிய நான்கையுங் கேள்வியுற்று அவற்றின்வழியே நடந்து பூமி-அந்தர-சுவர்க்கப்-என்கிற திரிலோகங்களினும் பூத-பவிஷ்ய-வர்த்தமானம் என்கின்ற திரிகாலங்களினும் உள்ளசுகத சுவஜாதி-விஜாதி-ஏன்கிற திரிவித பேதங்களையு முணர்ந்த ஒப்பற்ற ஞானமிகுந்த ஆரூடத்தியானிகள் திருவுளம்பற்றிய சோதிடநூற்களின் கருத்துகளிலே சிலவற்றை எடுத்து அடியனேன் எனது சிற்றறிவினாலே பாடத்தொடங்குகின்ற மதப்புதிர அவர்களது திருப்பொற்பாதத்தை முடிசூட்டுதும்-எ-று. 2

நூற்பெயர்.

3. இறப்புநிகழ்வெதிர்வென் றிம்மூன்றுகாலத்
திறப்பிற்சுபாசுபங்கடேர்ந்து திறப்படுப்பன்
சேலனையகண்மடவாய் சீரார்சினேந்திர
மாலையெனும்பேரிதனுள் வைத்து.

இ-ள். பூத-பவிஷ்ய வர்த்தமானம்என்கின்ற திரிகாலங்களின் வழியேமக்கட் பரப்பிற்குவருகிற சுகதுக்கங்களை எளிதிலே தெளிந்து கோடற்குச் சோதிடநூற் பலவற்றினுமுள்ள கருத்துக்களை ஆராய்ந்தெடுத்து சினேந்திரமாலை என்றொரு பெயரிட்டு இந்நூலைச் சொல்லுதும் எ-று. சேலனையகண்மடவாய் என்றது மகடூஉ முன்னிலை. 3

இந்நூற்கு அதிகாரியை உணர்த்துகின்றது.

4. ஐந்துமறிந்துமில நால்வலிதறிந்து
வந்தகயிற்றின் வரவறிந்து முந்திக்
கவிப்பதனையோர்ந்துதயங் கண்டிவற்றுணைக்குஞ்
சவுத்தறிவான் மன்னுயிர்க்குத்தாய்.

இ-ள். காண்டப்பொழிப்பாகிய ஆரூடமுங் கவிப்பும் உதயமும் நோக்கும் நட்பாச்சியுச்சம் பகைநீசங்களின் கோணங்களுங் கங்கண்டங்களும் வலிதும் சாங்கோபாங்கமாகத்தானே தெரிந்துக்கொள்ள ஒருவன் இந்நூற்கு அதிகாரியாம் எ-று. இதிலே

காண்டப்பொழிப்பாகிய ஆரூடம் முதலிய எட்டையும் வைத்துக் கூறியமுறை ஆரூடத்தைக் கண்டாலல்லது உதயத்தைக் காணுதல் அவசியம் இல்லை ஆதலால் ஆரூடத்தை முன்னும் உதயத்தைப் பின்னுமாக வைத்து ஆரூடமும் உதயமுமாகிய இரண்டையுங்கண்டாலல்லது கவிப்பைக்காணுதல் இயல்பாகவேயில்லை ஆதலால் இக்கவிப்பை மேற்படி ஆரூடத்திற்கும் உதையத்திற்கு இடையிலேவைத்து இம்மூன்றையுங் கண்டதற்பின் நோக்குகாணுதல்வேண்டும் ஆதலால் நோக்கை உடன்வைத்து இங்ஙனமே காணப்படுவதாகிய நட்பாச்சியுச்சம் பகைநீசங்களுங் கோணங்களும் கண்டங்களும் வலிதம் ஆகிய இவைகளைச் சிங்கநோக்காக உடனுக்குடன் என்கிற முறையேவைத்துக் கூறினார் இவற்றுள் ஆரூடத்தை முதலிலேவைத்தார் என்றதற்கு வந்தயிற்றின் வரவறிந்து முந்தி என்பதனாற் காணப்படும் ஐந்தும் என்றது நட்பாட்சியுச்சம் பகைநீசங்களும் என்றுபொருள்பட்டு எதிரதுதழீஇய உம்மை யெச்சமாக நிற்றலால் கோணங்களும் என்பதுபெற்றும் சவுத்துஎன்றது முன்விதமாகவே காண்டங்கட்கு முதலிலே காணவேண்டுவதாயுள்ள காண்டப்பொழிப்பிற்குப் பெயராயிற்று முடிதலின்றிக் கெட இருக்கின்றமையைத் தெரியாமையினாலே முடியுமென்பதுகருதி செய்யத்தொடங்குகின்றவர்களைக்நோக்கி இந்நூற்கு அதிகாரியானவன் அவைமுடிதலேயின்று அவற்றைத் தொடங்காதீர்களென்று பிள்ளைகட்கு புத்திசொல்லுந் தாய்போலயிருந்து அவலமான காரியங்கட்கு விலக்கிவிடுகின்றமையால் மேற்படிநூற்கு அதிகாரியைத்தாய்போலுளன் என்பார்போலமன்னுயிர்க்குத்தாய்என்றார்.

இதுவுமது.

5. நிலைகொடிக்காண்பெண்ணே டொற்றையிரட்டை
குலங்கள்வண்ணங்கள்வடிவுகோடு நலங்கொள்
கதிரளவுகாதம்பிராயஞ் சுவைகண்
முதிர்வடிவுபக்க மொளிவும்.

இதுவுமது.

6. நிலைகொட்பிருமாண்பினஞ் சேர்விடமு
முலையாவிராப்பகலுமோர்ந்து தொலையாத
காலம்பொழுதறிந்து கட்டுரைப்பானன்றுங்கடவுட்
பாலங்குவைக்கற்படும்.

இவை- -ம் ஒருதொடர்.

இ-ள். காண்டப்பொழிப்பாகிய. திசையும் ஆண்பெண்ணும் ஒற்றை இரட்டையுங் குலமும் நிறமுங்காலும் வடிவும் விலங்கின் கொம்புங் கதிரும் அளவுங் காதமும் வயதுஞ் சுவையும் மறுவடுக்களும் வலம் இடமும் ஒளிவும் நிற்பனகழல்வன நிற்பனவற்றோடு சுழல்வனவும் நடப்பன பறப்பன தவழ்வனவுஞ் சேர்விடமும இரவுபகலும் வருஷாதிகால கணிதமுஞ் சாங்கோபாங்கமாகத்தானே தெரிந்துள்ள ஒருவன் இந்நூற்கு அதிகாரியாம் எ-று தங்கடங்கட்கு நேரிட்ட மகத்தாகிய விபத்துக்களினாலே பீடித்துக்கசாகரத்திலே மூழ்கிக்கிடந்து உழைத்துக் கோடலையன்றியும் இன்னம் யாதுவிளைய இருக்கிறதோ காண்கிலோமே யென்று விதிர்விதிர்த்து நெட்டுயிர்ப்பெய்து நிலைகுலைந்து தத்தளிக்கின்ற மானிடர்பலரையுநோக்கி இந்நூற்கு அதிகாரியானவன் இத்தனைநாளிலே சுகப்படவே போகின்றனிர்கள் பயப்படாதீர்களென்று கையமர்த்தலானது அன்பர்கட்கிரங்கி அபயாஸ்தங்கொடுக்குங் கடவுளைப்போலயிருத்தலால் மேற்படி நூற்கு அதிகாரியைக் கடவுள்போலுளன் என்பார்போலக் கடவுட்பாலங்குவைக்கற்படும் என்றார் மேற்படி அதிகாரியைத்தாய்போல்வன் என்றதுங் கடவுள்போல்வன் என்றதும் உண்மையேயாகினும் அதனை இங்கே கூறுதல் யாதின்பொருட்டோவெனில் தாயினிடத்துப் பிள்ளைகட்குங் கடவுளினிடத்து அன்பர்கட்குஞ்சிரத்தை உண்டாதல்போல ஆரூடசாஸ்திரிகளிடத்து ஆரூடங்கேட்க வந்தோர்கட்கும், அஃது உண்டாதல்வேண்டுமென்பதின் பொருட்டாம், அஃது உண்டாதல் வேண்டுமென்பதுதான் என்பயனைக்குறித்தோவெனில் திரத்தையில்லாதார்க்கு வேதமே பொய்க்குமென்று மகத்துக்கள் சொல்லியிருக்கின்றனையால் வேதசாஸ்திரங்களாயுள்ள வேதாந்தம்-ஜோதிஷம்-மணிமந்திரம் ஔஷதமுதலிய அனைத்தும் பொய்த்துப்போம் என்றதற்குஞ்சமுசயமுளவோ என்பது தெளிந்து கோடலின் பயனைக்குறித்தாம் ஆகவே நவக்கிரக தேவதைகளின் நைவேத்தியத்திற்கு வேண்டுவனவும் ஆரூடகாணிக்கையுங் கொணர்தலின்றிப் பகிடிசெய்ய வருவார்போல வெறுங்கையோடே வருகின்ற வஞ்சகர்களாகிய சிரத்தையில்லாதார்க்கு ஆரூடஞ்சொல்லா தொழிதல் வேண்டுமாகத்

காண்டப்படைப்பு உணர்த்துகின்றது.

7. தாதுமூலஞ்சீவன்றன்னை மிகவேயுணர்ந்
தேகமிலர்க்கேட்டல்பிடித்தனவு நீதியாற்
சிந்தைபொருட்பேறழிவுதீங்காய நோய்மரணம்
வந்தவகையாலுரைப்பன் மாண்பு.

இதுவுமது.

8. உண்டனவுங் கண்டகனுச் சகுனமோதுமணங்
கண்டவசிகரமாங் கட்டுரையுங்கொண்ட
மகப்பேறுவள்சுரிகை சல்லியங்கீழ்நீர்
மிகத்தெரியயானுரைப்பன் மெய்.

இதுவுமது.

9. படைத்திறமும்பல்பொருட்குப் போயினர்பாரமே
னடைத்திறமுந்நாடிநயந்து கொடைத்திறத்த
வாறுமழையஃகங் கலம்வரவுமாகிமித்தங்
கூறுவன்யானிந்நூட் கொண்டு.

இவை 3-ம் ஒருதொடர்.

இ-ள். முதலாவது தாதுகாண்டமும், 2-வது மூலகாண்டமும் 3-வது சீவகாண்டமும், 4-வது நட்டமுட்டி சிந்தனைகாண்டமும் 5-வது நலந்தீங்குகாண்டமும் 6-வது பிணிக்காண்டமும் 7-வது மரணகாண்டமும் 8-வது உண்டிகாண்டமும் 9-வது கனுக்காண்டமும் 10-வது சகுனகாண்டமும் 11-வது மங்மலகாண்டமும் 12-வது காமகாண்டமும் 13-வது மகப்பேறுகாண்டமும் 14-வது சுரிகைகாண்டமும் 15-வது சல்லியகாண்டமும் 16-வது கீழ்நீர்காண்டமும் 17-வது படைவரவுகாண்டமும் 18-வது யாத்திரைகாண்டமும் 19-வது ஆற்றுநீர்வரவுகாண்டமும் 20-வது மழைவரவுகாண்டமும் 21வது அஃகமசிவுகாண்டமும் 22-வது மரக்கலவரவுகாண்டமும் 23-வது மாகிமித்தகாண்டமும் என்று இன்னமாகவைத்து இந்நூலை முடிக்குதும்-எ-று.

பாயிர முற்றிற்று

---

## நூல்.

## இஃது

## காண்டப்பொழிப்பு.

காண்டப்பொழிப்பு 29-னுள் முதலும் மூன்றுவதுமாகிய ஆரூடமும் உதயமும் முறையே வினவிநின்ற இராசியும்வினவினபோது உதித்த இராசியுமேஎன்று தானே தோன்றுகின்றமையால் அவ் 2-யு மொழித்து மற்றுள்ள கவிப்புமுதலிய 27-யும் நிறுத்த முறையே தனித்தனி தெரிவிப்பான் தொடங்கிக்கவிப்பிற்கு ஆதாரமாயுள்ள சூரியவீதியை முன்னே தெரிவிக்கின்றனர்.

10. அரியலவன்றண்டெருது மேடமாம்வாய்ந்த
வரிசிலைதேண்மான்குடந்தண்டாகுந் தெரியுங்கா
லாடுமீன்கோல்கன்னி யாமேறதென்பரே
நீடிரவிவீதி நிலை.

இ-ள். சூரியன் வைகாசி ஆனி ஆடி ஆவணிகளில் மேஷத்தின் வழியேபோந்து சஞ்சரிப்பான் ஆதலால் அந்தமாதங்கள் 4-லும் மேஷத்தையும் கார்த்திகை மார்கழி தை மாசிகளில் மிதுனத்தின் வழியேபோந்து சஞ்சரிப்பான் ஆதலால் அந்தமாதங்கள் 4-லும் மிதுனத்தையும் சித்திரை புறட்டாசி ஐப்பசி பங்குனிகளில் ரிஷபத்தின் வழியேபோந்து சஞ்சரிப்பான் ஆதலால் அந்தமாதங்கள் 4-லும் ரிஷபத்தையுஞ் சூரியவீதியாகச் சொல்லப்படும் எ-று. சூரியவீதியாகிய மேஷவீதி மிதுனவீதி ரிஷபவீதிகளை முறையேவடனூலார் (உத்தராயநம்) (தக்ஷணாயநம்) (பூர்வாயநம்) என்பர் காண்டப்பொழிப்பு என்றது என்னப்பெயர்த்தோவெனில் தாதுகாண்டம் முதலிய 28-காண்டங்கட்கும் உள்ளதொகைப்பொருள் என்கிற பெயர்த்தாம். 1

### கவிப்புதெரிவிக்கின்றது.

11. வந்தகயிற்றைமகிழ்ந்தெழுமட்டாயெண்ணி
யுந்தியுதயத்தை யோர்ந்ததனைச்சிந்தித்து
நாடிக்கொணர்ந்தெண்ண நண்ணுமவன்றன்னைக்
கூடிக்கவிக்குங் குடை.

(இ-ள்.) ஆரூடத்தைப் பிடித்துச் சூரியவீதிமட்டாக யெண்ணியவெண்ணின தொகைக்குஉதயத்தை பிடித்தெண்ணக்கண்ட இராசிபடி ஆரூடத்தைக்கவிப்பாதம். அங்ஙனங் கவிக்கப்படுதலால்அஃது கவிப்பென பேர்பெரும் எ-று. ஆரூடம் என்பது என்ன பெயர்த்தோவெனில் ஒருவன்வந்து ஏற நின்ற இராசி என்கிற பெயர்த்தாம் அதனைக் கயிறென்றது யாதுகாரணத்தோ வெனில் நட்டமுட்டிசிந்தனை 3-ம்ஆரூடத்தின் வயமாகநெகிழ்வின்றிக்கட்டுண்டவையேபோல இருத்தலால் அவ்வாரூட மானது கயிறே போல்வதாம் என்கிற காரணத்தாம் ஒருவன் வந்து ஏறி நின்ற இராசியை ஆரூடமாகப் பிடித்தெண்ணவேண்டியதற்கு நிதானித்தலிலே வித்தியாசப்பட்டு வீணேகாணுற்ற வேறோரிராசியை ஆரூடமாகப் பிடித்தெண்ணவே கவிப்பும் வேறோரிராசியாகப் பிறழ்ந்து போம் ஆதலால் ஒருவன்வந்து ஏறி நின்ற இராசியை மிகவும் நிதானித்தல் வேண்டும் என்பார்போல வந்தகயிற்றைஎன்றுஎச்சரித்தனர் எள்ளநாழிகையிற் பிசகிவிடினும் உதயம் பிறழ்ந்துபோம் உதயம் பிறழ்ந்துபோகவே கவிப்பும் முன் ஆரூடத்திற்பிறழும் என்றது போலப் பிறழ்ந்து போதலன்றியுங் கோணங்கள் பிறந்து போம் கோணங்கள் கண்டங்கள் பிறழ்ந்து போகவே வலிது பிறழ்ந்துபோம் வலிதுபிறழ்ந்து போகவே இரவும் பகலும்வருஷாதிகாலகணிதமும்ஆகிய இவைமுதலிய மற்றெல்லாம் பிறழ்ந்து போம்ஆதலால் ஆரூடத்தைப் பார்க்கினும்உதயத்தைப் பலவாறு சோதித்தல்வேண்டும் என்பார்போல உதயத்தை ஓர்ந்து அதனைச்சிந்தித்துஅதனைநாடிஎன்று முக்காலும்எச்சரித்தனர் இச்செய்யுளின் உரைகோடலைஇன்னமும் விரிக்கிற் பெருகும் ஆரூடங்கவிப்பு உதயம்ஆகிய இவற்றை முறையேவடநூலார் ஆரூடঃ (ந்திரঃ) (உதயঃ) என்பர்.

## கவிப்பிற் கெதிரிடை

தெரிவிக்கின்றது.

12 கயிற்றினுதயங்கருதுகின்றவீதிப்
பயிற்றியவெண்ணோர்பாதியாக்கிக்-குயிற்றிய
வேட்சிதொட்டெண்ண விதுவுங்கவிப்பென்பா
மாட்சியின்மிக்கோர் மதித்து.

(இ-ள்.) ஆரூடத்தைப் பிடித்து சூரியவீதிமட்டாக எண்ணி அவ்வெண்ணினதொகைப் பேர்ப்பாதிக்குஉதயத்தைப்பிடித்தெண்ணக்கண்ட இராசிஷெ ஆரூடத்தைக் கவிப்பதாம் ஆகவே இஃதுங் கவிப்பாகவே யூகிக்கப்படும் எ-று. இச்செய்யுளிலே எழுச்சி என்றது எட்சி என்று வலிக்கும்வழி வலித்து உடனே எட்சி யென்று நீளும்வழிநீண்டு அஃது எழுதல் காரணமாயுள்ள உதயத்திற்குப் பெயராயிற்று (3)

உதயகவிப்பு தெரிவிக்கின்றது.

13. மேடத்திடப மிடபத்துமேட்மே
நாடுமியாழலவன் சிங்கத்திற் காடாகுங்
கன்னிகோற்கேறு கவிக்குந்தேள் வின்மான்சால்
பன்னுமியாழ்மீற் கெருதுபார்

(இ-ள்.) மேஷத்திற்கு ரிஷபமும் ரிஷப மிதுன கடக சிம்பங்கட்கு மேஷமும் கன்னி துலாங்கட்கு ரிஷபமும். விருச்சிக தனுசிமகரகும்பங்கட்கு மிதுனமும் மீனத்திற்கு ரிஷபமும். உதயகவிப்பாம் எ-று. இன்னதனைக்கவிக்கும் என்னுதுகவிக்கும் என்று, பொதுப்படச் சொல்லிஞராயினும் முன்னே ஆரூடக்கவிப்பு சொல்லி யிருக்கின்றமையால் இஃது உதயகவிப்பு என்பதுபெற்றும் இஃது உயதகவிப்புஎன்றற்கு பீமேசுரத்திலுங் காணப்படும் இவ்விதி சூரியவீதியால் விதிக்கப்பட்டன யென்பதுங் காண்க. உய்யவந்தானிற்சொல்லிஇருக்கிற உதயகவிப்பாவது உதயமானது தன்னைத் தானே இரண்டரை நாழிகையும் 12-மிராசி இரண்டரைநாழிகையுமாகக் கவிக்குமென்பதாம். (4)

அதனையேவேறொருவகையால்எடுத்துக்
காட்டுகின்றனர்.

14 ஆடிரண்டேறீரா றுமியாழ்பதினொன்றையிருளெண்
டோடரிபெண்ணொன்பானெட்டோர் துலைதே-டேட்டிச்
சிவக்குஞ்சிலையேழ்மாறு றுங்குடமைந்துங்
கவிக்குமீன்முன்றெண்ணிக்காண்.

(இ-ள்.) மேஷத்திற்கு 2-மிராசியும் ரிஷபத்திற்கு 13-மிராசியும் மிதுனத்திற்கு 11-மிராசியும் கடகத்திற்கு 10-மிராசியும் சிம்பங் கன்னிகட்கு 9-மிராசியும் துலாம் விருச்சிகங்கட்கு 8-மிராசியுந் தனுசிற்கு 7-மிராசியும் மகரத்திற்கு6-மிராசியுங்கும்பத்திற்கு

மிராசியும் மீனத்திற்கு 3-மிராசியும் உதயகவிப்பாம் இஃது முற்கூறியதேயாம் எ-று. எண்ணிக்காண் என்றமையால் முற்கூறியதேயாம் என்பது பெறப்பட்டது இச்செய்யுள் இரட்டித்துக்கூறியதாம் இங்ஙனமாகிய செய்யுட்களை வடநூலார்(கௌசிகம்) என்பர். (5)

நிறுத்தமுறையே நோக்கு தெரிவிக்க வந்தவர் நோக்கிற்குத் துணைக்காரணமாயுள்ள விழிப்புகாலந் தெரிவிப்பான் தொடங்கி அவ்விழிப்புகாலமுந் தெரிதற்கு ஏதுவாகிய சிரோதய பிருட்டோதய சிரபிருட்டோதயங்களை முன்னே தெரிவிக்கின்றனர்.

இராசிகளிலே சிரோதய பிருட்டோதய சிரபிருட்டோதயங்கள்.

15 பெண்டீருந்தேளும் பெருங்குடமுஞ்சீயமுந்
தண்டுந்துலையுந்தலையிலெழு-ஞெண்டுஞ்
சிலையாடெருதுசுற வெழும்பும்வாலாற்
றலைவாலுடனெழுமீன்றான்.

(இ-ள்.) மிதுனஞ்-சிம்பங்-கன்னி-துலாம்-விருச்சிகங்-கும்பம்-இவை-ஆறுஞ் சிரோதய விராசிகளாம் மேஷம ரிஷபங் கடகந் தனுசு மகரம் இவையைந்தும் பிருட்டோதய விராசிகளாம் மீனஞ் சிரபிருட்டோதய விராசியாம் எ-று. (6)

கோட்களிலே சிரோதய பிருட்டோதய சிரபிருட்டோதயங்கள்.

16 காய்ந்தகதிரவன்சேய் காரியும்வாலிலெழும்
வாய்ந்தபுகருடன் மான்மந்திரியு-மேந்தரவு
நாலுந்தலையிலெழுநன்மதியுங்கேதுவுமே
வாலுந்தலையிலெழுமாம்.

(இ-ள்.) புதன்-குரு-சுக்கிரன்-இராகு-இவைநான்குஞ் - சிரோதய கோட்களாம் சூரியன் - அங்காரகன்-சனி - இவைமூன்றும் பிருட்டோதய கோட்களாம் சந்திரன்-கேது இவையிரண்டுஞ்சிரபிருட்டோதயக் கோட்களாம் எ-று. (7)

இராசிகளுடையதுங் கோட்களுடையதும் ஆகிய விழிப்புகாலம்.

17 பிருட்டத்துதயமல்லிற் கண்ணும்பகற்கண்
சிரத்துதயமாமென்னிலாகு-முரைத்த

விருபோதுங்கண்சிரபிருட்டத்துதயந்
திரமாகச்சொற்றூரதெரிந்து.

(இ-ள்.) சிரோதய விராசிகளுடையதுங் கோட்களுடையது மாகிய விழிப்புகாலம் பகற்காலமாம் பிருட்டோதய விராசிகளு டையது கோட்களுடையது மாகிய விழிப்புகாலம் இராக்கால மாம் சிரபிருட்டோதய விராசியுடையதுங் கோட்களுடையது மாகிய விழிப்புகாலம் பகற்காலம் இராக்காலமென்னு மிரண்டு காலமுமாம் எ-று. (8)

இராசிகளின் நோக்கத்தியல்பு தெரிவிக்கின்றது.

18 விலங்குவிலங்குநேர்நோக்குமாமக்கள்
கலங்காதுசெவ்வனேகாணுங் கலங்காது
காட்டிடமேனோக்கும் பறவைதவழ்வனவா
நீட்டிவைக்கணோக்குநிலை.

(இ-ள்.) இருகாலிராசிகள் மக்கள் நோக்குதல்போல எதிரே நோக்கும் நாற்காலிராசிகள் விலங்குகள் நோக்குதல் போலப் பக் கங்களை நோக்கும் சிறகுக்காலிராசிகள் பறவைகள் நோக்குதல் போல மேல் நோக்கும் பலகாலிராசிகள் தவழ்வன நோக்குதல் போலக் கீழ்நோக்கும் எ-று. பக்கங்களாவது வலம் இடம்பின் னாகியமூன்றுமாம் எ-று. (9)

கோட்களின் நோக்கத்தியல்பு தெரிவிக்கின்றது.

19 மதிபொன்னெதிர்முகநோக்குமேனோர்க்குங்
கதிர்சேய்கடைக்கண்ணோக்கு-மதிராத
பாகன்புகர்கவிழ்ந்து நோக்குமாம்பாம்புசனி
யேகவிழிநோக்குமென்.

(இ-ள்.) சந்திரன்-குரு இவை இரண்டும் எதிரேநோக்கும்அங் காரகன் பக்கங்களிலே நோக்கும்-சூரியன மேல்நோக்கும் புதன சுக்கிரன இவையிரண்டுங் கீழ்நோக்கும் சனிபாம்பு இவையிரண் டும் எவற்றினும் படாதவகையிற்சாய்வாகநோக்கும் எ-று.சாய்வு எனறது முற்கூறிய பக்கங்கள் மூனறிற்குஞ் சார்பாகிய பக்கங்க ளாம் இராசிகளைப்போல அவையவையாக நோக்கும் இயல்பு கோட்களுக்கு இல்லாமையால் கோட்களைப்பிரித்துக் கூறினமை யாகக்கொள்க எ-று. (10)

இராசிகளுடையதுங் கோட்களுடையது மாகிய
நோக்கின் கணிதங் குறிக்கின்றது.

20. எழுவதுமேழுமுழுநோக்கைந்தொன்பான்
வழுவாவரைநான்கீரைந்துந்-தழுவாத
முக்கால்பதினொன்றுமூன்றுமேகாஞெக்கா
மெக்காலுநோக்கத்தினெண்.

(இ-ள்.) இருப்பிடமும் 7-மிடமும் முழுநோக்கு யென்றும் 4-மிடமும் 10-மிடமும் முக்கால் நோக்கு என்றும் 5-மிடமும் 9-மிடமும் அரைநோக்குபென்றும் 3-மிடமும் 11-மிடமும் கால் நோக்குயென்றும் 8-மிடம் அரைக்கால்நேகேகுயென்றும் இராசிகளுடையதுங் கோட்களுடையதுமாகிய நோக்கின கணிதங்குறிக்கப்டுபம் எ-று. 8-மிடம் அங்காரகனுக்கு நோக்காம் என்பது பிரசித்தப்பட்டிருந்தும் 8-மிடம் நோக்கின் கணிதத்தைகுறிக்காது விலக்கி வைத்ததிலே அக்கணிதஞ் சிறப்பின்மை யதாகப் பொருள்பட்டு 8-மிடம் அரைக்கால்நோக்கு என்று வருவித்துரைத்தாம் இதிற்கூறியநோக்குகள் இவ்விவை இவ்விவைகட்காம் என்பதுமேலேசொல்லப் புகுகின்ற நோக்கு வலிதிலே காணப்படும் (11)

நட்புக்கோட்கள்.

21, செய்க்குப்புதன்புகராஞ் செய்மால்சுன்பொன் புகர்க்காம்
வாய்த்தபொன்னேரவிக்காமந்தனுக்கு-வாய்த்த
புகர்புலவன்பொன்மதிக்குப்புந்தியுடன்பொன்னும்
பகரபுலவர்நட்புரைத்தபாங்கு.

(இ-ள்.) சூரியனுக்கு குரு சந்திரனுக்கு புதன் குரு இவையிரண்டும் அங்காரகனுக்குப்புதன சுக்கிரன இவை இரண்டும் சுக்கிரனுக்கு அங்காரகன புதன குரு சனி இவைநானகும் சனிக்குப் புதன குரு சுக்கிரன இவைமூனறும் நட்புக் கோட்களாம் எ-று

இதுவுமது.

22. புந்திகதிர்வெள்ளிமதி பொனனுக்குநட்பாகு
மந்தனபொனவெள்ளிசெய் மாமதியும்-புந்திக்
குருவாகுமெனறுரைப்ப ரொள்ளியநூல்வல்ல
வறிவாளர் நட்பதனையாய்ந்து.

(இ-ள்.) புதனுக்குச் சந்திரன அங்காரகன குருசுக்கிரன சனி இவையைந்தும் குறுவுக்குச் சூரியன சந்திரன புதன சுக்கிரன இவைநான்கும் நட்புக் கோட்களாம் எ-று. (13)

நட்பிராசிகள், :

23. கொச்சைவிற்றேண்மான்குடமேறுகோலவன
மெச்சியமேதைக்காம்வெள்ளிக்குக்-கொச்சை
சிலையாய்குடந்தேண்மானபொனனுக்கெருது
துலையாழ்குடமரிமாது,

(இ-ள்.) புதனுக்கு மேஷம் ரிஷபங் கடகந் துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் இவையெட்டும் குருவுக்கு ரிஷபம் மிதுன ஞ்சிம்பம் கனனி துலாம் கும்பம்இவையாறும் சுக்சிரனுக்குமேஷ ம்மிதுனம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் இவையாறும் நட்பி ராசிகளாம் எ-று. (14)

இதுவுமது,

24. சிலையாழரிவைமீனேறுசனிநட்பு
சிலமீனகதிர்க்குசெவ்வாய்க்கேறு-துலையாழ்பெ
ண்ட்பாகுஞ்சோமறசியாழ்மீனறனுகசினனி
யுட்காய்பினுள்ளூறவென்றோது.

(இ-ள்.) சூரியனுக்குத் தனுசு மீனம்இவையிரண்டும் சந்திரனு க்கு மிதுனம் கனனி தனுசு மீனம் இவைநானகும் அங்காரகனு க்கு ரிஷபம் மிதுனங் கனனி துலாம் இவைநானகும் சனிக்கு ரிஷபம் மிதுனங் கனனி தனுசு மீனம் இவையைந்தும் நட்பிரா சிகளாம் எ-று.

ஆட்சி இராசிகள்,

25. ஆடுதேள் செவ்வாய்க்கடலேறு கோல்புகர்க்காம்
பாடுமியாழ்கனனியிவைபாகறகா நீடுஞ்
சனிகலைசால்பொனகயல்வில் சாற்றுகதிர்சியம்
பணிமதியநெண்டாம்பகர்.

(இ-ள்.) சூரியனுக்கு சிம்பமும் சந்திரனுககு கடகமும் அங் காரகனுக்கு மேஷமவிருச்சிகம் இவையிரண்டும் புதனுக்கு மிது னங் கனனி இவையிரண்டும் குருவுக்கு தனுசு மீனம் இவையிண் டும் சுக்கிரனுக்குரிஷபந்துலாம் இவையிரண்டும் சனிக்கு மகரங் கும்பம் இவையிரண்டும் ஆட்சியிராசிகளாம் எ-று. (16)

உச்சவிராசிகள்.

26 வெய்யோன்மதியூர்கோள் விற்கிழவட்றாமங்
கையார்கணக்கன்சனிப்பாம்பு-செய்ய
சிலைபதுசேய் நட்பஞ்செழும்புகர்க்காடாதி
யுலையாதவுச்சமெனவோர்.

(இ-ள்.) சூரியனுக்கு மேஷமும் சந்திரனுக்கு ரிஷபமும் பரிவேடத்திற்கு மிதுனமும் குருவுக்குக் கடகமும் தூமத்திற் குச்சிம்பமும் புதனுக்குகன்னியும் கன்னிக்குத் துலாமும் பாம் பிற்குவிருச்சிகமும் இந்திரதனுசிற்குத் தனுசும் அங்காரகனுக்கு மகரமும் நட்பத்திற்குக்கும்பம் சுக்கிரனுக்குமீனமும் உச்சவிரா சிகளாம் எ-று. (17)

உச்சவிராசிகளில் அத்துச்சபாகங்களைப்
பிரித்துக்காட்டுகின்றனர்.

27 அத்துச்சமென்பதணியிழையாய்டாதி
பத்துமூன்றைந்து பதினைந்து-மெய்திலகு
பத்திரட்டிநான் கேழிருபத்தேழாம்படைப்பு
வித்தகத்தார்சொற்றவிதி.

(இ-ள்.) மேஷத்திலே 10-ம் பாகம் சூரியனுக்குரிஷபத்திலே 3-ம் பாகம் சந்திரனுக்கும் கடகத்திலே 5-ம் பாகம் குருவுக்கும் கன்னியிலே 15-ம் பாகம் புதனுக்குத்துலாத்திலே 20-ம் பாகம் சனிக்கும்மகரத்திலே 28-ம் பாகம்அங்காரகனுக்கும் மீனத்திலே 27-ம் பாகம் சுக்கிரனுக்கும் அத்துச்சபாகங்களாம் எ-று. மிது னத்திலேபரிவேடத்திற்குஞ் சிம்பத்திலே தூமத்திற்கும் விருச்சி கத்திலே பாம்பிற்கும் தனுசிலேஇந்திரதனுசிற்கும் கும்பத்திலே நட்பத்திற்கும் முதன்முதற் பாகங்களே அத்துச்சபாகங்களாம் ஆதலால் இவற்றைப்பிறித்தற்கில்லையாகச்சொல்லாதொழிந்தன ரென்றுகண்டுகொள்க. (18)

பகைகோட்கள்.

28 வெய்யவர்குத்திக்கள்சேய் வெள்ளிபுதன்காரி
செய்யவற்குப்பொன்கதிரோன் றிங்கள்சனி-தூய
மதிக்குக்கதிர்வெள்ளி வக்கிரக்கோணீலன்
கெரதிக்கும்பகையாகக் கூறு.

(இ-ள்.) சூரியனுக்குச்சந்திரன அங்காரகன புதனசுக்கிரனசனி இவை 5-ம் சந்திரனுக்குச் சூரியன அங்காரகன சுக்கிரன சனி

இவை 4-ம் அங்காரகனுக்குச் சூரியன சந்திரன குரு சனி இவை 4-ம் பகைக்கோட்களாம் எ-று. (19)

பகைக்கோட்களும் பகை யிராசிகளும்.

29 தூ துவற்கு வெய்யோனசுடரோன்மதிபுகர்க்குப்
பீதகற்குச்சேய்சனி பெரும்பகையொ-நீதியார்
புந்திபுகர்பொனனொழியவெல்லாம்பகைசனிக்குத்
தந்தநிலவேபகையாச்சாற்று.

(இ-ள்.) புதனுக்குச்சூரியனும் குருவுக்கு அங்காரகன சனி இவை 2-ம் சுக்கிரனுக்குச் சூரியனசந்திரன இவை 2-ம் சனிக்குச் சூரியயைந்திரன அங்காரகன இவை 3-ம் பகைக் கோட்களாம் இப்பகைக்கோட்களதுஆட்சியிராசிகள் தானேபகையிராசிகளாம் எ-று.குருவுக்குச்சனியை நட்பெனபாருமுளர். (20)

நீசவிராசிகள்.

30 இரவிதுலையெறிதேளிந்துவுக்குச் சேய்க்குக்
கரவில்கடகமீன கற்ம்ருற்குவரைவிலா
வாட்டிற்குக்காரியரிவைபுகர் பொனமகரங்
கூட்டியே நீசமெனக்கூறு.

(இ-ள்.) சூரியனுக்குத்துலாமுஞ் சந்திரனுக்குவிருச்சிகமும் அங்காரகனுக்குக்கடகமும் புதனுக்குமீனமும் குருவுக்குமகரமுஞ் சுக்கிரனுக்குக்கனனியுஞ் சனிக்குமேஷமும் நீசவிராசிகளாம் எ-று.

நீசவிராசிகளும் அதிநீச மாகங்களும்.

31 வில்லியாழ்தூம மிடாவேபரிவேடங்
கொல்லுந்தனுசுநட்பங் கோளரியாம்-வல்லிணைய
கொங்கையாய்நீசமதி நீசமத்துச்சப்படைப்பி
லிங்கிவையாய்ந்தோருரைப்பரென.

(இ-ள்.) இந்திரதனுசிற்கு மிதுனமும் தூமத்திற்குக்கும்பமும் பரிவேடத்திற்குத் தனுசும் நட்பத்திற்குச்சிங்கமும் நீசவிராசிகளாம்உச்சவிராசிகளிலே அத்துச்சபாகங்கள் எத்தனையாம் பாகங்களோ அத்தனையாம் பாகங்கள் மேற்படிநீச விராசிகளிலே அதிநீசபாகங்களாம் எ-று. (22)

பாம்பிற்குநட்பாட்சியுச்சப்பகைநீசவிராசிகள்.

32 நாகந்தனட்புகோனட்மகரநாரியாழ்
வேகந்தரும்வின்மீனுச்சிகுட-மாகுமா
முச்சந்தேண்ணெண்டரி மேடம்பகைநீசம்மெருது
நிச்சயமாய்ச்சொற்றார் நினை.

(இ-ள்.) பாம்பிற்கு மிதுனங் கன்னி துலாந் தனுசு மகரம் மீனம் இவையாறும் நட்பிராசிகளாம் கும்பம் ஆட்சி யிராசியாம் விருச்சிகம் உச்சவிராசியாம் மேஷங் கடகம் சிம்பம் இவைமூன்றும் பகையிராசிகளாம் ரிஷபம் நீசவிராசியாம் எ-று. (23)

கோணங்கள்.

33 ஐந்துமதற்கைந்து மதற்கைந்து மென்னுமிவை
யைந்தொன்பதோடுதய மாகுமே-முந்திய
கோணமுதயமைந்தென் கோணமிரண்டொன்பஃதென்
கோணமூன்றாகக்குறி.

(இ-ள்.) கோணங்களாவது ஐந்தாமிராசியும்ஐந்தாமிராசிக்கு ஐந்தாமிராசியும் ஐந்தாமிராசி ஐந்தாமிராசிக்கு ஐந்தாமிராசியுமாம் இவைமுறையே ஐந்தாமிராசி ஒன்பதாமிராசி உதயவிராசி என்கின்றனவாம் இவற்றில் உதயவிராசியை முதற்கோணமென்றும் ஐத்தாமிராசியை இரண்டாங்கோணமென்றும் ஒன்பதாமிராசியை மூன்றாங்கோணமென்றுஞ் சொல்லப்படும்எ-று.கோணங்கள் கொள்வகைதோன்றற்கு அவ்வைந்தாக எடுத்துக் காட்டியதிலே முதற்கோணமாகிய உதயவிராசி கடையிலேவறப்பெற்றதாகக்கண்டுகொள்க.

கண்டங்கள்.

34 எழுவதற்குநான்காகுநீர்கீழிதற்குப்
பழுதின்றிப்பாடு நான்காகும்-வழுவின்றி
யுச்சியதனுன்காமதற்கு தயனுன்கென்ப
விச்சைகொணுற்கண்டத்தியல்.

(இ-ள்.) கண்டங்களாவது நான்காமிராசியும் நான்காமிராசிக்கு நான்காமிராசியும் நான்காமிராசி நான்காமிராசிக்கு நான்காமிராசியும் நான்காமிராசி நான்காமிராகி நான்காமிராசிக்கு நான்காமிராசியுமாம் இவைமுறையே நான்காமிராசி ஏழாமிராசி பத்

தாமிராசி உதயவிராசிஎன்கின்றனவாம்இவற்றில் உதயவிராசியை உதயகண்டமென்றும் நான்காமிராசியை நீர்க் கீழ்கண்டமென்றும் ஏழாமிராசியைப்பாட்டுகண்டமென்றும் பத்தாமிராசியை உச்சிகண்டமென்றுஞ் சொல்லப்படும் எ-று. கண்டங்கள் கொள்வகை தோன்றற்கு நந்நான்காக எடுத்துக்காட்டியதிலேஉதயகண்டமாகிய உதயவிராசி கடையிலேவரப்பெற்றதாக கண்டுகொள்க கண்டங்கள் நான்கையும் முறையே வடநூலார்(லக்னகேந்த்ரம்) (சதுர்த்தகேந்த்ரம்) (சப்தமகேந்த்ரம்) (தசமகேந்த்ரம்) என்பர் உதயவிராசி கோணங்கள் கண்டங்கள் 2-ற்கும் பொதுமையாக இருக்கினும் கண்டங்களுக்கே சிறப்புடைத்தாம் என்றறிக (25)

இரட்டித்துக்கூறியது.

35 உதயமுதயமதற் கீரிரண்டாநீர்க்கீ
ழுதயத்திற்கேழ் பாடுபத்தீ-துதயத்திற்
குச்சியமென்பவுயர் தருசீர்மேதக்கோர்
மெச்சியனுற்கண்டவிதி.

இராசிகளுடையதுங் கோட்களுடையதுமாகிய
காலவலிதுணர்த்துகின்றது.

36 பகல்வலிசிரோதயமாம் பண்பாயிரவி
லிகலில் பிருட்டோதயங்க-டகவமர்ந்த
வல்லும்பகலும் வலிசிரபிருட்டோதய
மெல்லவைக்குஞ் சொல்வரியைந்து.

(இ-ள்) சிரோதயவிராசிகளுஞ் சிரோதயக் கோட்களும் பகல்வலிது பிருட்டோதய விராசிகளும் பிருட்டோதயக் கோட்களும் இராவலிது சிரபிருட்டோதயவிராசியுஞ் சிரபிருட்டோதயக் கோட்களும் பகலினும் இரவினும் வலிது இங்ஙனமாக இராசிகளுடையதுங் கோட்களுடையதுமாகிய காலவலிது சொல்லப்படுங் எ-று அவற்றின் விழிப்புகாலங்களையே வலிதுகூறினமையாகக்கொள்க (26)

இராசிகளின்நோக்குவலிதைக்குறிப்பிப்பதுவாய்
கோட்களின்நோக்குவலிதுணர்த்துகின்றது.

37 வெய்யோன்மதிபுகா மால்வென்றிமுழுநோக்கிற்
செய்யோனுமுக்காலிற் சீரியனு-மையோனுங்
கானோக்கில்வெற்றி கனகனரைநோக்கின்
மானேக்கின்கண்ணுப்மதி.

(இ-ள்.) சூரியன் சந்திரன் புதன் சுக்கிரன் இவை 4-ம் இருப்பிடமும் 7-மிடமுமாகிய முழுநோக்கில் வலிது அங்காரகன் 4-மிடமாகிய முக்கால்நோக்கிலும் 8-மிடமாகிய அரைக்கால்நோக்கிலும் வலிது சனி 10-மிட்மாகிய முக்கால் நோக்கிலும் 3-மிடமாகிய கால்நோக்கிலும் வலிது குரு 5-மிடமும். 9-மிடமுமாகிய அரைநோக்கில் வலிது பாம்பு 3-மிடமும் 11-மிடமுமாகிய கால் நோக்கில்வலிது, இங்கனமாகக் கோட்களின் நோக்குவலிது சொல்லப்படும் எ-று. இவ்வகையில் உபயவிராசிகள் 7-மிடம் நோக்கும் ஆதலால் மேற்படி உபயவிராசிகள் 4-முழுநோக்கில் வலிது ஸ்திர விராசிகள் 9-ம் மிடம் நோக்குமாதலால் மேற்படி ஸ்திரவிராசிகள் 4-ம் அரைநோக்கில் வலிது சரவிராசிகள் 11-மிடம்நோக்குமாதலால் மெற்படிசரவிராசிகள் 4-ம்கால்நோக்கில்வலிது இப்படியாக இராசிகளின் நோக்குவலிது வருவித்துரைத்துக்கொள்க இச்செய்யுளிலேசெய்யோனுமுக்காலிற்சிறியனுமையோனுங் காஞேக்கில் வெற்றிஎனவே அரைக்கால் நோக்கில் வலிதாகிய அங்காரகன் முக்கால்நோக்கிலும் வலிதென்றும் முக்கால்நோக்கில்வலிதாகியசனிகால்நோக்கிலும்வலிதென்று பொருள்படுகின்றமையால்அங்காரகன்4-மிடமாகியமுக்கால்நோக்கிலும் 8-மிடமாகிய அரைக்காலநோக்கிலும்வலிதென்றும் சனி 10-மிடமாகியமுக்கால்நோக்கிலும் 3-மிடமாகிய கால்நோக்கிலும்வலிதென்றும் வருவித்ததன்றியும் மையோனுங்காஞேக்கில்வெற்றி எனவேஎஞ்சியிருக்கின்றபாம்பிற்கு வலிதாயுள்ளகால்நோக்கில்சனியுஞ்சிறிதுவலிதாமென்று பொருள்பட்டு மேற்படிகால்நோக்குபாம்பிற்கே உரிமைகாட்டுகின்றமையால் பாம்பு 3-மிடமும்11-மிடமுமாகிய கால்நோக்கில் வலிதென்றும் வருவித்துரைத்தாம் இச்செய்யுண் முழுதுந்தந்துரைக்கப்படும் என்றற்கேமதிஎனறுவிதந்துகூறினமையாகக்கண்டுகொள்க. (27-28)

கோட்களுடைய நட்பாட்சியுச்சப்சகைநீசவலிதினை
கணிதங் குறிக்கினறது.

38 பார்பரவுமுச்சத்திற் பத்துபெலமதிகஞ்
சார்புதருநட்புள்ள தாட்சிரெட்டிப்-பார்கொள்
பகைபாதிநீசங்காற் பங்குளவாமெனறு
வகையாகச்சொல்வார் மதித்து.

(இ-ள்.) உச்சக்கோட்களுக்கு உள்ள வலிதிற்பத்துப்பங்கு அதிகமான வலிதாம் ஆட்சிக்கோட்களுக்கு உள்ள வலிதில் இரட்டிப்பானவலிதாம் நட்புக்கோட்களுக்கு உள்ளவலிதேவலிதாம் பகைக்கோட்களுக்கு உள்ள வலிதிற்பேர்பாதி வலிதாம் நீசக்கோட்களுக்கு உள்ள வலிதில் நானகிலோர்பங்கு வலிதாம் என்று இங்ஙனமாகக் கோட்களுடைய நட்பாட்சி யுச்சப்பகை நீச வலிதின கணிதங் குறிக்கப்படும் எ-று, இவ்வகையில்உபயவிராசிகட்கு உள்ளவலிதில் மூனறுபங்கு அதிகமானவலிதாம் ஸ்திர விராசிகட்கு உள்ள வலிதில் இரட்டிப்பான வலிதாம் சரவிராசிகட்கு உள்ள வலிதேவலிதாமெனறு இங்ஙனமாகஇராசிகளுடையசர ஸ்திர உபயவலிதின கணிதக்குறிப்பை வருவிக்கப்படும்.

இரட்டித்துக் கூறியது.

39 நீசத்திணுனகிலொன்று நினறபகையிற்பாதி
தேசுற்றநட்பாட்சி செப்புங்காற்-காசினியி
லுள்ளதுமிரட்டிப்பு முச்சத்திற்பத்ததிகந்
தெள்ளுபெலமுண்டெனறு செப்பு.

இராசிகளின கண்டவலி துணர்த்துகினறது.

40 இருகாலெழுச்சியினக ணீரிருகா லுச்சிப்
பரிவானபல் காலேபாட்டில்-வெருவாப்
பறப்பனநீர்கீழாம் பாங்குடையவோரைத்
திறப்படத்தான வெல்லுந்திறம்.

(இ-ள்.) இருகாலிராசிகள் 4-ம் உதயத்தில் வலிது சிறகுக்காலிராசிகள் 2-ம் நீர் கீழ்வலிது பலகாலிராசிகள் 2-ம் பாட்டில் வலிது நாற்காலிராசிகள் 4-ம் உச்சியில்வலிது எனறு இங்ஙனமாக இராசிகளின கண்டவலிது சொல்லப்படும் எ-று. (31)

கோட்களின கண்டவலி துணர்த்துகினறது.

41 புந்திபொனபோதெழுங்காற் பொங்குச்சியிற்கதிர்சேய்
மந்தனுமாநாகம் பாட்டிலா-முந்திப்
புகருமதிநீர்க்கீழிற் போதரவெற்றிப்
பகர்வார் விதியினபடி.

(இ-ள்.) புதன் குரு இவையிரண்டு முதயத்தில் வலிது, சந்திரன் சுக்கிரன் இவை இரண்டு நீக்கிழில்வலிது சனிபாம்புஇவை இரண்டும் பாட்டில் வலிது. சூரியன் அங்காரகன் இவை இரண்டு முச்சியில் வலிது என்று. இங்ஙனமாகக் கோட்களின் கண்ட வலிது சொல்லப்படும் எ-று, சுக்கிரன் உதயத்திலும் நீர்க்கிழிலும் வலிது சனிபாட்டிலும் உச்சியிலும் வலிது என்பதுவழக்காம் ஆகவே புகரு நீர்க்கிழில் என்று இறந்தது தழீஇய உம்மையெச்சமும், மந்தனும் பாட்டில் என்று எதிரது தழீஇ இய உம்மை யெச்சமுங் கொடுத்தோதினரெனக் கொள்க எ-று. ()

இராசிகளுடையதுங் கோட்களுடையதும் ஆகியகண்டவலிதிற் கெதிரிடை காட்டுகின்றது.

42 உதயவலிதானில்லேலோரைவலிசொல்கச்
சிதையில்குருமாலுடையோ னிற்றல்-பதையாது
பற்றித்தான்முன்போலப் பார்கவலிதொன்றி
லுற்றுத்தான் வன்மையுரை.

(இ-ள்.) இராசிகளுடையதுங் கோட்களுடையதுமாகிய கண்டவலிது உதயம் முதலாகப் பார்த்தவற்றிலே இல்லாதவிடத்து ஆரூடங்கவிப்பு ஆகிய இவைமுதலாகவும் அவற்றிலேயும் இல்லாதவிடத்துக் குருநின்ற இராசி புதன்நின்ற இராசி உதயக்கோள் நின்ற இராசி ஆகிய இவைமுதலாகவும் உதயம் நீர்க்கீழ் பாடு உச்சி என்கிற அடைவே பார்த்து வலிது காணில் இவ்வலிதும் உதயமுதலாகப் பார்ப்பவற்றிலே காணுகின்றமேற்படிஇராசிகளுடையதுங் கோட்களுடையது மாகிய கண்டவலிதேபோலக் கொண்டு சொல்லப்படும் எ-று, நிறுத்தமுறையே ஒன்றில்லாதவிடத்து ஒன்றுமுதலாகப் பார்ப்பதென்றறிக எ-று. (33)

கோட்களின் கோள்வலிது.

43 புந்திக்குச்சேல்வலியன் போற்றுமிருவருக்கு
மந்தன்வலியன் மகிழ்மூவர்க்-கந்தமிலா
நற்புடைக்கோள்பொன்வலிய னல்வருக்குந்தான்வலியன்
பொற்புடைய வெள்ளிபுகல்.

இதுவுமது.

44 சொன்னவிவ்வைவருக்குஞ் சோதிமதிவலியன்
மன்னுமறுவருக்கு மாகித்த-னென்னு

மெழுவருக்கும்பாம்பு வலிதென்றுசொல்வர்
பழுதற்றநூலோர் பரிந்து.

இவை 2-ம் ஒருதொடர்.

(இ-ள்.) புதனுக்கு அங்காரகன்வலித் புதன் அங்காரகன் இவை யிரண்டிற்குஞ் சனிவலிது புதன் அங்காரகன் சனி இவை மூன்றிற்குங் குருவலிது புதன்அங்காரகன் சனி குரு இவைநான்கிற்குஞ் சுக்கிரன் வலிது புதன் அங்காரகன் சனி குருசக்கிரன் இவை யைந்திற்குஞ் சந்திரன் வலிது, புதன், அங்காரகன், சனி குரு, சுக்கிரன், சந்திரன், இவை ஆறிற்குஞ் சூரியன்வலிது, புதன் அங்காரகன்-சனி-குரு-சுக்கிரன்-சந்திரன்-சூரியன்-இவையேழிற்கும் பாம்புவலிது என்று இங்ஙனமாகக்கோட்களின் கோள்வலிது சொல்லப்ல்டும் எ-று. (35-35)

இராசிகளில் திக்குவிதிக்கின்றது.

45 ஆடுகிழ்பாலரிவிற் றென்கிழ்பாற்றெற்கிடபந்
தேடுமகள்சுறவு தென்மேற்கா-நீடிய
தண்டுமேற்பாலவடபேல் கோற்குடமுந்தான்வடக்கு
நண்டிதுமீதேண் மீன்வடகீழ்நாட்டு.

(இ-ள்.) மேஷத்திற்குக் கிழக்கு-சிம்பந்-தனுசு-இவை - 2-ற்குந் தென்கிழக்கு ரிஷபத்திற்கு தெற்கு-கன்னி-மகரம்-இவை 2-ற்குந் தென்மேற்கு-மிதுனத்திற்கு-மேற்கு-துலாம்-கும்பம்-இவை 2-ற்கும் வடமேற்கு-கடகத்திற்கு-விருச்சிகம்-மீனம் இவை 2-ற்கும் வடகிழக்கு என்று இவ்வகையாக இராசிகளில்திக்கு விதிக்கப்படும் எ-று. (36)

46 நாட்டுங்கதிர்புகர்சேய் நாகநடையிலா
ஞேட்டுமதியுல்ல ஞெண்பொன்னன் கூட்டிக்
கொடிமுதலாயீங்கிவற்றைக் கொண்டெண்ணுங்காலை
நொடிகெளெண் கோடிக்காநுவல்.

(இ-ள்.) சூரியனுக்குக் கிழக்கு சுக்கிரனுக்குத்தென்கிழக்கு அங்காரகனுக்குத் தெற்கு, பாம்பிற்குத் தென்மேற்கு, சனிக்கு மேற்கு-சந்திரனுக்கு- வடமேற்கு-புதனுக்கு-வடக்கு - குருவுக்கு வடகிழக்கு என்று இவ்வகையாகக் கோட்களில் திக்குவிதிக்கப்படும் எ-று. (37)

இராசிகளில் ஆண்பெண் விதிக்கின்றது.

47 கோலரியாழ்கூன்சிலைசால் கொச்சையிறையாணுகு
மாலெருதுமீன்மகர மாயிழையுங்-கால்பலவாய்
நாமறியுந்தேள்லவனென் றிவற்றைநானிலத்தோர்
தாமறியப்பெண்ணென்று சாற்று.

(இ-ள்.) மேஷம்-மிதுனம்-சிம்பந்-துலாந் - தனுசு-கும்பம்-இவை 6-ற்கும் ஆண்-ரிஷபம்-கடகம்-கன்னி-விருச்சிகம்-மகரம், மீனம்—இவை 9-ற்கும் பெண்யென்று இவ்வகையாக இராசிகளில்-ஆண்-பெண்-விதிக்கப்படு மென்றவாறு. (38)

கோட்களில் ஆண் பெண் அலிவிதிக்கின்றது.

48 வெள்ளிமதிராகு பெண்ணுகுங்கேதுவோ
டொள்ளியமால்காரி யலியுருவாந்-தெள்ளிய
சேயருக்கனபீதகனு மெனறிவற்றையாணுக
வாயுணர்ந்தோர்கண்ட வழக்கு.

(இ-ள்.) சூரியன-அங்காரகன-குரு-இவை 3 - ற்கும் ஆண் சந்திரன சுக்கிரன இராகு இவை 3-ற்கும் பெண் புதன சனி கேது இவை 3-ற்கும் அலி எனறு இவ்வகையாகக் கோட்களில் ஆண்பெண் அலி விதிக்கப்படும் எ-று. (39)

முனனே இராசிகளில் ஆண் பெண் எனறு விதித்தவற்றுள்ளே தனிற்தனி ஒற்றை இரட்டை விதிக்கினறது.

49 யாழ்குடமுங்கோலு மிருஞ்சிலையுமாணிரட்டை
யூழிலரியாடேலாமாணொற்றை-சூழுந்
தொடிபிடபந்தேளலவன சொல்லும்பெண்ணொற்றை
கொடிமகர மீனிரட்டைக்கூறு.

(இ-ள்.) மேஷஞ் சிம்பம் இவை 2-ற்கும் ஆணொற்றை மிதுனந் றுலாந் தனுசு கும்பம் இவை 4-ற்கும் ஆணிரட்டை ரிஷபங் கடகங் கனனி விருச்சிகம் இவை 4-ற்கும் பெண்ணொற்றை-மகரம் மீனம் இவை 2-ற்கும், பெண்ணிரட்டை எனறு இவ்வகையாக யிராசிகளில் ஆணொற்றை ஆணிரட்டை பெண்ணொற்றை பெண்ணிரட்டை விதிக்கப்படும் எ-று. (40)

முனனேகோட்களில் ஆண்பெண் அலி எனறு விதித்தவற்றுள்ளே தனித்தனி ஒற்றை இரட்டை விதிக்கினறது.

50 ஆரல்கதிரோ னணிமதியமிம்மூனறு
மோருருவேயாகு முணருங்கா-னீர் தருவோன
பாகனபசும்பொன சனிப்பாம்பிவையிரட்டை
யாகுமெனவுரைத்தா ராங்கு.

(இ-ள்.) சூரியன அங்காரகன இவை 2-ற்கும் ஆணொற்றை குருவுக்கு ஆணிரட்டை சந்திரனுக்குப் பெண்ணொற்றைசுக்கிரன இராகு இவை 2-ற்கும் பெண்ணிரட்டை புதன சனிகேது இவை 3-ற்கும் அலியிரட்டை எனறு இவ்வகையாகக் கோட்களில் ஆணொற்றை ஆணிரட்டை பெண்ணொற்றை பெண்ணிரட்டைஅலியிரட்டை விதிக்கப்படும் எ-று, இராசிகளில் அலியுங்கோட்களில் அலியொற்றையும் விதிப்பில்லையாகக்கண்டு கொள்க முனனே ஆண்பெண் அலியெனறு விதித்தவற்றுள்ளே பாம்பை இராகு கேதுக்களாகப் பிரித்தமையால் ஆண்பெண் அலி எனறு விதித்தயிங்கேயும் அப்பாம்பை முனபோலவே யிராகு கேதுக்களாகப் பிரித்துரைத்தாம் எ-று. (41)

இராசிகளின் குலந்தெரிவிக்கினறது.

51 வேந்தனரியாடாகும் வெஞ்சிலைமீனவேதியனும்
வாய்ந்ததோர்ஞெண்டுடனறேன வாணிபனு-மேந்துந்
துலையாழ்குடமூனறுஞ் சூத்திரனகீழ்ச்சாதி
கலையேறுடன மகளாங்காண்.

(இ-ள்.) தனுசுமீனமிவை 2-ம் பிராமணன, மேஷம் சிம்பமிவை 2-ம் க்ஷத்திரியன கடகம் விருச்சிகமிவை 2-ம் வைசியன மிதுனந் துலாங் கும்ப மிவை 3-ல் சூத்திரன - ரிஷபங் கனனி மகர மிவை 3-ம் பஞ்சமன எனறு இவ்வகையாக யிராசிகளின குலந் தெரியப்படும் எ-று. (42)

கோட்களின குலந் தெரிவிக்கினறது.

52 வெய்யவனசேய்வேந்தனும் வெண்மதிபொனவேதியனு
மையுரையும்புந்தி வணிகனு-மெய்யுறையும்
வெள்ளியதுசூத்திரனு மிக்குசனிபாம்பிரண்டு
மெள்ளியகீழ்ச்சாதியாகு மென.

(இ-ள்.) சந்திரன், குரு, இவை 2-ம் பிராமணன், சூரியன், அங்காரகனிவை 2-ம், க்ஷத்திரியன் புதன், வைசியன், சுக்கிரன், சூத்திரன், சனி, பாம்பு இவை 2-ம் பஞ்சமன் என்று இவ்வகையாகக் கோட்களின்குலந் தெரியப்படும் எ-று. (43)

இரட்டித்துக் கூறியது.

53 ஆதித்தன்செவ்வாய்ரசக்கோளாம்வணிகன்
மேதையாம்வெள்ளியது வேளாள-னோது
மறைக்குலக்கோண் மந்திரியுஞ்சந்திரனுமற்றைப்
பறைக்குலக்கோள் காரியொடுபாம்பு.

இராசிகளின் நிறந் தெரிவிக்கின்றது.

54 வில்லரியாடாஞ்சிவப்பு வெள்ளேறுகோல்கடகஞ்
சொல்லரியவெள்ளைமீன்றேல்குடந்தேள்-சொல்லுங்காற்
றிண்பசுமையாகுந்திறலியாழ் கன்னிசுறு
வொண்கருமையென்றுரைக்க வோர்ந்து.

(இ-ள்.) மேஷஞ் சிம்பந் தனுசு இவை 3-ம் செம்மை, ரிஷபங் கடகந் துலாம் இவை 3-ம் மெண்மை விருச்சிகம் கும்பம் மீனம் இவை 3-ம் பசுமை மிதுனம் கன்னி மகரம் இவை 3-ங்கருமை என்று இவ்வகையாக விராசிகளின் நிறந்தெரியப்படும் ()

கோட்களின் நிறந் தெரிவிக்கின்றது.

55 புகர்வெளிருஞ்சேய்செம்மை பொன்பொன்னும்புந்தி
பகர்பசுமைபான் மதியம்வெண்மைநிகரில்
விரிகதிர்க்குச்செம்மை முடவற்கிராகுக்
குரிதருசீரோண் கருமையோர்.

(இ-ள்.) குரு, பொன்மை சூரியன் அங்காரகன்கேது இவை மூன்றுஞ்செம்மை சந்திரன் சுக்கிரன் இவை இரண்டும் வெண்மை புதன் பசுமை சனி இராகு இவையிரண்டுங் கருமை என்று இவ்வகையாகக் கோட்களின் நிறந் தெரியப்படும் எ-று. இராகு எனவே கேதுவை வருவித்துக் கேதுவுக்குரிய நிறத்தையும் வருவித்துரைத்தாம் புகர் புகராம் என்று பாடம் ஓதுவாருமுளர் அங்ஙனம் ஓதுவதில் புகர் என்றது கருமைகலந்த பொன்மைநிற

மாம் ஆதலால் அந்நிறத்தை வெண்மை நிறத்தையுடைய் சுக்கிரனுக்குச் சொல்லப்பட்டு மயங்க வருமென்பது கருதி புகர் வெளிறுமென்று பொருத்திவைத்தாம் எ-று. (46)

இதுவுமது.

56 பருதிக்கழல்படிகமா மதிக்குச்சேய்க்குக்
குருதிபசும் பொன்குருவுக்-கரியதொரு
புந்திக்குப்பச்சையாம் பால்புகர்க்கிராகுவுக்கு
மந்தனுக்குநீ னிறமாவை.

(இ-ள்.) குரு பொன்போன்ற நிறம், சூரியன் அக்கினிபோன்ற நிறம் அங்காரகன் இரத்தம்போன்ற நிறம் சந்திரன் படிகம் போன்ற நிறம் சுக்கிரன் பால்போன்ற நிறம், புதன் பசுமை சனி இராகு இவையிரண்டுங் கருமையெனறு இவ்வகையாகக் கோட்களின நிறந்தெரியப்படும் எ-று. இதிலேகேதுவைக்கூறுமையால் கேதுசெம்மை நிறமாயுள்ள எல்லாவற்றுள்ளும் நிறக்குமாகக் கொள்க. இங்ஙனமே புதன இராகு சனி இவைமூனறுந் தத்தமக்குரிய நிறங்களாயுள்ள எல்லாவற்றுள்ளும் நிறக்கும் ஆதலால் இவைகளின நிறங்களாகிய பசுமை கருமைகட்குஉபமானங் கூறிலரெனறுங் கொள்ளப்படும் எ-று. (47)

இராசிகளின கால் தெரிவிக்கினறது.

57 பாதநானகாடுசிலையரியும் பாய்விடையாங்
கோதில்குடந்தண்டு கோனமடந்தை-பாத
மிரண்டலவனறேள் பலகாலினசுறவுமீனந்
திரண்டுபறந்தோடுவன செப்பு.

(இ-ள்.) மிதுனங், கனனி, துலாங், கும்ப, மிவைநானகு மிருகால், மேஷம், ரிஷபஞ், சிம்பந், தனுசு, இவைநானகும்நாற்கால், மகரம் மீனம், மிவை யிரண்டுஞ் சிறகுக்கால் கடகம், விருச்சிக, மிவையிரண்டும் பல்கால் எனறு இவ்வகையாக இராசிகளின கால் தெரியப்படும் எ-று. இதிலே மகரம் மீன மிவையிரண்டிற்குஞ் சிறகுக்கா றெனறது விதிப்பாகக்கொள்க எ-று. (48)

கோட்களின கால் விதிக்கினறது.

58 மந்தனபரிதிசேய் பற்றிவைநாற்காலாம்
புந்திபுகர்பொனனு மிருகாலா-முந்திய
பானமதியநாகமிவைபல்காலா மெனனுமே
மேனமதியோர் கண்டவிதி.

(இ-ள்.) புதன் குரு சுக்கிரன் இவைமூன்றிற்கு மிருக்கால் சூரியன் அங்காரகன் சனி இவை மூன்றிற்கும் நாற்கால்சந்திரன் பாம்பு இவையிரண்டிற்கும் பலகால் என்றுஇவ்வகையாகக் கோட்களில் கால்விதிக்கப்படும் எ-று. (46)

இராசிகளின் வடிவு தெரிவிக்கின்றது.

59. குடந்துலையர்ழ்கன்னிதனுக் கொள்பரியுமக்க
டொர்ந்தசுறுமான் பின்முன்ளுகுந்தடங்கண்ணாய்
மீனிரண்டுதெற்றில் விழுந்தெழுமாமிக்கதுதன்
ருனுருவமேயுருவாஞ் சாற்று

(இ-ள்.) மிதுனம் ஒருபுருஷனும் ஒருஸ்திரீயும் புருஷன்கையிலே தடியும் ஸ்திரீயின்கையிலே வீணையுங்கொண்டு ஒரு ஆசனத்திலேயிருப்பார்கள் கன்னி ஒரு கன்னிகை ஒருகையில் முளைப்பாலிகையும் மற்றொருகையிலே விளக்குங்கொண்டு ஒருஆசனத்திலே யிருப்பள் துலாம் ஒருபுருஷன் தராசுதூக்கிநிற்பன் கும்பம்ஒருபுருஷன் குடமேந்திநிற்பன் தனுசுஅரைக்குங்கீழேகுதிரைவடிவும் அரைக்குமேலே புருஷவடிவுமாக விற்பிடித்துநிற்கும் மகரம் அரைக்குங் கீழேசுறுவடிவும் அரைக்குமேலே மான்வடிவுமாகநிற்கும் மீனம் தெற்று மாற்றுகவிழுவதும் ஒழுவதுமான இரண்டுமீன்களாக யிருப்பின் மற்றயவிராசிகள் அவ்வற்றின்பெயர்களுக்குத்தக்கபடி மேஷம் ஆடாகவும் ரிஷபம் எருதாகவும் கடகம் நண்டாகவும் சிம்பஞ் சிம்பமாகவும் விருச்சிகம்தேளாகவும்மிருப்பனஎன்று இவ்வகையாக இராசிகளின் வடிவு தெரியப்படும் எ-று. இச்செய்யுள்ளின் உரைகோடலை குறிப்பினல் உணர்ந்துக் கொள்க எ-று. (50)

கோட்களின் வடிவு விதிக்கின்றது.

60. நாற்சதுரம்வட்டந் துடிவடிவுமுக்கோண
மேற்பமைந்தநீள்வட்ட மெண்கோண-நாற்சதுரம்
பாதிநெடுமைபரிதி முதற்பாம்பீரா
யோதும்வடிவெல்லா முரை

(இ-ள்.) சூரியனுக்கு நான்குகோணமாயுள்ள வடிவு சந்திரனுக்குக் குறுகியவட்டவடிவு அங்காரகனுக்குத் துடிவடிவு புதனுக்கு மூன்றுகோணமாயுள்ள வடிவு குருவுக்கு நீண்டவட்டவடிவுசுக்கிரனுக்கு எண்கோணமாயுள்ளவடிவு, சனிக்குச் சதுரவடி

வுபாம்பிற்கு நீள்வடிவுயென்று இவ்வகையாகக் கோட்களில் வடிவு விதிக்கப்படும் எ-று. இதிலேநாற்சதுரம்பாதிஎனவே மற்றையபதிவட்டமாய் என்பதுகொண்டு அங்ஙனமாயுள்ள சுளகு வடிவு எனபதுபெற்றும் இதனைப்பிறைவடிவு எனினும் பொருந்தும் அன்றியுந்துனிந்த வடிவு என்பாருமுளர். (51)

இராசிகளில் விலங்கின்கொம்புவிதிப்பு அவ்வற்றின் அதிபதிக் கோட்களுக்கு உள்ளதேயாம் ஆகவே அவற்றைநீக்கிக் கோட்களில் விலங்கின்கொம்பு விதிக்கின்றார்.

61. மாலருக்கன்கோடு வளைவுமதிமொட்டை
மேலெரிக்குக் கோடுமிகக்குறிய-மேலை
முணிபுகர்க்குக்கொடு நெடியமுறிவாஞ்
சனியரவின் கோடுறைசாற்று.

(இ-ள்.) சூரியன புதன இவ்வயிரண்டிற்கும் வளைந்தகொம்புசந்திரனுக்குத் தட்டைக்கொம்பு,அங்காரகனுக்கு குரியக்கொம்புகுருசுக்கிரன இவைஇரண்டிற்கு நெடியகொம்பு,சனிக்குமுறிந்தகொம்பு பாம்பிற்கு அறுப்பட்டகொம்பு எனறு இவ்வகையாகக்கோட்களில் விலங்கினகொம்பு விதிக்கப்படும் எ-று. (52)

இராசிகளிற் கதிர் விதிக்கினறது.

62. ஏழெட்டோரைந்துமூன றேழ்பதினொன றுமே
யூழ்பட்டவோரிரண்டு நானகாறுஞ்-சூழெட்டு
மெட்டிருபத்தேழென றறையுங்கிரிவற்றை
யொட்டியமேடாதிபா யொட்டு.

(இ-ள்.) மேஷத்திற்கு 7-ரிஷபத்திற்கு 8-மிதுனத்திற்கு 5-கடகற்திற்கு 3-சிம்பத்திற்கு 7-கனனிக்கு 11-துலாத்திற்கு 2-விருச்சிகத்திற்கு 4-தனுசிற்கு 6-மகரத்திற்கு 8-கும்பத்திற்கு 8 மீனத்திற்கு 27-எனறு இவ்வகையாக இராசிகளிற் கதிர் விதிக்கப்படும் எ-று. (53)

கோட்களிற் கதிர் விதிக்கினறது.

63. ஐந்திருபத்தொனறே ழதனபினனேற்கொனபதுபத்
துந்தியவீரெட்டுநான கொருநான-குந்துங்
கதிராதிபாம்பீறுய்க் கட்டுரைத்தகோட்கட்
கெதிராவருங் கதிராமெனா

(இ-ள்.) சூரியனுக்கு 5- சந்திரனுக்கு 21- அங்காரகனுக்கு 7- புதனுக்கு 9 குருவுக்குப் 10 சுக்கிரனுக்குப் 16- சனிக்கு 4- பாம்பிற்கு 4- என்று இவ்வணகயாகக் கோட்களிற் கதிர்விதிக்கப் படும் எ-று. (54)

இராசிகளில் அளவு விதிப்பு அவ்வற்றின் அதிபதிக்கோட்க ளுக்கு உள்ளதேயாம் ஆகவே அவற்றைநீக்கிக்கோட்களின் அளவு தெரிவிக்கின்றது.

64 கூம்புசுன்சேய்திங்கள் குறியநெடிவையே
பாம்புபுதன்பீதகனும் பண்புணரின்—மேம்படுசீர்
பாங்குறுநல்வெள்ளி பகலேனிவையிரண்டுந்
தாங்குரிக்கொண் மாதேசமன்.

(இ-ள்.) சந்திரன அங்காரகன் சனி இவைமூனறு குறியது புதன குரு பாம்பு இவைமூனறும் நெடியது, சூரியன சுக்கிரன இவையிரண்டுஞ் சமனதுஎனறு இவ்வகையாகக் கோட்களின அளவுதெரியப்படும் எ-று. (55)

இராசிகளிற் காதம் விதிப்பு அவ்வற்றின அதிபதிக்கோட் களுக்குஉள்ளதேயாம்ஆகவேஅவற்றைநீக்கிக் கோட்களிற் காதம் விதிக்கினறது.

65 இருபாள்சனியற் கிளந்திங்கட்கொனறு
குருவுக்கொனபாறுங் குசற்கேழ்-தெரியுங்கா
லீரெட்டாம்வெள்ளிக் கெரிகதிரோன மாலிவர்கட்
கோரெட்டாங் காதமெனவோர்.

இ-ள் சூரியன புதன இவையிரண்டிற்குந் தனித்தனியேகாதம் 8-சந்திரனுக்குக்காதம் 1 அஙகாரகனுக்குக்காதம் 7- குருவுக்குக் காதம் 9- சுக்கிரனுக்குக் காதம் 16-சனிக்குக்காதம் 20- எனறு இவ்வகையாகக்கோட்களிற் காதம்விதிக்கப்படும்எ-று,பாம்பிற்கு காதம் விதித்திலர் ஆதலால் இருபதின காதத்திற்கு மேற்பட்ட தாகக்கொள்க அனறியும் மேற்படிபாம்பு சனியோடொக்குமென பதுகொண்டு இருபதினகாதமே பெறும் எனபாருமுளர் (56)

இராசிகளில்வயதுவிதிப்பு அவ்வற்றின அதிபதிக்கோட்களுக்கு உள்ளதேயாம் ஆகவே அவற்றைநீக்கிக் கோட்களில் வயது விதிக்கின்றது.

66 நானனகுசேய்புகரேழ் நாலைந்துபுந்தியனபொன
றுனகுமுப்பதாந் தண்மதிக்கு-மானே
யெழுபதிரவிக்கியைந் தவைம்பானபாம்பும்
பழுதில்சுன னு றுயுள்பகர்.

(இ-ள்.) சூரியனுக்குவயது 50- சந்திரனுக்குவயது 70-அங்காரகனுக்குவயது 16- புதனுக்குவயது 20- குருவுக்குவயது 30- சுக்கிரனுக்குவயது 7- சனி பாம்பு இவைஇரண்டிற்கும் தனித்தனியே வயது 100என்று இவ்வகையாகக்கோட்களில்வயது விதிக்கப்படும் எ-று. இதிலே பழுதில்சுனனூறுஎனறது புளிமாந்தண்பூப்போலிருக்கின்றதேயன்றி புளிமாந்தண் பூ ஆதலின்று இதனைக் கருவிளங்காயாகக்கொண்டு தளைபிரித்துக்கொள்க (57)

இராசிகளிற் சுவைவிதிப்பு அவ்வற்றின அதிபதிக்கோட்களுக்கு உள்ளதேயாம் ஆகவே அவற்றை நீக்கிக் கோட்களிற் சுவை விதிக்கின்றது.

67 காரியும்பாம்புஞ் சுவைகைக்குமினசுவைபொன
மாரிபுளிக்கு மதிதுவர்குந்-தேரிற்
கரிக்குமாஞ்செவ்வாய் கணக்கனுவர்க்கு
மெரிக்குஞ்சுவை யிரவிக்கென.

(இ-ள்) சூரியனுக்குக்கார்த்தல் சந்திரனுக்குத் துவர்த்தல் அங்காரகனுக்குக்கரித்தல் புதனுக்கு உவர்த்தல் குருவுக்குஇனித்தல் சுக்கிரனுக்கு புளித்தல் சனி பாம்பு இவையிரண்டிற்குக்கசத்தல்என்று இவ்வகையாகக்கோட்களிற்சுவைவிதிக்கப்படும் எ-று.

இராசிகளில்மறுவடுயிருத்தலின அங்கவிதிப்புஅவ்வற்றின அதிபதிக்கோட்களுக்குள்ளதேயாம் ஆகவே அவற்றைநீக்கிக் கோட்களில் மறுவடுயிருத்தலின அங்கம்விதிக்கின்றது

68 புகர்முகஞ்சேய்முதுகு பொனறேண்மால்கைக்கீழ்
நகுமதியாமுச்சியா நண்ணிற்-றகைசான
மருங்கிற்கதிர்குறங்கின மந்தனகீல்காற்பாம்
பொருந்கேமருவடு வெனறோர்.

(இ-ள்.) சந்திரனுக்குத்தலை சுக்கிரனுக்குமுகம், அங்காரக னுக்கு முதுகு' குருவுக்குக் கை, புதனுக்குக் கைக்கீழ் சூரியனு க்கு இடை, சனிக்குத் துடை, பாம்பிற்கு கால், என்று இவ்வ கையாகக் கோட்களில் மறுவடுயிருத்தலின அங்கம் விதிக்கப்படு ம் எ-று. மறுவடுவேபோல மச்சுங்கொள்க எ-று. (59)

இராசிகளில் மறுவடுயிருத்தலின பக்கவிதிப்பு அவ்வவற்றினஅதி
பதிகோட்களுக்கு உள்ளதேயாம் ஆகவே அவற்றை
நீக்கிக் கோட்களில் மறுவடுயிருத்தலில்
பக்கம் விதிக்கின்றது.

69 பண்டிதனுஞ்சேயும் பரிதியும்பைம்பொன்னுங்
கொண்டகுறிவலப்பாற் கூறுங்கால்-விண்ட
படநாகம்பானமதியம்பார்க்க வனபைங்காரிக்
கிடமாங்குறியென றியம்பு.

(இ-ள்.) சூரியன அங்காரகன புதன குரு இவை 4-ற்கும் வலம் சந்திரன சுக்கிரன சனிபாம்பு இவை 4-ற்கும், இடம் என று இவ்வகையாகக் கோட்களில் மறுவடுயிருத்தலின பக்கம்விதிக் கப்படும் எ-று. (60)

இராசிகளில் மறுவடுக்களினவடிவு விதிப்பு அவ்வற்றின அதி
பதிக் கோட்களுக்கு உள்ளதேயாம் ஆகவே அவற்றை
நீக்கிக் கோட்களில் மறுவடுக்களின வடிவு
விதிக்கினறது.

70 துத்திமலரெருக்கம்பூத் துவரைப்போழ்வகத்தி
யெத்திலேரண்டம் புளியிலையாஞ்-சத்தியமே
மத்தையாவாரை வடுவினவடிவென று
சித்தமேவந்தவர்க்குச் செப்பு.

(இ-ள்) சூரியனுக்கு துத்திப்பூப்போலும் சந்திரனுக்குஎரு க்கம்பூப்போலும் அங்காரகனுக்கு துவரம்பருப்புப்போலுங் புத னுக்கு அகத்தியிலைபோலும் குருவுக்கு ஆமணக்கிலைபோலும் சுக் கிரனுக்கு, புளி யிலைபோலும், சனிக்கு ஊமத்திலைபோலும் பாம் பிற்கு ஆவாரையிலைபோலுங், எனறு இவ்வகையாகக் கோட்களி ல் மறுவடுக்களின வடிவு விதிர்க்கப்படும் எ-று. இவ்வடிவு மறு வடுமச்சுதினைத் துணையதாயினும் அதிலுங் காணப்படலாம் என இற துணிபு தோனறற்கு சித்தமே வந்தவர்க்குச் செப்பு என்று விதந்துக் கூறினமையாகக்கொள்க எ-று. (61)

இராசிகளில் ஒளிவுவிதிக்கின்றது.

71 கொறியலவனகோல்கும்ப மோரெட்டுகுண்டை
யறிமகரமியாழுக்கிருமூன-ற்றியரிபேழ்
மங்கைதனுப்பனனென்று தேணுனகுவானமீனுக்
கிங்கிருபத்தேழ் சுடராமென.

(இ-ள்.) மேஷங்-கடகங்-துலாங்-கும்ப - மிவைநானகிற்குந் தனித்தனியே ஒளிவு 8-ரிஷபம்-மிதுனம் - மகர-மிவை மூனறிற்குந் தனித்தனியே ஒளிவு 6-சிம்பத்திற்கு ஒளிவு 7-கனனிதனுசு இவையிரண்டிற்குந் தனித்தனியே ஒளிவு 11 - விருச்சிகத்திற்கு ஒளிவு 4-மீனத்திற்கு ஒளிவு 27-என்று இவ்வகையாக விராசிகளில் ஒளிவு விதிக்கப்படும் எ-று. (62)

கோட்களில் ஒளிவு விதிக்கின்றது.

72 செங்குருதிக்கிரேழுந் திங்களுக்குமூவேழும்
வெங்கதிரோற்கைந்தொன பானமேதைக்குப்-பொங்கிய
பொனனவனபத்தாகும் புகரோனபதினொன்றுஞ்
சுனனரவு நானகாஞ்சுடர்.

(இ-ள்.) சூரியனுக்குஒளிவு 5-சந்திரனுக்குஒளிவு 2-அங்காரகனுக்கு ஒளிவு 14-புதனுக்குஒளிவு 9-குருவுக்குஒளிவு 10-சுக்கிரனுக்குஒளிவு 11 சனிபாம்பு இவை யிரண்டிற்குந் தனித் தனியேஒளி 4-என்று இவ்வகையாக் கோட்களில் ஒளிவிதிக்கப்படும் எ-று. செங்குருதிக்கோரேழும் புகரோன பதினொன்றும் என்று படித்துக்கொண்டாருமுள்ளர் எ-று. (63)

இராசிகளில் நிற்பனசுழல்வன நிற்பனவற்றோடு
சுழல்வன விதிக்கின்றது.

73. ஏறரிதேள்கும்ப மிவைநானகுநிற்பனவாங்
கூறலவனகோனமகரங் கொச்சையிவை-தேறி
னியங்குவனவாகுமியாழ் கனனிவினமீ
ன்யங்கொளிரு மாண்பாகநாட்டு

(இ-ள்.) ரிஷபம் சிம்பம்-விருச்சிகம்-கும்பம் இவை 4-ற்கும் நிற்பனவாம் மேஷம்-கடகந் துலாம் மகரம் இவை 4-ற்கும் சுழல்வன எ-று. (64)

வாம் மிதுனங் கன்னி தனுசு மீனம் இவை 4-ற்கும் நிற்பனவற் ரோடு சுழல் வனவாம் என்று இவ்வகையாக விராசிகளில் நிற்பன சுழல்வன நிற்பனவற்ரோடு சுழல்வன விதிக்கப்படும் எ-று. (94)

கோட்களில் நிற்பன சுழல்வன நிற்பன வற்ரோடு
சுழல்வன விதிக்கின்றது.

74 சந்திரனுஞ்செவ்வாயுஞ் சாராவுமேசரமா
மூந்துபுகராதித்த னுந்திரமாஞ்-சுந்தரப்பொன்
புந்திகரியவனும் போதவிருமாண்பென்று
பைந்தொடிதோ ணல்லாய்பகர்.

(இ-ள்.) சூரியன், சுக்கிரன், இவையிரண்டிற்கும் நிற்பன வாம் சந்திரன், அங்காரகன், பாம்பு இவை மூன்றிற்குஞ் சுழல் வனவாம் புதன் குரு சனி இவை மூன்றிற்கும் நிற்பன வற்ரோடு சுழல்வனவாம் என்று இவ்வகையாகக் கோட்களில் நிற்பனசுழல் வன நிற்பனவற்ரோடு சுழல்வன விதிக்கப்படும் எ-று. (65)

இராசிகளினும் கோட்களினும் நடப்பன பறப்பன
தவழ்வன விதிக்கின்றது.

75 எறிதேளலவன் றவழுமீன்புல்வாய்
பறவைப்பிறநடக்கும் பாங்காய்-நிறுவிய
நாகமதிதவழு நற்பறவைபுந்திசனி
யேகும் பிறநடக்குமென்.

(இ-ள்.) கடகம் விருச்சிகம் இவை 2-ற்குந் தவழ்வனவாம், மகரம் மீனம் இவை 2-ற்கும் பறப்பனவாம்; மற்றயவிராசிகள் 8-ற்கும் நடப்பனவாம் என்று இவ்வகையாக விராசிகளினுஞ் சந் திரன் பாம்பு இவை 2-ற்குந் தவழ்வனவாம், புதனுக்குப் பறப் பனவாம் மற்றய கோட்கள் 5-ற்கும் நடப்பனவாம் என்று இவ் வகையாகக் கோட்களினும் நடப்பன பறப்பன தவழ்வன விதிக் கப்படும் எ-று. சனியை நடப்பனவற்ரோடு சேர்த்துக்கூறுது நடக்கும் என்று பராமரித்துக் கூறியவதனுல் சனிக்குக்கால்முட ணய் நடப்பனவாக விகற்பித்துக்கொள்க கால்முடணய் நடப்ப தாவது கொண்டுதலாம் அன்றியுங் கோலூன்றிப் போதலுங் கையூன்றி நகருதலுங்கொள்க. (66)

இராசிகளிற் சேர்விடம் விதிக்கின்றது.

76 ஆடுவிற்காடரிவை யாழூரிக்குமலை
நீடுதுலைமீன்மகா நீளாறு-தேடலவன்
வாய்க்காலெருது வயலாகுந்தேள்கிணறு
நீர்ச்சால் கெடுதிநிலைநேர்.

(இ-ள்.) மேஷந்தனுசு இவை 2-ற்குங் காடு, ரிஷபத்திற்கு கழனி மிதுனங் கன்னி இவை 2-ற்கும் ஊர், கடகத்திற்கு வாய்க்கால் சிம்பத்திற்கு மலை, துலாம் மகரம் மீனம் இவை 3-ற்கும் ஆறு, விருச்சிகத்திற்குக் கிணறு, கும்பத்திற்கு நீர் என்று இவ்வகையாக நட்டமுட்டி சிந்தனைகட்கு இராசிகளிற்சேர்விடம்விதிக்கப்படும் எ-று. சேர்விடஞ் சொல்லுதல் நட்டத்திற்கே முக்கியம் என்பது கருதி நட்டஞ் சேர்விடம் என்றாயினும் முட்டிசேர்விடமுஞ் சிந்தனை சேர்விடமும் அவையேயாம் ஆதலால் நட்டமுட்டி சிந்தனைகட்குச் சேர்விடம் என்பது பெற்றும் வருவனவற்றுள்ளு மிவ்வாறு கண்டுகொள்க எ-று. (67)

இராசிகளிற் சேர்விடம் விதித்தவற்றிற்குத்
துலாபட்சங் கூறுகின்றார்.

77 காடுகழனியூர் வாய்க்காலொடுமலையா
மோடுநீரூர்கிணறு தோட்டம்பாழ்-நீடு
கழியேரிதாங்கல் கடலாகுமென்றே
மொழிதகர் தாஞதியாமுன்.

(இ-ள்.) மேஷத்திற்குக்காடு, ரிஷபத்திற்குக்கழனி, மிதுனத்திற்கு ஊர், கடகத்திற்கு வாய்க்கால், சிம்பத்திற்கு மலை, கன்னிக்கு நீர், துலாத்திற்கு ஊர், விருச்சிகத்திற்குக் கிணறு, தனுசிற்கு தோட்டம், மகரத்திற்குப் பாழ்நதி அல்லது உப்பளம், கும்பத்திற்கு ஏரி அல்லது தாங்கல், மீனத்திற்கு சமுத்திரம் என்று இவ்வகையாக நட்டமுட்டி சிந்தனைகட்கு இராசிகளிற் சேர்விடம் விதிக்கப்படும் எ-று. இதிலே மேஷம் ரிஷபம் மிதுனங் கடகஞ் சிம்பம் விருச்சிகம் இவை 6-ற்குந் துவாபட்சம் இன்மையாயின் வருவன வற்றுள்ளு மிவ்வாறு எடுத்துக்கொள்கபாழ்நதியை மலட்டாறு என்பது உலகவழக்கு தாங்கலாவது சிற்றேரியாம்.

இதுவுமது.

78 காடுவிளைகழனி தோட்டம்வாய்க்கால்விளங்க
நீடுபுனலாற்றங் கரைபட்ட நீடிய
நற்கிணறுசொற்கேணி நண்ணுங்கெடுதிநிலை
நிற்குமிடமென்றே நிகழ்த்து.

(இ-ள்.) மேஷத்திற்குக்காடு, ரிஷபத்திற்குக் கழனி மிதுனத்திற்குத் தோட்டம், கடகத்திற்கு வாய்க்கால்,சிம்பத்திற்குமலை கன்னிக்கு நீர், துலாத்திற்கு ஆற்றங்கரை அல்லது குளம் விருச்சிகத்திற்குக் கிணறு தனுசு மகரம் கும்பம் மீனம் இவை 4-ற்குங் கிணறு அல்லது துரவு குளம் அகழி என்று இவ்வகையாகநட்ட முட்டி சிந்தனைகட்கு இராசிகளிற்சேர்விடம் விதிக்கப்படும்எ-று கேணி என்றது கிணறு துரவு குளம் அகழி என்று ஒருசொற் பலபொருளாகத் திரிந்தது எ-று. (69)

இதுவுமது.

79 காடுபுலமூர்நீர் கருமலையூராறுபுன
னீடுகுழிதோட்டமகழ் நீடுகட-ணடிய
பொய்கைகடலென்னப் பொருந்துமிவைமேடாதி
யெய்துமிடமென்றே யியம்பு.

(இ-ள்.) மேஷத்திற்குக் காடு, ரிஷபத்திற்குக்கழினி,மிதுனத்திற்கு ஊர் கடகத்திற்கு நீர், சிம்பத்திற்கு மலை, கன்னிக்குஊர் துலாத்திற்கு ஆறு விருச்சிகத்திற்குக்கிணறு அல்லதுவெட்டுபள்ளம், தனுசிற்குத் தோட்டம் மகரத்திற்கு அகழி கும்பத்திற்குச் சமுத்திரம் மீனத்திற்குச் சுனை அல்லது சமுத்திரம் என்று இவ்வகையாக நட்டமுட்டி சிந்தனைகட்கு இராசிகளிற் சேர்விடம் விதிக்கப்படும் எ-று. (70)

இதுவுமது.

80 குடந்தண்டுகோன்மடந்தை கொண்டோர்குறுகுங்
கடுந்தகர்தேள்விற்சியங் காடா-நடந்தியங்கு
நள்ளிகலைமீனேறு நல்லீரிடமாமென்
றுள்ளியவர்க் கெல்லாமுரை.

(இ-ள்.) மேஷஞ் சிம்பம் விருச்சிகந் தனுசு இவை 4-ற்குங் காடு, ரிஷபங் கடகம் மகரம் மீனம் இவை 4-ற்கும் நீர், மிதுனங்

கன்னி துவாங் கும்பம் இவை 4-ற்கும் ஊர் என்று இவ்வகையாக நட்டமுட்டி சிந்தனைகட்கு இராசிகளிற் சேர்விடம் விதிக்கப்படும் எ-று. (71)

சோட்களிற் சேர்விடம் விதிக்கின்றது.

81 காடுசேய்காரி கதிரோன்மதிவெள்ளி
நாடியநீரென்று நயந்துரைக்க-நாடுங்கா
ஹுரகத்தவாம்பொன்மா லோங்குமரவுதுளை
சேர்விடங்கடிண்ண மாய்ச்செப்பு.

(இ-ள்.) சூரியன் அங்காரகன் சனி இவை மூன்றிற்குங் காடு, சந்திரன் சுக்கிரன் இவையிரண்டிற்கும் நீர், புதன் குரு இவை யிரண்டிற்கும் ஊர், பாம்பிற்கு மூங்கில் முதலிய உட்டுளையான விடங்களென்று இவ்வகையாக நட்டமுட்டி சிந்தனைகட்குக் கோட்களிற் சேர்விடம் விதிக்கப்படும் எ-று. திண்ணமாய்ச் செப்பு என்று மிகுத்துக் கூறியவதனால் கோட்கள்நட்புப்பெற்று நிற்கில் மனைக்குள் என்றும் ஆட்சிபெற்று நிற்கில் ஊர்க்குள் என்றும் உச்சம்பெற்றி நிற்கில் ஊர்க்குப் புறத்தில என்றும் பகை நீசம்பெற்று நிற்கில் வெகுதூரத்தில் என்றும் உடன் சேர்த்துரைக்கப்படும் இவ்விதி ஆருடத்ததிபதிக்கி என்னும் சிலர் சூரியனுக்கு என்னுஞ் சிலாம். (72)

இதுவுமது.

82 பூமகற்குப்பூமி புகர்மதிக்குநீர்புதன்பா
யாமரவம்பொந்துவளை யாகு-நாமத்
தணங்கறையுளாகாயம் பொன்னருக்கன்மந்தன்
கொணர்ந்தனதான் வேள்விக்குடம்

(இ-ள்.) சூரியன் குரு இவை 2-ற்கும் பூஜை வீடு அல்லது மேலிடம், சந்திரன் சுக்கிரன், இவை 2-ற்கும் நீர் அங்காரகனுக்குப் பூமி, புதனுக்குப் பாயல் சனிக்கு வோமகுண்டம் அடுப்பு அடுபானை பாம்பிற் குமரப்பொந்து வளை என்று இவ்வகையாச நட்டமுட்டி சிந்தனைகட்குக் கோட்களிற் சேர்விடம் விதிக்கப்படும் எ-று. வேள்விக்குண்டம் என்றது ஓமக்குண்டமென்றும் அடுப்பென்றும் அடுபானை யென்றும் பொருள் திரிந்தது வேள்விக் குண்டத்தை வேள்விக் குடம் என்றது இடைக்குறையாம் நாமததென்று விதந்து கூறினமையால் சூரியனுக்கு போஜனம் பண்ணுமிடமும் உறியுஞ்சந்திரனுக்குக்காடிச்

சானும் அங்காரகனுக்குக்குடுவையும் புதனுக்குச்சுவருங் குருவுக்கு மிடாவும் சுக்கிரனுக்கு நீர்க்கரகமும் சனிக்கு யுத்தம்பண்ணுயிடமும் பாம்பிற்குப்புற்று மென்றுவருவிக்கப்படும்எ-று.

இராசிகளினும் கோட்களினும் இரவுபகல்
சந்தி விதிக்கின்றது.

83, சிரவுதயத்திற்கெடுதி செய்யபகலா
மரியபிருட்டோதயத்தி லல்லாம்-விரிவி
னிருவகையாமெட்சி யிடைப்போழ்திலென்றே
வரும்வகைபிற் சொல்க மதித்து,

(இ-ள்.) பிருட்டோதய விராசிகட்குங் கோட்களுக்கும்இரவுசிரோதய விராசிகட்குங் கோட்களுக்கும்பகல் சிரபிருட்டோதயவிராசிக்குங் கோட்களுக்குஞ் சந்தி என்று இவ்வகையாக நட்டமுட்டிசிந்தனைகட்கு இராசிகளினுங் கோட்களினுமிரவுபசுல் சந்திவிதிக்கப்படும் எ-று. (74)

இதுவுமது.

84. பகலேநிலையதனிற் பாங்காஞ்சுழலிற்
புகலுமிராப்பொழுது பூணு-மிகலி
லிருமான்பிற்சந்திப் போழ்தென்பவே நூலின்
வருமாண்புரைத்த வழக்கு

(இ-ள்.) சரவிராசிகட்குங் கோட்களுக்கு மிரவு, ஸ்திரவிராசிகட்குங் கோட்களுக்கும் பகல் உபய விராசிகட்குங் கோட்களுக்குஞ் சந்தியென்று இவ்வகையாக நட்டமுட்டிசிந்தனைகட்குஇராசிகளினுங் கோட்களினும் இரவுபகல் சந்தி விதிக்கப்படும் எ-று.

இரவுபகல்களில் இரவுபகலும் வாரங்களில்
வாரமும் விதிக்கின்றது

85. போதல்வருதல் புரத்தல்புகல்கிழமை
யபதிமூன்றேமுக்கா லற்றையதா-நீதியா
யெக்காலுமீரெட்டி லுற்றதிரவுபக
லக்கால மவ்வாரமாம்.

(இ-ள்) இரவு 30-நாழிகையிற் சென்ற நாழிகை கவரையில் மூன்றேமுக்கால் நாழிகைவீதத்திலே இரவுமுதலாகவும் பகல்30

நாழிகையிற் சென்றநாழிகை வரையில் மூன்றேமுக்கால் நாழிகைவீதத்திலே பகல் முதலாகவும் எண்ணிக்காண்பதுகுறித்தகாலத்தின் இரவுபகலாம் தினம் 60-நகழிகையிற் சென்றநாழிகைவரையிலே மூன்றேமுக்கால் நாழிகைவீதத்திலே அற்றையவாரம் முதலாகஎண்ணிக்காண்பது குறித்தகாலத்தின் வாரமாம் என்று இவ்வகையாகநட்டமுட்டி சிந்தனைகட்கு இரவுபகல்களில் இரவுபகலும் வாரங்களில் வாரமும் விதிக்கப்படும் எ-று இவ்விதிகுறித்தகாலத்திற்கேயன்றி மற்றயகாலத்திற்குக்கொள்ளப்படாதென்பதைப்போதல் வருதல் புரத்தல் என்பவிகற்பத்தாற் கண்டுதெளிக எ-று. (76)

இராசிகளில் வருஷவாதி காலகணிதம் அவ்வவற்றின் அதிபதிக்
கோட்களுக்கு உள்ளதேயாம் ஆகவே அவற்றை
நீக்கிக்கோட்களில் வருஷவாதி காலகணிதங்
கணிக்கின்றது.

86. ஆண்டரவங்காரி யயனங்கதிரவன்மால்
பூண்டவிரிதிங்களொரு திங்கள்பொன் னீண்ட
புகரின்வரைபக்கம் பூமகனொன்று
நிகரின்மதிமுகுர்த்த நேர்

(இ-ள்.) சனிபாம்பு இவையிரண்டிற்குந் தனித்தனியே ஒரு வருஷம் சூரியனுக்கு ஒரு அயனம் புதனுக்கு யிரண்டுமாதம் குருவுக்கு ஒரு மாதம் சுக்கிரனுக்கு ஒரு பட்சம் அங்காரகனுக்கு ஒருதினம் சந்திரனுக்கு ஒரு முகூர்த்தம் இவ்வகையாக நட்டமுட்டி சிந்தனைகட்குக் கோட்களில் வருஷாதிகாலகணிதக் கணிக்கப்படும் எ-று. (77)

இராசிகளை ஏதுவாகக் கொண்டு கோட்களின் கதிர்களில்
வருஷாதி காலகணிதங் கணிக்கின்றது

87. உச்சக்கோனாழிகையா மாட்சிக்கொனுளாகு
மெச்சியநட்பாகிற் றிங்களாங்கைச்ச
பகைநீசமாண்டென்று பண்புடையோர்சொற்ற
வகைமையார்கூறல் வழக்கு

(இ-ள்.) பகைநீசக்கோட்களுக்கு அவற்றின்கதிர்கள் எத்தனையோ அத்தனைவருஷங்களாம் நட்புக்கோட்களுக்கு அவற்றின் கதிர்கள் எத்தனையோ அத்தனைமாதங்களாம்ஆட்சிகோட்களுக்கு

அவற்றின்கதிர்கள் எத்தனையோ அத்தனை தினங்களாம் உச்சக் கோட்களுக்கு அவற்றின் கதிர்கள் எத்தனையோ அத்தனைநாழிகைகளாம் என்று இவ்வமைய்யாகநட்டமுட்டிசிந்தனைகட்குஇராசிகளை ஏதுவாகக்கொண்டு கோட்களில் கதிர்களில் வருஷாதிகாலகணிதம்கணிக்கப்படும். எ-று.

நாட்களில்தினகாலகணிதம் கணிக்கின்றது.

88 அன்றுமதிநின்ற நாளினுக்குப்போழ்து
சென்றுதயஞ்செய்யுநா ளெந்நாளோ-வந்நாளே
நாளால்வருமென்று நாமுரைத்தபல்பொருட்கிக்
கோளாலுங் கோள்குறித்துக்கொள்.

(இ-ள்.) சந்திரன்நின்றநாட்கு உதயநாள் எண்ணிக்கையிலேயியன்றதொகைஎத்தனையோஅத்தனை தினங்களாம்என்றுஇவ்வகையாகநட்டமுட்டிசிந்தனைகட்கு நாட்களில்தினகாலகணிதங் கணிக்கப்படும் எ-று. அற்றயநாளினுக்குளனின் ஏகதினத்திலே இரண்டிரண்டுநாட்கள் பெரும்பாலும் வருகின்றமையால்யாதோவென்றுமயங்கவரும் என்பதுகருதி அன்று மதிநின்றநாளினுக்கு என்று விகற்பித்தனராகக் கொள்க கோளாலும்என்றது சிலேடைமையாகயிருக்கின்றமையால் சந்திராங்கிசத்தின் அதிபதிகோள் நின்றநாட்கு உதயநாள்எனக்கொள்ளவும்படும் உதயஞ்செய்யுநாளென்நாளோஎன்றதுஞ்சிலேடையமாகவிருக்கின்றமையால் இத்தினகாலகணித்த்தை உதயநாள்சரமாகில் உள்ளபடியும் ஸ்திரமாகில் இரட்டித்தும் உபயமாகில் முற்றித்துங் கணிக்கப்படும் உதயநாளேபோல உதயவிராசியையும் நயம்கண்டுயூகிப்பதாம் கோள்குறித்துக்கொள் என்றது தினங்கணித்துக்கொள் என்கிறபொருளுடைத்தாம் எ-று. (79)

வருஷாதிகாலகணிதக் கணிதநிலை உணர்த்துன்கிறது

89 ஆய்ந்தஉதயத்தைக் கொண்டுபெலன்கொடுப்ப
வேய்ந்தக்கோளெங்கோளா மக்கோட்கொண்-டாய்ந்த
பொழுதினுற்கெட்டல் பிடித்தனினைத்தல்
வழுவார்துவந்தடைதன் மாண்பு.

(இ-ள்.)இடபோதயத்தைக் கொண்டும் இடபோதயத்தில் நின்றகோட்கொண்டும்வலிது பெற்றகோட்கொண்டுங் கணிக்கப்

படுகிறவருஷாதிகால கணிதத்தைக் கொண்டுநட்டமுட்டிசிந்தனை கட்குவருஷாதிகாலகணிதங்கணிக்கப்படும் எ-று. ஆய்ந்தஉதயம் எனவே இட்டோதயம்என்பது பெற்றும்சூரியோதயம்என்பாரு முளர் உதயாதிசென்றநாழிகையை இரண்டரைநாழிகைவீதத்தி லே ரிஷபமுதலாகஎண்ணிக்கண்டவிராசி இட்டோதயமாம் சூரி யநிலைஇராசி முதலாக எண்ணிக்கண்டவிராசி சூரியோதய மாம் எ-று. (80)

## ஆரூடச் சக்கரம்.

கீறும்வகையும் இராசிகள் நிற்கும்நிலையும் உணர்த்துகின்றது.

90 ஆழியும்பாரும்போற் கீறிசிருதிசைமே
லூழியவொவ்வொன் றுடன்கீறிச்-சூழு
மெருதாதிகீழ்திசைகொண் டீராறுமெண்ணிக்
கருதாய்நிலக் கயிற்றைக்கண்டு

(இ-ள்.) ஆழிஒன்றுபோல வட்டம்ஒன்றுகீறிவட்டத்தினுள் ளே ஆழியின்பாருகள் 2-குறுக்கும் நெடுக்குமாக ஒன்றின்மே லொன்றுவைத்திருந்தாற்போலக்கிழக்கிருந்துமேற்களவும்ஊடுரு வலாகஇரேகைகள் 2-ம் வடக்கிலிருந்துதெற்களவும்ஊடுருவலாக இரேகைகள் 2-ம் ஆகஇரேகைகள் நான்குகீறி தென்கிழக்கு தெ ன்மேற்கு வடமேற்குவடகிழக்கு ஆகியமூலைகள் 4-லும் நான்கு இரேகைகள்ஊடுருவாதுஅங்கங்கேதுண்டித்துநிற்றலாகத் தனித் தனி ஒவ்வொன்று கீறிஇராசிகளினெதிற்கயிறு அவ்வவற்றின் எதிரிலேதானே யிருக்கும் என்பதுகருதி ரிஷபத்தைநேர்க்கிழக் காகக்கொண்டு ரிஷபம்முதல்மேஷம்இறுதியாகஇராசிகள் 12-யும் வலமுறையே யெண்ணிக் காணப்படும் எ-று. வண்டியும்பாரும் என்பார் அவற்றையே அழியும்பாரும்என்றார். (81)

இராசிகளினெதிர்க்கயிறு உணர்த்துகின்றது.

91 எருதெரிதேளியாழ்சிலை ஞெண்டேர்கலையாஞ்சியஞ்
சொரிகுடநற் றேரைகையர்க்குமீனுந்-தெரியுங்கா
லாட்டிற்குக்கோலாமென் றுங்கறைந்தசக்கரத்தை
யோட்டியெதிர்க் கயிறென்றோர்.

(இ-ள்.) ரிஷபத்திற்குவிருச்சிகமும் விருச்சிகத்திற்கு ரிஷபமும் மிதுனத்திற்கு தனுசுந் தனுசிற்கு மிதுனமுங் கடகத்திற்கு மகாமும் மகரத்திற்குக் கடகமுஞ் சிம்பத்திற்குக் கும்பமும் கும்பத்திற்குச் சிம்பமுங் கன்னிக்கு மீனமும் மீனத்திற்குக் கன்னியுந் துலாத்திற்கு மேஷமும் மேஷத்திற்குத் துலாமும்இராசிகளினெதிர்க்கயிறும் இங்ஙனங்கூறிய இராசிகளினெதிர்க்கயிற்றை மேற்கூறிய ஆரூடச்சக்கரத்தைக்கீறிஅதிலேகாணப்படும் எ-று. இந்நூலாசிரியர் இராசிகளினெதிர்க்கயிற்றைத் தாம்கூறிய ஆரூடச்சக்கரத்தைக் கீறி அதிலேகாணப்படும் என்றமை தென்னாட்டிலே பெரும்பாலும் வழங்கிவருகிற நாற்சதுரமாயுள்ள யக்கரத்திலே இராசிகளினெதிர்க்கயிறு அவ்வவற்றின்எதிரிலேயிருக்கும் என்பது நீங்கி வேறொரு இராசிகளின் எதிரினேயிருக்கும் என்பதைக் தெரிவித்தார்போலுமாம் அங்ஙனந்தெரிவித்தது எற்றினுக்கோவெனில நூன்முறையிலே ஒழுங்கில்லதை நீக்கி ஒழுங்குள்ளதை எடுத்துக்கோடற்பொருட்டாம். நூலாசிரியர் கூறிய ஆரூடச்சக்கரம் பெரும்பாலும் வழங்கிவருவது வடநாட்டிலேயாம் எ-எ. 82

ஆரூடக்கோட்கள் உணகத்துகின்றது.

இஆது சாமக்கோட்கள்.

92 கதிர்சேய்பொன்மாலோன்புகர்சனியுங்கற்றை
மதிபாம்பறுதியாய்வைத்து-மதியாற்
கதிராதிகாலங்கொண்டேழரையாலொட்ட
லதிராதவெண்கோட்குமாம்.

(இ-ள்.) கதிர்-சேய்-பொன்-மால்-புகர்-சனி-மதி-பாம்பு-ஆகிய ஆரூடக்கோட்கள் எட்டையும் நிறுத்த முறையேஉதித்தொருசாமத்திற்குக் கிழக்கு முதலிய திக்குகள்-8-லேயும்-2-ஞ்சாமத்திற்குத் தென்கிழக்குமுதலிய திக்குகள்-8-லேயும்-3-ஞ்சாமத்திற்குத் தெற்கு முதலிய திக்குகள்- 8-லேயும்-4-ஞ்சாத்திற்குத் தென் மேற்கு முதலிய திக்குரள்-8-லேயும்-5-ஞ்சாமத்திற்குற் மேற்கு முதலிய திக்குகள்-8-லேயும்-6-ஞ்சாமத்திற்குத் வடமேற்கு முதலிய திக்குகள்-8-லேயும்-7-ஞ்சாமத்திற்குத் வடக்கு முதலிய திக்குகள்-8-லேயும்-8-ஞ்சாமத்திற்குத்

வடகிழக்கு முதலிய திக்குகள்-8-லேயும் - - வலமுறையாகநிறுத்துவதாம்—எ-று. உதித்தொருசாமத்திற்குக்

கதிர். கிழக்கே நிற்பதாவது . மேஷம்-4-காற்களும்
ரிஷபமுன் 2 காற்களுங் கொண்டுமேஷத்திலே நிற்பதாம்

சேய், தென்கிழக்கே நிற்பதாவது ரிஷம்பின் 2-காற்களும்
மிதுனம் 4-காற்களுங்கொண்டு மிதுனத்திலே நிற்பதாம்

பொன், தெற்கேநிற்பதாவது கடகம் 4-காற்களும்
சிம்பம் முன் 2-காற்களுங்கொண்டு கடகத்திலே நிற்பதாம்

மால்,தென்மேற்கே நிற்பதாவது சிம்பம்பின் 2-காற்கழும்
கன்னி 4-காற்களுங்கொண்டு கன்னியிலே நிற்பதாம்

புகர், மேற்கே நிற்பதாவது துலாம் 4-காற்களும்
விருச்சிகம் முன் 2-காற்களுங்கொண்டு துலாத்திலே நிற்பதாம்

சனி,வடமேற்கே நிற்பதாவதுவிருச்சிகம் பின் 2-காற்களும்
தனுசு 4-காற்களுங்கொண்டு தனுசிலே நிற்பதாம்

மதி, வடக்கே நிற்பதாவது மகரம் 4-காற்களும்
கும்பம் முன் 2-காற்களுங்கொண்டு மகரத்திலே நிற்பதாம்

பாம்பு வடகிழக்கே நிகிபதாவது கும்பம்பின் 2-காற்களும்
மீனம், 4-காற்களுங்கொண்டு மீனத்திலே நிற்பதாம்

இரண்டாஞ்சாமம் முதலிய காமங்கள் ஏழிற்கு மிவ்வாறே ஒட்டிக் கொள்க, இந்தஆரூடக்கோட்கள் ஒவ்வொறுசாமத்திற்கு ஒவ்வொருதிக்குகளாகப் பெயருகின்றமையால் இவற்றைசாமக் கோட்கள் என்று பெயர்வழங்குகின்றனர், சாமமாவட ஏழரை நாழிகை கொண்டுள்ள காலமாம இச்சாமக்கோட்களை மேஷம் முதலாகவும் வலமுறையாகவும் நிறுத்தல்வேண்டும் என்பதுஅருத்தாபத்தியார் கூறினரெனக்கொள்க வருவனவற்றுள்ளும் அதுவேயாம், சூரியன் அங்காரகன் குரு புன் சுசுக்கிரன்சனி சந்திரன் பாம்பு என்பவற்றைமுறையேகணிதநூற்புலவர் தொன்றுதொட்டு வழங்கி வருற்ற வருகிற வாய்ப் பாடே போல இந்நூலாசிரியருங் கதிர் சேய் பொன் மால் புகர் சனி மதி பாம்பு

என்று எடுத்துககொண்டமையால் அவற்றை அவ்வவ்வாறே எடுத்துரைத்தாம், இவைவருவனவற்றுள்ளுங் கண்டுகொள்க.

இஃது கரந்துரைகோட்கள்.

93 இரவியெழுதூமம்வாளரவமிந்து
பரவுசனிநுட்பம் பார்க்கோனும் - விரவிய
வில்லோடுமால்பொன்சேய்வேடமிவையீராறு
வில்லோடுமால்பொன்சேய்வேடமிவ்வீராறு
நல்கடிகையவ்வைந்தாய் நாட்டு.

(இ-ள்.) கதிர் தூமம் பாம்பு மதி சனி நுட்பம் புகர்இந்திர தனுசு மால்பொன் சேய் பரிவேடம் ஆகிய ஆரூடக்கோட்கள்-12-யும் நிறுத்தமுறையே உதித்தொரு வட்டத்திற்கு ரிஷபம் முதலிய இராசிகள் 12-லேயும்.

2-ம் வட்டத்திற்கு மேஷம்முதலிய இராசிகள் 12 லேயும்
3-ம் வட்டத்திற்கு மீனம்முதலிய இராசிகள் 12 லேயும்
4-ம் வட்டத்திற்குக் கும்பம்முதலிய இராசிகள் 12 லேயும்
5-ம் வட்டத்திற்கு மகரம்முதலிய இராசிகள் 12 லேயும்
6-ம் வட்டத்திற்குத் தனுசுமுதலிய இராசிகள் 12 லேயும்
7-ம் வட்டத்திற்கு விருச்சிகம்முதலிய இராசிகள் 12 லேயும்
8-ம் வட்டத்திற்குத் துலாம்முதலிய இராசிகள் 12 லேயும்
9-ம் வட்டத்திற்குக் கன்னிமுதலிய இராசிகள் 12 லேயும்
10-ம் வட்டத்திற்குச் சிம்பம்முதலிய இராசிகள் 12 லேயும்
11-ம் வட்டத்திற்குக் கடகம்முதலிய இராசிகள் 12 லேயும்
12-ம் வட்டத்திற்கு மிதுனம்முதலிய இராசிகள் 12 லேயும்

இடைமுறையாக நிறுத்துவதாம்-எ-று, இந்த ஆரூடக் கோட்கள்கரந்து உறைகின்றமையால்-இவற்றைக் கரந்துறை கோட்கள்என்றுபெயர் வழங்குகின்றனர், கரந்து உரைதலாவது-இல்லை போல் விருத்தலாம், இக்கரந்துறைகோட்கள் என்ற பெயரை இந்நூலாசிரியர் மரக்கலவரவுகாண்டத்தில் 3-வது செய்யுட் கூறியிருக்கின்றனர், வட்டமாவது ஐந்துநாழிகை கொண்டுள்ள காலமாம், பார்க்கவன் என்பதுபார்க்கோன் எனமருவிற்று எ-று. 84

இஃது வரக்கோட்கள்.

94 கதிர்முதற்பாம்பீறுகக்காட்டியவெண்கோட்க
டுதிதருநீசானமுதற்றேன்றி-விதியே

யிடமவரும்வாராதியெல்லாரும்பின்ன
ரடையவருமூன்றேமுக்கால்

இ-ள் கதிர்சேய் பொன்மால்புகர்சனிமதிபாம்புஆகியஆரூடகோட்கள்-8-ம் நிறுத்தமுறையே அற்றையவாராதிபன் முதலாக உதித்தொரு முகூர்த்தத்திற்கு வடகிழக்குமுதலியதிக்குள்-8-லேயும்
2-ம் முகூர்த்தத்திற்கு வடக்கு முதலிய திக்குள் 8 லேயும்
3-ம் முகூர்த்தத்திற்கு வடமேற்கு முதலிய திக்குள் 8 லேயும்
4-ம் முகூர்த்தத்திற்கு மேற்கு முதலிய திக்குள் 8 லேயும்
5-ம் முகூர்த்தத்திற்குத்தென்மேற்குமுதலிய திக்குள் 8 லேயும்
6-ம் முகூர்த்தத்திற்குத்தெற்கு முதலிய திக்குள் 8 லேயும்
7-ம் முகூர்த்தத்திற்குத்தென்கிழக்குமுதலிய திக்குள் 8 லேயும்
8-ம் முகூர்த்தத்திற்குக் கிழக்கு முதலிய திக்குள் 8 லேயும்
மற்றுமுள்ள முகூர்த்தம், 8-ற்கும் முன் போலத்திக்குள் 8 லேயும்

இடமுறையாக நிறுத்துவதாம்-எ-று, உதித்தொரு முகூர்த்தத்திற்குவாராதிபன் வடகிழக்கே நிற்பதாவது மீனம்-4-காற்களுங் கும்பம்பின் 2 காற்களுங்கொண்டு மீனத்திலே நிற்பதாம், மற்றவையும் இவ்வாறே ஓட்டிக்கொள்க, இந்த ஆரூடக்கோட்கள் வாராதிபனை முதலாகக்கோடலால் இவற்றை வாரக்கோட்கள் என்று பெயர்வழங்குகின்றனர் முகூர்த்தமாவது மூன்றேமுக்கால் நாழிகைகொண்டுள்ளகாலமாம். 85

ஆரூடக்கோட்களி னெதிர்க்கயிறு உணர்த்துகின்றது.

95 கதிர்க்குப்புகராம் பவுமனுக்குக்காரி
புதற்காவுபொன்னவற்குத் திங்கண்-மதிக்கவருந்
தூமற்கோரிந்திரவில் சொல்லு நுட்பற்திற்குவட்ட
மாமிவையெதிர்க்கயிற்றி.

இ-ள், கதிர்க்குப்புகரும் புகர்கருக் கதிருஞ் சேய்க்குச்சனியுஞ் சனிக்குச்சேயும் பொன்னுக்கு மதியும் மதிக்குப் பொன்னும் மாலுக்குப் பாம்பும் பாம்பிற்கு மாலுந் தூமத்திற்கு இந்திரதனுசும்இந்திரதனுசிற்குத் தூமமும் நுட்பத்திற்குப் பரிவேடமும் பரிவேடத்திற்குநுட்பமும் ஆரூடக்கோட்களி னெதிர்க்கயிறும்

இவை சாமக்கோட்களின் ஆருடச்சக்கரங்கள்—அ-ம்.



# இவை கரந்துறை கோட்களின் ஆரூடச்சக்கரங்கள்-௱௨-௰.-
























இவை கரந்துறை கோட்களின் ஆரூடச்சக்கரங்கள்—௰௨—ம்.









இவை-வாரக்கோட்களின் ஆரூடசக்கரங்கள் கஉ-னுள் ஆதித்தவார சக்கரங்கள் கரு-ம். இவற்றையே இரவு அ-முகூர்த்தத்திற்கும் எடுத்துக்கொள்ள ஆதித்தவாரசக்கரங்கள் கரு-ம் சரி வருவனவற்றுள்ளும் இப்படியேயாம்.



## சோமவாரசக்கரங்கள்-ககூ-ம்
























## மங்களவாரசக்கரங்கள்-கசு-ம்



## புதவாரசக்கரங்கள்-ககூ-ம்.
























## குருவாரசக்கரங்கள்-கசு-ம்
























## சுக்கிரவாரசக்கரங்கள்-௧௬-ம்.
























## சனிவாரசக்கரங்கள்-கஉ-ம்.



இவை சவ்வியச்சக்கரங்கள் ௨௮-ளுள் முற்பகுற்சக்கரங்கள் ௭-ம்.

௧

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ப | இ | ரோ | மி | வி | அ |
| ரே | ஆ | பூ | பு | இ | சு | கே |
| உ | ம | பூ | டு | அ | சி | மூ |
| பூ | ச | அ | இ | அ | உ | பூ |

௪

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ரோ | மி | இ | பு | பூ | மூ | பூ |
| இ | உ | பூ | ம | ஆ | கே | உ |
| ப | அ | சி | சு | வி | அ | அ |
| அ | ரே | உ | பூ | ச | அ | இ |

௨

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ப | இ | ரோ | மி | இ | அ | கே |
| அ | ம | ஆ | பூ | பு | வி | மூ |
| ரே | பூ | உ | அ | சி | சு | பூ |
| உ | பூ | ச | அ | இ | அ | உ |

௫

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மி | இ | பு | பூ | ஆ | பூ | உ |
| ரோ | அ | உ | பூ | ம | மூ | அ |
| இ | சி | சு | வி | அ | கே | இ |
| ப | அ | ரே | வு | பூ | ச | அ |

௩

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ | ரோ | மி | இ | பு | கே | மூ |
| ப | பூ | ம | ஆ | பூ | அ | பூ |
| அ | உ | அ | சி | சு | வி | உ |
| ரே | உ | பூ | ச | அ | இ | அ |

௬

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ | பு | பூ | ஆ | ம | உ | அ |
| மி | சி | அ | உ | பூ | பூ | இ |
| ரோ | சு | வி | அ | கே | மூ | அ |
| இ | ப | அ | ரே | உ | பூ | ச |

௭

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பு | பூ | ஆ | ம | பூ | அ | இ |
| இ | சு | சி | அ | உ | உ | அ |
| மி | வி | அ | சே | மூ | பூ | ச |
| ரே | இ | ப | அ | ரே | உ | பு |

## பிற்பகற்சக்கரங்கள் ௭-ம்.

௧

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பூ | ஆ | ம | பூ | உ | தி | அ |
| பு | வி | சு | சி | அ | அ | ச |
| தி | அ | கே | மூ | பூ | உ | பூ |
| யி | ரோ | தி | ப | அ | ரே | உ |

௨

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பூ | உ | அ | சி | சு | பூ | உ |
| ம | மூ | கே | அ | வி | ச் | ரே |
| ஆ | பூ | உ | அ | தி | அ | அ |
| பூ | பு | தி | யி | ரோ | தி | ப |

௩

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | ம | பூ | உ | அ | அ | ச |
| பூ | அ | வி | சு | சி | தி | பூ |
| பு | கே | மூ | பூ | உ | அ | உ |
| தி | யி | ரோ | தி | ப | அ | ரே |

௪

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | அ | சி | சு | வி | உ | ரே |
| பூ | பூ | மூ | கே | அ | பூ | அ |
| ம | உ | அ | தி | அ | ச | ப |
| ஆ | பூ | பு | தி | யி | ரோ | தி |

௫

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | பூ | உ | அ | சி | ச | பூ |
| ஆ | கே | அ | வி | சு | அ | உ |
| பூ | மூ | பூ | உ | அ | தி | ரே |
| பு | தி | யி | ரோ | தி | ப | அ |

௬

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | சி | சு | வி | அ | ரே | அ |
| உ | உ | பூ | மூ | கே | உ | ப |
| பூ | அ | தி | அ | ச | பூ | தி |
| ம | ஆ | பூ | பு | தி | யி | ரோ |

௭

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சி | சு | வி | அ | கே | அ | ப |
| அ | அ | உ | பூ | மூ | ரே | தி |
| ரோ | உ | பூ | ச | அ | தி | பு |
| யி | தி | பு | பூ | ஆ | ம | பூ |

## முன்னிரவு சக்கரங்கள் ௭—ம்.

௧

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | வி | அ | கே | மு | ப | தி |
| சி | தி | அ | உ | பூ | அ | ரே |
| அ | அ | ச | பூ | உ | ரே | மி |
| உ | பூ | ம | ஆ | பூ | பு | தி |

௪

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கே | மு | பூ | உ | அ | மி | தி |
| அ | பூ | ச | அ | தி | ரோ | பு |
| வி | உ | ரே | அ | ப | கி | பூ |
| சு | சி | அ | பூ | உ | ம | ஆ |

௨

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வி | அ | கே | மு | பூ | கி | ரோ |
| சு | அ | தி | அ | உ | ப | மி |
| சி | ச | பூ | உ | ரே | அ | தி |
| அ | வு | பூ | ம | ஆ | பூ | பு |

௫

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மு | பூ | உ | அ | தி | கி | பு |
| கே | உ | பூ | ச | அ | மி | பூ |
| அ | ரே | அ | ப | கி | ரோ | ஆ |
| வி | சு | சி | அ | உ | பூ | ம |

௩

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | கே | மு | பூ | உ | ரே | மி |
| வி | ச | அ | தி | அ | கி | தி |
| சு | பு | உ | ரே | அ | ப | பு |
| சி | அ | உ | பூ | ம | ஆ | பூ |

௬

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பூ | உ | அ | தி | அ | பு | பூ |
| மு | ரே | உ | பூ | ச | தி | ஆ |
| கே | அ | ப | கி | ரோ | மி | ம |
| அ | வி | சு | சி | சு | உ | பூ |

௭

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | அ | தி | அ | ச | பூ | ஆ |
| பூ | அ | ரே | உ | பூ | பு | ம |
| மு | ப | கி | ரே | மி | தி | பூ |
| ரே | அ | வி | ச | கி | அ | உ |

## பின்னிரவு சக்கரங்கள் எ—ம்.

௧

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | இ | அ | ச | பூ | ஆ | ம |
| உ | ப | அ | ரே | உ | பூ | பூ |
| பூ | இ | ரோ | மி | இ | பு | உ |
| மூ | கே | அ | வி | சு | சி | அ |

௨

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | பூ | உ | ரே | அ | உ | அ |
| அ | மி | ரோ | இ | ப | பூ | ஏ |
| இ | இ | பு | பூ | ஆ | ம | சு |
| அ | உ | பூ | மு | ங்க | அ | வி |

௩

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ | அ | ச | பூ | உ | ம | பூ |
| அ | இ | ப | அ | ரே | ஆ | உ |
| உ | ரோ | மி | இ | பு | பூ | அ |
| பூ | மூ | கே | அ | வி | சு | சி |

௪

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பூ | உ | ரே | அ | ப | அ | சி |
| ச | இ | மி | ரோ | சு | உ | க |
| அ | பு | பூ | ஆ | ம | பூ | வி |
| இ | அ | உ | பூ | மூ | கே | அ |

௫

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ச | பூ | உ | ரே | பூ | உ |
| இ | ரோ | இ | ப | அ | ம | அ |
| அ | மி | இ | ப | பூ | ஆ | சி |
| உ | பூ | மூ | கே | அ | வி | சு |

௬

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | ரே | அ | ப | இ | சி | சு |
| பூ | பு | இ | மி | ரோ | அ | வி |
| ச | பூ | ஆ | ம | பூ | உ | அ |
| அ | இ | அ | உ | பூ | மூ | கே |

௭

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ரே | அ | ப | இ | ரோ | சு | வி |
| உ | பூ | பு | இ | மி | சி | அ |
| பூ | ஆ | ம | பூ | உ | அ | கே |
| ச | அ | இ | அ | உ | பூ | மூ |

உரையாசிரியரால் நூதனமாக இயற்றப்பட்டு சேர்க்கப்பெற்ற
ஃபசக்கரங்கள் கஉ-ம் இவற்றிற்குச் செய்யுளும்.

க




ச




உ




ரு




ங




சு



எ


க
வி
சி
து
த
க
ம
மி
மே
சு
ரி
மீ

அ


து
த
ச
வி
ம
சி
சு
க
ரி
மீ
மி
மே

கூ


வி
ம
து
த
சு
க
மீ
சி
மி
மே
க
ரி

௰


த
சு
வி
ம
மீ
து
மே
க
க
ரி
சி
மி

௰க


ம
மீ
த
சு
மே
வி
ரி
து
சி
மி
க
க

௰உ


சு
மே
ம
மீ
ரி
க
மி
வி
க
க
து
சி

## செய்யுள்

### ஆசரியவிருத்தம்.

தடமுதலவுஞ்செய்க்கண்டவோரையைமுதற்
றுணத்திருத்திவலமாய்த்
தக்கவெண்கோண்பன்னிரண்டுவீடாங்கூவ
சக்கரம்வரைந்துபார்க்க

விடபமுஞ்ஞெண்டு துலைதோள்சுறவுசான்மீ
னெழுந்திதிற்பிறகுபிறைதா
னெழுந்திடிற்பெருநீரதாகும்புதன்குரு
வெழுந்திடிற்கீழ்நீரதாம்

படவரவுதான்றோன்றிடிற்பழங்கிணறுமற்
றயகோட்கடோன்றிடிற்பாழ்
பாங்காகுமுச்சந்தனக்குசாணைட்சிக்கு
பகருமுழநட்பினுக்கோ

வடமுற்றவாண்மட்டுபகைநீசமாமெனி
லதற்கரியபாதாளமா
மவவவற்றுள்ளகதிர்கட்குள்ளவாறென்
றறைந்தனரறிந்தனர்களே.

இஃது

முதலாவது.

## தாது காண்டம்.

தாதுமூலசீவன் தெரிவகைதெரிவிப்பான்தொடங்கி அவற்
றிற்கு முதற்காரணமாயுள்ள தாது மூலசீவவிராசி
களைத்தெரிவிக்கின்றனர்.

96 மறிசுறாநெண்டுகோல் வாய்ந்தமைந்தாது
வெறிதேளருதரிசான் மூல-நெறியாய
தண்டுசிலைமீனமொடு தாழ்குழலுந்தாழ்குழலா
யுண்டென்றசீவ னுரை

(இ-ள்.) மேஷம்-கடகந்-துலாம்-மகரம்-இவை4-ம் தாது
விராசிகளாம், ரிஷபம்-சிம்பம்-விருச்சிகங்-கும்பம்-இவை 4-ம்
மூலவிராசிகளாம், மிதுனங்-கன்னி-தனசு-மீனம்-இவை-4-ம்சீவ
விராசிகளாம்-எ-று. இதிலேதாழ்குழலும்என்றதைக் கன்னிய
ராசியாகவுந் தாழ்குழலால்என்றதை மகடூ 2 முன்னிலையாகவும்
பிரித்துரைத்துக்கொள்க-எ-று. 1

தாதுமூலசீவக்கோட்களைத்தெரிவிக்கின்றனர்.

97 ஆடரவத்திங்கள்சேய் காரியுந் தாதுவா
மோடிரவிவெள்ளியுயிர் மூலமா-நீடிய
பொன்புலவன்சீவனு மென்பவேபொய்யாச்சீர்
நன்புலமையோர்க ணயந்து

(இ-ள்) சந்திரன்-அங்காரகன்-சனி-பாம்பு-இவை-4-ம் தா
துக்கோட்களாம். சூரியன்-சந்திரன்-சுக்கிரன்-இவை-2-ம்மூலக்
கோட்களாம், புதன்-குரு-இவை-2-ம்-சீவக்கோட்களாம்-எ-று.

முற்கூறியதாதுமூலசீவ கோட்களிலேதாதுக்கோட்களாகியசந்
திரன் சனிஇவை 2-ற்கும் மூலக்கோளாகிய சூரியனுக்குஞ்
சீவக்கோளாகிய புதனுக்கும் இராசிகளின் வகைகளாலே
அமைந்துள்ள வித்தியாசங்களை எடுத்துக்
காட்டுகின்றனர்.

98 அருக்கனுந்திங்களுந் தன்னிலத்திற்றாது
முருக்கும்பிறநிலத்தின் மூலம்-திருத்தக்க

மந்தன்படர்மூல மாயிருக்குந்தன்னிலத்திற்
புந்தியுந்தாதுவாய்ப் பூட்டு.

(இ-ள்.) சூரியன் சந்திரன். இவை-2-ம் ஆட்சியிராசிகளிலே தாதுக்கோட்களும் மற்றைய் இராசிகளிலே மூலக்கோட்களுமாம், சனி ஆட்சியிராசிகளிலேமூலக்கோளும்மற்றைய இராசிகளிலே தாதுக்கோளுமாம், புதன் ஆட்சியிராசிகளிலே தாதுக்கோளும் மற்றைய் இராசிகளிலே சிவக்கோளுமாம்-எ-று. ஆகவேஇதிர்கூறுதனவாகிய மற்றையகோட்க 8-4-ற்கும் இங்ஙனமாகிய வித்தியாசங்கள் இல்லையாகக் கண்டுகொள்க-எ-று. 3

தாதுமூலசீவன்தெரிவகைதெரிவிக்கின்றது.

99 தாதுவிராசியைத் தாதுக்கோணோக்கினுந்
தாதுவைத்தாது கவிக்கினுந்-தாதுவா
மூலமுஞ்சீவனுமிம் முறைமையாற்கண்டு
சேலனையகண்டமடைவாய் செப்பு.

(இ-ள்.) ஆரூடவிராகியாய் அவ்விராசியைத் தாதுவிராசிகவிக்கனுந்தாதுக்கோள் நோக்கினுந்தாதுவாம்' ஆரூடவிராசி மூலவிராசியாய் அவ்விராசியை மூலவிராசி கவிக்கினும் மூலக்கோள் நோக்கினும் மூலமாம். ஆரூடவிராசி சீவவிராசியாய் அவ்விராசியைச் சீவவிராசிகவிக்கினுஞ் சீவனும்-எ-று. கவிப்பிராசியைக்கூறவே ஆரூடவிராசியை வருவித்துஅவ்வாரூடவிராசியின் சம்பத்தத்திலே கவிப்பிராசியைப்பொலாத நோக்குக் கோளைப் பின்தள்ளிமேற்படி கவிப்பிராசியைஉடன்வைத்துக்கூறினோம்.

இதுவுமது.

தாதுமூலங்கூடிற் சீவனுஞ்சீவனுந்
தாதுவோடாகிற் லருமூலந்-தாதுவா
மூலமுஞ்சீவனு மூன்று முடனாகிற்
சாலவலிதறிந்து சாற்று.

(இ-ள்.) ஆரூடவிராசி தாதுவிராசியாய் அவ்விராசியை மூலவிராசிகவிக்கினும் மூலக்கோள் நோக்கினும் ஆரூடவிராசி மூலவிராசியாய் அவ்விராசியைத் தாது விராசிகவிக்கினுந் தாது

கோள் நோக்கினுஞ்சீவனாய், ஆரூடவிராசி தாது விராசியால் அவ்
விராசியைச் சீவவிராசிகவிக்கினுஞ் சீவக்கோள்நோக்கினும்ஆரூட
விராசி சீவவிராசியாய் அவ்விராசியைத் தாதுவிராசிகவிக்கினுந்
தாதுக்கோள்நோக்கினும்மூலமாம், ஆரூடவிரா சிமூலவிராசியாய்
அவ்விராசியைச்சீவவிராசியைசீவவிராசிகவிக்கினுஞ் சீவக்கோள்
நோக்கினும் ஆரூடவிராசிசீவவிராசியாய்அவ்விராசியைமூலவிராசி
கவிக்கினும் மூலக்கோள்நோக்கினுந்தாதுவாம், இதுவரையிற்
கூறிய ஆரூடவிராசியுங்கவிப்பிராசியும் நோக்குக்கோளும் ஆகிய
3.ம்-3-விதத்திலே மாறுபட்டுவரில் அவற்றுள்வலிதின்மையதா
கிய ஒன்று நீக்கி வலி துள்ளவைகளாகிய இரண்டையுங் கொண்
டு காணப்படும்-எ-று. இச்செய்யுள் மாட்டெறிந்தொழுகல் என்
கிற உத்தியால் முடிபேற்றனகாண்க. சாலவலிதறிந்துசாற்று
என்று மிகுத்துக்கூறியவதனால்வலிதுபெற்ற கோட்களைக்கொண்
டுஇச்செய்யுளிலே அமைத்துள்ள விதியின்வழியே தாதுமூல
சீவன்களின் விகற்பங்கள் ஆறையும் யூகித்தெடுக்கப்படும் எங்
ஙனமெனில். ஆரூடவிராசிதாதுவிராசியாய் அவ்விராசியை மூலக்
கோள் வலிதுபெற்று நோக்கில் மூலசீவனும், சீவக்கோள் வலிது
பெற்று நோக்கிற் சீவமூலமாம், ஆரூடவிராசி மூலவிராசியாய்
அவ்விராசியைச் சீவக்கோள் வலிதுபெற்று நோக்கிற் சீவதாது
வாம் தாதுக்கோள் வலிதுபெற்று நோக்கில் தாதுசீவனும், ஆரூ
டவிராசி சீவராசியாய் அவ்விராசியைத் தாதுக்கோள் வலிதுபெ
ற்று நோக்கில் தாதுமூலமாம், மூலக்கோள் வலிதுபெற்று நோக்
கில் மூலதாதுவாம் இப்படியே ஏகாதிபத்திய இராசிகள் இரண்
டிலேயும் ஆரூட 1-ம் கவிப்பு-1-ம், அல்லது உதயம்1-ம் கவிப்பு
1-ம், அல்லது ஆரூடம் 1-ம் எதயம் 1-ம் இப்படியாக நேர்படில்
அவற்றின் அதிபதிக்கோள் நிற்கின்ற நிலையைக்கொண்டும் முன்
முறையே காணப்படும் எங்ஙனமெனில் தாது விராசியிலேமூலக்
கோள் நிலைபெற்று நிற்கில் மூலசீவனும், மற்றவையும் இவ்வாறே
ஒட்டிக்கொள்க, ஏகாதிபத்தியமன்றியும் மற்றெந்த இராசிஉதய
மானும் அந்த இராசியின் அதிபதிக்கோள் நிற்கின்ற நிலையைக்
கொண்டு முன்முறையே காணவும்படும். இன்னம் ஒரு அடைவு
உதயவிராசி தாதுவிராசியாய் அவ்விராசியைத் தாதுக்கோள் தா
து விராசியில் நின்றுநோக்கில் தாதுவாம் மூலவிராசியில் நின்று
நோக்கில் மூலமாம், சிவவிராசியில் நின்று நோக்கிற் சீவனும் உத
யவிராசி மூலவிராசியா அவ்விராசியை மூலக்கோள் மூலவிராசி
யில் நின்று நோக்கில் மூலமாம் மூலமல்லாத இராசிகளில நின்று
நோக்கிற் சீவனும் உதயவிராசி சீவவிராசியாய்

அவ்விராசியைச் சீவக்கோள் சீவவிராசியினின்று நோக்கிற்சீவனும் சீவனல்லா திராசிகளில் நின்றுநோக்கில் மூலமாம், இப்படியே உதய விராசி தாதுவிராசியாய் அவ்விராசியின் அதிபதிக்கோள் தாதுவிராசியிலே நிலைபெற்றுநிற்கில் தாதுவாம் மூலவிராசியிலே நிலைபெற்று நிற்கில் மூலமாம் சீவவிராசியிலே நிலைபெற்று நிற்கில் சீவனும் மற்றவையும் இவ்வாறே ஒட்டிக்கொள்க இன்னம் ஒரு அடைவு தாதுக்கோளாய் மூலவிராசியில் நிற்கவந்த தாதுமூல தாதுவாம் சீவவிராசியில் நிற்க வந்ததாதுசீவனும், மூலக்கோளாய் சீவவிராசியில் நிற்கவந்தமூலம் மூலசீவனும், தாதுவிராசியில் நிற்க வந்தமூலம்தாதுமூலமாம், சீவக்கோளாய் தாதுவிராசியில் நிற்க வந்தசீவன் தாதுசீவனும் மூலவிராசியில் நிற்கவந்தசீவன் சீவமூல மாம், இன்னம் ஒரு அடைவு உதயாதிபதி சந்திரன் இவைஉதயத் திற்கு ஒற்றித்த இராசிகளில் நிற்கில் தாதுமூலம்-சீவன் இப்படி யாகவும், இரட்டித்த இராசிகளில் நிற்கிறசீவன்-மூலம்-தாது இப் படியாகவும்-உதயவிராசிதொடங்கிநின்ற இராசிவரையிலும் ஒவ் வொன்றிற்கு ஒவ்வொரு இராசியாக எண்ணிக்காணப்படும், இன் னம் ஒரு அடைவு சந்திரன் உதயத்திலே நிற்கினும் உதயத்தை நோக்கினுந் தாதுவாக வந்தவிடத்து மூலமென்று மூலமாக வந்த விடத்துச் சீவனென்றுஞ் சீவனாகவந்தவிடத்துத் தாதுவென்றும் இப்படியாக மாறுபடுத்திக் கூறப்படும் தாதுவாவது - மண்-கல்- பொன் முதலியனவாம், மூலமாவது, புல் கொடி செடிமுதலியன வாம், சீவனாவது-எறும்புமுதலியன பறவைகள் விலங்குகள்முதலி யனவாம், மூலதாதுவாவது-புல் கொடி செடி முதலியமடிந்துபோ னவையும் மடியாதவிடத்து அவற்றின் பட்டை கிழங்கு பூமுதலிய வையுமாம், சீவதாதுவாவது-எறும்புமுதலிய பறவைகள் விலங்கு கள் முதலிய மடிந்துபோனவையும் மடியாதவிடத்து அவற்றின் தோல் நகம் மாமிசம் முதலியவையுமாம், தாதுமூலமாவது-முற்கூ றிய மூலதாதுவுஞ் சீவதாதுவுமாகிய வஸ்துக்களினாலே பண்ணின வும் எழுதினவுமானபுல் கொடிசெடிமுதலிய மூலங்களாம் சீவமூல மாவது மடியாதுள்ள புல்கொடிசெடிமுதலியமூலங்களாம் தாதுசீவ னாவது முற்கூறியமூலதாதுவும்சீவதாதுவுமாகிய வஸ்துக்களினாலே பண்ணினவும் எழுதினவுமான எறும்புமுதலிய பறவைகள்விலங்கு கள்முதலிய சீவன்களாம், மூலசீவனாவது-முற்கூறிய மூலதாதுவா கிய வஸ்துக்களினாலேபண்ணினவும் எழுதினவுமான எறும்புமுத

விய பறவைகள் விலங்குகள் முதலியசீவன்களாம், இவைகளெல்லாம் அவ்வவற்றின் காணடங்களிலேயூகித்துணரப்படும், இதிலே சீவமூலத்திற்குக் காட்டியவற்றை மூலசீவனுக்கும் மூலசீவனுக்குக் காட்டியவற்றைச் சீவமூலத்திற்கும் ஆம் என்பாருமுளர்.

உலோகவருக்க முணர்த்துகின்றது,

101. செம்புசேய்தூதென்றராகுகுருபொன்வெள்ளிபுகர்
நம்புசீர்வெண்கலமாநன்மதியம்-வெம்புங்
கதிரோன்றனபித்தளையாங்காரியொடுபாம்பு
முதிராதிரும்பென் றுரை.

இ-ள். கோட்கள் தாதுவாய் தாதுவிலே உலோகவருக்கமாய் வந்தவிடத்து சூரியனுக்குப் பித்தளையுஞ் சந்திரனுக்கு வெண்கலமும் அங்காரகனுக்குச் செம்பும் புதனுக்குத் தராவுங் குருவுக்குப் பொன்னுஞ் சுக்கிரனுக்கு வெள்ளியுஞ் சனி பாம்பு இவையிரண்டிற்கும் இரும்புஞ்சொல்லப்படும்-எ-று. வெம்புங்கதிரோன் என்றும் நன்மதியம் என்றும் மிகுத்துக்கூறியவதனால் சூரியனுக்குப் பஞ்சலோகமுஞ் சந்திரனுக்கு யீயமும் பாம்பை ஒடுகொடுத்துப் பிரித்தவதனால் பாம்பிற்கு நாகமும் வருவித்துரைத்துக்கொள்க. இவ்விதி அவ்வவற்றின் ஆட்சியிராசிகட்குமாம். 1

கரு உணர்த்துகின்றது,

102. ஆழ்வான்சேய்காரியனிசுங்கனென்றினைத்தும்
வாழ்வாரொருவாயின்வன்கருவி-தாழ்வில்லா
நாடறிவான்பொன்புந்திநனகிருவயாட்சிகளி
னீடும்வடிவென்றேநினை.

இ-ள். கோட்கள் தாதுவாய் தாதுவிலேகருவியாய் வந்தவிடத்து சூரியன் அங்காரகன் சுக்கிரன் சனி இவை-4-ற்கும் ஒருவாய்க்கருவியுஞ்சந்திரன் புதன் குரு இவை-3-ற்கும் இருவாய்க்கருவியுஞ்சொல்லப்படும் கருவிகளின்வடிவு ஆட்சியிராசிகளில் நின்றவிடத்து அந்தந்தக்கோட்களின் வடிவேயாம் மற்றய இராசிகளில் நின்றவிடத்துநின்ற விராசிகளின் வடிவேயாம் மற்றய ராசிகளில் நின்றவிடத்துநின்றவிராசிகளின்வடிவாம்-எ-று. ஆட்சிகளினீடும்வடிவு எனவே மற்றய இராசிகளில் இராசிகளின்வடிவு என்பதுபெற்றாம். பாம்பைக்கூறாமையால் அப்பாம்பிற்குத்தான்நின்ற இராசியின் அதிபதிக்கோட்களின் கருவியுங்கருவியின்வடிவும்வரு

வித்துரைத்துக்கொள்க. கருவியாவது-ஆயுதப்பொது, ஆழ்வான்
என்றது-சூரியனுக்கும் நாடறிவான் என்றது சந்திரனுக்கும்பெய
ராயிற்று. 2

பாஷாணவருக்க முணர்த்துகின்றது.

103. வெங்கதிரோன்கற்களாமேதைக்குமண்டுகளாந்
திங்களுவர்நீலன் றிகழிரும்பாஞ்-சுங்கன்
பளிங்கோரிமுத்துபவழம்சேர்பாம்பு
தெளிர்தமனோசிலைபொன்பொன்

இ-ள். கோட்கள் தாதுவாய் தாதுவிலே பாஷாணவருக்க
மாய் வந்த விடத்து சூரியனுக்குக் கல்லுஞ்சந்திரனுக்கு உவமண்
ணும் அங்காரகனுக்கு வைப்புப்பவழமும் புதனுக்குப்புழுதி மண்
ணுங் குருவுக்குப்பொன்மணலுஞ் சுக்கிரனுக்குப் பளிங்கும் வைப்
புமுத்தும் சனிக்கு இருப்புமணலும்பாம்பிற்குமனோசிலைமுதலிய
பாஷாணங்களுஞ் சொல்லப்படும் எ-று-குருவுக்குப் பொன் என்
பதும் சனிக்கு இரும்பு என்பதும் மேலே உலோகவருக்கத்துட்
கூறியிருக்கின்றமையால் அவற்றையும், அங்காரகனுக்குப் பவழம்
என்பதும் சுக்கிரனுக்குமுத்து என்பதும்மேலேமணிவருக்கத்துட்
கூறியிருக்கின்றமையால் அவற்றையும் இங்கேபாஷாணவருக்கத்
திற்கு ஒப்பமுறையே பொன்மணல் இருப்புமணல் வைப்புப்பவ
ழம் வைப்புமுத்து என்பதுபெற்றாம். பொன்மணலாவது பொன்
னுருக்குமணலாம். இருப்புமணலாவது இரும்புருக்கு மணலாம்.
வைப்புப்பவழமும்-வைப்புமுத்துமாவது முறையேசெய்பவழமும்-
செய்முத்துமாம் இச்செய்யுள் அருத்தாபத்தியாற் கூறினமையால்
குருவுக்குச் செங்கல்லும், சுக்கிரனுக்குப்பளிங்குமணலும், சனிக்
குக் கருங்கல்லுங் களிமண்ணும், பாம்பிற்குப் பொதுப்படக்கற்
களும் வருவித்துரைத்துக்கொள்க. 3

பாஷாணவருக்கத்துயர்வு உணர்த்துகின்றது.

104. அஞ்சனங்காரிவைடூரியம்புகராம்
வஞ்சமில்புந்தி மரகதமா-மெஞ்சிய
சூரியற்குச்சூரியகாந்தமார்தூயமதிக்கு
சீரியுயர் காந்தமினை .

இ-ள். கோட்கள் தாதுவாய் தாதுவிலே பாஷாணவருக்கமாய்பாஷாணவருக்கத்துள் ஒளி வுள்ளவைகளாய் வந்தவிடத்துசூரியனுக்குச் சூரியகாந்தமும், சந்திரனுக்குச் சந்திரகாந்தமும்,புதனுக்கு மரகதமணிபோல்வனவும் 'சுக்கிரனுக்குவைடூரியமணிபோல்வனவும், சனிக்கு நீலமணிபோல்வனவும், இப்படியே அங்காரகன் குரு-இராகு-கேதுகட்கு அவ்வவற்றிற்குரிய மணிபோல்வனவும் ஆமென்று யூகித்துரைக்கப்படும்-எ-று. சூரியன்-சந்திரன்-புதன்-சுக்கிரன்கட்கு அவ்வவற்றிற்குரியமணிபோல்வனவற்றைக்கூறவே கூறுதொழிந்த அங்காரகன்-குரு-இராகு-கேதுகட்கும் அவ்வவற்றிற்குரிய வணிபோல்வன என்று எடுத்துக்கூறினும். சூரியகாந்தமாவது-சூரியனைக்காணவே நெருப்பு வீசுகின்ற கல்லாம்.சந்திரகாந்தமாவது சந்திரனைக்காணவே நீர்பொழிகின்றகல்லாம், மரகதமணி போல்வன முதலிய மற்றுள்ள கற்களாவது போலிமணிகளாம்.

மணிவருக்கம் உணர்த்துகின்றது.

105. மாணிக்கமுத்துபவழமரகதமா
மாணிப்பாம்பன்மமவைடூரியமுங்-கோணிறத்த
கோமேதகம்வரையிற்கோளொன்பதிற்கடைவே
யாமாகத்தோன்றுமறி.

இ-ள். கோட்கள் தாதுவாய் தாதுவிலே மணிவருக்கமாய் வந்தவிடத்து சூரியனுக்கு மாணிக்கமும், சந்திரனுக்குமுத்தும். அங்காரனுக்குப் பவழமும், புதனுக்குமரகதமும், குருவுக்குப்பதுமராகமும், சுக்கிரனுக்கு வைடூரியமும், சனிக்குநீலமும், இராகுவுக்குவைரமும், கேதுவுக்குக் கோமேதகமுஞ்சொல்லப்படும்-எ-று, கோணிறத்த என்றவதனாற் சனிக்கு நீலமும் இராகுவுக்கு வைரமும் என்பதுபெற்றாம், இவ்விதியைக்கொண்டே சந்திரனுக்கு வைடூரியமுஞ்சுக்கிரனுக்குமுத்தும் வருவித்துரைத்துக்கொள்க.

அணிகலம் ஆமென்பது உணர்த்துகின்றது.

106 மக்களிராசியுங்கோளும்மதித்துடனே
யொக்கவெழுதரும்போழ்துத்தமாம்-மக்க
ளணிகலமாய்த்தோன்றுமேவியக்கோணிறத்த
வணிகலமா மென்பதறி

இ-ள். இருகாலிராசிகள் உதித்து அவற்றில் இருகாற்கோட்கள் நிற்கில் அணிகலமாமென்றும் அவ்வணிகலம் அந்தக்கோட்களின் நிறத்தனவாம் என்றுஞ் சொல்லப்படும்-எ-று அக்கோணிறத்த என்று பொதுப்படச்சொல்லி உடனே அறியென்று நினைப்பித்தமை குருசுக்கிரற்கு நோக்கின கோணிறத்த என்கிறவழக்கை எச்சரித்தார்போலுமாம். 6

அணிகலங்களை விகற்பிக்கின்றது.

107. வெள்ளை தலைப்பணியா மேதையமிந் துங்காதி
துள்ளபணியரவுமொண்சனியு-மொள்ளிளையாய்
நீண்டகால்கையிற்பணியாநீள்பொன்மதிசேயென்
மாண்டக்கவாடைமேல்வை.

இ-ள். சூரியன்-அங்காரகன்-குரு-இவைமூன்றிற்குங் கழுத்திலணியாம், சந்திரன் புதன்-இவையிரண்டிற்குக்காதிலணியாம், சுக்கிரனுக்குத் தலையிலணியாம், சனி-பாம்பு-இவை யிரண்டிற்குங் கையிலணியுங் காலிலணியுமாம்-எ-று-ஆடைமேல் என்றது- கழுத்திற்குப் பெயராயிற்று. 7

இதுவுமது.

108. பொன்மாமணிமாலைபோல்வனசெங்கல்லு
மன்னுகாசொண்சாணை மாமதிய-மின்னே
கரியோன்வருங்காற் கருங்கனமயிரென்
புரியகனகமெனவோர்.

இ-ள், குருவுக்குப் பொன்மணியும்-மணிமாலையும மணிகளிழைத்தபதக்கங்களும், சந்திரனுக்குக்காசிமாலையும்-பட்டைதீர்ந்த இரத்தினங்கள் பதித்தனவும், சனிக்குநீலமணிபதித்தனவும்-கவரிமாமயிர் புலிநகம்முதலிய எலும்பு இவைகள்பொருந்திய அணியும் இரும்பினுற் செய்யப்பட்ட அணியுஞ் சொல்லப்படும். இப்படியே இவற்றிற் சொல்லாதொழிந்த சுக்கிரன்முதலிய கோட்களுக்கும் வெள்ளிமுதலிய உலோகங்கள்-வைடூரியம் முதலிய மணிகள் வைப்புமுத்து முதலிய போலிமணிகள்-ஆகிய இவற்றுனியற்றிய அணிகளும் ஆமென்பது யூகிக்கப்படும்-எ-று. உரியகனகம் எனவே சனிக்கு இரும்பினுற் செய்யப்பட்ட அணியும், சுக்கிரன் முதலிய

கோட்களுக்கு வெள்ளிமுதலிய உலோகங்கள் - வைடூரியம்முதலிய மணிகள்வைப்புமுத்து முதலியபோலிமணிகள் - ஆகிய இவற்றுனி யற்றிய அணிகளும் என்பதுபெற்றும், இரும்பினாற்செய்யப்பட்ட அணியாவது யந்திரமோரமாம் யந்திரக்காப்பு எனினும் ஒக்கும்.

இதுவுமது.

109. பொன்னரவுஞாண்கைறைபோற்றும்மணிகளுள
பொன்னெரியேற்றம்மதன்றுபொன்னனுடன்-பொன்ன
னெறிவின்றிப்பூண்பனவாமின்புகர்பொன்முத்துச்
செறிபளிங்கொடீயமதிசெப்பு

இ-ள். குருவுடனே பாம்பு நின்றவிடத்து பொற்சரடுங்காறை யுங்கண்டிகையும், சுக்கிரன் நின்றவிடத்து முத்துபடிகம் இவைகள் பொருத்தியுள்ள அணியும், சந்திரன் நின்றவிடத்து தாயித்துஞ்சொல்லப்படும் மற்றயகோட்கள்நின்றவிடத்து இங்ஙனமேயூகிப்பதாம்அன்றியும் குருகூடிநின்றவிடத்து எக்காலங்களிலும்அணிகின்ற அணியாம், குருநீங்கலான கோட்கள்கூடி நின்றவிடத்து இரவலணியாம் அங்காரகன் நீங்கலானகோட்கள் கூடிநின்ற விடத்து சொந்த வணியாம் எ-று. சந்திரனுக்கு உரிமைகாட்ட வந்த வர்ஈயத்தை அணியோடுசேர்த்துக்கூறவே அஃது குளிசமாம் என்பதுகொண்டு குளிசம்வைப்பதற்கு ஏற்படுத்திக்கொண்ட அணியாகிய தாயித்தை வருவித்துரைத்தாம், ஈயக்குனுக்கெனினும் ஒக்கும், ஈயக்குனுக்காவது செவியடிவதற்கு இடுவதாக ஏற்படுத்திக்கொண்ட அணியாம். 9

தாதுகாண்டம் முற்றிற்று.

உ
ஃ

# இரண்டாவது

# மூலகாண்டம்.

மூலம் என்றதனை ஐந்துவகையாக விகற்பிக்கின்றது.

110. மூதுணர்ந்தோர்நூலின் முறைதெரிந்துமூலங்க
ளோதகவெய்யானுமெடுத்துரைப்ப-னோதிய
செவ்வாய்சிறுபயிராஞ்சீர்சால்புதன்வெள்ளி
வவ்வார்விளைவயலதாம்.

இதுவுமது.

111. தூருகுமேதை சுடரோன்பெருமரமா
மாருமதிகொடியாம்வாழ்பொன்னேன்-மாருத
தீங்கரும்பாம்வெள்ளிதிகழ்காரிபாம்பிரண்டு
மோங்குகின்றமுண்மூலமோது.

இவை 2-ம் ஒருதொடர்.

இ-ள். சூரியனுக்கு மரங்களாயுள்ளவைகளும் சந்திரனுக்குக் கொண்டுகளாயுள்ளவைகளும், அங்காரகனுக்குபுன்செய்பயிர்களாயுள்ளவைகளும், புதன் சுக்கிரன்இவை 2-ற்கும்நன்செய்பயிர்களாயுள்ளவைகளும் குருவுக்குக்கரும்புமுதலிய நாணல்களாயுள்ளவைகளும், சனிபாம்பு இவை 2-ற்கும் முட்செடிகளாயுள்ளவைகளுஞ் சொல்லப்படும் அன்றியும்புதனுக்கு முள்ளின்றியசெடிகளாயுள்ளவைகளும் சுக்கிரனுக்குக்கரும்புமுதலிய நாணல்களாயுள்ளவைகளுஞ் சொல்லப்படும்.

இதுவுமது.

112. ஆடுதேள்புன்பயிராமாய்ந்தகோலேறலவ
னீடுகொடியாநெடும்வல்லி-நீடுந்
திருமடந்தையாழ்புதராந்திண்சிலைசியம்
பெருமரங்களாமென்றேபேசு.

இதுவுமது.

113. மூழிமகரமிவைமுள்ளுடையமூலமாம
வாழிகரும்பாகும்வாள்கயலேம்-ரேழி

கடுங்கோட்குமுள்ளோடு நஞ்சாகுநற்கோட்
கொடுங்காதமுள்ளிலதென்றோது.

இவை 2-ம் ஒருதொடர்.

இ-ள். சிம்பந்தனுசு இவை 2-ற்கும் மரங்களாயுள்ளவைகளும் ரிஷபங் கடகந் துலாம் இவை 3-ற்குங்கொடிகளாயுள்ளவைகளும், நெடும்வல்லிமுதலிய நன்செய்பயிர்களா யுள்ளவைகளும். மேஷம் விருச்சிகம் இவை 2-ற்குந்தினைமுதலிய புன்செய்பயிர்களா யுள்ள வைகளும், மீனத்திற்குக் கரும்புமுதலிய நாணல்களா யுள்ளவை களும், மிதுனங்கன்னி இவை 2-ற்கும் முள்ளின்றிய செடிகளா யுள்ளவைகளும், மகரங் கும்பம் இவை -ற்கும் முட்செடிகளா யுள்ளவைகளுஞ் சொல்லப்படும், அன்றியும் மிதுனங்கன்னிஇவை 2-ற்கும் நெடும்வல்லிமுதலிய நன்செய்பயிர்களா யுள்ளவைகளுஞ் சொல்லப்படும் அன்றியும் சூரியன்முதலிய பாபக்கோட்கள் 4-ற் கும் முன்மூலங்களையன்றியும் நஞ்சுள்ள மூலங்களுஞ் சந்திரன்முத லிய சுபக்கோட்கள் 4-ற்கும் முள்ளின்றிய மூலங்களையன்றியும் நன்மூலங்களுஞ் சொல்லப்படும்-எ-று. (3-4)

மேல் உணர்த்திய மூலவிகற்பத்திற்குப் பட்சாந்தரங்களின் கருத்தையெடுத்துக்காட்டுகின்றனர்.

114 புனைதாறுபுந்திபுகர்மரங்களாகும்
வகையான்மதியெழுந்தவாழை-தொகையான்
மலைமாங்கள்வெய்யோன்மதித்துணரிற்செம்பொ
னிலைகெருங்குந்தெங்கென்றியம்பு.

இதுவுமது.

115 சினங்கூறும்வாளரவந்தின்சனிகட்காகிற்
பனங்காடமென்றுபகர்க-மனங்கூறு
மூட்காய்ப்புடன்புறக்காய்ப்பற்றுணர்ந்திரசிகட்குந்
திட்காதுகோட்குளபொற்செப்பு.

இவை 2-ம் ஒருதொடர்.

இ-ள். சூரியனுக்கு மலை மரங்களும், சந்திரனுக்குவாழைமரமும், குருவுக்குத்தென்னைமரமும், சனிபாம்புஇவை2-ற்கும்பனைமரமும்

புதன் சுக்கிரன் இவை 2-ற்கும் வாழைமுதலிய நாட்டுமரங்களும் அங்காரகனுக்குச் செடிகளுஞ்சொல்லப்படும் என்றுசொல்லிய விதியும் மேலேசொல்லப்புகுகின்ற காய்ப்புமுதலிய விதியும் அவ்வவற்றின் ஆட்சியிராசிகட்குஞ் சொல்லப்படுவதாம் எ-று. இஃது முன்மொழிந்துகோடல் என்கிற உத்திதிட்காதுசெப்ப என்றுவிதந்துகூறினமை சந்திரனுக்குப் புட்பங்களாற் சிறந்துள்ளவைகளும்புதனுக்குக் கொடிகளாயுள்ளவைகளும் குருவுக்குச் சண்பகமுமும் சுக்கிரனுக்குப் புட்பங்களாற்சிறந்துள்ளவைகள் கொடிகளையுள்ளவைகள் கிழங்குகளாற் சிறந்துள்ளவைகள் கொடிகளையுள்ளவைகள் கிழங்குகளாயுள்ளவைகளு சனியுள்ளவைகள் கிழங்குகளாயுள்ளவைகளுஞ் சனிக்கு இஞ்சி மஞ்சள் ஆகிய இவைகளும்பட்சாந்தரங்களிலேசொல்லப்படுகின்றன என்பது எச்சரித்தார்போலுமாம்

மூலதாதுக்களை உணர்த்துகின்றது.

116. தோல்கிழங்குபூவிலைநற்றாய் பழமுங்காயொடும்வே
ரேல்கொடிகளென்ன வினிதுரைக்கச்-சால
விலங்கொளி வெய்யவனுதிபாம்பீறு
நிலங்களுமிந் நிலையினோர்.

இ-ள். சூரியனுக்குப்பட்டையுஞ் சந்திரனுக்குக்கிழங்கும் அங்காரகனுக்குப்பூவும் புதனுக்கு இலையுங் குருவுக்குப்பழமுஞ் சுக்கிரனுக்குக்காயுஞ் சனிக்குவேரும் பாம்பிற்குக்கொடியுஞ் சொல்லப்படும் அவ்வவற்றின் ஆச்சியிராசிகட்கும் அதுவேயாம்-எ-று. 7

இரட்டித்துக்கூறியது.

117. ஆடுதேள்பூவேறுகோல் காயாமங்கையாழ்
நீடிலையா மீன்வில்லுநேர் பழமாங்-கூடும்
குடமகரம்வேர்சியங்தோலாகுமெஞ்ஞான்று
படுகிழங்காமென்றுபகர். 8

மூட்கள் உணர்த்துகின்றது.

118. காரியரவத்தைவிந்த முட்காய்கதிரோன்
றேரில்விலங்கு முட்சேய்கிறுமுட்-டேரிற்
சொரிசாற்சுறுமறிநேட்டுன் னரும்பொற்சீயந்
தெரிவாகுமிவ்வகையிற் செப்பு.

இ-ள். சனி பாம்பு இவை 2-ற்கும் வளைவுள்ள முட்களுஞ் சூரியனுக்கு வளைவின்றிய பெருமுட்களும்அங்காரகனுக்குவளைவின்றி

யசிறுமுட்களுஞ் சொல்லப்படும் இப்படியே அவ்வவற்றின் ஆட்சி யிராசிகளாகிய மகரங்கும்பம் இவை 2-க்கும் வளைவுள்ள முட்களு ஞ்சிம்பத்திற்கு வளைவின்றிய பெருமுட்களும் மேஷம் விருச்சிகம் இவை 2-ற்கும் வளைவின்றிய சிறுமுட்களுஞ் சொல்லப்படும் எ-று விளங்குமுள் என்றதை இன்றியமுள் என்று பொருளுரைத்துக் கொள்க. 9

காய்ப்பின்மையுங் காய்ப்புங் காய்ப்பவற்றுள்ளவிகற்பமுங்
கனிகளின் நிலமும் உணர்த்துகின்றது.

119. சந்திரனும்வெய்யோன் சனிமூன்றுங்காய்ப்பில்லை
மந்திரியும்வெள்ளியுமே யுட்காய்ப்பாம்-தந்த
நிறத்திற்குரியனசேய் நீணாகம்பந்தி
புறக்காய்ப்பா மாட்சிகட்குப்பூட்டு.

இ-ள். சூரியன் சந்திரன் சனி இவை 2-ற்குங்காய்ப்பின்மையு ம் மற்றயகோட்கள் 5-ற்குங் காய்ப்பம் காய்ப்புள்ளவற்றுள்ளே குரு சுக்கிரன் இவை 2-ற்கும் உட்காய்ப்பும் அங்காரகன் புதன் பாம்பு இவை 3-ற்கும் புறக்காய்ப்புஞ் சொல்லப்படும் கனிகளின் நிறம் அந்தக்கோட்களின் நிறமேயாம் இவ்விதி அவ்வவற்றின் ஆட்சியிராசிகட்குக் கொள்வதாம் எ-று. காய்களிலேநிறங்கொடா மையால் கனிகளின் நிறமெனப்பொருளுரைக்கப்பெற்றது. 10

தானியங்களும் முதிரைகளு முணர்த்துகின்றது.

120. சேய்க்குத்தினைவரகாந்திங் மதிக்குவெண்ணெல்லாம்
வாய்த்தசனிபொன் புதற்குவன்முதிரை-பூத்த
புகர்தன்னிறத்தெள் புகல்வர்கடுங்கோ
டிகழ்நிறத்தமென்முதிரையாம்.

இ-ள். சந்திரனுக்கு வெண்ணெல் இப்படியே மற்றயகோட்களு க்கும் அவ்வவற்றின் நிறமொத்த தானியங்களாம் அங்காரகனுக்கு த்தினைவரகுமுதலிய தானியங்களாம் சுக்கிரனுக்கு வெள்வெள்இப் படியே புதன்குரு சனி இவை 3-ற்கும் அவ்வவற்றின் நிறமொத்த முதிரைகளாம் அன்றியுஞ் சுபக்கோட்கள் 4-ற்குஞ் சனிக்குஞ்செ ட்டி பண்டங்களுஞ் சீனிகலாக மற்றய பாபக்கோட்கள் 3-ற்கும் யொட்டுபண்டங்களுஞ்சொல்லப்படும் எ-று தினைவரகு முதலிய தானியங்களாவது தினை வரகுகேழ்வரகு சாமைகம்புசோளம் இவைகளாம். இவற்றையே சிறுதானியங்களென்றும் புன்செய் தானியங்களென்றும் வழங்குவதாம். 11

மேற்குறிப்பித்த முதிரைகளைவெளிப்படை
யாக்குகின்றது.

121. சிறுபயறுபுந்தி புகர்வெண்டுவரை
மறுகடலைசேய்மதியம்வெள்ளெட்-குறைவி
லவரைகதிர்பொன்ன வன்றுன்றுவரை
தனிர்சனிபாம்பெள் ளுளுந்தாச்சாற்று.

இ-ள். சூரியனுக்கு அவரையுஞ் சந்திரனுக்குவெள்ளெள்ளும் அங்காரகனுக்குக்கடலையும் புதனுக்குச்சிறுபயறுங் குருவுக்குத்துவரையுஞ் சுக்கிரனுக்கு வெண்டுவரையுஞ் சனிக்குஎள்ளும பாம்பிற்கு உளுந்துஞ்சொல்லப்படும் எ-று. இவ்விதியைப்பற்றுக் கோடாகக்கொண்டு கொள்ளு காராமணி முதலிய முதிரைகளையூகித்துக்கொள்க. 12

122. செங்கதிர்மான்மேடாகுந் தீநாகம்புற்றுகுந்
துங்கமதிபுகரோற்றாய்நீராந்-துங்கமுள்ள
மந்திரிசேய்கல்லாஞ் சனியேற்களாறைந்த
தந்தநிலந்தானறிந்து சாற்று.

இ-ள். சூரியன் புதன் இவை 2-ற்கும் மேட்டுத்தநிலமுஞ் சந்திரன்சுக்கிரன் இவை 2-ற்கும் நீரடுத்த ஜலமும் அங்காரகன்குரு இவை 2-ற்குங் கல்லடுத்த நிலமுஞ் சனிக்குக் களரடுத்த நிலமும் பாம்பிற்குப் புற்றடுத்த நிலமும் விளைநிலமாகச் சொல்லப்படும், அன்றியும் அவ்வவற்றின விதிநிலங்களையும் ஒட்டிச்சொல்லுவதாம் எ-று. அங்காரகனுக்கு மேட்டுத்தநிலமும் புதனுக்கு நீரடுத்த நிலமும் விளைநிலமாம் என்று இப்படிசிலர் புதனுக்கு நீரடுத்த நிலமும் விளைநிலமாம் என்று இப்படிசிலர் புதனுக்குப் புற்றடுத்த நிலம்விளைநிலமாம் என்று இப்படியுஞ்சிலராம்.

தாதுமூலகாண்டங்கட்கு ஒழிபு உணர்த்துகின்றது.

123. வண்ணஞ்சுவைகுலங்கள் வாய்ந்தமணிக்கருவி
யெண்ணரியமூல மியங்குவன-நண்ணு
மிலைகாம்பழந்தோல்வேர் பூமூலமற்று
மலையாதவைபவையே யாம்.

இ-ள். தாதுகாண்டத்துட்கூறிய உலோகவருக்கங்கருவிமணிவருக்கம்முதலிய தாதுகட்கும் மூலகாண்டத்துட்கூறிய மரங்களாயுள்ளவைகள் கொடிகளாயுள்ளவைகள் பயிர்களாயுள்ளவைகள் முதலிய மூலங்கட்கும், பட்டையிழைத்துபூமுதலியமூலதாதுகட்கும

மேட்டுத்தரேடுத்தநிலம் கல்லடுத்தநிலம் முதலிய விளை நிலங்கட்கும் வடிவு சுவைகுலம் முதலியவிதிகள் அந்தந்தக்கோட்களுக்கும் இராசிகட்கும் உள்ளனவேயாம எ-று வடிவுங்குலமும் எல்லாவற்றிற்கும் பொருந்தும் சுவை தாதுகாண்டத்துட்கூறிய பாஷாண வருக்கத்திற்கும் மூலகாண்டத்துட்கூறிய மூலதாதுகட்கும் விளைநிலங்கட்கும் பொருந்தும் தாதுகாண்டத்துட்கூறிய உலோகவருக்கங் கருவிமணிவருக்கம் ஆகிய இவைகட்குப் பொருந்தாது இப்படியே ஆண்பெண்முதலிய விதிகளையும் ஒட்டிக்கொள்க. 14

மூலகாண்டம் முற்றிற்று

---

உ

முருகக்கடவுள் துணை.

# மூன்றாவது சீவகாண்டம்.

நிறுத்தமுறையே சீவகாண்டத்தைச்சொல்லி முடிக்கவந்தவர் சீவர் ஆன்மாவாதலால் ஆன்மதத்துவமாயுள்ள ஐம்பூதத்தை உணர்த்தி அவ்வைம்பூதத்தின் வழியே ஐயறிவை உடனுணர்த்துகின்றனர்.

124. சந்திரனேதாயாகத் தாழ்வில்கதிர்தந்தையாய்
வந்துதித்தபொன் வெள்ளிசேய்மாலு-மந்தனு
மெய்முறையேமண்ணீர் தீக்காலிவற்றொடுசகாய
மெய்வாய்கண்மூக்குச் செவி.

இ-ள். சூரியன் தந்தையுஞ் சந்திரன் தாயுமாக அச்சூரியசந்திரரிலேயிருந்து பிள்ளைகள்போலும் உதித்துவந்துள்ள அங்காரகன்முதலியகோட்கள் ஐந்தினுட்குரு பிருதிவியும் சுக்கிரன் அப்பும் அங்காரகன் தேயுவும் புதன்வாயுவும் சனி ஆகாயமுமாகிய ஐம்பூதமாம் ஆகலால் சனி மெய்யறிவாகிய ஓரறிவுடைத்து புதன் மெய்வாயறிவாகிய ஈரறிவுடைத்து அங்காரகன் மெய்வாய் கண்ணறிவாகிய மூவறிவுடைத்து சுக்கிரன் மெய்வாய்கண் மூக்கறிவாகியநான் கறிவுடைத்துகுருமெய்வாய்கண்மூக்குச்செவி யறிவாகியவைஐயறிவுடைத்து எ-று. 1

மெற்குறிப்பால உணர்த்தியஐயறிவை வெளிப்படையாக்கி உணர்த்துகின்றனர்.

125. ஆங்காரியோரறிவ்ா மீரறிவுமால்சேய்மூன்
றேங்குபுகர் நான்கரிவா மொண்பொன்ன-னீங்கைந்து
மிக்குசெவிமூக்குகண்வாய்மெய்யாமிவற்றி
ஞெக்குமுறையேயுரை.

இ-ள். சனி மெய்யறிவாகிய ஓரறிவுடைத்து புதன் மெய்வாய றிவாகிய ஈறறிவுடைத்து அங்காரகன் மெய் வாய்கண்ணறிவாகிய மூவரிவுடைத்து சுக்கிரன் மெய்வாய்கண் மூக்கரிவாகிய நான்கறிவுடைத்துகுருமெய் வாய் கண்மூக்குச்செவியறிவாகிய ஐயறிவுடைத்து எ-று 2

ஈரறிவுயிர் மூவறிவுயிர்நான்கறிவுயிர் ஆகியஇவற்றை நிறனிறையாகவைத் துணரத்துகின்றனர்.

1?6. சங்கல்கொடிப்பிமுதற்றண்புதன்தீரறிவா
மிங்கெறும்புபேன் மூசுடீச்சிதலுந்தங்கிய
மூன்றறிவாஞ்செல்வாய் முரல்வண்டுதும்பிமுத
ஞன்கறிவுசுங்கனெனநாட்டு.

இ-ள். புதன் மெய்யாவறிவாகிய ஈரறிவுடைத்தாதலால் அப் புதனுக்கு பரிசரங்களை அறிகின்ற சங்கு பலகறை சிப்பி இவை முதலிய சீவன்களையும் அங்காரகன் மெய் வாய் கண்ணறிவாகிய மூவறியுடைத்தாதலால் அவ்வங்காரகனுக்கு பரிசரசரூபங்களை அறிகின்ற எறும்பு பேன் முசுடு ஈசிதல் இவைமுதலிய சீவன்களை யும் சுக்கிரன் மெய்வாய் கண் மூக்கறிவாகிய நான்கரிவுடைத்தாத லால் அச்சுக்கிரனுக்குப் பரிசரூசபகந்தங்களை அறிகின்றவண்டு தும்பி இவைமுதலிய சீவன்களையுஞ்சொல்லப்படும் எ-று. ஓரறிவு யின்மூலமாம் ஆதலால் நடப்பன பறப்பன தவழ்வன நீர்வாழ் வனவற்றைச் சொல்லப்படுகிற இச்சீவகாண்டத்திலேசொல்லுதல் கூடாமையால் அதனைச் சொல்லாதொழித்தனர் என்று கண்டு கொள்க அஃதுவருமாறு சனி மெய்யறிவாகிய ஓரறிவுடைத்தாத லால் அச்சனிக்குப்பரிசத்தை அறிகின்ற மரங்கொடி பயிர் இவை முதலியமூலங்களைச் சொல்லப்படும் என்று இவ்வாறும். 3

ஐயறிவுயிர் உணர்த்துகின்றனர்.

127. தேவர்கண்மக்கள் விலங்குகடேர்புட்க
ளெனவியசீவனுசுளியாவு-மேமலிய

வையறிவதாங்குருவுக் காமங்கிசமாக
மெய்யரிவுகொண்டுவிளம்பு.

இ-ள். குரு-மெய்-வாய்-கண்-மூக்குச் செவியறிவாகியஐயறிவு டைத்தாதலால் அக்குருவுக்குப் பரிசரசரூபகந்தசப்தங்களை அறி கின்றதேவர்மக்கள் விலங்குகள் பறவைகள் இவைமுதலிய சீவன் களைச்சொல்லப்படும் எ-று. • 4

இதுவரையில் உணர்த்திலந்தசீவன்களை நான்கு
வகையாகவகுக்கின்றனர்.

128 நால்வகைச்சீவன்க ளன்றுய்தெடுத்துரைக்கி
னேல்வகையிலோரிரண்டு மோர்நான்காக்-கால்வகையிற்
பல்கானடப்பன பறப்பனதவழ்வனநீ
ரால்காது வாழ்வனவென்றோர்.

இ-ள். இதுவரையில் உணர்த்திவந்தசீவன்களை அலகிட்டுப் பார்க்குமிடத்து 84-இலட்சம்சீவன்களாம், ஆகவே தனித்தனியே சொல்லப்புகின் முடிவுபெறுமையால் அவற்றை நடப்பன பறப் பன தவழ்வன நீர்வாழ்வன என்று நான்கு சீவன்களாகக்கொண் டு அறிதலேமுக்கியமாம் எ-று. நடப்பன என்று பொதுப்படக் கூறில் எறும்புமுதலிய ஜீவன்களையும் நடப்பன என்று சற்பிக்க வரும் என்பதுகருதி 2-காற்களால் நடப்பனவும்- 4 - காற்களாள் நடப்பனவுமே நடப்பனவாம்என்பார்போல ஓரிரண்டுமோர்நான் காங்கால் வகையினடப்பன என்று விவரித்தனர் அங்ஙனம் விவரி க்கவே குக்குடம் முதலியபறவைகள் 2-காற்களால் நடக்கின்றன வே அவையும் நடப்பனவாமே என்று கற்பிக்கவரும் என்பது கருதி ஒரேகாலங்களிற் பறந்துபோகின்றவை நடப்பனவாதலின் று எக்காலங்களினும் நடப்பனவே நடப்பனவாம் என்பார்போல் பல்கானடப்பன என்றுவிவரித்தனர் பல்கால்என்றது எக்காலங் களினும் என்கிற பொருளுடைத்தாம். 5

பறப்பன.

மயில்-கோழி-கிளி- அன்னம்- ஆகிய-இவைகளை
உணர்த்துகின்றது.

129. மீனமகரம்பறப்பனவாமீங்கிவற்றை
யூனமிலாச்சேய்சனியுங்காலுறுமே-லூனமிலாக்
கான்கோழியாகும்புகரன்னமால்கிளியாம்
வான்றோணையாருமதி.

இ-ள். மீனமகரங்களைச் சந்திரன்நோக்கில் மயிலாம்,அங்கார கன் சனி ஆகிய இவைகள்நோக்கில் கோழியாம்புதன் நோக்கில்கிளி யாம் சுக்கிரன்நோக்கில் அன்னமாம் எ-று. கான் என்றது அடை மொழியாகப்பிரித்துரைத்துக்கொள்க. 6

கருடன்-குருகு-காக்கை-ஆகிய இவைகளை

உணர்த்துகின்றது.

130 அங்கட்கருடனருக்கர்க்காம்பொன்னவற்குச்
செங்கட்குருகாகுஞ்சீரரவம்-பொங்கு
முருவாகுங்காக்கையத்துள்ளனமற்றெல்லா
முருவாகுமவ்வவற்றுற்றோர்.

இ-ள். மீனமகரங்களைச் சூரியன்நோக்கில் கருடனும்குருநோ க்கில் குருகாம் பாம்புநோக்கில் காக்கையாம் இதிற்சொல்லாதொ ழிந்தபுட்களை அவ்வவற்றின் நிறமொத்த கோட்களைக்கொண்டு யூகிக்கப்படும்-எ-று. 7

நடப்பனவற்றுளே விலங்கின்விதி.

புலி-எருது-ஆடு-முயல்-குதிரை-பசு-மரை-எருமை-ஆகிய

இவைகளை உணர்த்துகின்றது.

131. ஆட்டிற்சேயாடா மருக்கன்புலிபுதனுக்
கோட்டுமுயல்புகருக் கொண்பசுவா-நாட்டு
மெருதுமதிய மெழிற்குதிரைபொன்னுங்
கரியன்மரைபாம் பெருமைகாண்.

இ-ள். மேஷத்தில் சூரியன் நிற்கில் புலியாம். சந்திரன் நிற் கில் எருதாம், அங்காரகன் நிற்கில் ஆடாம், புதன்நிற்கில் முய லாம், குருநிற்கில் குதிரையாம், சுக்கிரன்நிற்கில் பசுவாம். சனிநிற் கில் மரையாம் பாம்புநிற்கில் எருமையாம், எ-று, 8

மரை-பசு-மான்-குரங்கு-குதிரை-எருமை-எருமைக்கடா

ஆகிய இவைகளை உணர்த்துகின்றது.

132, எருதிற்புகர்பசுவாமின் சேய்கலையா
முருவிற்புதன் குரங்காமொண்பொன்-பரியாகுந்
திங்கள்பசுமரையாஞ் செங்கதிரோன்கரிய
னிங்கெருமை பாம்புகடாவென்,

இ-ள். ரிஷபத்தில் சூரியன்நிற்கில் மரையாம், சந்திரன் சுக் கிரன் ஆகிய இவைகள் நிற்கில் பசுவாம், அங்காரகன் நிற்கில் மா

ளும் புதன் நிற்கில் குரங்காம், குருநிற்கில் குதிரையாம், சனிநிற்கில் எருமையாம் பாம்பு நிற்கில் எருமைக்கடாவாம் எ-று. 9

சிம்பம்-புலி-குரங்கு-குதிரை-நாய்-எருமை-எருமைக்கடா ஆகிய இவைகளை உணர்த்துகின்றது.

133. சீயத்திற்சேய்புலியாக் தேரோன்பதிசீயம்
வாயெசத்தநாய்புகர்மால் வானரமா-நேயத்
தொழிந்தனகோட்கட்கிராசிகளினைத்து
மொழிந்தனபோற் றேனைமொழி

இ-ள், சிம்பத்தில் சூரியன் சந்திரன் ஆகிய இவைகள் நிற்கில் சிம்பமாம். அங்காரகன் நிற்கில் புலியாம், புதன் நிற்கில் குரங்காம் குருநிற்கில் குதிரையாம், சுக்கிரன் நிற்கில் நாயாம், சனிநிற்கில்எருமையாம் பாமபுநிற்கில் எருமைக்கடாவாம் எ-று, ஒழிந்தன கோட்கட்கிராசிகளினைத்து மொழிந்தன போற்றேனைமொழி என்றவதனால் குருவுக்கு குதிரையும் சனிக்கு எருமையையும் பாம்பிற்கு எருமைக்கடாவும் ரிஷபத்திற்கு குரு-சனி பாம்பேபோலக்கொண்டுரைத்தாம். 10

யானை-குதிரை-குரங்கு-எருமைக்கடா-ஆகிய இவைகளை உணர்த்துகின்றது.

134. வில்லிற்சேய்வெள்ளி மதியுங்குதிரையா
மல்லிற்சனியருக்கனானையா-நல்ல
கடாவாமரவங் கருநிறத்தமால்பொன்
விடாதுகுரங்கென்று விளம்பு. 11

இ-ள். தனுசில் சூரியன் சனி ஆகிய இவைகள் நிற்கில் யானையாம்சந்திரன் அங்காரகன் சுக்கிரன் ஆகிய இவைகள்நிற்கில் குதிரையாம் புதன் குருஆகிய இவைகள்நிற்கில் குரங்காம், பாம்பு நிற்கில் எருமைக்கடாவாம் எ-று,

கர்த்தபம்-எருமை-எருது-கிரி-நரி-நாய்-ஆகிய இவைகளை உணர்த்துகின்றது.

135. கடகத்திற்சேய்கழுதை யாங்கலையின்மேதி
யிடரின்மீனத்தி லெருதாமுட-னைத்த
பாழ்கன்னிகிரிநரி நாயாமற்றுளவுஞ்
சூழ்வகையாலாய்ந் துணர்ந்துசொல்.

இ-ள். அங்காரகன் கடகத்தில்நிற்கில் கர்த்தபமாம்மகரத்தில் நிற்கில் எருமையாம், மீனத்தில்நிற்கில் எருதாம், மிதுனங்கன்னிதுலாம் கும்பம்ஆகிய இவைகளில்நிற்கில் கிரி-நரி-நாய் ஆகியவிவைகளாம் இப்படிக்கெல்லாஞ் சூரியன் சனி ஆகிய இவைகள் நிற்கி

னும் ஒக்கும் எ-று. உடனேத்த என்றவதனல் துலாத்தையுங் கும்பத்தையும் மற்றுள்ளவும் என்றவதனல் சூரியனையுஞ் சனியையும் வருவித்துரைத்ததாம். 12

பசுவுங் கன்றும் அவற்றின் எண்ணிக்கையும் உணர்த்துகின்றது.

136. கோலிற்புகரோன்குழகன்றுவிற்றிங்கண்
மேலைப்பசுவென்றுவிட்டுரைக்க-மேலை
தனைநோக்குங்கோளெத்தனையத்தனையா
நினைவாகக்கட்டுரைக்கநேர்.

இ-ள். துலாத்தில் சந்திரன் நிற்கில் பசுவாம், சுக்கிரன்நிற்கில் கன்றும், அவற்றின் எண்ணிக்கையைச் சொல்லுமிடத்து மேற்படி கோட்களை நோக்கினகோட்கள் எத்தனையோ அத்தனையாம்-எ-று. நினைவாக என்று எச்சரித்த வதனல் அவற்றின் நிறமுங் கொம்பும் வயதும் எண்ணிக்கையே போலக்கொண்டு சொல்லப்படும். நேர் என்று உவமித்தவதனல் இவ்விதி மற்றய விலங்குகட்கு மாகக் கொள்க. 13

பசுமுதலிய விலங்குகளின் பெண் பொதுப்பருவம் உணர்த்துகின்றது.

137. புகர்மாமதிபாலாம்புந்தியேனகா
மிகவாமலடரவுகாரி-யிகலாக்
குருசுடரோன்சூலாங்குவன்றன்வறடா
முறைதருநோக்கத்தானுணர்.

இ-ள். பசுமுதலிய விலங்குகளின் பெண்பொதுப் பருவஞ் சொல்லுமிடத்து அவ்வவ் விலங்குகளை நியமிக்கப் பெற்ற கோட்களைப் புதன்நோக்கில் நாகு என்றுஞ் சூரியன் குரு ஆகிய இவைகள் நோக்கில் சினை என்றுஞ் சந்திரன் சுக்கிரனகிய இவைகள் நோக்கில் பால் என்றுஞ் சனி பாம்பு ஆகிய இவைகள்நோக்கில் மலடென்றும் அங்காரகன் நோக்கில் வறடென்றுஞ் சொல்லப்படும்-எ-று. நாகாவது விலங்குகளிற் கன்னிப்பெண், சினையாவது சினைப்பட்டது, பாலாவது ஈற்றுள்ளது, மலடாவது சினைப்படாதது, வறடாவது வறண்டுள்ளது, இவற்றுள் மலட்டிற்கும் வறட்டிற்கும் பருவம் எங்ஙனமெனில் ஈனத்தருங்காலங் கழிந்துள்ளது மலடாம், முதுமை யுள்ளது வறடாம் இவ்விதி விலங்கின் ஏற்றிற்கும் யூகிக்கப்படும். 14

நட்பனவற்றுள்ளே மானிடவிதி.

அரசர் படைத்தலைவர் படையாளர் வேவுகாரர் முதலியோர்
ஆகிய இவர்களையும், கம்மாளர் குயவர் வாணிபர்
சித்திரக்காரர் ஆகிய இவர்களையும்
உணர்த்துகின்றது.

138. அரசர்படைத்தலைவராங்கவரைச்சார்ந்தோ
ரரசர்பின்செல்வோராருக்கற்கு-குரைசெய்க்கு
கன்னார்குயவர்கள்வாணிபர்சிற்பர்க
ளிந்நால்வரிவ்வகையாலென்.

இ-ள். சூரியன் உச்சம்பெறில் அரசராம், ஆட்சிபெறில் படைத்தலைவராம், நட்புபெறில் படையாளராம், பகை நீச்சம்பெறில் வேவுகாரர் முதலியோராம், அங்காரகன் உச்சம்பெறில் கம்மாளராம், ஆட்சிபெறில் குயவராம், நட்புபெறில் வாணிபராம், பகை நீச்சம்பெறில் சித்திரக்காரராம்-எ-று. இந்நால்வ ரிவ்வகைஎனவே உச்சம்பெறில் ஆட்சிபெறில் நட்புபெறில் பகைநீச்சம்பெறில் என்று நான்காக வகுத்துரைக்க லாயிற்று, சிற்பர்கள் என்றதைக் கம்மாளர் என்று பொருள் கொள்வாருமுளர், 15

அந்தணர் மந்திரியர் சைனர் ஆகிய இவர்களையும் நட்டுவர்
குருவர்க்கத்தோர் செட்டிகள் ஆகிய இவர்களையும்
வேளாளர் இடையர் வேளாளர்முதலிய பூவைசியர்
ஆகிய இவர்களையும்

உணர்த்துகின்றது.

139. அந்தணர்பேரமைச்சரம்மனைத்தாரம்பொன்னேற்
புந்திநடப்பாட்டோர்புணர்தவத்தோர்-சந்தையர்
வெள்ளியதேல்வேளாளர்மிக்குசேதாநாய
ரொள்ளியநெல்வணிகரோது,

இ-ள். குரு உச்சம்பெறில் அந்தணராம், ஆட்சிபெறில் மந்திரியாம், நட்புபெறில் சைனராம், புதன் உச்சம்பெறில் நட்டுவராம். ஆட்சிபெறில் குருவர்க்கத்தோராம் நட்புபெறில் செட்டிகளாம், சுக்கிரன் உச்சம்பெறில்வேளாளராம், ஆட்சிபெறில் இடையராம், நட்புபெறில் வேளாளர் முதலிய பூவைசியராம்-எ-று. 16

சூத்திரிற் றாழ்ந்து சுமக்கப்படுகிற மற்றய இழிகுலத்தோர்
பறையர் செம்மார் ஆகிய இவர்களையும் மருத்துவர் நாட
கியர்சோதிடர் ஆகிய இவர்களையும் பாம்பாட்டு
புலையர் பண்டர் கள்ளராகிய இவர்களையும்
உணர்த்துகின்றது.

140. சுமையோர்வலங்கமத்தார்செம்மார்கரிய
னமைமதிமருத்துவநற்பாக-ரிமையாத
வேடியரெண்ணர்விளம்பாவுநஞ்சையெடுத்
தாடர்புலையர்கள்ளராம்.

இ-ள். சனி உச்சம்பெறில் சூத்திரிற்றாழ்ந்து சுமக்கப்படுகிற மற்றய இழிகுலத்தோராம், ஆட்சிபெறில் பறையராம், நட்புபெறில் செம்மாராம், சந்திரன் உச்சம்பெறில் மருத்துவராம், ஆட்சிபெறில் நாடகியராம், நட்புபெறில் சோதிடராம், பாம்பு உச்சம்பெறில் பாம்பாட்டு புலையராம், ஆட்சிபெறில் பண்டராம், நட்புபெறில் கள்ளராவது திருடியுண்கிற ஓர் வகைச்சாதியோர் ஆடுமவர் என்றது ஆடர்என மருவிற்று. 17

ஆசாரங்கடந்துள்ள குலத்தோர் சுண்ணும்புக்காரர் வண்ணார்
மூப்பர் செம்படவராகிய இவர்களை உணர்த்துகின்றது.

141. அருங்கதிர்சேய்பொன்புதனுக்காங்குவரைவில்லார்
வருஞ்சனிக்குமூப்பராமவெள்ளிக் குரைவண்ணார்
பாம்பிற்குச்செம்படவர்பான்மதிக்குச்சுண்ணம்போர்
வேம்பகைநீசந்தனக்காமே.

இ-ள். சூரியன் அங்காரகன் புதன் குரு ஆகிய இவைகள்பகை நீசம்பெறில் ஆசாரங் கடந்துள்ள குலத்தோராம், சந்திரன் பகை நீசம்பெறில் சுண்ணும்புக் காரராம், சுக்கிரன் பகைநீசம்பெறில் வண்ணாராம், சனி பகைநீசம்பெறில் மூப்பராம், பாம்புபகைநீசம் பெறில் செம்படவராம்-எ-று. மூப்பராவது இலைவாணியர், அவரையே சேனைக்குடையரென்பதாம், இன்னஞ் சிற்சில சாதிகட்குங் கூறுகின்றனர். 18

சோதிடர் நட்டுவர் புலவர் கைக்கோளர் ஆகிய இவர்களையுஞ்
சிம்பம் அல்லது புலி ஆடு யானையாகிய இவைகளையும்
உணர்த்துகின்றது.

இவற்றை மானிடவிதி விலங்கின்விதிகட்கு ஒழிபாகக்
கொள்ளப்படும்.

142. ஆனைசனியாடுசேயாடுநர்பாடுநர்மா
லானமில்கல்வியாரொண்மதிய-மேனைப்
புகராடைவாணிபராம்பொன்புலவர்வெய்யோன்
பகரரியாந்தன்னிலத்திற்பார்

இ-ள். இருகாலாய் வந்தவிடத்து சந்திரன் ஆட்சிபெறில்சோதிடர் என்றும் புதன் ஆட்சிபெறில் நட்டுவர் என்றுங் குரு ஆட்சிபெறில் புலவர் என்றுஞ் சுக்கிரன் ஆட்சிபெறில் கைக்கோளர் என்றும், நாற்காலாய்வந்தவிடத்து சூரியன் ஆட்சிபெறில் சிம்பம் அல்லது புலி என்றும் அங்காரகன் ஆட்சிபெறில் ஆடு என்றுஞ் சனிபாம்பு ஆகிய இவைகள் ஆட்சிபெறில் யானை என்றுஞ் சொல்லப்படும்-எ-று. சனியின் ஆட்சியே பாம்பிற்குமாம் ஆதலால் பாம்பைக் கூறிலர் என்பது கொண்டு அப்பாம்பைச் சனியோடு சேர்த்துக்கூறினோம். 19

அரசரையும் யானை குரங்கு ஆகிய இவைகளையும்
உணர்த்துகின்றது.

143. பொன்னன்குடத்தெழுந்தப்பொன்னனுக்கேழைந்தொன்
பான், துன்னுநற்கோட்கடொடர்ந்தெழுமேற்-றுன்னிய
யானையாம்பின்னையரசாகுமிந்துசிலை
மீனாகில்வானரமாமெய்.

இ-ள். குரு கும்பத்தில் நின்று அக்குருவுக்கு-5-மிடம்-7-மிடம்-9-மிடங்களிலே சந்திரன் நிற்கில் அரசராம், மற்றய சுபக்கோட்கள் நிற்கில் யானையாம் மேற்படி கும்பமானது தனுசு அல்லது மீனம் இப்படியாகவரில் குரங்காம்-எ-று. 20

சீவகாண்ட முற்றிற்று.

---

முருகக்கடவுள் துணை.

நான்காவது

நட்டமுட்டி

# சிந்தனை காண்டம்.

நட்டமுட்டிசிந்தனைகட்கு முதல்வைப்பு உணர்த்துகின்றது.

144. மதியினைகண்டக்கோள்யாவையவையே
விதியாலவைவினைந்தாயென்க-விதியா
லிருகானாற்கால்பறவையென்றுந்தவழ்வ
தருகாநீர்வாழ்வனவென்றாய்ந்து.

இ-ள். சந்திரனுதயத்தையுஞ் சந்திரஸ்கிசத்தையும் நட்பாட்சியுச்சங்களிலும் நாற்கண்டங்களிலுந் தேறிநோக்கினமை யறிந்து இருகால் நாற்கால் சிறகுக்கால் பலகால் பலகாலில் நீர்வாழ்வன என்று இவைகளையும் இவைகளுடனே சுக துக்கங்களையுஞ் சொல்லுவதாம். 1

இதுவுமது.

145. ஏறியவெட்சியிருங்குடையிம்மூன்றினிலுந்
தேறியகோளுக்குந்தெரிந்துணர்ந்து-மாறாது
சிந்தித்தல்கெட்டல்பிடித்தலிவைதேர்ந்து
முந்தித்தான்சொல்லுமுறை.

இ-ள். அஸ்தமானத்திலும் பகைநீசத்திலும் மில்லாதொழிந்த கோட்களின் நோக்குணர்ந்து ஆரூடவலியாற் சிந்தனையும் உதயவலியால் நட்டமுங் கவிப்புவலியால் முட்டியுந் தாது மூலசீவ னறிந்துசொல்லுவதாம்-எ-று. ஏறியதாவது - ஆரூடம், எட்சியாவது - உதயம், குடையாவது கவிப்பு. 2

இதுவுமது.

146. நாற்கண்டநான்கினையுநட்பாட்சியுச்சங்கண்
மேற்கண்டநோக்குமிகத்தெரிந்து-மேற்பாற்
பிடித்தல்கெடுத்தல்பெருத்ததோர்சிந்தை
முடித்தவற்றூற்கூறன்முறை.

இ-ள். உதயம்-நீர்க்கீழ் பாடு-உச்சி-என்கிற-வலிதறிந்து அவற்றுள் நட்புக்கோளால் முட்டியும் ஆட்சிக்கோளால் நட்டமும் உச்சக்கோளால் சிந்தனையுஞ் சொல்லுவாம்-எ-று 3

இதுவுமது.

147. மூதாயதாதுமுதன்மூலசீவன்க
ளேதானதெட்சியிருங்கவிப்புட்-டேய்தாக
வன்னவையேசிந்தையவையாமிவையென்றே
யுன்னியவர்க்கெல்லாமுரை.

இ-ள். உதயாரூடக்கவிப்பில் தாதுமூலசீவனென்று சொல்லுகிற 3-மிராசியாலும் அவ்விராசியில்நின்ற கோட்களாலும் நட்டமுட்டி சிந்தனைகளின் விகற்பம் அறிந்து சொல்லுவதாம்-எ-று 4

இதுவுமது.

148. நினைத்தவுரையுச்சியாநீர்க்கீழ்க்கனவா
முனைத்துவருங்கவிப்பான்முட்டி-யனைத்தய
பாட்டாலிறந்ததெதிருதயத்தாற்கெடுதி
நாட்டாருடத்தானவில்.

இ-ள். உச்சியாற் சிந்தனையும் நீர்க்கீழாற் கனவுங் கவிப்பால் முட்டியும் பாட்டால் இறந்தகாலமும் உதயத்தால் எதிர்காலமும் ஆரூடத்தால் நட்டமுஞ் சொல்லுவதாம்-எ-று. 5

வினவினகாரியம் இன்னார்க்கென்பது
உணர்த்துகின்றது.

149. தான்றன்குடிதன்னுடன்பிறந்தார்தாய்தந்தை
வான்பகைஞர்தன்பெண்டிர்தன்மரணம்-வான்குரவர்
தன்கருமந்தன்னாக்கந்தன்னழிவோடென்றிவற்றை
பின்புதருமேடாதியென்.

இ-ள். உதயத்தின்பலன் தனக்கென்று-2-மிடப்பலன் குடியுளார்க்கென்றும்-3-மிடப்பலன் சகோதரருக்கென்றும்-4-மிடப்பலன் மாதுருவுக்கென்றும்-5-மிடப்பலன் பிதுருவுக்கென்றும்-6-மிடப்பலன் சத்துருவுக்கென்றும் - 7-மிடப்பலன் - களத்திரத்திற்கென்றும்-8-மிடப்பலன் ஆயுருவுக்கென்றும்-9-மிடப்பலன் பிதாமார்க்கென்றும்-10-மிடப்பலன் தொழின்முறைக் கென்றும்-11-மிடப்பலன் ஆதாயத்திற் கென்றும்-12-மிடப்பலன் நட்டத்திற் கென்றும் மேடமுதலாகக்கொண்டு சொல்லுவதாம்-எ-று. 6

பொதுவிதி உணர்த்துகின்றது.

150. விதிசாவருக்கண் விறற்புந்திபொன்னன்
மதிசுங்கன் மக்களுஞ்சிந்தனை-மதிசாற்
கரியோனில்விருத்திகாணுங்காற்சேய்பாம்
பரிதாங்களவொடுகேடாம்.

இ-ள். மக்களிராசி-ஆரூடமாய்-அவற்றிற்-சூரியன் - சந்திரன்-புதன் குரு-சுக்கிரன்-இவைகள்நிற்கில் மக்கட் சிந்தனையாம், அவற்றுடனே சனிபாம்பு இவைகள் நிற்கில் கள்வர் அல்லது களவு போனவர்களாம்-எ-று களவு போனவர்களாவது தெறிபட்டுப் போனவர்கள். 7

இதுவுமது.

151. கலகஞ்சேய்பாம்புபிணிநஞ்சமர்காரி
நலமில்சீரத்துக்கேடாகு-மலர்கதிரோன்
மன்னர்பயமாற்றமந்திரியும்புந்திபுக
ருன்னுமதிநன்றென்றுரை.

இ-ள். சூரியன் உதிக்கின் இராசபயம்-பயவார்த்தை-சந்திரன் புதன்-குரு-சுக்கிரன்-இவைகள்-உதிக்கில்-சுபகாரியாம்- அங்காரகன்-உதிக்கில்-கலகம்-சனி-உதிக்கில்-நட்டம்-பாம்பு-உதிக்கில்-பிணி-அல்லது விஷபயம் என்று சொல்லுவதாம்-எ-று. 8

இதுவுமது.

152. ஓரையிற்றீக்கோளுயிர்க்கேடும்பினைச்
சாரிற்பிணியென்றுசாற்றிடுக-வோரைக்
கிரண்டின்கட்டீக்கோளிவன்றன்குடிக்கு
முரண்டாகக்கேடுமொழி.

இ-ள். பாபக்கோட்கள் உதயத்தில் நிற்கில் மரணபயத்தைக் குறித்ததாம் ஆரூடத்தில் நிற்கில் பிணியைக் குறித்ததாம், உதயாரூடங்கட்கு-2-மிடத்தில் நிற்கில் நட்டத்தைக்குறித்ததாம்-எ-று. 9

இதுவுமது.

153. எட்டிலிருமூன்றிலீராறிற்றீக்கோளே
விட்டதிடையூறுமின்னுநோ-யொட்டி
முறைபாலேனகண்டுரைக்கமுந்தவைநற்கோளே
லறையாயவைதீர்தலாங்கு.

இ-ள். பாபக்கோட்கள்-8-மிடத்தில் நிற்கில் நட்டத்தைக் குறித்ததாம்-6-மிடத்தில்நிற்கில் [illegible]க்குறித்ததாம்-12-மிடத்

தில்நிற்கில் பிணியைக் குறித்ததாம், சுபக்கோட்கள்நிற்கில் மேற்கண்ட முறையே ஆதாயத்தைக் குறித்ததாகவுங் கைகூடுதல் குறித்ததாகவுந் திரேகத்திற்குச் சவுக்கியங் குறித்ததாகவுஞ் சொல்லுவதாம்-எ-று. 10

காலம் உணர்த்துகின்றது.

154. ஈராறுமூன்றுமிருமூன்றொன்பானிறப்பு
மோரேழுபத்துதயநான்குநிகழ்-பேராய
வெட்டுபதினொன்றிரண்டைந்தெதிர்வருவா
ரொட்டியுதயாதிலோர்.

இ-ள். 3-மிடம்-6-மிடம்-9-மிடம்-12-மிடம் இவைகள் ஆரூடமாகவரில் பூதகாலமாம்-உதயம்-4-மிடம்-7-மிடம்-10-மிடம் இவைகள் ஆரூடமாகவரில் பவுஷியகாலமாம்-2-மிடம் 5-மிடம்-8-மிடம் 11-மிடம் இவைகள் ஆரூடமாக வரில் வர்த்தமானகாலமாம்-எ-று.

நட்டத்திற்குச் சிறப்புவிதி காணுங்காணாதென்பவை
உணர்த்துகின்றது.

155. நிறையெழுங்காலாடமருமாடெழுங்காலாட்டை
நிறையெழுந்துகாணாதுநீசங்-குறிய
வெருதெழுங்காற்றேள்காணாதேளெழுங்காற்காணும்
வரிசிலையாழாங்கதுபோல்வை.

இ-ள். துலாம்-உதயமாகவும்-மேஷம்-ஆரூடமாகவும்வரில் நட்டங்காணும்-மேஷம்-உதயமாகவும்-துலாம்-ஆரூடமாகவும் - வரில்-நட்டங்காணாது-ரிஷபம் உதயமாகவும் விருச்சிகம் ஆரூடமாகவும் வரில் நட்டங்காணாது-விருச்சிகம் உதயமாகவும் ரிஷபம் ஆரூடமாகவும்வரில் நட்டங்காணும்-தனுசு உதயமாகவும் மிதுனம் ஆரூடமாகவும் வரில் நட்டங்காணாது - மிதுனம் உதயமாக தனுசு ஆரூடமாகவும் வரில் நட்டங்காணும்-எ-று. 12

இதுவுமது.

156. கலையெழுங்காஞெண்டமருஞெண்டெழுங்கான்ஞெண்டைக்
கலையெழுந்துகாணாதுநீசந்-துலையா
வரியெழுங்காற்சாலமருஞ்சாலரிகாணாது
தெரிவைமீனைங்கதுபோற்செப்பு.

இ-ள். மகரம் உதயமாகவுங் கடகம் ஆரூடமாகவும்வரில் நட்டங்காணும், கடகம் உதயமாகவும் மகரம் ஆரூடமாகவும் வரில நட்டங்காணது, சிம்பம் உதயமாகவும் கும்பம் ஆரூடமாகவும்வரில் நட்டங்காணும், கும்பம் உதயமாகவுஞ் சிம்பம் ஆரூடமாகவும் வரில் நட்டங்காணும், மீனம் உதயமாகவுங் கன்னி ஆரூடமாகவும் வரில் நட்டங்காணது-எ-று. 13

இதுவுமது.

157. காணுதபோழ்திற்கெடுதிசளுங்காணுது
பேணுதார்வந்தடைதற்பேச்சில்லை-நாணுது
நன்றுமிருபாலுங்காணுமேனற்கோட்கள்
குன்றுமல்வந்தடைதற்கூறு.

இ-ள். சிரோதயவிராசி உதிப்ப பிருட்டோதய விராசி ஆரூடமாகவினவில் நட்டங்காணும், பிருட்டோதய விராசி உதிப்பசிரோதயவிராசி ஆரூடமாகவினவில் நட்டங்காணது. அன்றியும் உதயாரூடங்களிலே சுபக்கோட்கள் நட்டம் விரைந்துகாணுமாம்-எ-று.

இதுவுமது.

158. ஊர்திகுடையுதயமூன்றிற்கடுங்கோட்கள்
சேரவவற்றிற்குச்சென்றேழி-னேராகக்
காணுமேற்கெடொருவன்கைப்படுமோநற்கோட்கள்
பேணுமேற்பேறின்மைபேசு.

இ-ள். உதயாரூடகவிப்புகட்கு-3-மிடத்திற் பாபக்கோட்கள் நின்று அவற்றைப் பாபக்கோட்கள் தானேநோக்கில் நட்டங்காணும், சுபக்கோட்கள் நோக்கில் நட்டங்காணது-எ-று. 15

இதுவுமது.

159. மறிமகரமங்கைவரிற்கெடுதிவாரா
நிறைகுடஞ்சேவுஞ்சிலையுநேரு-நெறியாகப்
பொன்னெழியவொக்கோளும்பாட்டிற்புகுமாகில்
தன்னுழைக்குவாராதுசாற்று.

இ-ள். மேஷங் கன்னி மகரம் இவைகள் பாட்டில்வரில் நட்டங்காணது, ரிஷபங் துலாங் தனுசு கும்பம் இவைகள் பாட்டில்வரில்

நட்டங் காணும், மற்றய இராசிகள் பாட்டில் நட்டம் நாட்சென்று காணும், குரு பாட்டில்நிற்கில் நட்டங்காணும், மற்றய கோட்கள் நிற்கில் நட்டங்காணாது-எ-று. 16

இதுவுமது.

160. பின்னெழுமவற்றுட்பிறையனூர்நோக்குதயந்
தன்னிற்கெடுத்தனசோர்வில்லை-தன்னி
கடைமெலிவான்காணுமேற்காணாநல்லுச்சி
படைதரிற்செய்கோட்களாகும்.

இ-ள். பிருட்டோதய விராசிகளிற் சந்திரன் நிற்கினும் நோக்கினும் நட்டங்காணும், அச்சந்திரனைச் சனிநோக்கில் நட்டங்காணாது, அச்சந்திரனுக்கு-10-மிடத்தில் அங்காரகன் நிற்கில் நட்டங்காணும்-எ-று. 17

இதுவுமது.

161. பகலோன்மதியுடனைப்பாட்டிலுறைபி
லகலாக்கெடி தியஃதென்ப-வகலாக்
குருபுந்தியேழிற்குறித்தகெடுதி
வருவனபோற்றனேவரும்.

இ-ள். 7-மிடத்திற் சூரியனுஞ் சந்திரனுமாகக் கூடிநிற்கில் நட்டங்காணும், புதனுங் குருவுமாகக் கூடிநிற்கில் அதுவேயாம்-எ-று.

இதுவுமது.

162. ஒன்பானைந்தேழொன்றுரைக்குமிம்மூன்றிடத்து
அன்பாகநற்கோளமருமே-லின்பாகக்
காணுங்கெடுதிகடுங்கோட்களந்நிலத்திற்
பேணுமேற்பேறில்லைபேசு.

இ-ள். 5-மிடம்-7-மிடம்-9-மிடங்களில் சுபக்கோட்கள் நிற்கில் நட்டங்காணும், பாபக்கோட்கள் நிற்கில் நட்டங்காணாது-எ-று. 19

நட்டங்காணும் காணாது என்பதுடனே நட்டஞ்சேர் திசையும் உணர்த்துகின்றது.

163. நேர்பதற்குமேற்பதற்குநின்றமூன்றைந்தொன்பான்
சேருடைநற்கோள்சேரிற்காணுமாந்-தூர

நடக்குங்கோணின்றிடிற்காணாதுநட்டங்
கிடக்குங்கோளத்திசையிற்கேடு.

இ-ள். உதயாருடங்கட்கு-3-மிடம்-5-மிடம் - 9 - மிடங்களிற் சுபக்கோட்கள் நிற்கில் நட்டங்காணும், பாபக்கோட்கள் நிற்கில் நட்டங்காணாது, நட்டஞ்சேர்திசை மேற்படிகோட்களுக்கடைத்த திசையேயாம்-எ-று. இங்கே தூரநடக்குங்கோள் என்றது பாபக் கோட்குப் பெயராயிற்று. 20

இதுவுமது

164. வட்டஞ்சிலைநுட்பம்வன்றூமம்வானகத்
திட்டங்கிலங்கியிருக்குமே-னட்டங்
களேகாதவற்றினுக்கெத்திசையோவத்திசையிற்
போகாக்கிடக்கும்பொருள்.

இ-ள். உதயாருடங்களிலே இந்திரதனுசு பரிவேடந் தூமம் நுட்பம் இவைகள் நிற்கில் நட்டங்காணும், நட்டஞ்சேர்திசை மேற்படி கோட்களுக்கடைத்த திசையேயாம்-எ-று. 21

நட்டம் ஒருவன்கொண்டுவந்து தருவன் என்பது
உணர்த்துகின்றது.

165. மூன்றிற்கடுங்கோளாய்முன்னுதயநான்கைந்திற்
றோன்றுநற்கோட்கடோன்றுமேற்-றோன்றிப்
பிரியுமந்தநற்கெடுதியாங்கொருவன்கொண்டு
தருகுமென்றிந்தப்படியேசாற்று.

இ-ள். உதயாருடங்கட்கு மூன்றுமிடத்திற் பாபக்கோட்கள் நின்று அப்பாபக் கோட்களுக்கு நான்காமிடம் ஐந்தாமிடம்இவை களிற் சுபக்கோட்கள் நிற்கில் நட்டமானபொருளை ஒருவன்தானே கொண்டுவந்துதருவன்-எ-று. 22

நாற்கால் நட்டம்தானேவரும் என்பது
உணர்த்துகின்றது.

166. காரியிரவிகடுஞ்சேயிவைமூன்றுஞ்
சீரியவுச்சியின்கட்சேருமேற்-சேரும்
விலங்காயநட்டங்கண்மெய்ந்துதம்மூர்க்கே
விலங்காதுவந்தடைதென்மெய்

இ-ள். உதயாருடங்கட்குப் பத்தாமிடத்திற் சூரியன் அங்காரகன் சனி இவைகள் நிற்கில் நாற்கால்நட்டந் தானேவரும்-எ-று. மேய்ந்துவரும் என்றமையால் ஒருவன் கொடுபோனதல்லவென்பதுவுங் கண்டுகொள்க. 23

நாற்கால் நட்டம் கட்டுண்டன என்பதும் இருகால்
நட்டம் தளைபூண்டன என்பதும்
உணர்த்துகின்றது.

167. நாற்கால்வற்றோடுநாகம்படுங்காலை
நாற்காற்கேடென்றுநயந்துரைக்க நாற்காற்
படத்தானரவெழிற்கட்டுண்ணுமீர்காற்
படத்தான்றளைபாடதென்.

இ-ள். நாற்காலிராசியிற் பாம்பு படாநின்றதாகில் நாற்கால் நட்டமென்றும், நாற்காலிராசி படபாம்பு உதயத்தில் நின்றதாகில் நாற்கால் நட்டங்கட்டுண்டன என்றும், இருகாலிராசி படபாம்பு உதயத்தில் நின்றதாகில் இருகால்நட்டந் தளைபூண்டன என்றுஞ் சொல்லுவதாம்-எ-று. 24

உலோகநட்டம் அழியும அழியாதென்பது
உணர்த்துகின்றது.

168. ஏர்பின்முனிவனெழில்பொன்கெடவொட்டா
னீர்வெள்ளிவெள்ளிகெடவொட்டான் வேரு
முடவனேற்பாட்டிலிரும்புகெடாப்பத்தி
விடரிலிசேய்செம்புகெடாதென்.

இ-ள், குரு உதயத்தில் நிற்கில் பொன்னழியாது, சுக்கிரன் நீர்க்கீழ் நிற்கில் வெள்ளியழியாது, சனி பாட்டில் நிற்கில் இரும்பழியாது, அங்காரகன் உச்சியில் நிற்கில் செம்பழியாது-எ-று. 25

இதுவுமது.

169. புந்தியுதகம்புகழ்தராப்போக்கில்லை
யிந்துநீர்க்கீழ்வெண்கலமிழவா-முந்தரவு
பாடகலாதீயம்பருதியேயுச்சிதனி
லூடகலாப்பித்தளையென்றோர்.

இ-ள். புதன் உதயத்தில் நிற்கில் தரா அழியாது, சந்திரன் நீர்க்கிழில் நிற்கில் வெண்கலமழியாது, பாம்பு பாட்டில்நிற்கில் ஈயமழியாது, சூரியன் உச்சியில்நிற்கிற் பித்தளையழியாது-எ-று. 26

நட்டஞ்சேர்விடம் உணர்த்துகின்றது.

170. அலவனுங்தேளுமனையகத்துளாகு
முலவுகயன்மகரமொட்டி-னிலவிய
விட்டத்தோடேணையிறப்பாகுநற்கெடுதி
யிட்டத்தாற்சேருமிடம்.

இ-ள் கடகம்-விருச்சிகம்-இவை-உதிக்கில்-மனைக்குள் - அல்லதுவீட்டுக்குள், மகரம்-மீனம் - இவை - உதிக்கில் திண்ணையொட்டு அல்லது சுவரொட்டில், மற்றய இராசிகள் உதிக்கில் தூலத்தின்பேரில் அல்லது இறப்பில்என்று இப்படியாக நட்டஞ்சேர்விடஞ்சொல்லுவதாம்-எ-று. 27

இதுவுமது.

171. அட்டின்மேற்பொன்னுமடுப்பின்முடவன்சே
யொட்டிற்புகர்மதிநீர்பாம்புபுழை-யொட்டிய
தூதுவன்பானுசுவர்மேடுசொன்னநில
மோதுமுறையேயுணர்.

இ-ள். சூரியன்-புதன்-இவை-உதிக்கில் சுவரின்பேரில், சந்திரன்சுக்கிரன் இவைஉதிக்கில் நீர்ச்சால்களில், அங்காரகன் உதிக்கில் திண்ணையொட்டு அல்லது சுவரொட்டில், குருஉதிக்கில் அடுக்களையில், சனிஉதிக்கில் அடுப்பில், பாம்புஉதிக்கில் துவாரமுள்ள இடங்களில்என்றுஇப்படியாக நட்டஞ்சேர்விடஞ்சொல்லுவதாம்-எ-று.

இதுவுமது.

172. ஊருந்தெருவுமுயர்காடுகாடிச்சாற்
சேர்த்தருகட்டிற்கீழ்த்தேவரிடங்-தேரிற்
சொரிநெல்லின்மாளிகையிற்சூழ்குப்பையோன்பான
பரிமுதற்பாம்பீருகப்பார்.

இ-ள். அசுவினிஉதிக்கில் ஊர்க்குள், பரணிஉதிக்கில் தெருவுக்குள், கிருத்திகை உதிக்கில்காட்டில், உரோகிணிஉதிக்கில் காடிச்சால்களில், மிருகசீரிடம்உதிக்கில் கட்டிற்கீழ், திருவாதிரை உதிக்

கில் கோவிலில்; புனர்பூசம் உதிக்கில் நெற்களஞ்சியத்தில்; பூசம் உதிக்கில் வீட்டிற்குள், ஆயிலியம் உதிக்கில் குப்பையில் என்று இப்படியாக நட்டஞ்சேர்விடஞ் சொல்லுவதாம்-எ-று 29

இதுவுமது.

173. நெற்குதிர் பாழ்வீடுநீர்கயநீர்க்கரை
நற்செய்பருத்திநடுநிலமாம்-பற்றைபாழ்ங்
காடிவையொன்பான்மகமுதலாகக்கேட்டை
நீடுறுதியாகநினை.

இ-ள். மகம் உதிக்கில் நெல்லுறையில், பூரம் உதிக்கில் பாழ் வீட்டில், உத்திரம் உதிக்கில்நீரில், அஸ்தம் உதிக்கில் குளத்தில், சித்திரைஉதிக்கில் நீர்க்கரையில், சுவாதி உதிக்கில் கழனியில்,விசாகம் உதிக்கில் பருத்தி விளைபிடத்தில், அனுஷம்உதிக்கில் பற்றைக் காட்டில், கேட்டை உதிக்கில் பாலைவனத்தில் என்று இப்படியாக நட்டஞ்சேர்விடஞ்சொல்லுவதாம்-எ-று. 30

இதுவுமது.

174. குதிரைநிலைவாழ்கூரைமண்ணான்றுறையாங்
கருதிநிலையாலையிடஞ்சேரு-முதிர்வீதி
தென்கீழ்வளைசேறுபூந்தோட்டமூலமுத
லொன்றுபானாளுற்றவிடம்.

இ-ள். மூலம்உதிக்கில் குதிரைப்பந்தியில், பூராடம் உதிக்கில் கூரைவீட்டில், உத்திராடம் உதிக்கில் வண்ணான் றுறையில், திருவோணம் உதிக்கில் யுத்தம்பலியிடத்தில், அவிட்டம்உதிக்கில் ஆலையிருப்பிடத்தில், சதயம் உதிக்கில் தெருவுக்குள், பூரட்டாதி, உதிக்கில் தென்கீழ் மனைக்குள் உத்திரட்டாதி உதிக்கில் சேற்றில் இரேவதி உதிக்கில் பூந்தோட்டத்தில் என்று இப்படியாக நட்டஞ்சேர் விடஞ் சொல்லுவதாம்-எ-று. 31

நட்டம்வைத்துள்ள மட்கலம்
உணர்த்துகின்றது.

175. சிறுகுடுமைகூண்செங்குடப்சரகஞ்சான்மே
லொருவுறுகலங்காடியுட்சாற்-குறியாய
நன்கலங்களிவ்வகையினற்கெடுதிதானவைக்கு
மின்கலங்கள்சேயாதியென்.

இ-ள். அங்காரகனுக்குக்-குடுவை, புதனுக்குக்-கூனை-குருவுக் குமிடா, சுக்கிரனுக்கு நீர்க்கரகம் - சனிக்குச்சால், பாம்பிற்கு ஓட்டைப் பாண்டம், சூரியனுக்குக் கடிப்பானை, சந்திரனுக்கு நற்பாண்டம் என்று இவ்வகையாக நட்டம்வைத்துள்ள மட்கலஞ்சொல்லப்படும்-எ-று. 32

நட்டம் இருந்த திசை
உணர்த்துகின்றது.

176. ஏழுமோரையாதியாயேறதனுள்வைத்து
வழுவாவலமுறையேயெண்ண-வெழுமோரை
யாளுங்கோளெவ்விடத்தோவவ்விடத்தேவைப்பென்று
கோளின்குணமறிந்துகூறு.

இ-ள். உதயத்தை ரிஷபத்திலே வைத்து வலமுறையே எண்ணிக்கண்ட இராசிக்கதிபதி எந்ததிசையில் நின்றதோ அந்ததிசை நட்டமிருந்த திசையாம்-எ-று. இங்கே இடமென்றது திசைக்குப் பெயராயிற்று. 33

நட்டஞ்சேர்திசையும் நட்டமான பொருட்டொகையும்
உணர்த்துகின்றது.

177. ஆருடமுமானகவிப்புநோக்கெத்திசையோ
சேருமந்தத்திசையேசேருமாஞ்-சீரிய
கண்டனவுங்கண்டவிராசிகதிர்த்தொகையுங்
கொண்டபொருளளவாய்க்கூறு.

இ-ள். ஆருடத்தையுங் கவிப்பையும் நோக்கும் இராசி எத்திசையோ அத்திசையே நட்டஞ்சேர்திசையாம், அவற்றின் கதிர்த்தொகையும் நோக்கின கோட்களும் எத்தனையோ அத்தனையும் நட்டமான பொருட்டொகையாம்-எ-று. 34

கள்ளர் ஆண் பெண் என்பது.
உணர்த்துகின்றது.

178. நின்றகயிற்றேறெடுழுவதெனவிரண்டத்
தொன்றுவியனாகவுற்றிடுமேற்-குன்றாத
வாண்மகன்கொண்டான்கெடுநிசமனுகிற்
பெண்மகள்கொண்டதெனப்பேசு.

இ-ள். உதயாடங்கள்-ஸியனாகில்-ஆணென்றுஞ்-சமனாகிற்-பெண்ணென்றுங்-கள்ளரைச்-சொல்லுவதாம்-எ-று, பெண்மகள்-என்றது பேண்மகள் என-நீளும் வழிநீண்டு-செய்யுள் விகாரமாயிற்று.

நட்டஞ்சேர்திசைக்குப்-பிறிதுவிதியும் - நட்டமானபொருட்களின் நிறமுங் கள்ளரின் நிறங்-குலம்-மறு-வடு-முதலியவைகளும் உணர்த்துகின்றது.

179. எப்பாலவர்க்குமதிகனுக்கெப்பாலோ
அப்பாலேகேடென்றறிந்துரைக்கத்-தப்பாது
தன்னிறமேகெட்டபொருடன்னிறமேகொண்டாரு
முன்னுளவுந்தேர்ந்துரைக்கமுற்றும்.

இ-ள். வலிதுபெற்றது-யாதொருதிசையை-நோக்கிற்றோ-அத்திசையும்-நட்டஞ்சேர்திசையாம்-யாதொருகோளை-நோக்கிற்றோ-அக்கோட்கடைத்தநிறமே - நட்டமானபொருட்களின் - நிறமாம், மேற்படி கோட்கடைத்த-நிறங்-குலம்-மறு-வடு-முதலியவைகளே-கள்ளரின்-நிறங்-குலம்-மறு- வடு-முதலியவைகளாம்-எ-று. 36

நட்டங்காண்கைக்குக்-காலவரை கணிக்கின்றது.

180. நாழிகைநாட்டிங்களாண்டென்றுநாமுரைத்த
பாழியதாற்கோட்கடுக்கும்பண்புணர்ந்துசூழுங்
கதிராதிகட்டுரைக்ககாலமாமென்றே
யதிராதறிந்துரைக்கவாய்ந்து.

இ-ள். காண்டப்பொழிப்பிலே-சொல்லியிருக்கிற-வருஷாதி-காலகணிதத்தின்-பிரகாரத்திலே-வலிதுபெற்ற-கோட்கடைத்தகாலவரையைக்கொண்டு நட்டங்காண்கைக்குக் காலவரை கணிப்பதாம்-எ-று. 30

நட்டமுட்டி சிந்தனைகாண்ட முற்றிற்று.

ஐந்தாவது.

# நலந்தீங்கு காண்டம்.

## காண்டநுதலியபொருள்.

181 நன்பொருட்பேறழிவுணூர்கணர்கரும
மின்பமரும்பெண்போகமீங்கிவற்றோ-டென்பலவின்
சிந்தித்தபேறழிவுதேர்ந்துணர்ந்துள்ளுநர்க்கும்
முந்தித்தான்கட்டுரைப்பன்முன்.

இ-ள். யாத்திரைகாண்டம்-மங்கலகாண்டம்-காமகாண்டம்முதலிய காண்டங்களிலே சொல்லுவனவும் சொல்லியமையாதனவும் ஆகிய பொருட்கள் பலவற்றின் நலந்தீங்குகளை முன்னதாகநலந் தீங்குகாண்டம் காமகாண்டம் என்று காண்டங்களை முன் பின்னாகக் கூறியவதனால் இக்காண்டம் முழுவதுங் கொண்டு கூட்டுப்பொருள்கோளாக வருவனகாண்க. (1)

## உதயபலன்.

182 சிரவுதயந்தன்னிற்சிறப்பாங்கரும
மரியபிருட்டோதயத்திலாகா-விருபுறனு
மேட்சியிராசிதனிற்கருமமெவ்வினைத்துந்
தாட்சியுடனுமென்றேசாற்று.

இ-ள். சிரோதயவிராசிகள் உதயமாகில் எடுத்தகாரியம் முடியும் பிருட்டோதயவிராசிகள் உதயமாகவரில் முடியாது-எ-று. முடியு என்றதைநலமாகவும் முடியாதென்றதைத் தீங்காகவும் வருத்தத்திலே முடியும் என்றதை நலமுந்தீங்கும் விரவியுள்ளதாகவும் யூகிப்பதாம் இப்படியே வருவனவற்றுள்ளுங் கண்டுகொள்க. (2)

## இதுவுமது.

183 சுழலுவனதோன்றுங்காற்றோன்றுகெடுதி
யழலும்வன்றேய்விடுக்கலாகுஞ்-சுழலும்
படைவரவுண்டாகும்பகைதீருமென்றே
யடைவுடையோர்செப்புமவை.

இ-ள். சரவிராசிகள் உதயமாகவரில் நட்டமானபொருள் காணு துபிணிதீரும் படைவரவுண்டு பகைதிரும்-எ-று. (3)

இதுவுமது.

184 நிற்பனநான்குநிலைநின்றெழுங்காணட்டங்க
ளற்பமழியாதகத்தனவா-மற்றுங்
படைவரவுசாவுகேடில்லைநோய்தீரா
கொடைபெறும்பேருண்மையெனக்கூறு

இ-ள். ஸ்திரவிராசிகள் உதயமாகவரில் நட்டமானபொருள் காணும் படைவரவில்லை மரண மில்லை நினைத்தகாரியங் கைகூடும் பிணி தீராது பரிசுகிடைக்கும்-எ-று. (4)

இதுவுமது.

185 இருமாண்பிராசியெழுதருங்காணட்டம்
வருமரண்பிலைவழியுமேகார்-வருநோய்
தணியாய்பெரும்பகையுஞ்சந்தாகார்கல்வி
துணிவார்க்கவைசுருங்கச்சொல்.

இ-ள். உபயவிராசிகள் உதயமாகவரில் நட்டமான பொருள் காணாது வழிப்போக்கில்லை பிணிதீராது சத்துருக்கள் சந்தாகார் கல்விநிறையாது முடியுமென்ற காரியங்களும் முடிவுபெறுது-எ-று. (5

மேலுணர்த்திய தீங்குகட்கு நிவர்த்தி கூறுகின்றது.

186 கொட்பொடிருமாண்புகூர்ந்தெழினுநற்கோட்க
ணட்பொடுயராட்சியுச்ச நண்ணுமே-லொப்பரிய
நன்மைதருந்தீங்குடையதீங்கோட்கணண்ணுமெனிற்
றின்மைகிடைக்குமெனச்செப்பு

இ-ள். சரவிராசிகள் உதயமாகவரினும் உபயவிராசிகள் உதயமாகவரினும் அவற்றில் குருமுதலிய சுபக்கோட்கள் நட்பாட்சியுச்சக் கோட்களாய் நிற்கில் வருமென்றதீங்குகள் வராது நலமுண்டாம் சனிமுதலிய பாபக்கோட்கள் பகை நீசக்கோட்களாய் நிற்கில் வருமென்றதீங்குகள் மேன்மேலாக இரட்டித்துவரும்-எ-று. ஸ்திரவிராசிகள் பிணி ஒன்று தவிர மற்றெல்லாவற்றிற்கும் நலமேயாம் ஆதலால் அவற்றைநீக்கித் தீங்குகள்மிகுந்துள்ள சரவிராசிகளையும் உபயவிராசிகளையும் எடுத்து அவற்றால் வருகின்ற தீங்குகட்கு நிவர்த்தி கூறினாரென அறிக, இந்நிவர்த்தியை ஸ்திரவிராசிகட்கும் வருவித்துரைத்துக்கொள்க. (6)

### ஆரூடபலன்.

187 உடம்பெழுங்காற்கொட்கலாமுற்றநோய்தீரு
மடங்காமுகடதுவேலாக்க-மிடங்கீழ்நீர்
வேடகலாதாகுங்கிளர்ந்தபொருள்கைகூடும்
பாடதுவேற்கைப்பொருளும்பாடாம்.

இ-ள். உதயம் ஆரூடமாகவரில் நட்டமானபொருள்காணும் பிணிதீரும்-4-மிடம் ஆரூடமாகவரில் நட்டமான பொருள் காணும் நினைத்தபொருள் கை கூடும்-7-மிடம் ஆரூடமாக வரில் நட்டமான பொருள் காணுமற் போதலன்றியுங் கையிலிருக்கிற பொருளும் நட்டமாம்-10-மிடம் ஆரூடமாகவரில் ஆக்கமுண்டாம்-எ-று. (7)

### இதுவுமது.

188 இருமூன்றெட்டீராறிரண்டிவற்றிலேறி
வருவான்மகிழ்ந்திருக்குமேனும்-வருவான்
கருதியவைமுற்றாக்கைப்பொருளும்போமாஞ்
செருவிற்பகைவருக்கேசெப்பு.

இ-ள். 2-மிடம்-6-மிடம்-8-மிடம்-12-மிடம் இவைகள் ஆரூடமாகவரில் நினைத்த காரியம் முடிவு பெறாது கையி லிருக்கிற பொருளும் நட்டமாம் எதிரிதானே வெல்லுவன்-எ-று. இவற்றுள்-3-மிடம்-5-மிடம்-9-மிடம்-11-மிடம் ஆகிய ஆவைகளைச் சொல்லா தொழிந்தமையால் மேல் உணர்த்துகின்றது கவிப்பு போலக்கொண்டு சொல்லப்படும் என்பதுவுங் கண்டுகொள்க. (8)

### கவிப்பின்பலன்.

189 இரண்டினொடீரண்டாமோரையிலொன்று
திரண்டவனைச்சென்றுகவிக்கின்-முரண்டு
பகைத்தோர்பகைதீரார்பைம்பொன்னங்குண்டேற்
பகைத்தோரைவெல்வர்பரிந்து.

இ-ள். 2-மிடம்-4-மிடம் இவைகள் கவிப்பாகவரில் சத்துருக்கள் சந்தாகார் நலமில்லை, மேற்படி கவிப்பில் குருமுதலிய சுபக்கோட்கள் நிற்கில் சிறிது சந்தாவர் நலமுண்டாம்-எ-று. (9)

இ-ள். உதயாரூடகவிப்புகளில் சுக்கிரன் நிற்கில் பொருட்பேறுண்டாம் பகை தீரும் பிணி தீரும் பெண்பேறுண்டாங் கைசோர்ந்த பொருளும் வந்துசேரும் அன்றியும் மற்றெல்லா நலமுந்தரும்.

இதுவுமது.

197 புந்தியெழுங்காற்பொருந்தாரிடர்வினைகள்
சிந்தும்பகைபிணிகடீருமா-மந்த
முனிவோருவப்பர்முரண்வழக்குவெல்லுந்
தனியுடல்கவிப்புமவைசாற்று.

இ-ள். உதயாரூடகவிப்புகளில் புதன் நிற்கில் சத்துருக்கள்செய்கின்றமர்று பாடுகளனைத்தும் ஆடியுண்டுபோம் பகைதீரும் பிணிதீருஞ் சத்துருக்கள் சந்தாவர் வழக்குவெல்லும்-எ-று. (17)

இதுவுமது.

198 கொம்பியருக்கன்குசன்மூன்றத்தொன்றிவைக
ளன்பாங்கவிப்புதயமாரூடந்-தன்பாலிற்
கண்டாற்பொருளழிவுதீங்காயநோய்மரண
முண்டாகுமென்றேயுரை.

இ-ள். உதயாரூட கவிப்பு களில்-சூரியன்-அங்காரகன்-சனி-இவைநிற்கிற் பொருட்சேதமாம் பிணிகாணும் மரணவருந் தீங்குண்டாம்எ-று. இங்கே கொம்பி என்றது சனிக்குப் பெயராயிற்று.(18)

இதுவுமது.

199 பாம்புகொலைகளவுநஞ்சுதீச்சாக்காடு
சோம்பால்வற்றைத்துணிந்துரைக்க-கூம்புதயம்
பேருற்றநற்கவிப்புமாரூடமிம்மூன்றிலொன்றி
னேருற்றுநிற்குமெனின்

இ-ள். உதயாரூடகவிப்புகளில் பாம்பு நிற்கில் கொலையுண்டாம் களவுபோம் விஷந்தீண்டும் தீப்படும் மரணம்வரும் அன்றியு மற்றெல்லாத் தீங்குகளும் விளையும்-எ-று, நேருற்று நிற்குமெனின் என்று மிகுத்துக் கூறிய வதனால் பாம்பு உதயாரூட கவிப்புகளை நோக்கினும் இப்படியாம் என்று வருவித்துரைத்துக் கொள்க. மேல் உணர்த்தியவற்றிற்கும் இவையேயாம். (19)

இதுவுமது.

200 உதயமுதன்மூன்றிலொன்றையுச்சக்கோணக்கிற்
சிதையாதருபொருளுஞ்சேருஞ்- சிதையாத
நீசம்பகைகேட்டாரேரிழையார்தங்கூட்டம்
பேசுங்காலவ்வகையேபேசு.

இ-ள். உதயாரூட கவிப்புகளை உச்சக்கோட்கள் நோக்கில் நினைத்த காரியங் கைகூடுந் தீவாந்தரங்களின் வஸ்துக்களுஞ் சித்திக்கும் பகைநீசக்கோட்கள் நோக்கில் நினைத்த காரியங் கைகூடாமையுந் தீவாந்தரங்களின் வஸ்துக்கள் சித்தியாமையும் ஆதலன்றியும் பெண்பேறும் இல்லாமற்போம்-எ-று. (20)

இதுவுமது.

201 அங்கிலங்கணட்பாட்சிக்கோட்களவைநோக்குமேற்
றன்னிலங்குசத்துருக்கள்சந்தாவ-ரங்கிலங்கட்
கின்பாகிலின்பாகுமின்னுதார்தாமோவ
ரன்பாயமங்கையருமாங்கு.

இ-ள். உதயாரூடகவிப்புகளை நட்பாட்சிக்கோட்கள் நோக்கில் சத்துருக்கள் சந்தாவர் அன்றியும் நோக்கி நின்ற கோட்கள்ஷை உதயாரூடகவிப்புகட்கு நட்பாட்சியுச்சக் கோட்களாமெனின் சத்துருக்கள் உறவாவர்கள் பெண்பேறுண்டாம்மற்றெல்லாநலமுந்தரும்

இதுவுமது.

202 ஒன்னாருயிருடலிற்றேன்றிலுபிரிழவாந்
துன்னரைச்சேரிற்றளைபடுவர்-துன்னாது
போயவரும்வாரார்புறம்போயதங்கிடையா
வாயாதுசொல்லும்வகை.

இ-ள். உதயாரூட கவிப்புகளில் பகைக்கோட்கள் நிற்கில்மரணம்வரும், சத்துருக்களிடஞ் சென்றால் காலிற்றளைபடும், யாத்திரைசென்றார் வரவில்லை, நட்டமான பொருள் காணாது, வினவினகாரியங்கள் எவ்வளவேனுங் கைகூடுதலில்லை, நட்புக்கோட்கள் நிற்கில் சிறிதுநலமுண்டாம்-எ-று. ( 2)

இதுவுமது.

203 ஒத்தமதிபொன்னவனுற்கண்டத்துநிற்கிற்
செத்தாரென்வுரைக்கிற்றீங்கில்லை-மெத்தனவே
கார்வார்கெடுதியதுகாணுங்கடுங்கோட்கள்
சேர்வாகிற்றீங்கடைதல்செப்பு.

இ-ள். உதயநீர்க் கீழ்பாடுச்சிகளில் சந்திரன் குரு இவைகள் நிற்கில் மரணமில்லை நட்டமானபொருள் காணும், பாபக்கோட்கள் நிற்கில் மரணம்வரும் நட்டமானபொருள் காணாதுதீங்குண்டாம்-

இதுவுமது.

204 கடியவைநாற்கண்டத்தைக்கைக்கொளினும்பத்தி
னடைகெழுவும்பன்னொன்றிற்கோளடையுமேற்
சிந்தித்தவெப்பொருளுஞ்சீர்சாலவன்றனக்குச்
சந்திக்குமென்றிதனைச்சாற்று.

இ-ள். உதயநீர்க்கீழ்பாடுச்சிகளில் ஒன்றையும்விடாது சனி முதலியபாபக்கோட்கள் நிற்கினும்-10-மிடம்-11-மிடங்களில் குரு முதலிய சுபக்கோட்கள் நிற்குமாயின் நினைத்த காரியங் கைகூடிவருமே யன்றிக்கெடுதலில்லையாம்-எ-று. (24)

இதுவுமது.

205 அரவங்குறைப்பிற்றளைபாடகன்றார்
வரவில்லைவான்பொருளுமற்றே-தெரியின்
விடம்பிணிகணஞ்சென்னிற்கொல்லும்வழிமேவார்
தொடங்குவனமுற்றாமைசொல்.

இ-ள். உதையநீர்க்கிழ்பாடுச்சி களில் பாம்புநிற்கில் சத்துருக்களிடஞ்சென்றால் காலிற்றளைபடும் யாத்திரைசென்றார் வரவில்லை பொருட்பேறில்லை விஷந்தீண்டினதைக் குறித்து அல்லது பிணி கொண்டதைக் குறித்து நஞ்சருந்தியதைக் குறித்து வினவுமிடத்து அவ்வவற்றானே மரணம்வரும் வழிப்போக்கில்லை எடுத்தகாரியம் முடிவுபெறாது-எ-று. (25)

இதுவுமது.

206 நாளரசனேர்பிற்புகருக்கிநண்ணிடினுங்
கோளரசனுச்சிபுக்கொளிழ்ந்து-நாளுந்

திணைத்துணையுங்குன்றுவாஞ்சிந்தித்தான்சிந்தை
நினைத்தனவெல்லா முடியுநேர்.

(இ-ள்.) உதயத்தில் சந்திரன் நின்று உச்சியில் சுக்கிரநு நிற்கினும் உதயத்தில் குரு நின்று உச்சியில் சூரியன் நிற்கினும் நினைத்த காரியங்களெல்லாம் ஊறுபாடின்றி முடிவுபெறும் நல முண்டாம், எ-று. இங்கே கோளரசன் என்றது சூரியனுக்கும் நாளரசன் என்றது சந்திரனுக்கும் பெயர்களாயிற்று. (26)

இதுவுமது.

207 பார்க்கவனூர்பாடுச்சி சேருங்காற்பாவையரோ
டார்த்தபொருட்பேறென் றறிந்துரைக்க-சீர்த்தக்க
வேந்தனருளுண்டாகும் வெண்மதியமங்குண்டேற்
சேர்ந்தமடவார்கூட்டஞ் செப்பு.

(இ-ள்.) பாடுச்சிகள் 2-மிடத்தும்-சுக்கிரன் நிற்கில் பெண் பேறு பொருட்பேறு-அரசர் நோக்கம் இவைகளுண்டாம். சந்திரன் நிற்கில்-பெண்பேறுண்டாம்-நலமாம் எ-று, அறிந்துரைக்க என்று மிகுத்துக் கூறியவதனால் சுக்கிரனுக்குப் பூமிப்பேறும் வருவிக்கப்படும். (27)

இதுவுமது.

208 நல்லக்கோணுற்கண்டங் கொண்டுவினவினு
னெல்லையினற்செல்வ மினிதாளுஞ்-சொல்லிய
தீக்கோட்கணிற்கிற் சிதைவாகுஞ்செல்வங்க
டீப்பகைநோய் தீராமைசெப்பு.

(இ-ள்.) உதயநீர்க்கீழ்ப் பாடுச்சிகளில் குரு முதலிய சுபக் கோட்கள் நிற்கில் இராஜாங்கம்முதலிய அஷ்டசம் பத்தும் பெற்று சுகமேவாழ்வர். சனி முதலிய பாபக்கோட்கள் நிற்கில் முன்னிருந்த செல்வம் கெடுதலன்றியும் பகை நோய் முதலிய தீங்குகள் நேரிட்டு துன்பமடைவர்கள் எ-று. (28)

நட்பாட்சியுச்சம் பகை நீசங்களின் பலன்.

209 நட்பாட்சிநண்புட னன்றாம்பகையாகில்
வட்கார்பெருப்பகைகள் வந்தெய்துந்-திட்காத
வுச்சம்பொருட்பேறு மொண்சிறப்பாநீசமே
மிச்சங்கேடாக விளம்பு.

(இ-ள்.) நட்பின்பலன் ஆட்சியின் பலன்கள் உறவுண்டுபண்ணுதலும் நலந்தருதலுமாம். உச்சத்தின் பலன்-உறவுண்டு பண்ணுதலும் நலந்தருதலுமே யன்றியும் பொருட்பேறு முதலிய பேற்றைப் பெறுவித்தலாம். பகையின்பலன்-பகை யுண்டு பண்ணுதலும் தீங்கு விளைவித்தலுமாம். நீசத்தின்பலன், பகையுண்டு பண்ணுதலும் தீங்கு விளைவித்தலுமேயன்றியும் நட்டமுதலிய பேறின்மையை விளைவித்தலாம் எ-று. (29)

காண்டத்தொடுக்கம் உணர்த்துகின்றது.

210 ஏறிற்றெழுவதிருங் குடையுங்கண்டமுதற்
றெறிற்பலன்கொடுக்குஞ் சீர்க்கோட்க-டேறியு
நட்பாட்சியுச்சம் புகுங்கானயந்தவர்க்கு
திட்காரத்திற் பலனுச்செப்பு.

(இ-ள்.) இதுவரையிற் சொல்லிய ஆரூடம் கவிப்பு உதய நீர்க்கீழ் பாடுச்சிமுதலிய இடங்களில் சுபக்கோட்கள் நிற்கில் நலமென்றும் அச்சுபக்கோட்கள் தானே வலிது பெற்று நிற்கில் நலம் அதிகரிக்குமென்றும் சுபக்கோட்கள் வலிது பெற்று நிற்றலோடு நட்பாட்சி யுச்சமும் கூடவேபெற்று நிற்கில் நலம் முன்னதிலும் விசேஷமாகவே அதிகரிக்குமென்றும் சொல்லப்படும்.

இதுவுமது.

211 ஓதியவாறெல்லா முணராங்கொருவருக்குத்
தீதுறுதற்றீக்கோளாந் தேர்ந்துரைக்க-நீதியாய்ச்
சொல்லும்பகைநீச மானவற்றுட்டீக்கோட்கள்
சொல்லுமதிற் றீதாய்ச்சொல்.

(இ-ள்.) இதுவரையிற்சொல்லிய ஆரூடம் கவிப்பு - உதய நீர்க்கீழ் பாடுச்சிமுதலிய இடங்களில் பாபக்கோட்கட் நிற்கில் தீங்கென்றும் அப்பாபக்கோட்கள் தானே வலிதுபெற்று நிற்கில் தீங்கு அதிகரிக்குமென்றும் அப்பாபக்கோட்கள் வலிது பெற்று நிற்றலோடு பகை நீசமும் கூடவே பெற்று நிற்கில்தீங்கு முன்னதிலும் விசேஷமாகவே அதிகரிக்குமென்றும் சொல்லப்படும் எ-று. (31)

நலந்தீங்குகாண்டம் முற்றிற்று.

உ

முருகக்கடவுள் துணை.

# 6 வது பிணிக்காண்டம்.

பிணிக்கயிறு உணர்த்துகின்றது.

212 வானோர்தன்னூன்முறையே வந்தபிணிமக்க
டானெவ்வாறென்பதற்குச் சாற்றுங்கா-லானூர்
பிணியெழுச்சிக்காருகும் பேசுவரேலெட்டு
தணிவின் மரணமெனச்சாற்று.

(இ-ள்.) உதயத்திற்கு 6-மிடம் பிணிக்கயிறு 8 - மிடம் மரணக்கயிறுமாம், ஆதலால் 6-மிடத்தைக்கொண்டு பிணியையும் 8-மிடத்தைக்கொண்டு மரணத்தையும் சொல்லப்படும் எ - று. வானோர் தந் நூன்முறையே என்று சிறப்பித்த வதனுல் 6-மிடத்திற்கு 6-மிடமான 11-மிடத்தையும் 8-மிடத்திற்கு 8-மிடமான 3-மிடத்தையும் முறையே பிணிக்கயிறென்றும் மரணக்கயிறென்றும் வருவித்துரைத்துக் கொள்க. இச்செய்யுளிலே காண்டத்திற்குரிய பிணிக்கயிற்றைக் கூறவந்தவர் இப்பிணி மரணத்தைக் கொடுப்பதோ என்று வினவினுர்க்கு அஃது கூறல்வேண்டும் ஆதலால் மரணக் கயிற்றையும் உடன்கூறினுர் என்றறிக. (1)

அசாத்தியக்குறி உணர்த்துகின்றது.

213 பிணியாங்கயிற்றிற் பிணியென்வருமேற்
றணியாப்பிணியவனைச்சாருந்-தணியாக்
கடுங்கோள்பகைநீச மாயதனைக்காணி
லொடுங்காப் பிணியென்றுரை.

(இ-ள்.) பிணிக்கயிறு ஆரூடமாகவரினும் பிணிக்கயிற்றைப் பாபக்கோள் பகைநீசக்கோளாக நோக்கினும் பிணிதிராதுஎன்று சொல்லப்படும் எ-று. நோக்கில் பிணிதீராது என்றமையால் நிற்கினும் பிணிதீராது என்றும் அதுவே பகை நீசக்கோளாகநோக்கில் பிணிதீராது என்றமையால் நட்பு ஆட்சி உச்சக்கோளாக நோக்கில் சற்றேதா விளையாம் என்றும் யூகித்துக்கொள்கதீராத பிணியை அசாத்தியம் என்றும் தீரத்தக்கபிணியை சாத்தியம் என்றும் நாள் வட்டத்திலே தீரத்தக்கபிணியை யாப்பியம் என்றும் சொல்லுதல் ஆயுள் வேதியர் பாஷையாம். (2)

இதுவுமது.

214 வாள்வாயரவமகிழ் தூம்மொண்டனுவு
நீளாறுடலமிகநிற்குமே-ளுளாய்பு
மேயார்நலிவுண் மெலிவும்பிணிபெருகித்
தீயோடு பாம்படைதல் செப்பு.

(இ-ள்.) பிணிக்கயிற்றிலாதல் ஆரூடத்திலாதல் பாம்புதூம ம் இந்திரதனுசு இவற்றிலொன்று நிற்கிற் பிணிதீராது அன்றி யும் சத்துருபீடை அக்கினிபீடை, விஷபீடையும் தீராது எ-று. சத்துருபீடை அக்கினிபீடை விஷபீடையும் நோதலேயன்றி வேறின்மையால் இவற்றைப்பிணி யோடுசேர்த்துக் கூறினர் இச் செய்யுளிலே மேவார் என்றற்குமேயார் என்றது எழுத்தொற் றுமையாகக்கொள்க எ-று. (3)

இதுவுமது.

215 கவிழ்ந்தவிராசியின் மேனின்ருனேவந்து
கவிழ்ந்தவிராசி கவிக்கிற்-கவிழ்ந்தாங்கு
தீக்கோட்கணிற்கினு நோக்கினுந் தீப்பிணிதான்
வாய்க்கூற்றிற் றீராவழக்கு.

(இ-ள்.) ஆரூடம் கவுப்பு இவை 2-ம்கவிழ்ந்த நோக்குள்ள இராசிகளாகவரினும் இவைகளிற் கவிழ்ந்தநோக்குள்ள கோட்க லாக அல்லது பாபக்கோட்களாகவந்துநிற்கினும் இவற்றைநோக் கினும் பிணிதீராது எ-று. (4)

இதுவுமது.

216 பிணிக்கயிற்றுள்ளேனும் பிணிக்கயிற்றிற்கேழி
னணித்தாகத்தீக்கொட் கணிற்கி-னணித்தாறிற்
றிங்களுறினுமதைத் தீக்கோட்கணோக்கிடினு
மிங்கிவற்றை நோயென்றியம்பு.

(இ-ள்.) பிணிக்கயிற்றிலாதல் பிணிக்கயிற்றிற்கு 7-மிடத்தி லாதல் பாபக்கோட்கள் நிற்கினும் பிணிக்கயிற்றிற்கு 6-மிடத்திற் சந்திரன் நிற்கினும் மற்றெந்த இடத்திலாயினும் நின்ற சந்திர னைப் பாபக்கோட்கள் நோக்கினும் பிணிதீராது எ-று. (5)

சாத்தியக்குறியும் சாத்தியத்தில் அசாத்தியக்குறியும் உணர்த்துகின்றது.

217 ஒன்றுபத்தொன்பானிலொன்றியநற்கோட்க
ளென்றும்பிணியென்பதில்லையா-மொன்றிற்
பகைநீசங்கேடாகும்பாங்காகுமுச்சி
திகையாதெழிற்சேய்நன்செப்பு.

(இ-ள்.) உதயம் 9-மிடம் 10-மிடம் இவைகளிற் சுபக்கோட்கள் நட்பாட்சியுச்சக்கோட்களாக நிற்கினும் 10-மிடத்தில் அங்காரகன் பகை நீசக்கோளாக நிற்கினும் பிணிதீரும் என்றும் உதயம் 9-மிடம் 10-மிடம் இவைகளிற் சுபக்கோட்கள் பகைநீசக்கோட்களாக நிற்கினும் 10-மிடத்தில் அங்காரகன் நட்பாட்சியுச்சக்கோளாக நிற்கினும் பிணி தீர்ந்ததுபோல உள்ளடங்கி ஆரோசிகம் முதலிய வற்றைக் கொடுக்குமே யல்லது பற்றாதென்றும் சொல்லப்படும் எ-று. சுபக்கோட்களுக்குப் பகைநீசங்களைக் கொடியபலனாகக் கூறினமையால் நட்பாட்சியுங்களை நற்பலனுக்கு வருவித்துக்கூறினும் இவ்விதி உடன்கூறப்பெற்ற அங்காரகனுக்கும் கூறு மிடத்து பாபக்கோளாகிய அங்காரகனுக்கு நற்பலன் கூறவே இதற்குப் பகைநீசங்களை நற்பலனாகவும் நட்பாட்சி யுச்சங்களைக் கொடிய பலனாகவும் வருவித்துக்கூறினுமாகக்கொள்க ஆரோசிகம்என்பது நாவுக்கு உருசி தட்டுதல் இஃது ஆயுள் வேதியர் பாஷையாம். (6)

அசாத்தியக்குறியும் அசாத்தியத்தில் சாத்தியக்குறியும் உணர்த்துகின்றது.

218 வில்லோடுவட்டம் விசும்பிலிடும்பொழுது
மல்குபிணிதணியாவாதையா-நல்கிய
வாட்கிநட்புச்சமரசன் புகர்மதிமால்
காட்சியினே யின்மைகாண்.

(இ-ள்.) இந்திரதனு பரிவேடம் இவைகள் ஆகாயத்தினிடமாகத்தோன்றினகாலமே வினவின காலமாக நேரிட்ட விடத்துப் பிணிதீராதென்றும் இவற்றைச் சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவற்றிலொன்று நட்பாட்ச்சியுச்சக் கோளாக நோக்கிற் பிணிதீராத்து போல மேலெங்குமாகத்தோன்றி ஆரோசிகம்முதலியவற்றைக் கொடுக்காமலேயே பற்றத் தீருமென்றும் சொல்லப்படும்.

அசாத்தியக்குறியும் சாத்தியக்குறியும்
உணர்த்துகின்றது.

219 மரணம்பிணியென்றிரு கயிற்றின்மேலு
முரணியதீக்கோளேனும்-முரணிய
நற்கோளேலாங்கவர்க்கு நற்றும்பிணிதீர்த்த
லொற்காதுரைக்க வுணர்ந்து.

(இ-ள்) பிணிக்கயிறு மரணக்கயிறுகளில் பாபக்கோள் நிற்கினும் நோக்கினும் பிணிதீராது சுபக்கோள்நிற்கினும் நோக்கினும் பிணிதீரும் எ-று. (8)

யாப்பியக்குறி உணர்த்துகின்றது.

220 ஆய்ந்தபிணிக்கயிற்றையார் மதியைத்தீக்கோட்கள்
காய்ந்திலராய்கூடுகிகினுமே-வாய்ந்த
வலியாண்டுதிங்களேனு மற்றவைகட்காகு
நிலையாற் பிணியருதநேர்.

(இ-ள்) பிணிக்கயிற்றிலாதல் சந்திரனுடனேயாதல் பாபக்கோட்கள் நட்பாட்ச்சியுச்சக்கோட்களாக நிற்கினும் அவற்றை நோக்கினும் அக்கோட்களுக்குக் கணிக்கப்பட்ட வருஷமாசங்களிலே பிணிதீரும் எ-று. பாபக்கோட்களது காலகணிதத்திற்கு வருஷமாசங்கள்தானே சிறப்புடைத்தாம் ஆகவே பாபக்கோட்களுக்கு நாள்நாழிகைகளை நீக்கினமையாகக்கொள்க வலியாண்டு திங்கள் என்று சிறப்பித்தவதனால் வலிதுபெற்றகோட்களுக்குக் கணிக்கப்பட்ட'வருஷமாசங்களிலே பிணிதீரும் எனினும் ஒக்கும் இதிற்கூறியகாலகணிதம் வருஷமாசங்களென்று நாள்வட்டத்தை குறிக்கின்றமையால் யாப்பியக்குறியென்று பெயரிடப்பட்டது.

சாத்தியகுறிக்குக் காலகணிதம் கணிக்கின்றது.

221 நினைத்தபிணிக்கயிற்றைறநேர்ந்மைந்தநற்கோ
ளினைச்சென்றுசான்றதுநோக்கும்மேற்-றனக்குள்ள
நாட்டிங்களுழிகை யினண்ணுமவன்றனக்கு
கூட்டியேநோய்தீர்த்தல் கூறு.

(இ-ள்) பிணிக்கயிற்றிலாதல் சந்திரனுடனேயாதல்சுபகோட்கள்நட்பாசியுச்சக்கோட்களாகநிற்கினும்அவற்றைநோக்கினும்

அக்கோட்களுக்குக் கணிக்கப்பட்டநாள் நாழிகைகளிலே பிணி தீரும்-எ-று. சுபக்கோட்களதுகாலகணிதத்திற்கு நாள்-நாழிகை கள்தோண சிறப்புடைத்தாம் ஆகவே ஷை சுபக்கோட்களுக்கு வருஷமாசங்களை நீக்கினமையாகக்கொள்க இரட்டித்தல் முற்றித் தல் என்கிறவிதியிலே நாழிகைகளை நாட்களாக்கியும், நாட்களை மாசங்களாக்கியும் சொல்லப்படும் ஆதலால் அஃது கூறுவார் போல நாட்டிங்க ணாழிகை யென்றார் இதிற்கூறிய காலகணிதம் நாள் நாழிகைகளென்று விரவைக குறிக்கின்றமையால் சாத்திய க்குறிக்குக் காலகணிதம் என்றுபெயரிடப்பட்டது. (10)

பிணிநிலை கூறுவான்தொடங்கி இராசிகளில்

அவயவம் விதிக்கின்றது.

222 தலைமுகந்திண்டோடடந்திகழுமார்பு
முலைவயிறுகைக்கீழ்முதுகு-தொலையாக்
குறங்குமுழந்தாள்கணைக்கால்கூறுபுறங்காலென்
றறிந்துரைக்கமேடாதியாய்.

இ-ள். மேஷத்திற்குத் தலை ரிஷபத்திற்கு முதுகு மிதுனத் திற்குத்தோள் கடகத்திற்கு மார்பு சிம்பத்திற்குமுலை-கன்னிககு வயிறு துலாத்திற்குக் கைக்கீழ் விருட்சிகத்திற்கு முதுகு தனுசி ற்குத் துடை மகரத்திற்கு முழங்கால் கும்பத்திற்குக் கணைக்கால் மீனத்திற்குப் புறங்கால் என்று இவ்வகையாக இராசிகளில் அவ யவம்விதிக்கப்படும்-எ-று. தனுசிற்குப் பிருஷ்டம் மகரத்திற்கு அரை கும்பத்திற்குத்துடை மீனத்திர்குப்புறங்கால் இப்படி என் பாருமுளர். (11)

கோட்களில் அவயவம் விதிக்கின்றது.

223 அழலோன்றலைமுகமாம் வெள்ளியருண
னெழிலார்கழுத்தோடுதோளு-மெழிலோர்
வதிமார்புவெய்யோன் வயிறரைபொன்மந்தன்
கதியார்க்குறங்கரவுகாள்.

(இ-ள்.) அங்காரகனுக்குத் தலை சுக்கிரனுக்கு முகம் புதனு க்கு கழுத்து தோள் இவை 2-ம் சந்திரனுக்கு மார்பு சூரியனு க்கு வயிறு குருவுக்கு அரை சனிக்குத் துடை பாம்பிர்க்குக்கால் எ-று. புதனுக்கு முகம் சுக்கிரனுக்குத் தோள் இப்படிஎன்பாரு முளர். (12)

பிணிநிலைகூறிப் பிணிகளின் திட்பநுட்பமும்
உடனுணர்த்துகின்றனர்.

224 உரைத்தவிராசியுங் கோளுமெழுங்கா
லுரைத்தவுறப்பிற் பிணியா-முரைத்த
பகைநீசமாந்தனுக்குத் தீராப்பிணியாம்
வகைமையார்கூறல்வழக்கு.

(இ-ள்.) மேற்கூறிய இராசிகளிலே கோட்ளிலே உதயமான இராசிகளுடையதும் கோட்களுடையதும்ஆகியஅவயவங்களிலே பிணியென்றும் அப்பிணி இராசிகளைக்கொண்டு சொல்லுமிடத்து அவற்றின் அதிபதிக் கோட்களும் கோட்களைக் கொண்டு சொல்லுமிடத்து அக்கோட்களும் பகை நீசக்கோட்களாகில் வல் பிணி யென்றும் நட்பாட்சி யுச்சகோட்களாகில் சொற்ப பிணி யென்றும் சொல்லப்படும் எ-று. (13)

இராசிகளிலும்கோட்களிலுமேபோல நாட்களில்
அவயவம் விதித்து உடனே பிணிநிலை
உணர்த்துகின்றனர்.

225 தலையேநுதல்புருவந்தாமரைக்கண்மூக்கா
முகமாஞ்செவியுதடு மோவாய்-வலமிடமாங்
கைவிரல்கார்த்திகை யாதியாகக்கொண்டு
மெய்யுதநாளுருப்பாய்வேண்டு.

(இ-ள்.) கிருத்திகைக்குத்-தலை-ரோகணிக்குநெற்றி-மிருகசீரிடத்திற்குப்-புருவம் - திருவாதிரைக்குக்கண் - புநர்பூசத்திற்கு மூக்கு-பூசத்திற்கு முகம் ஆயில்லியத்திர்க்குக் காது மகத்திற்கு உதடு-மோவாய் இவை 2-ம்-பூரத்திற்கு வலதுகை உத்திரத்திற்கு இடதுகை அஸ்தத்திற்குக் கைவிரல்கள் என்று இவ்வகையாக நாட்களில் அவயவம் விதிக்கப்படும் எ-று. புநர்பூசத்திற்குமுகம் பூசத்திற்குமேலுதடு ஆயில்லியத்திற்குகீழுதடு இப்படி என்பாருமுளர்(முலையாஞ்செவியுதடுமோவாய்) என்றுபடித்துக்கொண்டாருமுளர் இச்செய்யுள்பலவிகற்பநேரிசைவெண்பாவாகக்கொள்க இங்கே முகம் என்றது நெற்றி முதலியவற்றின் சமுகமாம். (14)

இதுவுமது.

226 வன்கழுத்துமார்பு முலைவயிறுவாழ்மருங்கு
பின்புவலமுமிடமாம்பிருட்டமலை

யன்புறமிரண்டுங்குறங்கிரண்டு சித்திரைகொண்
டின்புறபுரட்டைவரையென்.

(இ-ள்.) சித்திரைக்குக்கழுத்து சுவாதிக்குமார்பு விசாகத்தி
ற்குமுலை அனுஷத்திற்கு வயிறு கேட்டைக்கு வலதுபக்கம் மூல
த்திற்கு இடதுபக்கம் பூராடத்திற்குமுதுகு உத்திராடத்திற்கு
இடை திருவோணத்திற்குக் குய்யம் அவிட்டத்திற்குக் குதம்
சதயத்திற்கு வலதுதுடை பூரட்டாதிக்கு இடது துடையென்று
இவ்வகையாக நாட்களில் அவயவம் விதிக்கப்படும் எ-று. இச்செ
ய்யுள் ஒருவிகற்ப இன்னிசை வெண்பாவாகக்கொள்க. (15)

இதுவுமது.

227. போற்றுமுழந்தாள் கணைக்கால்புரவடியு
ளேற்றவுத்திரட்டாதியாதியாத்-தோற்றும்
பரணிகடையுறுப்பிற பாங்கறிந்துகோளின்
முரணறிந்துகூறன்முறை.

(இ-ள்.) உத்திரட்டாதிக்கு முழங்கால் இரேவதிக்குக் கணை
க்கால் அசுவினிக்குப் புறங்கால் பரணிக்கி உள்ளங்கால் என்று
இவ்வகையாக நாட்களில் அவயவம் விதிக்கப்படும் இதுவரையிற்
கூறியநாட்களிலே உதயமான நாட்களுடைய அவயவங்களிலே
பிணி என்றும் அப்பிணி மேர்ப்படி நாட்கட்குரிய இராசிகளின்
அதிபதிக் கோட்கள் பகை நீசக்கோட்களாகில் பிணி யென்றும்
நட்பாட்சி யுச்சக்கோட்களாகில் சொற்பிணியென்றும் சொல்லப்
படும் எ-று. பாங்கறிந்துகோளின் முரணறிந்து கூறல் என்று
மிகுத்துக்கூறிய வதனால் அவ்வற்றிலே நிலைபெற்றமண்டலக்கோ
ட்களைக் கொண்டும் தறித்தாற்கோட்களைக்கொண்டும் யூகிக்கவும்.

பிணிகளின்பெயர்தெரிவிக்கின்றது.

228. தலைநோய்வெதுப்பு செய்தண்மதிக்காகுந்
துலையாதமார்நோய்சீத-மலையாத
பாகற்குக்கைசீழ்க்கழலைபகலோனுக்
காகுமழல் வயிற்றுநோய்.

(இ-ள்.) அங்காரகனுக்கு தலைநோய் வெதுப்பு இவை 2-ம்
சந்திரனுக்கு மார்புநோய் சீதளம் இவை 2-ம் புதனுக்கு கைக்

கீழ்க்கழலைசூரியனுக்குவயிற்று நோய்என்றுஇவ்வகையாகப்பிணிகளின் பெயர்சொல்லப்படும் எ-று. இவ்விதி இராசிகட்கும் கொள்க (17)

இதுவுமது.

229. வாதமுங்கான்முடமு மந்தற்காம்வாளரவ
மோதியசோடை யுடனஞ்சுமா-மேதகுசீர்
பார்க்கவற்குக்கண்ணோயாம்பைம்பொன்னுகேன்மூல
மாற்றவொண்ணுதென்றேமதி.

(இ-ள்.) சனிக்குவாதம்கால்முடம்இவை 2-ம் பாம்பிற்குச் சோடை விஷபீடை இவை 2-ம். சுக்கிரகனுக்கு நேத்திரத்திலுள்ளவியாதி குருவுக்குமூலவியாதி என்று இவ்வகையாகப் பிணிகளின்பெயர்சொல்லப்படும் எ-று. இவ்விதி இராசிகட்கும் கொள்க மாற்றவொண்ணுது என்று சிறப்பித்தவனுல் இங்கே சொல்லப் பெற்றபிணிகளனைத்தும் பெரும்வியாதிகளென்று யூகிக்கப்படும்.

இதுவுமது.

230. வட்டம்தெற்குட்டம் பூதனையாம்வன்றாம
மட்டநோய்பாம்பு முயல்வலிப்பே-யொட்டிய
வீளையோடுகுலைப்பு மெண்ணிரவிமந்தன்செய்
கோளின்வலிதறிந்து கூறு.

(இ-ள்) பரிவேடத்திற்குக்குஷ்டம் தூமத்திற்கு பூதனைபாம்பிற்குமுசல்வலி சூரியனுக்குப்பேய் சனிக்குஈளை அங்காரகனுக்குக்குலைப்புஎன்று இவ்வகையாகப் பிணிகளின் பெயர் சொல்லப் படும் எ-று. இங்கேசூரியன் அங்காரகன் சனிபாம்பு இவை 4-க்கும் விதித்தவை புறநடையாகக்கொள்க வலிதறிந்துசாற்றுஎன்றுசிறப்பித்தவதனுல் ,கோட்களின் பெலாபலமறிந்து இதிற் கூறுதனவும் இவ்த்திசையே பற்றுக் கோடாகக்கொண்டு அறிந்து சொல்லப்படும்.

பிணிக்காண்டம்- முற்றிற்று.

இ ஃ து.

ஏ ழ ா வ து.

# மரணகாண்டம்.

மரணமின்மையும் கெண்டமும் மரணமும்,

உணர்த்துகின்றது.

231 எருதரிதேள்கும்பமிவை தம்மைத்தாமே
கருதிக்கவிக்குங்கா லுச்சங்-கருதித்
துலைமேற்சிலைநீசந்தொல் சிலைமேற்கோலே
னிலையாமரணநினை.

(இ-ள்). ரிஷபம் சிம்பம் விருட்சிகம் கும்பம் இவை4-ம்தம்மைத்தாமே கவிக்கில் மரணமின்மையாம் துலாத்தைத் தனுசு கவிக்கிற்கெண்டமாம்தனுசைத்துலாம்கவிக்கில் மரணமாம்-எ-று இதிலே உச்சமம் என்றதுமரண மின்மையும், நீசம் என்றது கெண்டத்தையும் விளக்கிற்று இப்படியேவருவனவற்றுள்ளும் கண்டுகொள்க கெண்டம்என்றது மரணத்திர் கேதுவானபிணி முதலியனவற்றூர் காணப்படுகிற அபமுருத்திவுதோஷமாம். (1)

கெண்டமும் மரணமும் உணர்த்துகின்றது.

232 ஆடதன்மேல்யாம்நீசம்யாழ் மேலாடேன்மரண
மோடலவன்மேற்கன்னியொண்ணீச-மோடலவன்
கன்னிமேலாகின் மரணங்கடுஞ்சுறவந்
துன்னமேன்மீன் மரணஞ்சொல்.

(இ-ள்) மேஷத்தை மிதுனம் கவிக்கிற் கெண்டமாம் மிதுனத்தை மேஷம் கவிக்கில் மரணமாம் கடகத்தைக் கன்னி கவிக்கிற் கெண்டமாம் கன்னியைக் கடகம்கவிக்கில்மரணமாம் மகரத்தை மீனம்கவிக்கிற் கெண்டமாம் மீனத்தை மகரம்கவிக்கில் மரணமாம் எ-று. இதிலே மீனத்தை மகரம் கவிக்கில் மரணமாம் எனவே, மகரத்தை மீனம் கவிக்கிற் கெண்டமாம் என்பது முதலிலே வருவித்துரைத்ததாம் 3-மிராசி கவிப்பது கெண்டகவிப்

பென்றும் 11-மிராசி கவிப்பது மரணகவிப்பென்றும் இதுவரை யிற் கூறியதாகக் கண்டுகொள்க இவ்விரண்டுசெய்யுட்களும் மரணகாண்டண்டத்திற்குமுதல்வைப்பாகக்கொள்க. (2)

வலுகெண்டம் உணர்த்துகின்றது.

233 எட்டாமிராசியென் மேனின்றூர்குத்திங்க
ளெட்டாம்வழிநிற்பதாயிடினுந்-தொட்டதனைத்
தீக்கோளேநோக்கிடினுந் தீயபிணிதீரா
வாய்க்கோளாற் கூறல்வழக்கு.

(இ-ள்.) மரணக்கயிறு ஆரூடமாம் அவ்வாரூடத்திற்கு 8-மி டத்திற்சந்திரன் நிற்கினும் மரணக்கயிற்றையாதல் மரணக் கயி றும் மற்றய இடங்களும் ஆகிய இவற்றுள் எங்கேயாகினும் நின்ற சந்திரனையாதல் பாபக்கோட்கள் பகை நீசக்கோட்கள் ஆகிய இவைநோக்கினும் வலுகெண்டமாம் இவ்வலு கெண்டமும் உடனே சுபக்கோட்கள் நட்பாட்சி யுச்சக்கோட்கள் ஆகிய இவை நோக்காத விடத்து சொல்லப்படும் எ-று தொட்டதனை என்று சிலேடைமையாகக் கூறினமையால் வினவினுன் தொட்ட அவயவ த்தின் விதிப்பிராசியைப் பாபக்கோட்கள் பகைநீசக்கோட்கள் ஆகிய இவை நோக்கினும் வலுகெண்டமாம் என்றுபொருளுரைத் துக்கொள்க இச்செய்யுளிலேவலுகெண்டம்என்றதற்கு தீராபிணி என்றது ஆகுபெயராம் இதிற்கூறியது வலுகெண்டமாம் எனவே முற்கூறியவைகள் சொற்ப கெண்டமாம் என்று வருவித்துரைத் துக்கொள்க சொற்பகெண்டம் என்றது கால்வரிசை கெண்ட மும் அரை வரிசை கெண்டமுமாம் வலுகெண்டம் என்றது முக் கால்வரிசைகெண்டமுமாம் கால்வரிசைகெண்டத்தை கனகெண் டம் என்றும்அரைவரிசைகெண்டத்தைவயஸ்கெண்டம் என்றும் முக்கால் வரிசை கெண்டத்தை ஆயுஷ்கெண்டம் என்றும் மர ணத்தை நிரியாணம்என்றும் வடநூர்சோதிடார்த்திகள்சொல்லு வார்கள் (3)

மரணகாலகணிதம் கணிக்கின்றது.

234 மரணக்கயிற்றின்மேல் வந்தானைமுந்தி
முரணித்தே கோளெனைத்துநோக்குந்-தரணிக்க
ணத்தனைநாட்டிங்களாண் டெண்ணியவர்சாவுரைக்க
வைத்தனர்காணூற்குள் வகுத்து.

(இ-ள்.) மரணக்கயிறு ஆரூடம் இவற்றை நோக்குகின்ற கோட்களுடைய வருஷமாக நாட்களைக்கொண்டு மரணகாலகணிதம் கணிக்கப்படும் எ-று. (4)

மரணகாலகணிதத்திற்குப் புறநடை

உணர்த்துகின்றது.

235 திங்களாரெட்சிக்குட்டீக் கோளோடாறெட்டிற்
றிங்களாயெட்சிக் கேழ்தீதுறினுந்-தங்கிய
வாங்கவனைநோக்கிய கோட்கரய்ந்துமரணமுறு
மாங்கவர்காங்கால மறை.

(இ-ள்.) சந்திரன் சதயத்திலே பாபக்கோட்களுடனே கூடிநிற்கினும்சந்திரன்-உதயத்திற்கு6-மிடம்-8-மிடம் இவற்றில்கற்பாபக்கோட்களுடனே கூடியதால் கூடாமலாதல் நின்று பாபக்கோட்கள் உதயத்திற்கு 7-மிடத்தில் நிற்கினும் இவ்வகையாக நேரிட்டசந்திரனை நோக்குகின்ற கோட்களுடைய வருஷமாச நாட்களைக்கொண்டும் மரணகாலகணிதம் கணிக்கப்படும்-எ-று. (5)

இதுவுமது.

10-நாளிலே மரணமும் 7-நாளிலே மரணமும் என்பதாம்

236. பத்தின்கட்டேக்கோளாய்ப் பல்கதிரோன்மூன்றுமேற்
பத்துநாளின்மரணப்பார்படுக்க-வொத்த
குருபுகரோன் மூன்றிர்க்குறித்தேழுநாளிற்
கருதிடவேசாதல்கடன்.

(இ-ள்.) உதயத்திற்குப் 10-மிடத்திற்பாபக்கோட்கள் நின்றுஉதயத்திற்கு 3-மிடத்திற் சூரியன்நிற்கிற 10-நாளிலேமரணமாம் குருவாதல்சுக்கிரனாதல் நிர்க்கில் 7-நாளிலேமரணமாம் எ-று. இதிற்கூறிய சூரியன் குருசுக்கிரன் உதயத்திற்க்கும்10-மிடத்தில் நின்ற பாபக்கோட்கு 3-மிடத்தில் நிர்க்கில் எனினும்ஒக்கும். (6)

இதுவுமது.

8-நாளிலே மரணமும் 14-நாளிலே மரணமும் என்பதாம்.

237. சுடர்செய்சனிநாகந் தொக்கெட்டினுண்டே
விடர்சேரவெட்டு நாடன்னின்-மடிவாமத்
தீக்கோளேசென்றுதயந்தன்னிட்த்துண்டாமேல்
வாய்க்கோளார்க்சரம் புதினுனள்.

(இ-ள்.) சூரியன் அங்காரகன் சனிபாம்பு இவற்றில் 2-ஆரூடத்திற்கு 8-மிடத்தில் நிற்கில் 8-நாளிலேமரணமாம் உதயத்திலாதல் ஆரூடத்திலாதல் நிற்கிற் 14-நாளிலேமரணமாம் எ-று-. இதிலே தொக்கென்றது ஆரூடத்திற்குப் பெயராயிற்று உதயந்தன்னிடத்து என்று மிகுத்துக்கூறியவதனால் உதாத்திலாதல் ஆரூடத்திலாதல் என்பதுபெற்றும்.

3-நாளிலேமரணமும் அன்றே மரணமும் என்பதாம்

238. குடியோடேமூச்சியிக் கூடுவதீக்கோளேன்
முடிவாகுஞ்சரமூன்றுநாளின் முடிபாய
வுச்சிற்றிக்கோளதற் கேழிற்சேய்சனியே
லிச்சையில்வாழ் வின்மையியம்பு.

(இ-ள்.) 2-மிடம் 7-மிடம் 10-மிடம் இவற்றில் 1-ற் சூரிய அங்காரகன் சனி பாம்பு இவற்றில் 1-நிற்கில் 4-நாளிலே மரணமாம் 10-மிடத்திற் சூரியன் பாம்பு இவற்றில் 1-நின்று இதற்கு 7-மிடத்தில் அங்காரகன் சனி இவற்றில் 1-நிற்கில் அன்றே மரணமாம் எ-று. முதல் முடிவில் 3-நாளிலே மரணமாம் என்று இரண்டா முடிவில் இத்தனைநாளிலே மரணமாம் என்னுமல் வாழ்வின்மையியம்பு என்றமையால் 2-நாள்கூட இன்மையாகப் பொருள்பட்டு அன்றே மரணமாம் என்பதுபெற்றும் குடியென்றது 2-மிடத்திற்குப்பெயர்

மரணவேதனை உணர்த்துகின்றது.

239 ஞாயிறுதிங்களன்னீர் சனிபசியாந்
தூயபுதன்வெதுப்புதூய்புகர்க்கு-வாயு
பணியாம்படைக்கலஞ் சேய்பாம்பாக்கினஞ்சா
முனிவயிற்று நோயாமொழி.

(இ-ள்) சூரியன்வரில் நெருப்பினால் மரணம் சந்திரன்வரில் நீரினால்மரணம் அங்காரகன்வரில் ஆயுதத்தினால் மரணம் புதன்வரில் வெதுப்பினால்மரணம் குருவரில் வயிற்றுநோயினால்மறணம் சுக்கிரன்வரில் வாயுவினாலாதல் பனியினாலாதல் குளிரினாலாதல் மரணம்சனிவரில் பசியினால்மரணம் பாம்புவரில்விஷத்தினாலாதல் நாபிமுதலியவற்றாலாதல் மரணம் என்று இவ்வகையாக மரணவேதனைகூறப்படும் எ-று. சந்திரன்வரில் வெக்கை குலைப்பு ஆயாசம் இவற்றானும்சுக்கிரன்வரில் நீர்ப்பாடு இவற்றானும் அங்காரகன்வரில் நெருப்பு அடிப்படுகை இவற்றானும் மரணமாம் என்று பட்சாந்தரங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன. (9)

மரணநிலை உணர்த்துகின்றது.

240 எட்டாங்கோளங்கவற்றிற் கெண்ணூகநான்முறையே
யெட்டாமிராசியவைநிற்கி-லொட்டி
யுரைக்கவிருந்தவிடஞ் சேய்சரமே
லுரைக்கவிருமாண் பிடைச்சாமோர்.

(இ-ள்.) ஸ்திரவிராசியாகவரில் சுயதேசத்திலே மரணம் க்ரவிராசியாகவரில் அன்னியதேசத்திலேமரணம் உபயவிராசியாகவரில் அடுத்ததேசத்திலேமரணம் என்று இவ்வகையாக மரணநிலை கூறப்படும் மேற்கூறிய மரணவேதனையின்கோட்கள் மரணக்கயிற்றில் நிற்கிறகோட்களாகவும் இங்கேகூறியமரணநிலையின் இராசிகள்மரணக்கயிறுகவந்த இராசிகளாகவும் காண்பதாம் எ-று இதிலேசேய் என்றது அன்னியதேசத்தைவிளக்கிற்று. (10)

மறுமை உணர்த்துகின்றது.

இ ஃ து.

மரணமானதின் பின்னர் அடைகின்றபதவியும் பிறவியும் என்கிறபெயர்த்தாம்.

241 உச்சக்கோடேவருகைம் பகைநீச
மெச்சனிலைக்குநாகெய்துவிக்கு-மெச்சிய

வாட்சியுநட்பாகின்மண்ணிலுயர்ந்தோர்களுயிர்
மீட்சியா மானிடத்தின்மேல்.

(இ-ள்.) உச்சக்கோள்வலிதுபெறில் மரணமானவர் சாலோக பதவியை அடைவர் ஆட்சிக்கோள் நட்புக்கோள் வலிது பெறில் மானிடராகப்பிறப்பர் பகைக்கோள் வலிது பெறில் மிருகங்களாகப்பிறப்பர் நீசக்கோள் வலிது பெறில் பறப்பன தவழ்வன நீர் வாழ்வனவாகப்பிறப்பர் அன்றியுமஸ்தாவர மாகவும் முளைப்பர் எ-று. சாலோகப்பதவியை அடைதலைத் தெய்வகதி என்றும் மானிடராகப்பிறத்தலை மக்கட்கதிஎன்றும் மிருகங்களாகப்பிறத்தலை விலங்கின்கதிஎன்றும்பறப்பன தவழ்வனநீர்வாழ்வன வாகப் பிறத்தலையும் ஸ்தாவரமாக முளைத்தலையும் நரகதிஎன்றும் நூலாசிரியர் சொல்லப்பட்டன இந்நூலாசிரியர் சாலோகப்பதவியை மாத்திரம் எழுவகைத்தோற்றத் தொன்றாகக் கூறினமையால் சாமீபசாருப சாயுச்சியப் பதவிகளைப் பிறவாமுக்தியென்று கோடற்படும் இதனையே வடநூல் தத்துவ ஞானிகள் சீவன் முக்தி என்றும் விதேகமுக்திஎன்றும் விதேககைவல்லியமென்றும் சொல்லப்படுகின்றனர் இவற்றை அடைவார்என்பது அத்துச்சக்கோள் வலிது பெறில் ஆம். (11)

மரணகாண்டம்-முற்றிற்று.

உ

முருகக்கடவுள் துணை.

எட்டாவது

# உண்டிகாண்டம்.

காண்டமுதலியபொருள் உணர்த்துகின்றது.

242 அட்டகாலங்களடிசிற்கரிசுவைக
ளொட்டியுடனுண்டாருமுண்கலனு-மிட்டமா
யூட்டினார்தம்மொடுவகைமுனிவென்றிவற்றை
யூட்டினார்போலுரைக்க வோர்ந்து

(இ-ள்.) உண்டிவினவுமிடத்து சமைத்தகாலங்களும் அன்னங்கரிகளும் சுவைகளும் உடனுண்டபேர்களும் பாத்திரவிகற்பமும் அன்னமிட்டவர்களது அந்நியோந்நியமும்உண்டவற்றுள்ளே இஷ்டாநிஷ்டமும் இன்னம் இவற்றின் சம்பந்தமாயுள்ள எல்லாவற்றையும் இக்காண்டத்திலே வெளிப்படையாகவும் குறிப்பாகவும் சொல்லுகின்றனவாம் எ-று. இன்னம் இவற்றின் சம்பந்தமாயுள்ள எல்லாவற்றையும் என்றதாவது அடைகாய் தின்றல் தின்றியாகாதெனினும் தின்றலோடொக்கும்ஆதலால்இதனையும் என்றதாம் மற்றவையும் இவ்வாறே ஒட்டிக்கொள்க எ-று. (1)

கறிகள் உணர்த்துகின்றது.

243 ஆடுமெருதுமடகோடும்பான்மோரும்
வீடுஞ்சிலையறியாழமீன்மேவு-நீடுங்
கடகந்தேண்மீன்மகரமின்பழங்காய்கோலேற்
குடமரிவைதூய்சோறுய்க்கொள்.

(இ-ள்.) உதயம் ஆனது மேஷம் ரிஷபம் இவைகளாகில் இலைக்கரியும் பாலும் மோருமாம் மிதுனம் சிம்பம் தனுசு இவைகளாகில் மீன்கரியாம் கடகம் விருட்சிகம் மகரம் மீனம் இவைகளாகிற் பழமாம் துலாமாகிற் காய்கறியாம் கன்னிகும்பம்இவைகளாகிற் கறியின்மையாம் எ-று. மேஷமாகில் இலைக்கறியாம் ரிஷபமாகில் பாலும் மோருமாம் என்று இப்படியாகப் பிரித்துக்கூறுவாருமுளர். கறியின்மையே தூய்சோறு என்றனராகக்கொள்க பால்மோர் பழம் இவைகள் கறிபோலிருந்து உணவை உண்பிக்கின்றமையால் இவற்றையும் கறியெனப் பட்டது. அட்டகாலங்க

ளடிசிற்கறிசுவைகள் என்று மேலுணர்த்திய முறையே நிறநிறை யாக வைத்துக்கூருமல் அடிசிற்குமுன்னர் கறிகளைக் கூறினமை யால் இக்காண்டம் முழுவதுங்கொண்டு கூட்டுப்பொருள்கோளா கவருவனகாண்க. (2)

சிற்சிலசுவைகளும் அன்னங்களும் கறிகளும்
உணர்த்துகின்றது.

244 கைப்புளிப்புரிசைகாய்கதிரோற்கருணற்
கொப்பில்பழைபுழுக்கனல்லூண்பொன்-றப்பில்
கரிச்சோறரவெண்ணலைக்கறியுங்காரிக்
கெரிக்கிறைச்சியேன்றேயியம்பு.

(இ-ள்.) உதயத்தில் நின்றகோள் சூரியனுகிற் கைத்தலான சுவையும் புளித்தலான சுவையுமாம் புதனுகிற் பழஞ்சோறும் புழுக்கினசோறுமாம் குருவாகில் நற்சோறும் பாம்பாகில் தீய்ந்த சோறும் சனியாகில் இலைக்கறியும் எண்ணையுமாம் அங்காரகனுகில் இறைச்சியாம் எ-று. ஒப்பில் பழைம் என்றற்கு ஒப்பில் பழம் என்று படிக்கப்பட்டு புதனுகிற் பழமாம் என்றுசிலர் குருவாகிற் பலவிதமான சோறென்னும் சனியாகிற் கஞ்சியுங் கூழுமாமென் றும் அங்காரகனுகிற் சுடுகறியும் பொறிக்கறியுமாமென்றும் பட் சாந்தரங்களிலெ சொல்லப் பட்டிருக் கின்றன உரிசை என்று சுவைகளை குறிப்பித்தமையாற் காரியும்பாம்புஞ் சுவைக்கும் என் கிற சூத்திர விதியால் அவற்றிற்குரிய சுவைகளை வருவித்துரைத் துக்கொள்க என்றியம்பு என்னுதுஎன்றேயியம்பு என்றதேற்றங் கொடுத்தமையால் இதுவே அறுதியாமென்றும் அவ்வவற்றிற்கு ரிய நிறமொத்த தானியங்களின் அன்னங்க ளென்றும் கண்டு கொள்க இவற்றை வலிதுபெற்ற கோட்களைகொண்டு சொல்லி னும் அமையும் எ-று, (3)

இதுவுமது.

245 இரவிசேய்கூடிலிறைச்சியூணுகு
மரவுமதிபுகருமாக-விரவிப்
பயின்றெல்லோர்காணுமேற்பாற்றயிருநெய்பு
மெயின்றுயெனவுணியம்பு.

இ-ள் உதயத்தில் சூரியனும் அங்காரகனுமாகக்கூடி நிற்கில்இறை ச்சியும் ஊனுமாய் உண்டதாகவும்-சந்திரனும் சுக்கிரனும்பாம்பு ஒரேவிடத்தினிற் கூடிநின்று சூரியனைநோக்கிற்பாலும்தயிரும்நெ

ய்யும் வார்த்துண்டதாகவும் சொல்லப்படும் எ-று சூரியனைக்கூடி நிற்கினும் அதுவேயாம். இப்படியே உதயத்தையும் உதயத்ததிபதிக்கோளையும் ஒட்டிக்கொள்க. மேற்படி சந்திரனுக்குத்தயிரும் சுக்கிரனுக்குப் பாலும் பாம்பிற்கு நெய்யும் என்று தனித்தனிநோக்கினும் கூடி நிற்கினும் என்று பிரித்துக்கூறியனும் ஒக்கும் இன்னம் நெய் என்றது பொதுமொழியாம். ஆதலால் எண்ணெயும் என்று பொருளுரைத்துக்கொள்க எ-று. (4)

இதுவுமது.

246 உளுந்தடகுமீன்முதிரை பொன்னுக்காந்திங்கள்
விளைந்திடுங்காய்கிழங்குமீனும்-பளிங்கவற்குத்
தேன்பால்புளிக்கறியாங் காரிபழைதூண்கோட்குத்
தான்போலநோக்கறிந்து சாற்று.

(இ-ள்.) உதயத்தை நோக்கினகோள் குருவாகில்உளுந்தும் இலைக்கறியும் மீன்கறியும் அவரை துவரை காராமணி முதலிய முதிரைகளுமாம் சந்திரனாகிற் காய்கறியும் கிழங்கும் மீன்கறியுமாம். சுக்கிரனாகில் தேனும்-பாலும் - புளிக்குழம்புமாம் சனியாகிற் பழையசோறும் எ-று. புளிக்குழம்பு என்றதற்குத் துவையல் என்கிற ஓர்வகைப் பச்சடியையும் பொருத்திக்கூறப்படும், மேற்படி கோட்கள் கும்பம்-மீனம் இவற்றில் க-ல் நிற்கினுமாம் என்பாருமுளர் எ-று. (5)

சமைந்தகாலங்கள் குறிப்பிக்கின்றது.

247 இரட்டியவொற்றை யிராசிவெறுஞ்சோ
றிரட்டையிராசிகறிச்சோ றிரட்டையின்கோன்
பாம்புஞ்சனியுமுடனேற் பழைஞ்சோறுந்
தாம்பரிந்தங்குண்டமை நீசாற்று.

(இ-ள்.) உதயவிராசி ஒற்றித்த இராசியாகில் வெறுஞ்சோறும் இரட்டித்த இராசியாகிற் கறிச்சோறும் இப்படியே உதயத்தில் நின்றகோள் ஒற்றிற்ற கோளாகில் வெறுஞ்சோறும் இரட்டித்த கோளாகிற் கறிச்சோறும். சனியும்பாம்பும் மேற்கூறிய ஒற்றித்த இராசியில் நிற்கினும் ஒற்றித்த கோளுடனேகூடிநிற்கினும் கறிச்சோறும் இரட்டித்த கோளுடனே கூடிநிற்கினும் வெறுஞ்சோறும் எ-று. வெறுஞ்சோற்றிற்குப் புதகாலமும் கறிச்சோற்

றிற்குப் பவிஷியகாலமும் ஆம் என்பது குறிப்பாகத் தோன்று வனகாண்க பழைஞ்சோறெனினும் வெறுஞ்சோறெனினும் நீர்ச் சோறெனினும் ஒருபொருள் எ-று. (6)

நெய்வகை உணர்த்துகின்றது.

248 நீராயவோரையொடு நீலன்சேய்பாம்புபுதன்
றேரோனெழவுண்ட தென்ணெயாஞ்-சீர்சான்ற
பொன்மதியேனெய்யாம் புகர்வெண்ணெயாகுமிது
நன்மதியோர் கண்டநடை.

(இ-ள்.) நீரிராசியான கடகம் துலாம் மகரம் கும்பம்மீனம் இவற்றில் 1-ல் சூரியன் அங்காரகன் புதன் சனிபாம்புஇவற்றில் 1-ல் நிற்கில் எண்ணெச் சேர்ந்துண்டதாம் சந்திரன் - குரு இவற்றில் 1-ல் நிற்கில் நெய்வார்த்துண்டதாம் சுக்கிரன் நிற்கில் வெண்ணெயிட்டுண்டதாம் எ-று. சரவிராசியினும் இப்படியாம் எனபாருமுளர் எ-று. (7)

{ நெய்வகையும்-பாத்திரவிகற்பமும்-உடனுண்டபேர்களும் அன்னமிட்டார்களது அந்நியோந்நியமும் இவ்விருதிறத்தார்களது அடையாளங்களும் உண்டவற்றுள்ளேஇஷ்டா நிஷ்டமும் வெளிப்படையும் குறிப்பாகவும் உணர்த்துகின்றது. }

249 தீக்கோடனக்கெண்ணெ நெய்பாஞ்செழுங்கோட்குத்
தூய்க்கோட்குத்தூய்கலங்களாகுமாந்-தீக்கோட்
குடைகலத்துணுண்டாகு மூட்டினர் தங்க
ளிடநிறமுங் கோணிறமேயாம்.

(இ-ள்.) பாபக்கோட்கள் வலிதுபெறில் எண்ணெ சேர்ந்துண்டதென்றும் உண்டது உடைந்த பாத்திரத்திலென்றும் உண்டபேர்கள் பொல்லாதவர்களன்றியும் அவர்களது நிறமுதலியனவும் அக்கோட்களுக் குடையன தானென்றும் அன்னமிட்டார்கள் அந்நியரன்றியும் அவர்களது நிறமுதலியனவும் அக்கோட்களுக் குடையனதானென்றும் அநிஷ்டமாக உண்டதென்றும் சுபக்கோட்கள் வலிதுபெறில் நெய்வார்த்துண்டதென்றும்வெண்ணெயிட் டுண்டதென்றும் உண்டது நல்லபாத்திரத்திலென்றும் உடனுண்டபேர்கள் நல்லவர்களன்றியும் அவர்களது நிறமுதலியனவும் அக்கோட்களுக்குடையன தானென்றும் அன்னமிட்

டார்கள் அந்நியராகாமையன்றியும் அவர்களது நிறமுதலியன வும் அக்கோட்களுக்குடையன தானென்றும் இஷ்டமாகஉண்ட தென்றும் குறிப்பாக உணர்ந்து சொல்லப்படும் எ-று. கோட் கள் ஆண்ராசியிலே வலிதுபெறில் நெய்கறிமுதலியவற்றோ டுண் டதென்றும் அஃதும் பகலேயுண்டதென்றும் சொல்வாருமுளர் பாபக்கோட்களுக்குக் கறுத்ததானியத்தின் உண்டி என்றும்சுப க்கோட்களுக்கு நல்லதானியத்தின் உண்டியென்றும்சொல்லுதல் ஜோதிஷாளது வழக்காம் எ-று. (8)

பாத்திரவிகற்பத்திற்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது,

250 கருங்கலமாங்காரி கதிர்சேய்பாம்பொன்றி
லொருங்குங்கலமோடுமாகும்-விரும்பும்
புகர்பொன்மாலிந்து புதிதாகுமென்ப
பகர்தருநூற் பான்மையவர்.

(இ-ள்.) வலிதுபெற்றகோள் சூரியன் அங்காரகன்சனிபாம் பு இவற்றில் 1-ஆகிற் பழையபாத்திர மென்றும் உடைந்தபாத் திரமென்றும் மட்பாத்திரமென்றும் சந்திரன் புதன் குரு சுக்கிர ன் இவற்றில் 1-ஆகில் புதியபாத்திரமென்றும் வெண்கலம்வெள் ளி பொன் இவற்றினலாகிய பாத்திரங்களென்றும் சொல்லப் படும் எ-று. கருங்கலம் என்றது பழையகலத்திற்குப் பெயராயி ற்று சனிக்குக் கறுப்புடைத்தாயகலம் என்று பழையகலத்திற் குப் பெயராயிற்று சனிக்குக் கறுப்புடைத்தா யகலம் என்று பா ட்டின்பயனுகப் பொருள்கொள்வாருமுளர் புதியகலம் என்றது புதியகலம் என்றது புதிதாகும் என்றுபராமரித்துக் கூறியவத னல் வெண்கலம் வெள்ளி பொன் இவற்றலாகிய பாத்திரங்கள் என்பது பெற்றும் பகற்றருநூற் பான்மையவர் என்றுசிறப்பித்த வதனல் வாழையிலை முதலியவற்றையும் மூலகாண்டவிதியின் பிர காரத்திலேயூகித்தெடுத்துக்கொள்க எ-று. (9)

உண்டிகாண்டம்-முற்றிற்று.

உ

முருகக்கடவுள் துணை.

# 9-வது கனாக்காண்டம்.

உதயவிராசியைக் கனாநிலையாகக் கொண்டு கனவு உணர்த்துகின்றது.

251 தேவர்குலமண்டபமு மாளிகையுமாடுதய
மேவெருது தானுதயமிக்ககனா-மேவிய
தேசம்பலதிரிதல்யாழ் தேவரந்தணர்க
டேசிகரைக்காண்டலுமாச் செப்பு.

(இ-ள்.) உதயவிராசி மேஷமாகில் தேவர்கள் தேவர்களின் மண்டபங்கள் அரசர்மனை இவற்றைக் காண்பதாகவும் ரிஷபமாகில் அத்தேசங்களிலே திரிவதாகவும் மிதுனமாகில் தேவர்கள் பார்ப்பார்கள் தபசிகள் இவர்களைக் காண்பதாகவும் சொல்லப்படும் எ-று. காண்பதோடு கேட்பது பேசுவது அழைப்பதுயிழுப்பது துறப்பது முதலியவற்றையும் திரிவதோடு இருப்பது வருவதுபோவது புகுவதுமுதலியவற்றையும் தந்துரைத்துக்கொள்க இப்படியே வருவனவற்றுள்ளுமாம் எ-று. (1)

இதுவுமது.

252 பயிர்சேறுட்பல்களையாம் பானண்டுவேடன்
செயிர்மேடுகல்லாகுஞ்சிய-மயிலீரியாப்
பெண்டிருடனீர்வேட்டாம் பெய்வளைக்குப்பொன்னரசு
பண்டவிலையோர் துலையின்பால்,

(இ-ள்.) கடகமாகில் நன்செய் புன்செய் பயிர்களைப், பார்ப்பதாகவும் சேற்றிலிறங்கிப் பலவகைப்பட்ட களைகளைப் பறிப்பதாகவும், சிம்பமாகில் வேடனையும் மேடு கற்கள் இவற்றையும் காண்பதாகவும், கன்னியாகில் மொட்டைச்சியா யிருப்பாளுடனே தண்ணீர் குடித்து விளையாடுவதாகவும் துலாமாகிற் பொன்னையும் அரசனையும் வியாபாரஞ் செய்பவர்களையும் காண்பதாகவும் சொல்லப்படும் எ-று. சிம்பமாகில் யுத்தங்களையும் எருமைகளையும், துலாமாகிற்பெண்ணையுங் காண்பதாகச்சொல்வாருமுளர்

இதுவுமது.

253 விலங்கெறிதோள்பெற்றம் வியன்குதிரைகாலா
ளிலங்குதனுப்பூச்சாந்திழையாங்-கலங்கா
மகரமுறுமக்கள்பொன்வாருறுகும்ப
நிகரின்மீன்கண்ணுடிநேர்.

(இ-ள்.) விருட்சிகமாகில், எருதுகுதிரைகாலாள்கள் இவற்றையும் தனுசாகில் பூ கலவைசாந்து சந்தனம் வாசனைத்தூள்கள் ஆபரணங்கள் இவற்றையும் மகரமாகில் மானிடர்கள் பொன்கள் இவற்றையும் கும்பமாகில் ஆற்றையும் மீனமாகிற் கண்ணுடியையும் காண்பதாகச் சொல்லப்படும் எ-று. விருட்சிகமாகில் விலங்குசாதிகளையும் தேளையும் தனுசாகிற் கைம் பெண்சாதியையும் மானிடரையும் மீனமாகில் மீன்களையும் காண்பதாகச் சொல் வாருமுளர் எ-று. (3)

உதயத்தில் நின்ற சிற்சிலகோட்களைக் கருவியாகக் கொண்டு
கனவுகூறி இதனது எதிரிடைகளும்
உடனுணர்த்துகின்றது

254 வெள்ளியெழும்போழ்து வெண்மாடமேதையெழிற்
றெள்ளியதேவர்கனவாகு-மொள்ளிய
வேட்சிகவிப்போடிருக்கையில்மூன்றினுக்கு
மாட்சியர்கட்டுரைக்கவாங்கு.

(இ-ள்.) உதயத்தில்நின்றகோள் சுக்கிரனாகில்வெள்ளையிட்ட மண்டபங்களையும் புதனாகில் தேவர்களையும் காண்பதாகச்சொல்லப்படும் கனவுகளை இதுவரையில் உதயவிராசியைக் கொண்டும் உதயவிராசியில் நின்ற கோட்களைக் கொண்டும் சொல்லியதைப் போல ஆரூடவிராசியைக் கொண்டும் ஆரூடத்தில் நின்ற கோட்களைக் கொண்டும் கவிப்பிராசியைக் கொண்டும் கவிப்பில் நின்ற கோட்களைக் கொண்டும் சொல்லப்படும் எ-று. புதனாகில் அதிகாரம் செய்பவும் அதிகாரிகள் ராட்சதர்கள் யிவர்களைக் காணவும் காண்பதாகச் சொல்வாருமுளர் கனவுமற்றயகோட்களுக்கு கூறு தொழிந்தமையால் அவ்வவற்றின் ஆட்சியிராசிகட்குக்கூறியவைகளைக் காண்பதாகச்சொல்லப்படும்என்பதுவுங்கண்டுகொள்க (4)

உதயவிராசியைக் கணுநிலையாகக் கொண்டும் உதயத்தில் நின்ற
கோட்களைக் கணுநிலையாகக் கொண்டும் சொல்லுதலாகி
ய கனவிற்குப் பொதுவிதி உணர்த்துகின்றது.

255 ஈங்குதயத்துள்ள விராசிபயனெல்லா
மாங்கொருவன்வந்துவினவினு-லாங்கிவற்றைக்
கண்டான்போனின்று கருதிக்கனவெல்லாம்
விண்டவர்க்குக் கட்டுரைக்கமிக்கு.

(இ-ள்) உதயவிராசியைக் கணுநிலையாகக்கொண்டும் உதயத்தில் நின்ற கோட்களைக் கணுநிலையாகக் கொண்டும் சொல்லுதல் காணப்போகிற கனவாம் என்று மேலே சொல்லப்படுவதாயினும் இதனைக்கண்ட கனவாகும் எ-று. (5)

நீர்க்கீழிராசிகள் அவ்வவற்றின் அதிபதிக் கோட்களுக்கு
உள்ளனவேயாம் ஆகவே அவற்றைநீக்கி நீர்க்கீழில்
நின்றகோட்களைக் கணுநிலையாகக் கொண்டு
கனவு உணர்த்துகின்றது,

256 நீர்க்கீழ்ப்புகர்வெள்ளி நேர்பணியுஞ்சேயூனும்
பார்க்கிற்பழங்காய் படியமைச்சா-நீர்க்கீழ்க்
கிடந்தசனிவிலங்காங் காங்கைந்நீந்துந்தூதன்
றொடர்ந்தபொதும் புண்ணுமைசொல்.

(இ-ள்.) நீர்க்கீழில்நின்ற கோள் சுக்கிரனுகில் வெள்ளியாற் பண்ணப்பட்டதும் முத்துமுதலிய வெண்மையான வைகளாற் பண்ணப்பட்டதும் பாம்பு அங்காரகன் இவற்றில் 1-ஆகில்இறைச்சியும் குருவாகிற் பழம் காய் இவையும் அதிகாரிகளும் சனியாகில் மிருகங்களும் புதனுகில் வெள்ளத்திலே நீந்துதலும் மரப்பொந்துகள் வங்குகளும் பட்டினி இருத்தலும் கண்டதாகச் சொல்லப்படும் எ-று. (6)

இதுவுமது.

257 செத்தமரம்மேல்விழுதல் செத்தாரைக்கண்டழுத
லொத்தகதிரொண் மதியமோமரண-மொத்திய
நீர்க்கீழ்நீர்வேட்டுறங்க னீண்டகனுக்கண்டதனின்
மேற்கனுக் கண்டவிதி.

(இ-ள்•) சூரியனுகில் பட்டுப்போன மரமானது முறிந்து மேல்விழவும் யிறந்துபோனவர்கள் வர அவர்களைக்கண்டு அழவும் சந்திரனுகில் தான்மரணமாகவும் தண்ணீர்தாகிக்கவும் நித்திரை கொள்ளவும் கண்டதாகச்சொல்லப்படும் அன்றியும் யிக்கோட்களுக்கு யிவற்றின் ஆட்சியிராட்சிகட்கு உதயமாகவந்தவிடத்துச் சொல்லப்படுவதாகக்காட்டிய கனவுகளையும் யூகித்துச்சொல்லப் படும்-என்று. (7)

கனுநிலைக்குச் சிறப்புவிதியுணர்த்துகின்றது.

258 கண்டகனுவதுநாற்காண்டத்தாற்காண்பதனை
யுண்டென்றெழுமதனுலோர்ந்துரைக்க-கண்டங்
கிறந்ததனைப்பாட்டிலெடுத்துரைக்கச்சிந்தை
சிறந்ததனையுச்சியாற்செப்பு.

(இ-ள்.) கானப்போகிற கனவிற்கு உதயவிராசியையும் உதயத்தில் நின்றகோட்களையும், கண்டகனவிற்கு நீர்க்கீழிராசியையும் நீர்க்கீழில்நின்றகோட்களையும், கண்டுமறந்தநாட்சென்ற கனவிற்குப் பாட்டுஇராசியையும் பாட்டில்நின்றகோட்களையும், நனவிற்கனவிற்குஉச்சியிராசியையும் உச்சியில்நின்ற கோட்களையும் கனுநிலையாகக்கொண்டு சொல்லுதல் சிறப்புடைத்தாம் - என்று. காணப்போகிறகனவும் கண்டகனவுமேபோலக்கண்டுமறந்தநாட் சென்றகனவையும் நனவிற்கனவையும் யூகித்தெடுத்துக்கொள்க. நனகனவானது நித்திரையில்லாமல் விழித்திருக்கையிலே தானே கனவுபோலத்தோன்றி மறைவதாம். (8)

கனுக்காண்டம்-முற்றிற்று.

உ

முருகக்கடவுள் துணை.

பத்தாவது,

# சகுன காண்டம்.

சகுனமின்மையும் சகுனத்தடையும் நற்சகுனமாதலும்.

உணர்த்துகின்றது.

259 இருகுணத்தவோரை யெழிற்சகுணமின்மை
யொருகுணத்தவென்னிற் றடுக்கு-மொருகுணத்த
வாறுசெலவில்லையல்லாதெழுதருங்காற்
றேறுசகுனந்தருதல்செப்பு.

(இ-ள்.) உபயவிராசி உதிக்கிற் சகுனமின்மையால், ஸ்திரவிராசியுதிக்கிற் சகுனத்தடையாம், சரவிராசியுதிக்கில் நற்சகுனமாம், அன்றியும் உபயவிராசியுதிக்கில் வழியினிற் சற்றுதூரம்போய்மீளும் ஸ்திரவிராசியுதிக்கில் வழிப்போக்கின்மையாம், சரவிராசியுதிக்கில்வழிப்போக்குண்டு- எ-று. ஸ்திரவிராசியுதிக்கில்வழிப்போக்கின்மையாம் என்றுகூறவே உபயவிராசியுதிக்கில் வழியினிற்சற்றுதூரம்போய் மீளும் என்றுஞ் சரவிராசியுதிக்கில் வழிப்போக்குண்டென்றும் வருவித்துக்கூறினும். வழிப்போக்கையும் உடன்கூறினமை சகுனம் அனைத்தும் வழிப்போக்கிலேகாணப்படுவதாம் என்பது எச்சரித்தாற்போலுமாம். துர்ச்சகுனமாகிற்சகுனந்தடுத்ததென்றும் நற்சகுனமாகிற் சகுனம்கொடுத்ததென்றுஞ்சொல்லுதல்வழக்காம். (1)

சகுனத்தோற்றமுணர்த்துகின்றது.

260 கூகைபுறாக்காடை குளிர்மதிக்காங்கங்குலுயர்
காகமுடன்குட்டி கருக்குருவி-நாகமுட
னீலற்காம்பிள்ளைபுதனீல்பருந்துஞ்செம்பருந்தா
மேல்வைத்தவெய்யவற்கு மெய்.

(இ-ள்.) சூரியன்வலிதுபெறிற் கரும்பருந்துகருடன் இவைகளும், சந்திரன் வலிதுபெறில் கூகை புறா கட்டுக்காடை இவைகளும், புதன் வலிதுபெறில் கீரி குரங்கு பூனை முயல் பன்றி மான் கருக்குருவி காகம் அன்றில் நாகணவாய்ப்புள் கிளி இவைக

ளும், சனியாதல்பாம்பாதல் வலிதுபெறில் காகமுஞ் செம்பாம்பு கீரி குரங்கு நரி நாய் பூனை முயல் பன்றி மான் கழுதை குதிரை புலி இவைகளும்கருக்குருவியுந் தோற்றமாம் எ-று. இதிலே பிள்ளையெனவே கீரிமுதலிய பதினொன்றையும், குட்டியெனவே செம்பாம்புமுதலியபனிரண்டையும் வருவித்துரைத்ததாம். கூகையென்றதைக் கோட்டான் எனினு மொக்கும். (2)

இதுவுமது.

261 வல்லூறுகுக்கில் வலியன்சேய்தானுகு
மொல்காச்சிவன்முக்க னென்புறவு-சொல்லுங்காற்
பைம்பொன்னற்காகும் பகண்டைபகுவாயநாரை
யம்பொன்வாய் வெள்ளிக்கறை.

(இ-ள்.) அங்காரகன் வலிதுபெறில் இடேகை செம்போத்து கரிக்குருவி இவைகளும்,குருவலிதுபெறில் கவுதாரி மீன்குத்தி புறா இவைகளும், சுக்கிரன் வலிதுபெறில் சிவற்பட்சிபெருநாரை சிச்சிலிக்குருவி இவைகளும் தோற்றமாம் எ-று. (3)

இதுவுமது.

262 நாகமலியரவ நன்மதியநற்சுறவாம்
பாகன்றயிர்ப்புகரோன் பாலதுநெய்-யாகிற்
குருபகலோன்செம்பறவை சேய்நரிநற்கூன
னெரிபகைவ ராகுமெதிர்.

(இ-ள்.) சூரியன் உதயத்தில் நிற்கில் சிவந்தநிறத்தினையுடைய பலவகைப்பட்ட பறவைகளும், சந்திரன் உதயத்தில் நிற்கில் மீன்களும். அங்காரகன் உதயத்தில் நிற்கில் நரியும், புதன் உதயத்தில் நிற்கில் தயிர்க்குடமும், குரு உதயத்தில் நிற்கில் நெய்க்குடமும், சுக்கிரன் உதயத்தில் நிற்கில் பாற்குடமும், சனி உதயத்தில் நிற்கில் நெருப்பும் பகையாளிகளும், பாம்பு உதயத்தில்நிற்கில் வேடர்களும் பாம்புகளுந் தோற்றமாம் எ-று. சந்திரனுக்குக் காகபலியும், குருவுக்குப் பொன்மை நிறத்தினையுடைய பலவகைப்பட்ட பறவைகளும், சனிக்குக்கள்ளர் நீசர் செக்கார் இவர்களும், பாம்பிற்குப்பல்லி நாய் இவைகளுந் தோற்றமாம் என்றுகிரந்தாந்தங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன. இதிற்காக பலியானது காலத்திற்கிடும் உணவு எ-று. (4)

### சகுனம் வலமாதலும் இடமாதலும் உணர்த்துகின்றது.

263 உரைத்தகோணேக்குதயங் காண்டல்சகுன
முரைத்தவையேநேர்த்துகுரூ முண்மை-யுரைத்த
வலப்பாற்கோளெல்லா மறுப்போலவெண்ணிச்
சொலற்பாலதாச் சகுனஞ்சொல்.

(இ-ள்.) சகுனத்திற்காக இதுவரையில் கூறிய கோட்களாவது வலிது பெற்றதுநோக்கின கோட்களும் உதயத்தில் நின்ற கோட்களும் உதயத்தைநோக்கின கோட்களுமாம், மேற்படி சகுணம் வலதுபக்கத்திலெ மறுவமைத்துள்ள கோட்களுக்கு வலமாகுமென்றும், இடது பக்கத்திலே மறுவமைத்துள்ள கோட்களுக் கிடமாகுமென்றுஞ் சொல்லப்படும் எ-று. நோத்துருகு மென்று வமித்தவதனால் வலமே நோக்கின கோட்களுக்குவலமரமென்றும், இடமே நேர்க்கின கோட்கட் கிடவாமென்றும் பொருளுரைக்கினு மொக்கும். சொலற்பாலதாச்ச குனஞ்சொல்லென்று விகற்பித்தவதனல் ஆரூடத்தைக்கொண்டு நினைத்த சகுணமும் உதயத்தைக்கொண்டு தோற்றுகிற சகுணமுஞ் சொல்லப்படும் என்பதுவும் கண்டுகொள்க எ-று. (5)

சகுனகாண்டம்-முற்றிற்று.

உ

முருகக்கடவுள் துணை.

பதினோராவது

# மங்கலகாண்டம்.

உதயபலன்

264 வெங்கதிரோன்செவ்வாய்விதவைவெறும்வயிரு
றிங்குசனியர்வமீன்றிழக்குந்-திங்கண்
மரணமாமெட்சிக்கண்மரல்குருவெள்ளி
தரணிமேனன்மைதரும்.

(இ-ள்.) உதயத்திற் சூரியன் அங்காரகன் இவைநிற்கில் விதவையாவள். சந்திரன் நிற்கில் பால்யத்திலேதானே மரணமடைவள். புதன்குரு சுக்கிரன்இவைநிற்கில் எல்லாநன்மையும்பெற்றுச் சுமங்கலியாயிருப்பள். சனி நிற்கில் மலடியாயிருப்பள். பாம்பு நிற்கிற் பிள்ளைபெற்றிழப்பள்-எ-று. சனிபாம்பு இவைகள் நிற்கில் நெடுநாள் மலடியாயிருந்து பிள்ளைபெற்றிழப்பள் என்பாருமுளர். (1)

2-மிடப்பலன்.

265 எச்சம்பெருகுமிரண்டின்கண்வெண்டிங்க
ணிச்சநிரப்பிடுக்கணீலன்செய்-நச்சரவு
வெய்யோன்கெடுக்குமிகவுநலஞ்சிறக்குஞ்
செய்யாமல்வெள்ளிகுருசெப்பு.

(இ-ள்.) 2-மிடத்திற் சூரியன்-அங்காரகன்-சனி-பாம்புஇவைநிற்கில்தரித்திரமும் இக்கட்டும் படுவள். சந்திரன் நிற்கில்மிகவும்பிள்ளைகளைப்பெறுவள். புதன்-குரு-சுக்கிரன் இவைநிற்கில் எல்லா நன்மையும்பெற்றுச் சுமங்கலியாயிருப்பள்-எ-று. (2)

3-மிடப்பலன்.

266 முந்நிலத்தாதித்தன்மிடியுமலடியா
மந்நிறத்திற்பாம்புமதுவேயா-மந்நிலத்தைப்
பூணிலிருமூன்றுமின்பம்பெருஞ்சிறப்பா
மான்வுறுபொன்மால்வெள்ளிசேய்.

(இ-ள்.) 3-மிடத்திற்சூரியன்நிற்கில் தரித்திரமும் மலடியுமாயிருப்பாள். பாம்புநிற்கினும் அதுவேயாம். இவ்விரண்டும் நீங்க

லாகமற்றயகோட்கள் 6-னுள் 1-நிற்கில் எல்லாநன்மையும் பெற்றுச் சுமங்கலியாயிருப்பள். அதினும்அங்காரகன்-புதன்-குரு-சுக்கிரன் இவைகட்கு விசேஷபலனுகச் சொல்லப்படும்-எ-று. ஆகவே சந்திரன் சனிஇவைகட்குச் சமுதாயபலனுகக் கொள்க. (3)

4-மிடப்பலன்.

267 இருசுடரும்பாவத்தைசெய்துவிக்குநீர்க்கீழ்க்
கரியன்முலைப்பால்கரக்கு-மரவ
மறுதலைப்பெண்கூட்டுவிக்குமன்புதனும்வெள்ளி
செறிகுசனுஞ்செய்விக்குஞ்சீர்.

(இ-ள்.) 4-மிடத்திற்சூரியன் சந்திரன்இவைநிற்கில் பாபகர்மங்களைப்பண்ணுவள், அங்காரகன்-புதன்-குரு-சுக்கிரன்இவைநிற்கில் எல்லாநன்மையும் பெற்றுச்சுமங்கலியாயிருப்பள். சனிநிற்கில் முலைப்பாலின்மையாயிருப்பள். பாம்புநிற்கில் மறுதாரம் கூட்டுவிப்பள்-எ-று. மறுதலைப்பெண் என்றதைவைப்பாட்டி யெனினுமொக்கும். (4)

5-மிடப்பலன்.

268 ஐந்தின்கட்காரிநோயாகும்பிகர்மால்பொன்
மைந்தர்பலராமகதிரோன்-பைந்தொடியாய்
திண்ணியமங்கையாத்தீயரவுசாஞ்சேயே
லெண்ணியமக்களிழவாம்.

(இ-ள்.) 5-மிடத்திற் சூரியன்-சந்திரன்இவைநிற்கில் வாழாப்பெண்ணுயிருப்பள். அங்காரகன் நிற்கில் பிள்ளைபெற்றிழப்பள், புதன்-குரு-சுக்கிரன் இவைநிற்கில்மிகவும்பிள்ளைகளைப் பெறுவள், சனி நிற்கில் வியாதியடைவள், பாம்புநிற்கில்பாலியத்திலே தானேமரணமடைவள்-எ-று. (5)

6-மிடப்பலன்.

269 மதியதுகைம்பெண்மால்கலகியாம்வெள்ளி
யதுநெடியமங்கலியேயாகு-நிதியோடு
வாழ்ச்சிதரும்பொன்னவன்வாள்கதிர்சேர்காரியும்பாம்
பேட்சிதனக்காருமிடம்.

(இ-ள்.) 6-மிடத்திற்சூரியன்-அங்காரகன்-சனி-பாம்புஇவைநிற்கில் சாதனப்பிராப்தியுண்டாய் வாழ்ந்திருப்பள், குருநிற்கினும் அதுவேயாம், சந்திரன்நிற்கில்விதவையாவள், புதன்நிற்கிற்சண்டைக் காரியாயிருப்பள், சுக்கிரநிநிற்கிற் தீர்க்காயுசுஞ் சுமங்கலியாயிருப்பள்-எ-று. (6)

7-மிடப்பலன்.

270 காரிபிதுரென்கதிரோன் மதிவெதுப்
பாரல்சிறைகுருமாலாக்காங்-காரியராக்
கைம்பெண்ணுமேழின்கட் காண்டகுசீர்வெள்ளி
யம்பர்நாடாளுமுவந்து.

(இ-ள்.) 7-மிடத்திற் சூரியன்.சந்திரன் இவைநிற்கில் வியாதியடைவள் அங்காரகன் நிற்கில் சிறையிருப்பள், புதன் - குரு இவை நிற்கில் பாக்கியவதியாயிருப்பள், சுக்கிரன் நிற்கில் பாலியத்திலேதானே மரணமடைவள், சனி-பாம்பு இவைநிற்கில் விதவையாவள் எ-று. காரிபிதுரென் கதிரோன் என்றது சனிக்குத் தந்தையாகிய சூரியனென்கிற பெயர்த்தாம் எ-று. (7)

8-மிடப்பலன்.

271 அரவங்குருவெள்ளி யெட்டிற்கெடுக்கும்
பிரிவில்சனிமால் பெருமையாக்கு-மரிவையே
வேறுமதியுயிரைநீக்குவிக்கும் வெய்யவன்சேய்
மாறுபடுமங்கலநாண் மற்று.

(இ-ள்.) 8-மிடத்திற் சூரியன்-அங்காரகன் இவை நிற்கில் விதவையாவள், சந்திரன் நிற்கில் பாலியத்திலேதானே மரணமடைவள், புதன் சனி யிவைநிற்கில் குடும்பத்தைவிருத்தியாக்குவள், குரு-சுக்கிரன் பாம்பு இவைநிற்கில் குடும்பத்தை நசிக்கப் பண்ணுவள் எ-று. (8)

9-மிடப்பலன்.

272 மால்பிணிநற்சுங்கன்மகனைத் தருமதிபொன் [டு
கோலமொடாண்பெண்சேய்குலவெய்யோன்- பால்வறண்
நிற்குமுதுமகனு நீளரவுமொன்பானி
நிற்கின் மலடியெனநேர்.

(இ-ள்.) 9மிடத்திற் சூரியன்-அங்காரகன் இவைநிற்கில் பாலின்மையாயிருப்பள், சந்திரன்-குரு இவை நிற்கில்ஆணும்பெண்ணுமாகக்கலந்து பெறுவள், புதன் நிற்கில் வியாதியடைவள், சுக்கிரன் நிற்கில் பிள்ளைகளைப்பெறுவாள் சனி-பாம்பு இவைநிற்கில் மலடியாயிருப்பாள் எ-று. (9)

10-மிடப்பலன்.

273 பனிமதியீனுப்பெண்பார்க்வன்வேசி
சனியாரல்பாம்புவிதவை-யினியபொன்

னல்குரவுபத்தின்கண் ஞாயிறுடன்ஞானி
நல்லவையேயாகு நயந்து.

(இ-ள்.) 10-மிடத்திற் சூரியன்-புதன் இவைநிற்கில் எல்லா நன்மையும் பெற்றுச் சுமங்கலியாயிருப்பள், சந்திரன் நிற்கில்மல டியாயிருப்பள், அங்காரகன்-சனி-பாம்பு இவைநிற்கில் விதவை யாவள், குருநிற்கில் தரித்திரப்படுவள், சுக்கிரன் நிற்கில் வேசியா யிருப்பள் எ-று. (10)

11-மிடப்பலன்.

274 அருக்கன்பெருஞ்சிறப்பாரன்மங்கலநாண்
பெருக்குமிகுமான்மரபின்மங்கை-விரிக்குமதி
பாம்புசனிபொன்புகரும்பன்னென்றேலொண்செல்வ
மாம்புதல்வற்பெண்ணேடமர்ந்து.

இ-ள். 11-மிடத்திற் சூரியன் நிற்கில் சம்பத்துண்டாய்வாழ் வள் சந்திரன்-குரு-சனி-பாம்பு இவைநிற்கில் தனதான்யாதி பவு ஷ்யம் புத்திர புத்ரீ விர்த்தியுமுண்டாய்ச் சுபசந்தோஷமாக வா ழ்வள் அங்காரகன் நிற்கில் சுமங்கலியாய் நீடூழிவாழ்வள், புதன் நிற்கினு மதுவேயாம் எ-று. 11

12-மிடப்பலன்.

275 சந்திரன்கேடு சனிசெவ்வாய்கள்ளுண்ணும்
புந்திபுதல்வர்ப் பெறுவிக்கு-மந்திரியேற்
பன்னிரண்டிலொன்செல்வம் பாம்புகதிர்மலடி
நன்னயமாம்வெள்ளி நயந்து.

இ-ள். 12-மிடத்திற் சூரியன்பாம்பு இவைநிற்கில் மலடியா யிருப்பள், சந்திரன் நிற்கில் நசிப்பள், அங்காரகன்-சனி இவை நிற்கில் கள்ளுண்பள், புதன் நிற்கில் பிள்ளைகளைப்பெறுவள், குரு நிற்கில் சம்பத்துண்டாய்வாழ்வள், சுக்கிரன் நிற்கில் எல்லா நன் மையும் பெற்றுச் சுமங்கலியாயிருப்பள் எ-று. நயந்து என்று சிறப்பித்தவனுற் பலன் சொல்லுகிறவிராசி ஆருடமாகவரில் அத னதுபலன் விசேஷபலனுகவும் மற்றய இராசிகளின்பலன் சமு தாயபலனுகவுங் கண்டு சொல்லுக. 12

மங்கலகாண்டம்

முற்றிற்று.

௨

முருகக்கடவுள் துணை.

பனிரெண்டாவது

# காமகாண்டம்.

காண்டநுதலியபொருள் உணர்த்துகின்றது.

276 ஆடவருமங்கையருளன்புடைமையன்பின்மை
நீடியகற்புடைமைகற்பின்மை-நாடு
மிருவகையாநன்மைகளுந்தீமைகளுமெல்லா
மொருவகையாய்க்கட்டுரைப்பனோர்ந்து.

(இ-ள்.) தலைவனும் தலைவியுமாகக்கூடி இல்லறம் நடாத்துத லில் தங்களிலே தாங்கள் கொண்டுள்ள அன்புடைமையும் அன் பின்மையும் கற்புடைமையும் கற்பின்மையும் மற்றுமுள்ள நன் மை தீமைகளும் ஒரு கோர்வையாக்கிச் சொல்லுதும்-எ-று. (1)

கற்பின்மை உணர்த்து கின்றது.

277 வந்தானைநோக்கியவன்மனையாள்வாழ்க்கைதனைச்
சிந்தைவகையாற்றெரிந்துரைக்கின்-முந்திய
கண்டத்திற்பாம்புண்டேற்காரிகையால்கற்பின்மை
யண்டத்துளோர்க்குமது.

(இ-ள்.) கண்டங்கள் 4-னுள் 1-ல் பாம்புநிற்கினும் நோக்கி னும் தலைவி கற்புடையளல்லள் அத்தலைவி தேவதாஸ்திரீயாக இ ருக்கினும் அஃது பிசகாவாம்-எ-று. நிறுத்தமுறையே முதலிலே அன்புடைமையைக்கூறாது கற்பின்மையைக்கூறினமையால் இக்கா ண்டம் முழுவதுங்கொண்டு கூட்டுப்பொருள் கோளாக வருவன காண்க எ-று. (2)

இதுவுமது.

278 ஆணயகோட்களணிமதியைநோக்கிடுதற்
பேணுதுடனேபெரிதுறைதற்-காணுமேற்
பாலார்மொழிமடவாள்பல்லார்தோட்சேருமெனு
மேலோருரைத்தவிதி.

(இ-ள்.) சந்திரனை ஆண்கோட்கள் 3-னுள் குருக, தவிர மற்றயசூரியன் அங்காரகன் இவை கூடிநிற்கினும் நோக்கினும்

தலைவி கற்புடையளல்லள் எ-று. ஆணுய்கோட்கள் என்றுபொது ப்படச்சொல்லி ஞாயினும் உடனே சொல்லப்புகுகின்ற 4-செய்யுட்களின் விதியைக்கொண்டே குரு 1, தவிர என்பது பெற்றும் எ-று. (3)

கற்புடைமை உணர்த்துகின்றது.

279 ஓரைக்குப்பன்னொன்றேழ்மூன்றேடுபத்திவற்றிற்
சீரொத்தமாமதியஞ்சேர்ந்திதனைப்-பாரித்துப்
பீதகனுர்நோக்கிற்பிறர்தோளவல்சேரால்
வாதிகடாங்கண்டவழக்கு.

(இ-ள்.) உதயத்திற்கு 3-7-10-11, இவ்விடங்களிலே சந்திரன் நின்று அச்சந்திரனைக் குரு கூடி நிற்கினும் நோக்கினும் தலைவி கர்ப்புடையளாம்-எ-று. வாதிகடாங் கண்டவழக்கு என்று சிறப்பித்தவனுல் முற்கூறிய சந்திரன் இவ்விடங்களிலேநின்றதனை றென்று யூகித்துக்கொள்க எ-று. (4)

முற்கூறிய கற்பின்மை கற்புடைமைகட்குச் சிறப்புவிதி உணர்த்துகின்றது.

280 பகைநீசத்தேனின்றபான்மதியையேழிற்
பகைநீசக்கோணின்றுபார்க்கிற்-றொகையாக
நட்டார்குழம்பழிக்கநட்பவேகிழோரை
நட்பாட்சியுச்சமேனன்கு.

(இ-ள்.) கற்பின்மைக்குக் கூறிய சந்திரனும் அச்சந்திரனைக் கூடி நின்றனவும் நோக்கினவும் ஆகியகோட்களும் பகைநீசமுற்றிருக்கிற கர்ப்புடையலள்ளல் என்றதை விசேஷமாகக் கூறப்படும் இப்படியே கர்ப்புடைமைக்குக் கூறியசந்திரனும்! அச்சந்திரனைக்கூடி னின்றனவுமாகிய கோட்களும்; நட்பாட்சி யுச்சமுற்றிருக்கிற கற்புடையள் என்றதை விசெஷமாகக் கூறப்படும்-எ-று. கர்ப்பின்மைக்குப் பகைநீசமும் கர்ப்புடைமைக்கு நட்பாச்சி யுச்சமும் விசேஷமாகக் கூறியவதனுற் கற்பின்மைக்கு நட்பாட்சி யுச்சமும் கற்புடைமைக்குப் பகைநீசமும் சமுதாயமாகக் கொள்ளப்படும். இவ்விதி துவக்கத்திற்கூறிய பாம்பிர்க்கும் கொள்க.

அன்பின்மையும் அன்புடைமையும் உணர்த்து கின்றது.

281 மதியுடன்றீக்கோண்மகிழ்ந்துறினுநோக்கின்
மதிநுதலாண்மற்றவண்வேண்டான்-மதியுட
னற்கோட்கணட்புடையணட்பாட்சியுச்சமே
லொற்காதுகூறுகநீயோர்ந்து.

(இ-ள்.) சந்திரனைப் பாபக்கோட்கள் கூடினிர்க்கினும் நோக்கினும் தலைவியானவள் தலைவனிடத்து அன்புடையளல்லள் அப்பாபக்கோட்கள் தானே பகை நீசமுற்றிருக்கில் அன்புடையளல்லள் என்றதை விசேஷமாகக் கூறப்படும் இப்படியே சந்திரனைச் சுபக்கோட்கள்கூடி நிர்க்கினும் நோக்கினும் தலைவியானவள் தலைவனிடத்து அன்புடையளாம் அச்சுபக்கோட்கள் தானே நட்பாட்சி யுச்சமுற்றிருக்கில் அன்புடையள் என்றதை விசேஷமாகக் கூறப்படும்-எ-று. அன்பின்மை கடப்பகை நீசமும் அன்புடமைக்கு நட்பாச்சியுச்சமும் விசேஷமாகக் கூறியவதனால் அன்பின்மைக்கு நட்பாச்சியுச்சமும் அன்புடைமைக்குப் பகைநீசமும் சமுதாயமாகக் கொள்ளப்படும் எ-று. (6)

இதுவுமது.

282 தண்மதியம்பீதகன்றன்னிலத்துநிற்குமே
லொண்ணுதலாள்சாலவுவந்திருப்ப-டன்மதியம்
பெண்வருக்கத்துள்ளிருக்கிற்பெய்வளையாளன்புடையள்
கண்வருக்கத்துளளுரைக்கண்டு.

(இ-ள்.) சந்திரன் குருவுக் குடையனவும் பெண்கோட்களுக் குடையனவும் ஆகிய ஆட்சியிராசிகளிலே நிற்கில் தலைவியானவள் தலைவனிடத்து அன்புடையளாம்-எ-று. குருவுக்குடையனவும் பெண்கோட்களுக் குடையனவும் ஆகிய ஆட்சி யிராசிகளை அன்புடைமையாகக் கூறியவதனால் குரு நீங்களாக மற்ற ஆண் கோட்களுக் குடையனவாகிய ஆட்சியிராசிகளை அன்பின்மையாகக் கொள்ளப்படும் எ-று. (7)

தலைவி தலைவர்களின் குடியும் குலமும்
உணர்த்துகின்றது.

283 அற்றபயிற்றினமேல்வந்தானேனைக்கிடினு
மற்றகயிற்றுள்கருவென்க-முற்றிய
வெள்ளிபுதன்றன்னிலைமேல்வோளாளர்மற்றவளு
முள்ளமணவளானுமிற்றோர்,

(இ-ள்.) 12-மிடமானது ஆரூடம் அல்லது ஆரூடத்திற்கு 7-மிடம் இப்படியாக வந்தவிடத்து வினவின தலைவி கைம்பெண்ணென்றும் வினவின தலைவன் கைமெபண்ணனதின்பின்பெற்றபிள்ளையென்றும் மேற்படி ஆரூடம் ஆரூடத்திற்கு 7-மிடமும் சுக்கிரனுக்கு ஆட்சியிராசிகளாகில் மேற்படி தலைவர்கள் சுக்கிரனொன்

றும் புதனுக்கு ஆட்சி யிராசிகளாகில் வைசியரென்றும் மற்றய கோட்களுக்கு ஆட்சியிராசிகளாகில் அவ்வவற்றிற்குரிய குலத்தாரென்றும் சொல்லப்படும்-எ-று. வெள்ளி புதன் என்று சுக்கிரனையும் புதனையும் ஒரு சேர்த்துக்கூறி சூத்திரரென்றும் வைசியரென்றும் ஒரு சேரப்பொருள் படுவதாகிய வேளாளர் என்றதை எடுத்துக் கூறினமையால் சுக்கிரனுக்கு ஆட்சியிராசிகளாகிற்சூத்திரரென்றும் புதனுக்கு ஆட்சியிராசிகளாகில் வைசியரென்றும் சொற்பொருள் விரித்தாம் எ-று. (8)

கல்விமாதரை உணர்த்துகின்றது.

இஃது வித்தையைப் புணர்ந்து தீமை அடைந்தனை இராஜஸ்திரீயைப்புணர்ந்து தீமை அடைந்தனை எனல்.

284 வெள்ளிசேய்தனவருக்கத்துள்ளவிதவையொடு
தள்ளாதவட்டுமை தானுரைக்க-வெள்ளியுட
னாதித்தன்சேரிலரசன்பெண்டோடு
சோதித்தவட்டுமைச்சொல்.

(இ-ள்.) சுக்கிரனுடனே அங்காரகன் கூடிநிற்கில் நீநின்குலத்திலே ஒரு விதவையைப்புணர்ந்து தீமை அடைந்தனை என்றும் சூரியன் கூடிநிற்கில் இராஜஸ்திரீயைப் புணர்ந்து தீமை அடைந்தனை என்றும் சொல்லப்படும்-எ-று. (9)

இதுவுமது.

இஃது விரோதிகளின் பெண்ணைப் புணர்ந்தாய் விகிதாளின் பெண்ணைப் புணர்ந்தாய் இழிகுலத்துப் பெண்ணைப் புணர்ந்தாய் எனல்.

285 பகைமதியெட்சி பகைத்தார்பெணட்பே
னகையார்ந்தநட்டார்பெண்ணுகும்-பகையோ
டிணைந்துவருநீசமெழிகுலத்தாளோடு
புணர்ந்துவந்தாயென்றேபுகல்.

(இ-ள்.) சந்திரன் பகைபெற்று நிற்கில் விரோதிகளில் பெண்ணைப் புணர்ந்தாய் என்றும் நட்புபெற்று நிற்கில் விகிதாளின் பெண்ணைப் புணர்ந்தாய் என்றும் நீசம்பெற்று நிற்கில்இழிகுலத்துப் பெண்ணைபுணர்ந்தாய் என்றும் சொல்லப்படும் எ-று. (10)

இதுவுமது.

இஃது குலத்துப்பெண்ணைப் புணர்ந்தாய் உயர்குலத்துப் பெண்ணைப் புணர்ந்தாய் வேசையைப்புணர்ந்தாய் எனல்

286 தன்னிலமேற்றங்குலப்பெணுச்சங்குலத்தினிய
மின்னும்பகைநீசம்வேசையாந்-தன்னோடு
நீபுணர்ந்துவந்தாயாமென்றிதனைநின்றவற்கு
வாயுணர்ந்துகூறல்வழக்கு.

(இ-ள்.) சந்திரன் ஆட்சிபெற்றுநிற்கிற்குலத்துப்பெண்ணைப் புணர்ந்தாய் என்றும் உச்சம்பெற்றுநிற்கில் உயர்குலத்துப்பெண்ணைப் புணர்ந்தாய் என்றும் பகைநீசம் பெற்றுநிற்கில் வேசையைப் புணர்ந்தாய்என்றும் சொல்லப்படும் எ-று. முற்செய்யுளிலே பகைக்கு விரோதிகளின்பெண் என்றும் நீசத்திற்கு இழிகுலத்துப்பெண் என்றும் கூறினவர் இச்செய்யுளிலே பகைக்கும் நீசத்திற்கும் வேசை என்றுமாறுபாடாககூறியவ்தனுற்பகைக்கு விரோதிகளின்பெண் அல்லது வேசை நீசத்திற்கு இழிகுலத்துப் பெண் அல்லதுவேசை என்று இங்ஙனமாகஒட்டப்படுமேயல்லது இதுதான் என்றுஅறுதி கூடப்படாதென்றறிக இச்செய்யுளிலே தங்குலப்பெண் என்றதைத் தலைவி எனினும் ஒக்கும் எ-று. (11)

கல்வியினளவை உணர்த்துகின்றது.

287 ஓரையுங்கோளும் வியனேலொருக்காலாங்
தேரிற்சமனிருகாற் செப்புங்கா-லோன்றயிற்
கோளானுங்கோளின் கதிரானுங்கூறுக
மீளாதுசேரும் விழை.

(இ-ள்.) உதயமும் உதயத்தில் நின்றகோளும்ஒற்றையாகில் ஒருமுறை புணர்ந்தாய் என்றும் இரட்டையாகில் இரண்டுமுறை புணர்ந்தாய் என்றும் சொல்லப்படும் அன்றியும்உதயத்தில்நின்ற கோட்கள்எத்தனையோ அத்தனைமுறை புணர்ந்தாய் என்றும் உதயத்தில் நின்றகோட்களிலே வலிதுபெற்ற கோளின்கதிர் எத்தனையோ அத்தனை முறை புணர்ந்தாய் என்றும் சொல்லப்படும் எ-று. கோளின்கதிரானும் என்றமையாற் கோட்கள் நில்லாதவிடத்து உதயத்தின் கதிரானும் என்று வருவித்துரைத்துக்

கொள்க. கல்வியின்மிஞ்சுதல் ஆசை பெருக்கத்தினளவோயம் ஆதலாற் கல்வியினளவைக்கு விழை என்று பெயர்கூறினர்எ-று.

கல்வியிற்பிணக்கு உணர்த்துகின்றது.

இஃது வேசையுடனே பிணங்கிடந்தாய் தலைவியுடனே பிணங்கிடந்தாய் எனல்.

288 இந்துவுஞ்சேயுமினேந்தெழுங்காற்பெண்டீரோ
டுந்திக்கிடந்தாயெனவுரைக்க-முந்தி
சனிபார்க்கவனெழுமேற்றம்பெண்டீரோடு
முனிவாய்கிடந்தான்மொழி.

(இ-ள்.) சந்திரன் உதயத்தில் நின்று அச்சந்திரனுடனே அங்காரகன்கூடிநிற்கில் வேசையுடனே பிணங்கிக்கிடந்தாய் என்றும் சுக்கிரனாதல் சனியாதல் கூடிநிற்கில்தலைவியுடனேபிணங்கிக் கிடந்தாய் என்றும் சொல்லப்படும் எ-று. உடனே தம்பெண்டீர் என்று விகற்பித்தவதனால் முற்கூறியபெண்டீரைவேசைஎன்பது பெற்றும் எ-று. (13)

இதுவுமது.

இஃது தலைவியுடனே பிணங்கிக்கிடந்தாய் தலைவியுடனே பிணங்கினதில் அவளது கூறையும் கிழிப்பட்டது எனல்.

289 நான்குமூன்றெட்சிநலத்தக்கவேழிவற்றுள்
வான்கொண்மதிவெள்ளிவந்துறுமேற்-றுங்காணிற்
சீறியனுய்பெண்டிரொடுசீறியவள்கூறைதனைப்
பீறினுய்என்றிதனைப்பேசு.

(இ-ள்.) உதயம் 3-மிடம் 4-மிடம் 7-மிடம் இவற்றுள் 1-ல் சந்திரன் சுக்கிரன் இவைகூடிநிற்கில் தலைவியுடனே பிணங்கிக் கிடந்தாய் என்றும் தலைவியுடனே பிணங்கினதில் அவளதுகூறையும் கிழிபட்டது என்றும் சொல்லப்படும் எ-று. 5-மிடமும் இப்படியாம் என்பாருமுளர் எ-று. (14)

கனவிர்க்கலவி உணர்த்துகின்றது.

290 உடுமதியுநீலனுமொன்றியுதயத்
தடைவேழந்தொன்பான்றேன்றி-நடைபயிலக்
கண்டலிறவிற்கனவிலொருபெண்போகங்
கொண்டாய்காணென்றிதனைக்கூறு

(இ-ள்.) உதயம் 5-மிடம் 7-மிடம் 9-மிடம் இவற்றுள் 1-ல் சந்திரன் சனி இவைகூடிநிற்கினும் நோக்கினும் இராத்திரி கனவிலே ஒருஸ்திரியைப் புணர்ந்தாய் என்றுசொல்லப்படும் எ-று.

சயனத்தவறு உணர்த்துகின்றது.

இஃது இராத்திரி திருடரைக்கண்டுபயந்து நித்திரைபிடியாமல் விழித்திருந்தாய் எனல்.

291 திரண்டமதியுபஞ்செய்யுங்காற்செய்வா
யிரண்டிலினிதுரையகாரண-முரண்டகங்
கள்ளரைக்கண்டஞ்சியுரங்காதிருந்தனையென்
றுள்ளுமவர்க்கெல்லாமுரை.

(இ-ள்.) சந்திரன் உதயத்தில் நிற்கஅங்காரகன் 2-மிடத்தில் நிற்கினும் அவ் அங்காரகன் மேற்படிசந்திரனையாதல் 2-மிடத்தையாதல் நோக்கினும் இராத்திரி திருடரைக்கண்டுபயந்து நித்திரைபிடியாமல்விழித்திருந்தாய் என்று சொல்லப்படும் எ-று. (16)

இதுவுமது.

இஃது இராத்திரி ஒருவிவகாரத்தைக் குறித்துவழக்காடி மனவெறுப்புடனே தரையிற்படுத்து யிருந்தாய் எனல்.

292 ஏழின்கட்டீக்கோளாயிரைந்தீர்சேயுரைய
வூழில்புதன்மூன்றிலுண்டாகிற்-ருள்வில்
சலத்திற்சலம்பெருகித்தங்காதிரவி
னிலத்திற்கிடந்தையெனநேர்.

(இ-ள்.) 7-மிடத்தில் பாபக்கோளும் 10 மிடத்தில்அங்காரகனுமாக நின்று 3-மிடத்தில் புதன்நிற்கில் இராத்திரி ஒருவிவகாரத்தைக்குறித்து வழக்காடி மனவெறுப்புடனே தரையிற்படுத்திருந்தாய் என்று சொல்லப்படும் எ-று. 8-மிடத்திற் பாபக்கோள் நிற்கினும் 10மிடத்தில் அங்காரகன்நிற்கினும் 3-மிடத்தில்புதனிற்கினும் இப்படியாம் என்பாருமுளர்எ-று.

காமகாண்டம்-முற்றிற்று.

உ

முருகக்கடவுள் துணை.

பதிமூன்றுவது

# மகப்பேறுகாண்டம்.

கருப்பற்றுபாகம்

கருப்பிணியாய் இருக்கின்றமை உணர்த்துகின்றது.

293 பூங்குழலாற்வந்துபுதல்வர்ப்பேறுன்னியபோ
தாங்குதயமாரூடமாகுமொன்றன்-பாங்கரவ
முண்டாயதென்னிலவள்வயிற்றிற்கற்பமிர
வுண்டாயதென்றேயுரை.

(இ-ள்.) உதயம் ஆரூடம் இவற்றுள் 1-ல் பாம்புநிற்கில் கருப்பிணியாய் இருக்கின்றனள்என்றுசொல்லப்படும் எ-று. உதயமாரூடம் என்னுது ஆங்குதயமாருடம் என்றுமிகுத்துக் கூறியவதனுல் 4-5-9-இவற்றுள் 1-ல் நிற்கில் இப்படியாம் எனினும் ஒக்கும் மேற்படி பாம்பினுடனே சூரியன்கூடி நிற்கில்இனிகருப்பிணியாவளென்றும் அங்காரகன்கூடிநிற்கில் அவ்வங்காரகன் பணிதசாரத்தின் பிரகாரத்திலே மேற்படி இராசிகளிலே வந்து கழிந்துபோமளவும் கருப்பிணியாகாளென்றும்பின்புஆவளென்றும் பட்சாந்தரங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன 10-மாதத்தியகருப்பமாயினும் ஒருநாளையகருப்பமாயினும் உடையாளை உடையாள் என்று சொல்லவந்தவர் ஒருமாதத்திற்குட்பட்டகருபத்தைஉடையாள் தெரியாமையினுலே இல்லவே இல்லைஎன்றுசாதிப்பதாகிய வழக்கத்தைக்கருதி இராத்திரிதரித்ததுவும் சரிதான் என்று சம்மதி சொல்வார்போல இரவுண்டாயது என்முர் எ-று. (10)

மகப்பேறும்மகப்பேறின்மையும்
உணர்த்துகின்றது.

294 மதியுடனேநற்கோண்மகிழ்ந்துளவாய்த்தோன்றில்
விதியாய்மகப்பெறுதன்மெய்யே-மதியுடனே
தேரோன்புகருளவாய்ச்சென்றுமூன்றைந்தொன்பான்
சேரின்மகவின்மைசெப்பு.

(இ-ள்.) உதயத்திற்சந்திரன்னின்று அச்சந்திரனுடனேசுபக்கோட்கள் கூடிநிற்கில் மகப்பேறுண்டாம் 3-5-9- இவற்றுள் 1-ல்

சந்திரனின்று அச்சந்திரனுடனே சூரியன்-சுக்கிரன் இவற்றுள் 1-கூடி நின்றால் மகப்பேறின்மையால்-எ-று. சென்று என்றுமிகுத்துக்கூறிய வதனால் உதயமேபோல ஆரூடத்தையும் உதயத்திற்கு 3-5-9-தே போல ஆரூடத்திற்கு 3-5-9-தையும் யூகித்துக்கொள்க எ-று. (2)

மகப்பேறும் மகப்பேற்றின் தீர்க்காயுளற் பாயுளும் உணர்த்துகின்றது.

295 உடம்புயிரோரைந்தேழினெண்பொன்னுண்டாயின்
மடங்கர்மகப்பேறுவாய்க்கு-மடங்காத
நன்னயமேனன்றாநலனழியிற்பெற்றிழங்குஞ்
சொன்னயத்தநூலோர்துணிபு.

(இ-ள்.) உதயம் ஆரூடம் 5-7-இவற்றுள் 1-ல்குரு நின்றால் மகப்பேறுண்டாமென்றும் மேற்படி குருநட்பாட்சி யுச்சம்பெற்று நின்றால் முற்கூறிய மகப்பேறுதானே தீர்க்காயுளாயுள்ள மகப்பேறென்றும் பகை நீசம்பெற்று நின்றால் அற்பாயுளாயுள்ள மகப்பேறென்றுஞ் சொல்லப்படும் எ-று. (3)

மகப்பேறும் மகப்பேற்றின் ஆண்பெண்ணும் உணர்த்துகின்றது.

296 மடவார்மகவினவும்போதினில்வட்ட
முடனுயகோளுறைதலெட்சி-யடலாக
வுண்டாயினுண்டாமுடனுறைகோளாண்பெண்ணுங்
கண்டாங்கவையவையாய்க்காண்.

(இ-ள்.) உதயம் ஆரூடமிவற்றுள் 1-ல் பரிவேடம் நின்று அப்பரிவேடத்துடனே மகப்பேற்றிற்காக இதுவரையிற்கூறிய கோட்களுள் 1-கூடிநின்றால் மகப்பேறுண்டாமென்றுங் கூடிநின்றகோள் ஆண்கோளாயின் முற்கூறிய மகப்பேறுதானே ஆணென்றும், பெண்கோளாயிற் பெண்ணென்று மாண்கோளும் பெண்கோளுமாயி னுணுபெண்ணுமென்றுஞ் சொல்லப்படும் - எ-று. அவையவையாய்க்காணென்று விதந்து கூறினமையால்கூடிநின்ற கோளலிக்கோளாயின் அலியென்றும் ஒருகோளாயின் ஒன்றென்று பலகோட்களாயிற் பலவென்று மிப்படியே நிறமுமளவும் மறுவடு முதலியவைகளு மொட்டப்படும் எ-று. (4)

ஆண்பெண் உணர்த்தாநின்றது.

297 ஏர்பதற்குப்பன்னேன்றேழ்மூன்றுபத்தாறிவற்றுட்
டேரவனேலாண்பெறுமைதிண்ணமே-நேராய
நல்லக்கோளேழிலுறவாணும்வியனிடையு
மல்லதீக்கோள்பெண்ணதாம்.

(இ-ள்.) 3-6-7-10-11-இவற்றுள் 1-ல் சூரியனின்றால்ஆண் சந்திரனின்றால் பெண், 7-மிடத்திற் சந்திரன் நீங்கலாகமற்றைய சுபக்கோட்கள் மூன்றனுள் 1-நின்றாலாண், சூரியன் நீங்கலாக மற்றைய பாபக்கோட்கள் 3-னுள் 1-நின்றாற்பெண், ஒற்றையிரா சி சுபக்கோட்கள் 4-னுள் 1-நின்றாலாண், இரட்டை யிராசியிற் பாபக்கோட்கள் 4-னுள் 1-நின்றால் பெண்-எ-று. நேராயவென் றுவமித்தவதனால் ஒற்றை யிராசியி லொற்றைக்கோட்கள் நின்றா ல் ஆணென்று மிரட்டையிராசியில் இரட்டைக் கோட்கள் நின றால் பெண்ணென்றும் யூகித்தாலுமாம் எ-று. (5)

இதுவுமது.

298. வினவும்பொழுதில்வியனுட்கடோற்றீன்
வினவியவாண்பெறுகைமெய்யே-வினவு
மசுவினிகொண்டெண்ணவியனுஞ்சமனும்
பிசகில்சமன்பெண்பெறும்.

(இ-ள்.) ஒற்றைநாளுதித்தாலாண், இரட்டைநாளுதித்தாற் பெண், மேற்படி ஒற்றைநா ளிரட்டைநா ளறியுமாறு, அசுவினி ஒற்றை, பரணி இரட்டை இப்படியே மற்றவையு மொட்டுவதாம் எ-று உதயநாளுதயவிராசியி லடங்கியிருக்குந் தன்மையையுடை த்தாதலால் உதயநாளேபோல உதயவிராசியைக் கொள்ளுதலு முக்யமாம். உதயத்திபதிக்கோள் சந்திரன்-சனியிவை ஒற்றை யிராசியில் நின்றாலாண், இரட்டை யிராசியினின்றாற்பெண் இப் படியா மென்பாருமுளர்-எ-று. (6)

பெறுகாலகணிதங் கணிக்கின்றது.

299 ஏறியவோரையதற்கேழாகுமவ்விடத்தே
தேறுமதிசென்றுசேருநா ளுறின்றி
யந்நாளந்நாழிகையிலப்போதங்காயிழையாய்
நின்றுன்மனை பெறுதன்மெய்.

(இ-ள்.) ஆரூடத்திற்கு 7-மிடத்திற்சந்திரன் வருதற் கெத்தனைநாள் எத்தனைநாழிகை எப்பொழுதோ அத்தனைநாளத்தனை நாழிகை யப்பொழுதிற் பேறுகாலமாம் எ-று. இதிலே நாளும் நாழிகையும் பொழுதுமென்று பேறுகாலத்தைச் சுருக்கினமை யால் பிரசவமாதத்திலே கணிக்கப்படுவதாகக்கொள்க தேறுமதி யென்று சிறப்பித்தவதனுற் சந்திரன்நட்பாட்சியுச்சம்பெற்றுநின் ருல் மேற்கூறியவாறே நாட்களாகவும் நாழிகைகளாகவும், பகை நீசம்பெற்றுநின்ருல் நாட்களைவருஷங்களாவும் நாழிகைகளை மா சங்களாகவுங் கொண்டுசொல்லப்படும்இதிலேநாள்நாழிகைகளைத் தற்பரை விதற்பரைகளால் யூகித்துக்கொள்க. (7)

கருப்பஅழிவுங்கருப்பஅழிவுடனேகருப்பிணியரிட்டமு முணர்த்தாநின்றது.

300 கண்டவயிற்ருல்வினவிற்கடுவட்ட
முண்டேற்கருவழிதலுண்டாகுங்-கண்டாங்கே
யெட்டின்மதியமிரண்டுயிர்க்குங்கேடாகும்
பட்டநயத்தாலேபகர்.

(இ-ள்.) உதயமாரூடமிவைகளிற் பரிவேடம்நிற்க அப்பொ ழுது வினவின ஸ்திரீயுங் கருப்பிணியாகவே சம்பவிக்கிற் கருப்ப மழியும். மேற்படி பரிவேடம்நின்ற உதயமாரூடங்கட்கு 8-மிடத் திற்சந்திரன் நின்ருல் கருப்பஅழிவுடனே கருப்பிணியு மரிட்ட மாவாள் எ-று. பட்டநயத்தாலே பகரென்று சிறப்பித்த வதனுல் மேற்படிசந்திரன்பகைநீசம்பெற்று நின்ருல் மேற்கூறிய படியே என்றும், நட்பாட்சியுச்சம் பெற்றுநின்ருல் கருப்பமழியினுங் கருப்பிணியரிட்டமாகாளென்றும்,ஆயினுமரிட்டமென்றதோஷத் திற்குக்கிஞ்சித்துசாட்டியங்கொடுக்குமென்றும் வருவித் துரைத் துக்கொள்க எ-று. (8)

அரிட்டபாகம்.

பாலரிட்டமுணர்த்தாநின்றது.

இஃது பாலந்நேரமே யரிட்டமாமெனல்

301 என்னேழுபன்னிரண்டெட்டுதயத்தோடுச்சி
மன்னுறுதிகோட்கள்வந்திடுங்காற்-பொன்னனுட

னற்கோட்கள்கேந்திரங்கணண்ணிப்பாராவிடிற்சே
யப்போதேசாமென்றறி.

(இ-ள்.) குருமுதலியசுபர் நோக்கமில்லாதவிடத்துப் பாபக் கோட்கள்பகை நீசக்கோட்களாய் உதயத்திலுமுதயத்திற்கு 7-மிடம் 8-மிடம் 10-மிடம் 12மிடங்களிலும் நின்றாலன்னேரமே பாலனரிட்டமாம் எ-று. சுபர்நோக்கமில்லாத விடத்துப் பாலனரிட்டமா மென்றமையால் சுபர்நோக்கமுள்ளவிடத்துப் பாலன் சீவியாமென்றுவருவித்துரைத்துக்கொள்கஇப்படியேவருவனவற்றுள்ளுமாம் கெந்திரங்கணண்ணியென்றது வலிதுபெற்றசுபர் நோக்கம் வேண்டுமென்பது கருத்து-எ-று. (9)

இதுவுமது

302 எட்டிற்கதிருமதற்கேழிற்சேய்சனியுங்
கொட்கிற்பிரந்தகுழவிசா-முட்ட
நலந்தருகோளேக்கின்றியேழிற்சேய்காரி
யுலந்திடுமப்போதேயுயிர்.

(இ-ள்.) குருமுதலியசுபர் நோக்கமில்லாதவிடத்து உதயத்திற்கு 8-மிடத்திற்குசூரியநின்று அச்சூரியனுக்கு 7-மிடத்தில் அங்காரகனாதல் சனியாதல்நின்றாலு மந்நேரமே பாலனரிட்டமாம் எ-று. (10)

இதுவுமது.

இது பாலன்றயதினத்திலேயரிட்டமாமெனல்.

303 இத்துதிப்பச்செவ்வாய்தானெட்டொன்பதில்வெள்ளி
மந்தனும்வந்துவதிந்திடலும்-வந்து
பிறந்தானைப்பீதகன்றான்காணுதேஎன்றே
பிறந்தானென்றெண்ணப்படும்.

(இ-ள்.) குருமுதலியசுபர் நோக்கமில்லாதவிடத்து உதயத்திற் சந்திரன்நின்று அச்சந்திரனுக்கு 8-மிடத்தில் அங்காரகனும் 9-மிடத்திற் சுக்கிரனாதல் சனியாதல் நின்றால்பாலன் அன்றயதினத்திலே யரிட்டமாம் எ-று. (11)

இதுவுமது.

இதுபாலன் 4-தினத்திலே அரிட்டமாமெனல்.

304 தீயகோணேக்கிற்செழுமதியமாங்கோளை
பாயவுயிருடம்பிற்காறெட்டிற்-றாய
சனிநிற்கநற்கோட்ருக்குடனேக்கின்றே
லினிநான்குநாளிற்சாமென்.

(இ-ள்.) குருமுதலிய சுபர் நோக்கமில்லாதவிடத்துப் பாபக்கோட்கள் பகைநீசக் கோட்களாக நின்று சந்திரனை நோக்கினுமுதயம் ஆருடமிவற்றிற்கு 6-மிடம், 8-மிடங்களிற் சனி நின்றாலும் பாலன் 4-தினத்திலே அரிட்டமாம்-எ-று. உடம்பென்று சிறப்பித்தவதனாற் சந்திரனுக்கு 9-மிடம் 8-மிடங்களிற் சனி நின்ருலு மிப்படியாமெனினு மமையும் எ-று. (12)

இதுவுமது.

இது பாலன் 4-தினத்திலேயாதல் 8-தினத்திலேயாதல்.
அரிட்டமாமெனல்.

305 மாலட்டமாகமதிவந்துதயமுற
நாலெட்டிற்றீக்கோள்கணண்ணுமெ-னூலிட்ட
மேலிட்டராகவிதிவந்துகாத்திடினு
நாலெட்டுநாட்சாகவில்.

(இ-ள்.) சந்திரனுதித்துப் புதன் 8-மிடத்தில் நின்றாலும் பாபக்கோட்க ளுதயத்திற்கு 4-மிடம் 8-மிடங்களில் நின்றாலும் பாலன் 4-தினத்திலேயாதல் 9-தினத்திலேயாதல் அரிட்டமாம் எ-று. விதிகாத்திடினு நாலெட்டு நாட்சாமென்றதுதி கூறினமையால் இதற்குக் குருமுதலிய சுபர்நோக்கமுள்ள விடத்து மரிட்டமே யாமென்பது கண்டுகொள்க. நாலெட்டு நாளென்று சிலேடையாய்க் கூறியவதனால் 32-தினத்திலே யரிட்டமாமெனினு மமையும் எ-று. (13)

இதுவுமது.

இதுபாலன் ஒரு திங்களிலே அரிட்டமாமெனல்.

306 ஓரைக்கீராறெட்டிலோங்கியதீக்கோணிற்கிற்
பேர்பெற்றபிள்ளைபிறந்திடினுஞ்-சீர்பெற்ற

வெள்ளிபுதனேக்காதொழியிலொருதிங்கடனிற்
பிள்ளைசாமென்றிதனைப்பேசு.

(இ-ள்·) குருமுதலிய சுபர்நோக்க மில்லாதவிடத்து உதய த்திற்கு 6-மிடம், 8-மிடம் 12-மிடங்களிற் பாபக்கோட்கள் நின் ருல் பாலன் ஒருதிங்களிலே யரிட்டமாம் எ-று. சுபரைக்கூறின மையால் குருமுதலிய சுபர் என்றும் 8-12 டைக் கூறினமையால் 6-8-12-என்றும் வருவித்துரைத்ததாம் எ-று. (14)

இதுவுமது.

இது பாலன் ஓராண்டிலே யரிட்டமாமெனல்.

307 இயன்றவுதயந்தனக்கிராறினெட்டின்
முயன்றுகடுங்கோட்கணிற்கநற்கோ-ளியன்றிலதே
லோராண்டிற்பொன்றிடுஞ்சேபுற்ருர்பெற்ருர்தமக்கும்
போராதென்ருென்றும் புகல்.

(இ-ள்.) குருமுதலிய சுபர்நோக்க மில்லாதவிடத்து உபயத் திற்கு 9-மிடம் 8-மிடம் 12-மிடங்களிற் பாபக்கோட்கணின்ருல் பாலன் ஓராண்டிலே யரிட்டமாம்-எ-று, உதயத்திற்கு 6-மிடம் 8-மிடம் 12-மிடங்களிற் பாபக்கோ நின்ருல் ஒரு திங்களிலே யரி ட்டமாமென்று மேற்கூறினவர் இங்கே யோராண்டிலே அரிட்ட மாமென்று பிறழ்ந்து பேசினமையால் ஒரு திங்களிலே யல்லது ஓராண்டிலே அரிட்டமாமென்று இங்ஙனமே ஒட்டுதல்கூறப்படு மேயல்லாமல் ஒரு திங்களிலேதானே யரிட்டமாமென்று மோரா ண்டிலேதானே யரிட்டமாமென்று மறுதிகூறப்படாது என்பது தானே தோன்றுதலுங்காண்க உற்ருர் பெற்ருர் தமக்கும்போரா தென்ருென்று புகலென்ருெட்டுதல் கூறினமையால் அதுவு மப் படியேயாம் எ-று. (15)

இதுவுமது.

308 காணவுதயமதிகண்டத்துத்தீக்கோட்கண்
மாணவரிவோராண்டின்மாமரணம்-பேணுங்கா
லுற்றவதற்கோரிரண்டிலோரெட்டிற்றீக்கோட்கள்
பெற்றபிள்ளைசாமென்றேபேசு.

இ-ள். சந்திரனுதயத்தில் நின்று பாபக்கோட்கள் உதயம் நீர்க்கீழ் பாடு உச்சிஇவைகளில் நின்ருலும் 2-மிடம்8-மிடங்களில் நின்ருலும் பாலன்ஓராண்டிலேயரிட்டமாம்எ-றுமாமரணமென்று

மிருத்துக்கூறியவதனால் சாமென்றேபேசு என்றுதேற்றங் கொடுத்துக்கூறியவதனாலு மோராண்டிலே யரிட்டமாமென்பது யறுதியேயாம் வருவனவற்றுள்ளு மிங்ஙனம்யூகித்துக்கொள்க (16)

இதுவுமது.

309. சொல்லுமுதயத்தொடத்தமனம்பாபக்கோ
ளொள்ளுதற்கோளுடனுரைதன்-மெல்லென
நற்கோணளிர்மதியைநோர்காதேலோராண்டிற்
றற்குழலிசாமென்றேசாற்று.

(இ-ள்.) சந்திரனுக்குக் குருமுதலியசுபர்நோக்க மில்லாதவிடத்துப்பாபக்கோட்கள் உதயகண்டம்பாட்டுக்கண்டங்களிலே நின்றாலுஞ் சந்திரனுடனே கூடிநின்றாலும் பாலனோராண்டிலே யரிட்டமாம் எ-று. (17)

இதுவுமது.

இதுபாலன் 2-மாண்டிலேயரிட்ட மாமெனல்.

310 எட்டிலெரிநீசம்பகையெய்தவொன்பானி
லொட்டியிரவியுளனக-விட்டசனி
பன்னிரண்டிற்பற்றப்பொன்காணுமேதல்பாற்குழலி
யின்னிரண்டிற்சொல்லியவாண்டென்.

(இ-ள்.) குருமுதலிய சுபர் நோக்கமில்லாதவிடத்து பகைநீசமுடைத்தாய் அங்காரகன் 9-மிடத்திலே நின்றாலுஞ் சூரியன் 6-மிடத்திலே நின்றாலுஞ் சனி 12-மிடத்திலே நின்றாலும்பாலன் 2-ஆண்டிலே யரிட்டமாம் எ-று. (18)

இதுவுமது.

இதுகாலவரையறையின்றிப் பொதுப்படவுணர்த்துகின்றது.

311 ஏனறவுதயத்திற்கிரண்டனிடமாகதனின்
மூன்றுகடுங்கோட்கண்மூயல்வுளதாய்-தோன்றினவே
னன்றிதருங்கோனேக்கிற்றேனும்பிறந்தபிள்ளை
பொன்றிடுவனென்றேபுகல்.

(இ-ள்.) குருமுதலிய சுபர்நோக்க முள்ளவிடத்து முதயத்திற்கு 2-மிடத்தில் 3-கோட்கள் பாபக்கோட்களாயவை தானே பகைநீசக்கோட்களுமாய் நிற்கிற்பாலன் அரிட்டமாம் எ-று.

இதுவுமது

313 ஒன்றுதயத்தெட்டெட்டிரண்டிடத்துந்தீக்கோட்க
ளொன்றுபடத்தோன்றினுலவ்வாமரண-மொன்றுதயத்
தாறெட்டிற்சந்திரனையக்கடுங்கோள்காணுமேற்
கூறிட்டுப்போமுடலைக்கூற்று.

(இ-ள்.) உதயத்திற்கு 8-மிடமும், 8-மிடத்திற்கு 8 - மிடமான 3-மிடமுமாகிய 2-மிடத்தும் பாக்கோட்கள் நின்றால் பாலன் அரிட்டமா மப்பாபக்கோட்கள் தானே உதயத்திற்கு 6-மிடம் 8-மிடங்களில் நின்ற சந்திரனை நோக்கிற் பாலன் அரிட்டமாமென்று அறுதிகூறப்படும் எ-று. பின்னையது அறுதி கூறியவதனால் முன்னையது ஒட்டுதளாகக்கொள்க எ-று. (20)

மாதுரு பிதுரரிட்ட முணர்த்துகின்றது,

313 காரிதான்சேய்தான்கதிரவனைக்காணுமேற்
சாருநோய்தந்தைக்குச்சாவென்க-காரிசேய்
தண்மதியைக்காணுமேற்றாய்சாகும்பொன்காணி
லொண்மதியாற்சாவில்லையோர்.

(இ-ள்.) அங்காரகனுதல் சனியாதல்சூரியனைப்பார்த்தால்பிதுரு அரிட்டமாஞ் சந்திரனைப்பார்த்தால்மாதுருஅரிட்டமாங் குரு முதலிய சுபர்பார்வை மேற்படி சூரியர்குள்ளவிடத்து பிதுரரிட்டமின்மையாஞ் சந்திரற்குள்ள விடத்துமாது ரரிட்டமின்மையாம் எ-று. பாடனுரை இச்செய்யுளிற் கூறியதற்கொப்ப பிதுரு மாதுரரிட்ட நாரிட்டமெனின் பிதுருக்குமாதுரு வினரிட்டநாரிட்ட மென்று மய்ங்கவருமென்பது கருதிசோதிஷாள்வழங்கிவருகிற வழக்கத்துக் கொப்ப மாதுருபிதுரரிட்ட நாரிட்டமென்று நிலைமாறுபடுத்தினேம் மிட்படியே வருவனவற்றுள்ளுங் கண்டு கொள்க மேற்படிசூரியன் நட்பாட்சியுச்சங்களிலே தேறிநிற்கில் பிதுரரிட்டமென்பதுபிதுருசாட்டியமென்பதாகவுமுடியுமாகவே சாருநோய் தந்தைக்குச்சாவு என்று ஒட்டப்பட்டனர் இவ்விதி சந்திரனைக்கொண்டு மாதுருவிற்குஞ் சாருநோய் தாய்க்குச்சாவு என்று ஒட்டிக்கொள்க எ-று. (21)

மாதுருபிதுரு பாலபாந்தவாரிட்டம் உணர்த்துகின்றது.

314. ஐந்திற்புகர்காரியம்புலியாதித்தன்
பெந்துற்றுநிற்கப்பிறக்குமேற்-றந்தைக்குந்
தாய்க்குமிவன்றனக்குந் தன்குடிக்குங்கேடென்று
வாய்ப்புடன்கூறல்வழக்கு.

இ-ள். 5-மிடத்திற்சூரியன் நிற்கிற்பிதுருஅரிட்டமாம் சந்திரன் நிற்கில் மாதுருஅரிட்டமாம் சனிநிற்கில் பாலன் அரிட்டமாம் சுக்கிரன்நிற்கில் பாந்தவாள்அரிட்டமாம் எ-று. கூறல்வழக்கு என்று வழக்கத்தைதழீ இக்கோடலால் எதிர்நிரனிறையாகஎடுத்துக் கொண்டாம்இதிற்கூறியதாகிய 5-மிடத்தில் அங்காரகன்நிற்கில் பாந்தவாள் அரிட்டமாம் என்று பட்சாந்தரங்களிலேசொல்லப்பட்டிருக்கின்றனபாந்தவாள் என்றதைமாதுலாதிபாந்தவாள் என்று வருவித்துரைத்துக்கொள்க வருவனவற்றுள்ளும் இப்படியேயாம். (22)

மாதுருபிதுரு பாலபிராதுரரிட்டம் உணர்த்துகின்றது.

315. பிறந்ததற்காறினுமீரைந்தினுந்தீக்கோளாய்ச்
சுறந்தமதிகதிர் தாய் தந்தை-நிறைந்த
சனிசேயுடன்பிறந்தார்செவ்வாய்தானுகு
நினைசேர்மரணநினை.

இ-ள். 6-மிடத்திலாத 7-10-மிடத்திலாதல் பகைநீசக்கோட்களாய்சந்திரன் நிற்கில்மாதுருஅரிட்டமாம் சூரியன்நிற்கிற்பிதுரு அரிட்டமாம்சனி நிற்கிற்பாலன் அரிட்டமாம் அங்காரகன் நிற்கிற் பிராதுருஅரிட்டமாம் எ-று. தீக்கோளாய்ச்சிறந்தமதிஎன்று இகழ்ந்துகூறினமையால் பகைநீசம்பெற்ற சந்திரன் என்றதையன்றியும் அமரபட்சத்துச்சந்திரன் எனவும்படும் இதிற்கூறிய பகைநீசத்தையும் அமரபட்சத்தையும் மேற்கூறியவற்றுள்ளும் வருவனவற்றுள்ளும் பொருத்திக்கொள்க அமரபட்சத்தைஅமரபட்சம் என்பது மரூஉமொழியாம். (23)

மாதுருபிதுருபாலாரிட்டம் உணர்த்துகின்றது.

316. சந்திரனுக்கேழ்சேய்சனி தங்கிற்றாய்சாகும்
வந்தகதிர்க்கேழிற்பிதாமரணம்-வந்தங்
கிரண்டாறிரண்டிற்சனிசேயாவை
[illegible]

இ-ள். சந்திரனுக்கு 7-மிடத்தில் அங்காரகன் சனிநிற்க்கில் மாதுருஅரிட்டமாம் சூரியனுக்கு 7-மிடத்தில் அங்காரகன் சனிநிற்கில்பிதுருஅரிட்டமாம் உதயத்திற்கு 2-மிடம் 12-மிடங்களில் அங்காரன்சனிபாம்பு நிற்கிற் பாலன் அரிட்டமாம் எ-று. சனிக்கு 2-மிடம் 12-மிடங்களில் எனினும் அமையும். (24)

மேற்கூறியமாதுருபிதுரரிட்டத்தை மாதுருபிதுருசாட்டியம் என்று துவாபட்சமாக விலக்கி மாதுருபிதுரரிட்டத்திற் குப் பிறிதோர்விதி எடுத்துக் கூறுகின்றனர்.

317. பரிதிபனிமதிக்கங்கேழிற்சேய்காரி
பெரிதுநோய்தந்தைதாய்பேசிற்-பரிதிமதிக்
கீராறிரண்டிற்சனிசேயேலாங்கவற்குத்
தீராமரணமெனச்செப்பு.

இ-ள். சந்திரனுக்கு 7-மிடத்தில்அங்காரகன்சனிநிற்கில்மாதுரு சாட்டியமாம் சூரியனுக்கு 7-மிடத்தில் அங்காரகன் சனிநிற்கிற் பிதுருசாட்டியமாம் சந்திரனுக்கு 2-மிடம் 12-மிடங்களில் அங் காரன்சனிநிற்கில் மாதுருஅரிட்டமாம் சூரியனுக்கு 2-மிடம் 12-மிடங்களில் அங்காரகன் சனி நிற்கிற்பிதுரு அரிட்டமாம்-எ-று.

மாதுருபிதுருபாலாரிட்டம் உணர்த்துகின்றது.

318. பூசம்பூராடமிடைசித்திரையுமுத்திரமுன்
மாசற்றதந்தையொடுதாய்மரணம்-பேசி
லருக்கன்சனிபுகருமாங்கவற்றைநோக்கின்
முருக்குமகன்றந்தைதாயமுன்.

இ-ள். பூசம் பூராடம் இந்நாட்களின் நடுவிருகாற்களிற்பிறக் கிற்பிதுரு அரிட்டமாம் உத்திரம் சித்திரை இந்நாட்களின் முத லிருகாற்களிற் பிறக்கில் மாதுருஅரிட்டமாம் சூரியன்சுக்கிரன் சனிஇவற்றுள்1-முற்கூறியநாட்களைநோக்கிற் பிதுரு அரிட்ட மாதற்கு முன்னமேயும் பிற்கூறியநாட்களைநோக்கில் மாதுரு அரிட்டமாதற்கு முன்னமேயும் பாலன் அரிட்டமாம் எ-று. பேசில் என்று விதந்துகூறினமையால் ஈண்டுகூறியநாட்கள் 4-னுள்ளும் முதற்காலிற்பிறக்கிற்பிதுரு அரிட்டமாம் என்றும் 2-ங் காலிற்பிறக்கில் மாதுருஅரிட்டமாம்என்றும்3-ங்காலிற் பிறக்கிற் பாலன் அரிட்டமாம் என்றும் 4-ங்காலிற்பிறக்கிற் பாந்தவாள் அரிட்டாம் என்றுசொல்லப்படும். (26)

மாதுருபிதுருபாலபாந்தவா ரிட்டம் உணர்த்துகின்றது.

319 பூராடம்பூசமும்விற்கடகம்போதாகத்
தேரோன் புதன்வெள்ளிசேயுறினு-மூராடு
தந்தைதாய்பிள்ளையோடுதன்மாமன்சாமென்று
வந்தியாநேரேமதி.

(இ-ள்.) கடகவுதயத்திற் பூசம்உதயமாகவும் தனுசுதயத்திற் பூராடம் உதயமாகவும் பிறந்தவிடத்து-மேற்படிநாட்களைச்சூரியன் நோக்கிற்பிதுரு அரிட்டமாம் புதன் நோக்கில் மாதுரு அரிட்டமாம் சுக்கிரன் நோக்கிற்பாலன் அரிட்டமாம் அங்காரகன் நோக்கிற் பாந்தவாள் அரிட்டமாம்எ-று. வந்தியாநேரேமதி என்றுமிகுத்துக்கூறியவதனால் சிம்பம்உதயமாம் அதனைச்சூரியன்நோக்கிற்பிதுரு அரிட்டாம் என்றும்மிதுனம்கன்னி உதயமாம் அவற்றைப் புதன் நோக்கில் மாதுருஅரிட்டமாம் என்றும் ரிஷபம் துலாம் உதயமாய் அவற்றைச்சுக்கிரன்நோக்கிற் பாலன் அரிட்டமாம் என்றும்மேஷம் விருச்சிகம் உதயமாய் அவற்றை அங்காரகன்நோக்கிற் பாந்தவாள் அரிட்டமாம் என்றும் சொல்லப்படும். எ-று. (27)

பாலரிட்டமும் மாதுருவுக்கும் பாலனுக்குமான ஏகாரிட்டமும் பிதுருவுக்கும் பாலனுக்குமான ஏகாரிட்டமும் வெளிப் படையாகவும் குறிப்பாகவும் உணர்த்துகின்றது.

320 உள்ளுறைகொள்பாம்புதானுரையினெழப்பிறந்த
பிள்ளைசாம்பிதகன்முன்காணுதே-யுள்ள
மதியிரண்டெட்டீராறுமாறதற்கேழ்தீக்கோள்
கதிவகையாற்றுயொடுசாங்காண்

(இ-ள்.) குருமுதலிய சுபர்நோக்கம் இல்லாதவிடத்துபாம்பு உதயத்தில்நிற்கிற்பாலன்,அரிட்டமாம் மேற்படிஉதயத்திற்கு2-6-8-12-இவ்விடங்களிற் சந்திரன்நின்று அச்சந்திரனுக்கு 7மிடத்திற் பாபக் கோட்கள் நிற்கில் பாதுருவும் மாலனும் உடனுக்குடன் அறிட்டமாம் மேற்படி சந்திரனேபோலச் சூரியன்நின்று அச்சூரியனுக்கு 7-மிடத்திற் பாபக்கோட்கள்நிற்கில் பிதுருவும் பாலனும் உடனுக்குடன் அரிட்டம் ஆதலைஏகாரிட்டம் என்றது ஆக்கப்பெயர். (28)

மாதுருவுக்கும்பாலனுக்குமான ஏகாரிட்டம்உணர்த்துகின்றது

321 பிறையுதிப்பச்சேய்படினுஞ்சேயுதிப்பவந்தப்
பிறைபடினும்பீடுடையவெள்ளி-நிறைமதியு
நின்றுற்றுங்கோணோக்கிலையென்னிற்றுயொடுசெய்
கொன்கூற்றக்கொள்வகையாய்க்கூறு.

(இ-ள்.) குருமுதலிய சுபரநோக்கம்இல்லாதவிடத்து சந்திரன் உதித்து அங்காரகன் அஸ்தமிக்கினும் அங்காரகன் உதித்து சந்திரன் அஸ்தமிக்கினும் சந்திரன் அஸ்தமிக்கினும் மாதுருவம்பாலனும் உடனுக்குடன் அரிட்டமாம் எ-று. (29)

பிதுருவுக்கும்பாலனுக்குமானஏகாரிற்ட்டம்உணர்த்துகின்றது

322 கருதிப்பக்காரிபடினுமக்காரிக்
கெதிரிரவியேழின்வரினு-மிதுபோற்
புகரிரவிபுல்கிடினும்பொன்காணுதாகிற்
றகுமிறையுடன்மதலைகாம்.

(இ-ள்.) குருமுதலிய சுபர்நோக்கம் இல்லாதவிடத்து சூரியன் உதித்து சனி அஸ்தமிக்கினும்,சனிஉதித்து சூரியன் அஸ்தமிக்கினும்சூரியன் உதித்து சுக்கிரன் அஸ்தமிக்கினும் சுக்கிரன் உதித்து சூரியன் அஸ்தமிக்கினு பிதுருவும்பாலனும் உடனுக்குடன் அரிட்டமாம்-எ-று. (30)

மாதுருவுக்கும் பாலனுக்குமான ஏகாரிட்டமும் பிதுருவுக்கும் பாலனுக்குமான ஏகாரிட்டமும் முறையேவெளிப்படை யாகவும் குறிப்பாகவும் உணர்த்துகின்றது.

323 மூன்றுதீக்கோளும் பகைநீசந்தானகி
யூன்றுமதிநிற்கவுதிக்குமே லீன்றெடுத்த
தாயுமகவுடனேசாமென்றுசாற்றும்
வாயும்புலவோரறிந்து

(இ-ள்.) சூரியன் நீங்கலாகிய பாபக்கோட்கள் 3-ம் பகைநீசக் கோட்களாய் சந்திரனுடனேகூடி உதயத்தில் நிற்கில் மாதுருவும் பாலனும்உடனுக்குடன் அரிட்டமாம் இப்படியே மேற்கோட்கள் சூரியனுடனேகூடி உதயத்தில் நிற்கிற்பிதுரும் பாலனும் உடனுக் குடன் அரிட்டமாம் எ-று. (31)

மாருவுக்கும் பாலனுக்குமான ஏகாரிட்டமும் பிதுருவுக்கும் பாலனுக்குமான ஏகாரிட்டமும் பாலனுக்கு முடலும் குருடும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்துகின்றது.

324 ஆறின்மதியமதிற்கேழிற்றீக்கோளேல்
வீறுமகவொடுதாய்சாகு-மாடுறனின
றைந்தின்கட்டிக்கோளேல்கைக்கூன் மாறிரண்டில்
வந்திடக்கன்றேமதி.

(இ-ள்.) உதயத்திற்கு 6-மிடத்திற் சந்திரனும் அச்சந்திரனுக்கு 7-மிடத்திற் பாபக்கோட்களுமாக நிற்கில் மாதுருவும்பாலனும் உடனுக்குடன் அரிட்டமாம் இப்படியே உதயத்திற்கு 6-மிடத்திற் சூரியனும் அச்சூரியனுக்கு 7-மிடத்திற் பாபக்கோட்களுமாக நிர்க்கில் பிதுருவும் பாலனும் உடனுக்குடன் அரிட்டமாம் உதயத்திற்கு 6-மிடத்தில் சூரியனும் அச்சூரியனுக்கு 5-மிடத்திற் பாபக்கோட்களுமாக நிர்க்கினும் கைமுடனும் உதயத்திற்குப் 12-மிடத்தில் சந்திரன் நிர்க்கில் குருடாம் இப்படியே உதயத்திற்குப்12-மிடத்தில் சூரியன் நிற்கினு குருடாம்எ-று,கைமுடன் என்றதேபோலக் கால்முடனையும் சொல்லிக்கொள்க உறுப்புக்குறைகளும் அரிட்டத்தோடு சேர்த்துக் கூறினர் என்றறிக'

மேலே குருகு முடன் என்று தொகுத்தவற்றை முறையே வெளிப்படையாகவும் குறிப்பாகவும் வகுக்கின்றது.

325 ஆறிரண்டிற்றேரவன்றன்றேன் றின துவலக்கண்
மாறுமதியிடக்கண்மாயுமாந்-தேறி
யிரண்டுமுடனுங்குறையக்காணின்மகவின்க
ணிரண்டுமுடன் வீயுமென்.

(இ-ள்.) உதயத்திற்குப் 12-மிடத்திற் சூரியன் நிற்கில்வலது கண்குருடாம், சந்திரன் நிற்கில் இடதுகண் குருடாம் இவ் 2-கோட்களும் நிற்கில் 2-கண்களும் குருடாம் இப்படியே முடனையும் வகுக்கப்படும் எ-று. (38)

குறளுருவத்திற்குத்தனியே சிறப்பு விதியும்அக்குறளுருவமும் மேற்கூறிய குருடும் முடனும் ஆகிய இம் 3-ம்-முதலிய எண் வகை உறுப்புக்குறைகட்குப் பொதுவிதியும் உணர்த்துகின்றது.

326 சனியெழிச்சேய்படுவதா நில்த்துநிற்பி
னினியநிரனிறையே பாகன்-சனியும்
பிறந்தானகுறளுருவாந்தீக் கோட்கணோக்கிற்
சிறந்தாங்குதீங்குண்மை செப்பு.

(இ-ள்.) சனி உதித்து அங்காரகன் அஸ்தமிக்கினும் புதன் உதித்து சனி அஸ்தமிக்கினும் குறளுருவாகப் பிறப்பன் மேற்படி கோட்களை அல்லது உதயாஸ்தமானத்தைப் பாபக்கோட்கள் நோக்கிற் குறளுருவம் முதலிய எண்வகை உறுப்புக் குறைகளிலே ஒன்றுடையவனாகப் பிறப்பன்-எ-று. குறளுருவம் முதலிய எண்வகை உறுப்புக்குறைகளாவது குறளுருவம் குருடு, முடன், கூன், செவிடு ஊமை, உறுப்புமயக்கம், உறுப்பில் பிண்டம் இவைகளாம் இவற்றுள் குறளுருவமாவது சற்றேறக்குறைய 2-முழத்திக்குமேலே வளர்ச்சியின்றிய சரீரமாம் இதனை வடநூலாசிரியார் வாமநரூபம் என்பர் எ-று. (34)

குண்டகனையும் குருபுத்திரனையும் முறையே வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்துகின்றது.

327 ஓரையிரண்டனையுமொன்புகர் பொன்னேக்கின்றீக்
காரிதான்சேய்தான்கதிரவன்றான்-போராவந்
திங்களுடனிற்பச் செகத்திற்பிறந்தானோர்
றங்கள்கருவன்றே சாற்று.

(இ-ள்.) உதயம் ஆரூடம் இவற்றுள் 1-நிற்கிற் குரு முதலிய சுபர்நோக்கம் இல்லாதவிடத்து சூரியனாதல் அங்காரகனாதல் சனியாதல் பாம்பாதல் சந்திரனைக்கூடி நிற்கிற பிறந்த பிள்ளை குண்டகனும் உதயம் ஆரூடம் இவற்றுள் 1-ற்குக் குருமுதலிய சுபர்நோக்கம் உள்ளவிடத்துச் சூரியனாதல்,அங்காரகனாதல்,சனியாதல், பாம்பாதல், சந்திரனைகூடி நிற்கினும் கூடாவிடினும் பிறந்த பிள்ளை குருபுத்திரனும் எ-று. சந்திரனும் ஆரூடமேயாதலால் சந்திரனுக் குருமுதலிய சுபர்நோக்கம் என்று வருவிக்கப்படும் குண்டகனாவது சோரபத்தாவுக்குப் பிறந்த பிள்ளை குரு புத்திரனாவது பத்தாவுக்குப்பிறந்த பிள்ளை தங்கள் கருவன்றென்றே சாற்று என்று இகழ்ந்து கூறியவதனால் அக்கோள் சூரியனாகிற் ரபிராமணன் அல்லதுக்ஷத்திரியன் இப்படியானசோரபத்தாவுக்குப்

பிறந்தபிள்ளை என்றும் அங்காரகனாகில் வைசியன் அல்லது சூத்திரன் இப்படியான சோரபத்தாவுக்குபிறந்த பிள்ளையென்றும் சனியாகில் நான்கு வர்ணத்திற்கும் கீழ்ப்பட்ட வர்ணத்தானான சோரபத்தாவுக்குப் பிறந்தபிள்ளையென்றும் பாம்பாகிற் பஞ்சமனான சோரபத்தாவுக்குப்பிறந்தபிள்ளை என்றும் சொல்லப்படும் குண்டகன்என்றது அரிட்டத்தோடும் குருபுத்திரன் என்றது யோகத்தோடு ஒப்புமையாகத்தோன்றுகின்றமையால் மேற்படி குண்டகனையும் குருபுத்திரனை க்ஷன என்றும் மோழுபேர்த்தாம் தனுட்டியனுவது இவ்வளவு என்று மதிப்பிற்குள்ளடங்கிய தனத்திற்குடையவனுப் தனத்தியக்ஷனுவது மதிப்பிற்குள்ளடங்காத தனத்திற் குடையவனும் மேற்படி தனுட்டியனை தனவான் எனினும் தனத்தியக்ஷனை தனதிகிருகன்எனினும் ஒக்கும்முன்னொரு கோணிற்கிற் என்று ஒருமையாகக் கூறியவதனுல் முன்ஒருகோளும் பின் ஒருகோளும் நிற்றலே;போதுமாகவும் மற்றய -2-3-4- கோட்கள் நிற்றலாலே யுகுதலும் குறைதலும் இலையாகவும் யூகித்துகொள்க. (37)

கிராமாதிபத்தியம் தேசாதிபத்தியமும்.

330 ஈரிடத்ன முச்சமியலினரசானு
மோரிடத்தினுச்சமெனி லூராளு-மாருடத்திற்
பாவையாய்வந்து பிறக்கினவளவர்க்குத்
தேவியாமென்றிதனை செப்பு.

இ-ள். சுபத்கோள்உச்சக்கோளாய், ஆரூடத்திற்கு முன்னே நிற்கிற் கிராமாதிபத்தியாம முன்னும்பின்னுமாக நிற்கில்தேசாதிபதியாம் பெண்ணுகப்பிறக்குமிடத்து மேற்படி கிராமாதிபதியும் தேசாதிபதியுமா யுள்ளபேர்கட்கு மனைவியாவள்-எ-று. மனைவியாவள் என்ற இங்ஙனமே மற்றெல்லாவற்றையும் யூகித்துக்கொள்க எ-று. (38)

சேனுதிபத்தியமும் மண்டலாதிபத்தியமும்.

331 நாற்கோளுமுச்சத்து நண்ணிவரினுதயத்
தாற்றப்பிறந்தானரசானுந் தோற்றிய
வானுளுமூன்று கேளுச்சத்துவந்திடுமேற்
சேனுதிபதியாஞ் சிறந்து.

(இ-ள்.) உதயத்திற் சுபக்கோட்கள் உச்சக்கோட்களாய் 3கோட்கள் நிற்கிற்சேனுதிபதியாம் 4-கோட்கள் நிற்கில்மண்டலாதிபதியாம்-எ-று. (39)

கிருபாலுநற்கோளியலுமேயாகி
னருமாநிதிக்கிழவனும்.

(இ-ள்.) சுபக்கோள்உச்சக்கோளாய் சந்திரனுக்கு முன்னே நிற்கில தனட்டியனும் முன்னும் பின்னுமாக நிற்கில் தனத்தியட்சனும் எ-று. நிதிச்செல்வன் என்ற பராமரிப்பையும் நிதிக்கிழவன் என்ற உவமிப்பையும் நோக்கி முறையே தனட்டியன் என்றும் தனத்தியையும் அரிட்டபாகத்திற்கும் யோகபாகத்திற்கும்இடையிலே வைத்துக் கூறினமையாகக்கொள்க. (40)

யோகபாகம்.

யோகாவயோகம் உணர்த்துகின்றது.

332 எட்சிக்குருபுரனுங்கண்டமுதற்கோளுச்ச
மாட்சியிற்றீக்கோள்கவிக்கினு மேட்சியின்க
ணற்கோளுவாயினன்றாகு நதீக்கோளே
லொற்காதுதீமையுரை.

(இ-ள்.) உதயத்திற்கு முன்னும்பின்னும்நீர்க்கீழ்பாடுஉச்சி இவற்றுள்ளும் சுபக்கோட்கள் உச்சக்கோட்களாக நிற்கினும் கவிப்பிற் பாபக்கோட்கள் ஆட்சிக்கோட்களாக நிற்கினும் உதயத்திற் சுபக்கோட்கள் உச்சக்கோட்களாக அல்லது ஆட்சிக்கோட்களாக நிற்கினும்யோகவானும் உதயத்திற்கு முன்னும் பின்னும் நீர்க்கீழ்பாடு உச்சி இவற்றுள்ளும் பாபக்கோட்கள் நீசகோட்களாக நிற்கினும் கவிப்பிற் சுபக்கோட்கள் பகைக்கோட்களாக நிற்கினும் உதயத்திற் பாபக்கோட்கள் நீசக்கோட்களாக அல்லது பகைக்கோட்களாக நிற்கினும்அவயோகவானம் எ-று. எட்சி என்று சிறப்பித்தவத்தனல் உதயமேபோலஆருடத்தையும்சந்திரனையும் வருவித்துரைத்துக்கொள்க. (41)

மேல் உணர்த்தியயோகத்தையே தனதிபத்தியம்கிராமாதிபத்தியம் தேசாதிபத்தியம் சேனதிபத்தியம் மண்டலாதிபத்தியம் என 5-வகையாக வகுத்து அவற்றுள் முதலிலே தனதிபத்தியம் நிரூபிக்கின்றனர்.

333 மதிக்குப்பவரொழிய முன்னொருகோணிற்க
நிதிச்செல்வனதி நிகழ்நாநிற்கக்

அரசாளும் வாளுளும் என்று துவாப்பட்சம் கூறினமையா லிந் நூலாசிரியர் ஜந்நி ஜனன ஸௌக்யநாமம் என்கிற சனனபத்திரி கையை யிங்கே நினைத்துக்கொண்டார் போலுமாம் எ-று. (42)

இதுவரையிற் சொல்லிவந்த அரிட்டமும் யோகமும் வருவ தற்குக் காலம் மேற்படி யரிட்டத்தையும் யோகத்தையும்எவ்வெ வக்கோட்களாற் நியமிக்கப்பட்டனவோ அவ்வக்கோட்களின் தசாபுத்திகளைக்கொண்டே குறிக்கவேண்டுமாதலால் தசாபுத்தி கட்கு முதற்காரணமாயுள்ள அசுவினிமுதலிய 27-நாட்களையுந் தெரிந்து கோடற்கு நட்டசாதகம் கணிக்கின்றனர்.

334 ஆரூடந்தன்னுதயத்தை ரட்டித்து
நேரேவருங்காலிநிலை யெண்ணிப்-பாரங்
கிருந்தோரைகூட்டி யிருபத்தேழ்க்கிய
வருங்காண்மகற் பிறந்தான்.

(இ-ள்.) ஆரூடந்தொடங்கி உதயவரையில் எண்ணினதொ கையை இரட்டித்து அதனுடனே உதயத்திற்கு 2-மிராசி தொ டங்கி மேஷவரையிலும் ரிஷபந்தொடங்கி ஆரூடத்திற்கு 12-மி ராசிவரையிலு மெண்ணின தொகைகளைச்சேர்த்து 27-ல் கழித் தசேஷத்தை அசுவினிமுதலாக எண்ணிக்கண்டநாள் பிறந்தநா ளாம் எ-று. நட்டசாதகமாவது சன்மகாலத்தைஆரூடத்தினலே கண்டு சொல்வதாம் எ-று. (43)

மகப்பேறு காண்டம்

முற்றிற்று.

உ

முருககக்கடவுள் துணை.

பதினைலாவது

# சுரிகைகாண்டம்.

சுரிகைமுரிதலும் முரிதலின்மையும் முறையே வெளிப்படையாகவுங் குறிப்பாகவு முணர்த்து கின்றது.

335 அரவமதியுடனாய் நிற்கிலவன்கையிற்
சுரிகைமுரியுமெனச்சொல்க-தெரியுங்
கடுங்கோள்பகைநீசங் காணிலஃதே
யொடுங்காதுரைக்க வுணர்ந்து.

(இ-ள்.) பாம்பு சந்திரனுடனே கூடிநிக்கினும் பாம்பு முதலிய பாபக்கோட்கள் சந்திரனை நோக்கினும் சுரிகைமுரியு மிவ்வடைவு பிறழ்ந்து நிற்கில் முரிதலின்மையாம் எ-று. ஒடுங்காதுரைக்க வுணர்ந்து என்று குறிப்பித்தவதனால் இவ்வடைவு பிறழ்ந்து நிற்கில் முரிதலின்மையா மென்பது பெற்றாம். சுரிகையாவது உடையிற்கட்டும் வாளாகவே சுரிகையை யுடைவாளென்றுவழங்குகின்றனவாம் எ-று. (1)

சுரிகையில் முரிவிட முணர்த்துகின்றது.

336 ஏழுமுதலுமிறையின்க ணேயிறுமாஞ்
சூழிலீந்தொன்பானதன் கீழதாஞ்-சூழுங்காற்
பத்தோடுநான்கு நடுவாம்பன்னொன்றுமுன்
றெத்துமுனையென் றுரை.

(இ-ள்.) பாம்புசந்திரனுடனே கூடி நிற்றலும் பாம்பு முதலிய பாபக்கோட்கள் சந்திரனை நோக்குதலுமாகிய இடமானது உதயம் 7-மிடங்களாயின் முட்டியிலேயும் 5-மிடம் 9-மிடங்களாயின் முட்டியின் கீழேயும் 4-மிடம் 10-மிடஙகளாயின் நடுவேயும் 3-மிடம் 11-மிடங்களாயின் முனையிலேயுஞ்சுரிகை முரியுமாம் எ-று. 2-மிடம் 6-மிடம் 8-மிடம் 12-மிடங்களைக் கூறுமையால் இவைகளாயின் முரித லின்மையாகக்கொள்க எ-று. (2)

சுரிகை சோர்தலுங் கைசோர்த லின்மையும்
உணர்த்துகின்றது.

337 நற்கோட்கணட்பாட்சி யுச்சத்துநண்ணுமே
னற்பாலதாச்சுரிகை நண்ணுமா-நற்பா

லழிவாங்கோள்காணிலவன்கைச்சுரிகை
கழிவாமவன்கைக்கடந்து.

(இ-ள்.) உதயமாரூடமிவற்றைப்பாபக்கோட்கள் பகைநீசக் கோட்களாய்நோக்கிற் சுரிகைகைசோருஞ் சுபக்கோட்கணட் பாட்சி யுச்சக்கோட்களாய்நோக்கிற் கைசோர்தலின்மையாம் எ-று. இன்னதனைக்காணில் என்னாதுகாணில் என்றுபொதுப் படக்கூறினமையால் உதயமாரூடமிவற்றை என்பதுபெற்றாஞ் சுரிகைகைசோர்தலுங் கைசோர்தலின்மையாவது சுரிகைகையை விட்டுப்போதலின்மையுமாம். (3)

சுரிகையின் உடைமையுணர்த்துகின்றது.

337 தன்னேர்ஞகநோக்கிற்றன்னதாந்தற்பிரிந்து
பின்னேஞகநோக்கிற்பிறந்தா-மின்னே
கவிழ்ந்துநிலனேக்கிற்கையுடையான்சாகு
மவிழ்ந்துநிலஞ்சேர்வதறை.

(இ-ள்.) உதயமாரூட மிவற்றைஎதிர்ப்பார்வையுள்ளகோட் கள் பார்த்தால் தன்னுடைய தென்றும் புறப்பார்வையுள்ள கோட்கள் பார்த்தால் பிறருடையதென்றுங் கவிழ்ந்தபார்வையுள்ள கோட்கள் பார்த்தால் பொதுமையுடையதென்று மிஃதுடையான் சர்வனென்றுங் கொண்டிருக்கிற சுரிகையின் உடைமை சொல்லப்படும் எ-று. உடைமையாவது சொந்தமாம் இன்னதனை நோக்கிலென்னாது நோக்கிலென்று பொதுப்படக் கூறினமையால் உதயமாரூட மிவற்றை என்பது பெற்றாம். பொதுமையான பொருள் பூமியைச் சேர்வதோடொக்கு மாதலாற் பொதுமை யுடையது என்றற்கு நிலன்சேர்வது என்றார். சொல்லெனவே லால் மேற்பார்வையுள்ள கோட்கள்பார்த்தால் எதிர்ப்பார்வை யுள்ள கோட்களின் பார்வைக்குடையதேபோலவும் பக்கப்பார் வையுள்ள கோட்களின் பார்வைக்குடையதே போலவுஞ் சொல் லிக்கொள்க. அன்றியும் நற்பால தாச்சுரிகை கண்ணுமென்றுசிற ப்பித்தவதனால் நட்புக் காட்கள்பார்த்தால் நேசத்தாருடையதெ ன்றும் ஆட்சிக்கோட்கள் பார்த்தால் தன்னுடையதென்றும்உச் சக்கோட்கள் பார்த்தால் தன்னின் மிஞ்சினபேர்களுடையதென் றும் பகைக்கோட்கள்பார்த்தால் சத்துருக்களுடைய தென்றும் நீசக்கோட்கள் நோக்கில தனக்குக் கீழ்ப்படிந்த பேர்களுடைய தென்றுஞ் சுரிகையினுடைமை சொலப்படும் எ-று.

காயம்படுகையும் படாமையுமுணர்த்துகின்றது.

339. சென்றுகடுங்கோடிகழ்கயிற்றின்மேனிற்கக்
கன்றியவர்க்குவடுகாட்டுமே-சென்றோடித்
தீக்கோளுமத்திசையிற்சேரா துசேர்ந்தனவுந்
தூய்க்கோளேற்றாய்தென்றுசொல்

(இ-ள்.) பாபக்கோட்கள்நிற்கில் காயம்படும் பாபக்கோட்கள்நில்லாமலேயேசுபக்கோட்கள்நிற்கில் காயம்படாவாம் எ-று. பாபக்கோட்கள்நில்லாமலேயே சுபக்கோட்கள்நிற்கில் காயம்படாது என்றமையால்பாபக் கோட்கள்நின்று உடனேசுபக்கோட்கள்நிற்கில் அசைகாயம்படுமென்று யூகிக்கப்படு மசைகாயமாவது பட்டும்படாமையான காயம். (5)

சுரிகைகாண்டம்-முற்றிற்று.

உ

முருகக்கடவுள் துணை.

பதினோராவது

# சல்லிய காண்டம்.

முதற்பிரிவு.

சல்லியகணிதம் கணிக்கின்றது.

340. அப்போதுபெற்றவடி யிருபத்தெட்டெழுந்து
தப்பாமற் கூட்டித்தகராதி-தப்பாமற்
பன்னிப்பனிரண்டினிற் பதினாறுக்கீந்த
துன்னியவர்க்கேவர்முறை.

(இ-ள்.) சல்லியம்வினவினபொழுது அடியளந்து அவச்சாயை பதச்சாயை நீக்கி நின்ற அடித்தொகையுடனே 28-ஆகு தொகையும்மேஷந்தொடங்கியுதைய ராசியினுடைய தொகை யென்றுஞ் சேர்த்து 12-ற் பெருக்கி 16-க்கு ஈந்து நின்றசேஷத்தைக்கொண்டுஞ்சேஷம் இல்லாத விடத்துப்பெறுவானாய் நின்ற 16-யேகொண்டுஞ் சல்லியஞ் சொல்லப்படும் எ-று. அளந்தவடி. என்னாது பெற்றவடி என்றமையால் அவச்சாயை பதச்சாயை நீக்கி நின்ற அடித்தொகை என்பது பெறும் உதயத்தைச்சேர்தலும் 12ற்-பெருக்குதலு மொன்றை யொன்று பற்றலாய் வந்ததெனக்கருதி. அவற்றை ஒழுங்கினொடைப்பார்த்து விடப்பட்டதென்று எதிர்மறித்துக்கூறுவார்போல எழுந்துதப்பாமற்கூட்டித் தகராதிதப்பாமற் பன்னிப்பனிரண்டில் என்றுஞ்சேஷமிருக்கிற் சேஷத்தைக்கொண்டுஞ் சேஷம் இல்லாதவிடத்துப்பெறுவானாய் நின்ற 16-யே கொண்டுஞ்சல்லியஞ் சொல்லவேண்டியிருத்தலால் அது இது என்னாது பதினாறுக்கீந்தது என்று பொதுப்படக்கூறினர் என்பதூஉம் கண்டுகொள்க (1)

சல்லியம் 16-யும் வகுக்கின்றது.

341. உள்ளுமுறைதலை யோடன் பிட்டிகையும்
வள்ளோடு சுள்ளிமகிழ் தெய்வக்கெள்ளிய
சாம்பல் கரிசவந்தானியம் பொன் கற்றவிரோ
மான்கோடு நாய் சாடியாம்.

(இ-ள்.) தலைமண்டை எலும்பு செங்கல் மூளி சிறுகு விக்கிரகம் சாம்பல் கரி பிணம் தானியம் பொன் கல் கெளர [illegible] கொம்புசெத்தநாய் சாடி இவையே சல்லியம் 16-என்பனவாம் எ-று. இட்டிகைசெங்கல்லென்றறிக [illegible] கொள்க முதலாம். (2)

சல்லியமறிகையுஞ் சல்லியத்திலே நல்லனதீயனவு
முணர்த்துகின்றது.

342. ஆய்ந்தவையொன்றுதியவாம்பதினாறு
மேய்ந்த முறையே யினிதெண்ணி வாய்ந்தவதிற்
றானியம் பொன்கோடு தவளையவை நல்லனவா
மானபுலவோர் விளம்புமாறு.

(இ-ள்.) முற்கூறியசல்லியகணிதத்தினாலே சேஷமென்றுஞ் சேஷம் நில்லாதவிடத்துப் பெறுவானாய் நின்ற 16-றென்று மெடுக்கப்பெற்ற 1-முதல் 16-வரையினுமாகிய தொகையின் முறையே பிற்கூறிய தலை மண்டை முதல் சாடிவரையினுமாகிய சல்லியம் 16-யும்வைத்து எண்ணிக்கண்ட சல்லியமெதுவோ அதுவே வினவினார்க்குச்சொல்லவேண்டிய சல்லியமாம் அச்சல்லியமானது தானியம் பொன்விலங்கின் கொம்பு இம்மூன்றனுள் 1-றுகில் நல்லனவாம் மற்றுள்ள 13-னுள் 1-றுகில்தீயனவாம்-எ-று. வரலாறு 1-தலைமண்டை, 2-எலும்பு, 3-செங்கல், 4-ஓடு, 5-விறகு 6-விக்கிரகம், 7-சாம்பல், 8-கரி, 9-பிணம், 10-தானியம், 11-பொன், 12-கல், 13-தேரை, 14-விலங்கின்கொம்பு, 15-செத்தநாய் 16-சாடியிப்படியாம். சாடிஎன்றற்குச்சல்லிய மந்நிலத்தில் இல்லையென்றும் பொருளமைத்துக்கொள்க. (3)

சல்லியச்சக்கரமுஞ் சல்லிய இருப்பிடமுஞ் சல்லிய வடைப்பு நான்முகக்குறிப்பு முணர்த்துகின்றது.

343. அறையிலங்கு நான்காகவாயமேலேழ்தெற்
குறவரைந்த நான் கேழரையுட்-பிறையுரைந்து
நின்றவறைசல்லியமாநேரிருலாதியா
யொன்றிவருசக்கரத்தையோர்.

(இ-ள்.) கிழக்குமேற்கு 4-அறையும் வடக்கு தெற்கு 7-அறையுமாக்வரையைப்படா நின்ற சல்லிய சக்கரத்தின் அறை 28-னுள் ஞெஞ்சந்திரன் நின்ற நாளறையிலே சல்லியமிருப்பனவாமாதலால் அச்சந்திரன் நின்ற நாளறையை அறிதற்குக் கிருத்திகை முதலாய்க்கொண்டு அடைத்து வழங்கிவருகிற சல்லியச்சக்கரததைச் சாங்கோபாங்கமாகத்தானே தெரிந்துகொள்ளப்படும் எ-று. அபிஜித்துச்சேர்த்தெண்ணவேண்டிய நாட்கள் 28-ஆம். (4)

சல்லியசக்கரத்தின் அடைப்பு விதியும் முற்பகலடைப்பு. நாளுமுணர்த்துகின்றது

344 கார்த்திகை நாளாதியாய்க் கொண்டு கீழேழுறையுட்
சேர்த்தவிரண்டு விட்டு முன்றெண்ணிப் பார்த்துமே
ளுன்கைந்து மீண்டெண்ணி நண்ணுமதன் கீழிரண்டு
தான்கண்டு பின்வலமாய்ச்சார்

(இ-ள்.) கீழறை 7-னுள் முதலிலே2-அரைவிட்டு 3-ருமறை முதல் தெற்கு நோக்கி 3-அறையுமதற்கு மேலரை முதல்வடக்கு நோக்கி 4-அறையு மதற்குமேலரை முதல் தெற்கு நோக்கி 5-அரையு மதற்குகீழரை முதல கிழக்கு நோக்கி 2-அறையுமுடனே வலஞ்சுழலத் தென்கீழரை முதல் 14-அறையுமாயெண்ணிமுறையே முற்பகற்கு கிருத்திகை முதலாய்க்கொண்டு அடைப்பதாம். பிற்பகலு முன்னிரவும் பின்னிரவுமாகிய இவற்றின் அடைப்பு

நாட்களின் நாழிகைகளு மிருந்து பார்க்குந்திசையும் உணர்த்துகின்றது.

345 ஒன்றிய முன்பின்பகலிராவெண்கதிரோன்
சென்றுவலஞ் சேருந்திசை வழியேநின்ற
நிலையா மகமனுட நேரவிட்ட நாழி
யலைவிளிரண்டேயரைக்கால்.

(இ-ள்.) பிற்பகற்கு மகமும் முன்னிரவிற்கு அனுஷமும் பின்னிரவிற்குஅவிட்டமும்முதலாய்க்கொண்டுஅடைப்பதென்றுமொவ்வொரு நாட்கு நாழிகை 2-அறைக்காலென்றுஞ் சூரியன் வலமுற்றிருப்பதே இருந்துபார்க்கும்திசையென்றும்மறியப்படும் எ-று. முற்பகற்கு மேற்குமுகமும் பிற்பகற்குக் கிழக்கு முகமும் முன்னிரவிற்கு வடக்கு முகமும் பின்னிரவிற்குத் தெற்கு முகமுமிருந்து பார்க்கும்திசையாம் பிற்பகற்கு வடக்கு முகமும் முன்னிரவிற்குக் கிழக்குமுக மிப்படி யென்று பட்சாந்தரங்களிலே சொல்லப்படுவனமுள எ-று. (6)

சல்லியமிருப்பிடத்தைக் கிருத்திகையைக்கொண்டு கூறுவதே போலமற்றெல்லாநாட்களையுங் கொண்டுகூறுவதாமென்பது உணர்த்துகின்றது.

346 உன்றுமிருன் முதலா எண்ணிய சக்கரத்து
ளொன்றுமதிநாளறையிலுற்றன்-போலென்று

முதயத்திலுற்ற நாளோர்ந்து முறையெண்ணி
மதியத்தைக்கண்டுமெதி.

(இ-ள்.) கிருத்திகை முதலாய்க்கொண்டு அடைத்தமுற் பகற்சக்கரத்திற் சந்திரன் நின்ற நாளறையிலே சல்லிய மிருப்பன போல அந்த கிருத்திகையுமற்றை 27-நாள்களிரண்டேயரைக்கால் நாழிகைக்கு ஒவ்வொன்றாயுதிக்குமியல் பிற்றாதலால் அங்ஙனமுதித்த உரோகணிமுதலிய ஆறுநாட்கள் முதலாய்க்கொண்டுஅடைக்கவேண்டிய முற்பகற்சக்கரத்திலும் மகமுதலிய 7-நாட்கள்முதலாய்க்கொண்டு அடைக்கவேண்டிய பிற்பகசக்கரத்திலு மனுஷமுதலிய 7-நாட்கள்முதலாய்க்கொண்டு அடைக்கவேண்டிய முன்னிரவு சக்கரத்திலுமவிட்ட முதலிய 7-நாட்கள்முதலாய்க்கொண்டு அடைக்கவேண்டிய பின்னிரவு சக்கரத்திலுஞ் சந்திரன் நின்ற நாளறையிலெ சல்லிய மிருப்பனவாகத் தெரிந்துகொள்ளப்படும்.

சல்லியமிருப்பிடத்தை மேலே தன்னுதய நாட்களைக்கொண்டு கூறியதேபோல இராசியுதய நாட்களையுங்கொண்டு கூறலாமென்பதுணர்த்துகின்றது.

347 உரைத்தெழுமோரையுளுற்றநாடன்னை
நிரைத்த விருலறையில் வைத்தாங்-குரைத்த
முறையானே யெண்ணி முழுமதி நின்ற
வரைதானுஞ் சல்லியமென்றாற்

(இ-ள்.) இராசி ஒன்றிற்கு மும்மூன்று நாட்களுடைத்தாதலால் உதித்த இராசியினிடமாக உதித்த நாளை முற்பகற்சக்காத்திலே கிருத்திகையை நிறுத்தி வைத்ததுபோல நிறுத்தியதனதடைப்பினடுவே இதற்குப்பின்னுள்ள மற்றைய 27-நாட்களையுமடைத்துசந்திரன் நின்ற நாளறையிலே சல்லிய மிருப்பனவாமென்றுஞ் சொல்லப்படும் எ-று. (8)

2-ம் பிரிவு

சல்லிய முண்டில்லை யென்பதுணர்த்தி ஆட்டினெலும்பு

348 ஓர்த்துரைத்த கண்டத்துணர்கோளைத்தீக்கோள்கள்
பார்த்துறமேற்சல்லியந்தான் பார்க்குருளுஞ்-சீர்த்தக்க
திங்கள் சேயங்குடனாய் நிற்குமேற் சேயுரைநா
ளங்காட்டின்காளென்பறி.

(இ-ள்.) கண்டங்களிலேநின்ற சுபக்கோட்களைப் பாபக்கோட்கள் கூடிநிற்கினும் நோக்கினும் சல்லியம்உண்டென்றும் கூடிநிற்றலும் நோக்கலும் இல்லையாகிற் சல்லியும் இல்லையென்றும் கண்டங்களிலே நின்றசந்திரனை அங்காரகன் கூடிநிற்கினும் நோக்கினும் அங்காரகன்நின்ற நாளறையிலே ஆட்டினெலும்பு உண்டென்றும் சொல்லப்படும் எ-று. கால்என்றதுஏழனுருபாம் காலெலும்புஎன்று பயன்கொள்வாறுமுளர் எ-று. 9

பார்ப்பாரெலும்பு பசுவெலும்பு அல்லது செங்கல்பொன் இவற்றுள் 1-உண்டென்கின்றது.

349 பகருமதியோடுபைம்பொன்னுண்டாக
நிகரிலாகண்டத்துணிற்பச்-சுகமாகப்
பன்னியநூர்பார்ப்பார் பசுவென்புங்கன்முற்றம்
பொன்னுமாம்பொன்னறையுட்புக்கு.

(இ-ள்.) கண்டங்களிலேநின்றசந்திரனைக் குருகூடிநிற்கினும் நோக்கினும் குருநின்ற நாளறையிலே பார்ப்பாரெலும்பு பசுவெலும்பு அல்லது செங்கற் பொன் இவற்றுள் 1-உண்டென்று சொல்லப்படும் எ-று. கல்என்று பொதுப்படக் கூறினாராயினும் குருவுக்குடையது செங்கல்லேயாம் ஆதலால் செங்கல் என்பது பெற்றும் முற்றம் என்றது முன்றிலாம் முத்தம்என்று பயன்கொள்வாறுமுளர் எ-று. 10

விக்கிரகம் எருமையெலும்பு உண்டென்கிறது.

350 என்றுமொருகண்டத்திருசுடருமாகுமே
லொன்றியதெய்வங்கதிரறையுள்-வென்றிய
நீலன்மதியுடனுய்நிற்கிற்சனியறையின்
பாலெருமையென்பென்று பார்.

(இ-ள்.) கண்டங்களிலே நின்றசந்திரனைச் சூரியன் கூடிநிற்கினும் நோக்கினும் சூரியன்நின்ற நாளறையிலே எருமை யெலும்பு உண்டென்றும் சொல்லப்படும் எ-று. இருசுடர் என்று சிறப்பித்தவதனுல் சூரியன் நின்ற நாளறையிலே தலைமண்டை உண்டென்றும் தருவித்துரைத்துக்கொள்க எ-று. 11

பாம்பாதல் புற்றுதல் பாம்பினெலும்பாதல் உண்டென்கின்றது

351 விளம்புமதியரவங்கண்டத்துமேவில்
விளம்புமதியரவநாளில்-விளம்பிய
நச்சரவம்புற்றுமதனெலும்புமுண்டென்த
மெச்சவிடதப்பாது மெய்.

(இ-ள்.) கண்டங்களிலே நின்ற சந்திரனைப்பாம்பு கூடி நிற்கினும் நோக்கினும் பாம்புநின்றநாளறையிலே பாம்பாதல்புற்றுதல் பாம்பினெலும்பாதல் உண்டென்று சொல்லப்படும் எ-று. இச்செய்யுளில் 2-டாமடிபின் 2-டாஞ்சீரல் மதிஎன்றது முன்னிலையாசைச்சொல்லாம் அதனைச்சந்திரன் என்றதாகக்கருதிச் சந்திரன் நின்ற நாளறையிலே ஷை சல்லியம் எண்டென்று சொல்வாறுமுளர் எ-று. 12

நாயெலும்புவெள்ளி உண்டென்கின்றது.

352 புந்திமதியுடனேபுல்குமேனும்பினென்பு
புந்தியுறைநாளறையிற் போதருமான்-முந்திய
வெள்ளிமதியுடனுய்நிற்குமேல்வெண்பாது
வெள்ளியறையில்விளம்பு.

(இ-ள்.) கண்டங்களிலே சந்திரனைப்புதன்கூடி நிற்கினும் நோக்கினும் புதன்நின்றநாளறையிலே நாயெலும்பு உணடென்றும் சுக்கிரன்கூடிநிற்கினும் நோக்கினும் சுக்கிரன்நின்ற நாளறையிலே வெள்ளிஉண்டென்றும் சொல்லப்படும் எ-று. 13

சல்லியம்வினவினமனையின் அனுபவம் உணர்த்துகின்றது

353 நன்றொருகண்டத்து நற்கோளைத்தீக்கோட்கள்
சென்றுறநோக்குமேற்றீயனவா-நன்றாக
வாயுங்கருமமுடியாநிலநாளான்
சாயுமவனல்கூர்ந்துதான்.

(இ-ள்.) கண்டங்களிலே நின்ற சுபக் கோட்களைப் பாபக் கோட்கள் கூடி நிற்கினும் நோக்கினும் சல்லியம் வினவினமனையை உடையானுக்கு நினைத்த கருமம் முடியாது அந்த மனையின் ஆட்சியும் இல்லாமையாய்ப் போம் மேற்படி அவன் வறுமை

துன்பப் படுவன் எ-று. சல்லியம் உண்டில்லென்று முற்கூறிய செய்யுளின் கருமத்தையே கொணர்ந்து இங்கேமனையின் அனுபவம் என்பதாகக்கூறினமையால் சல்லியம் உண்டென்றதற்கு அனுபவமென்னலாம் என்பார்க்கும் அஃதுகூறல்வேண்டும் என்பதுதெரிவித்தார்போலுமாம் எ-று. 14

இதுவுமது.

354 இயம்பியநாற்கண்டத்தியாதுமொன்றின்றிப்
பயந்தருஞ்சேய்பாம்பருக்கனீலன்-பயந்தனவேற்
றீமையதாநற்கோட்கணன்மையதாந்தேர்ந்துணர்ந்த
மேன்மதியோர்கண்டவிதி.

(இ-ள்.) கண்டங்களிலே சுபக்கோட்களின்றிப்பாபக்கோட்கள் நிற்கினும் அவற்றைநோக்கினும் தீமையுண்டாம் கண்டங்களிலே பாபக்கோட்களின்றிச் சுபக்கோட்கள் நிற்கினும் அவற்றைநோக்கினும்நன்மையுண்டாம் எ-று. சுபக்கோட்களின்றிப் பாபக்கோட்கள் நிற்கில்என்றமையால் சுபக்கோட்களும் பாபக்கோட்களுமாகக் கூடிநிற்கில்நன்மையுந்தீமையும் விரவிநடக்கும் அல்லது நன்மைசிலகாலமும் தீமைசிலகாலமுமாகநடக்குமென்று இங்ஙனமாகவருவித்துரைத்துக்கொள்க. எ-று. 15

மேற்கூறியவற்றுள்ளே நன்மைப்பலனை மேன்மேலாக விவரிக்கின்றது.

355 தானமதிவெள்ளிதண்டாக்குருபுந்தி
யூனமில்கண்டத்துளவாகிற்-றூனே
வனந்தருஞ்செல்வமகிழ்ந்துநிலனுளுந்
துளங்குநன்னோக்கானுஞ்சொல்.

(இ-ள்.) கண்டங்களிலே பாபக்கோட்களின்றிச்சுபக்கோட்கள் நிற்கினும் அவற்றைநோக்கினும் மனைவளப்பமும்செல்வமும் அதிகரிக்கும் மனையின்ஆட்சியும் உண்டாம்-எ-று. நோக்கானுஞ் சொல்என்ற இழிவுசிறப்பும்மையால் நோக்கலின்பலனைச் சமுதாயமாகவும் நிற்றலின்பலனைவிசேஷமாகவும் கொள்க இவ்விதி எல்லாவற்றுள்ளும் யூகிக்கப்படும். எ-று. 16

மேற்கூறியநன்மைதீமைகள் என்னும் அனுபவத்தை வேறொருவகையால் எடுத்துணர்த்துகின்றனர்.

356 சொல்லியவுச்சியின்கணற்கோளேற்சோர்வின்றிச்
சொல்லியபூமியினிதாளுஞ்-சொல்லிய

தீக்கோளேற்றெய்வம்பசாசோடிராக்கதர்க
ணேக்காராய்ந்தெண்ணிநுவல்.

(இ-ள்.) உச்சிகண்டத்திலேசுபக்கோட்கள்நிற்கினும்அதனை நோக்கினும் அம்மனையைத்தானே அனுபவிப்பன் பாபக்கோட்கள்நிற்கினும்அதனை நோக்கினும் பிறர் அனுபவிப்பர் அல்லது தெய்வம்பசாசம் இராக்ஷசம் இவைகள் அனுபவிக்கும் என்றமையால் பாபக்கோட்களுக்குப்பிறர் அனுபவிப்பர்என்பதுபெற்ரும் இதிற்கூறியவிதி உச்சிகண்டத்திற்குச் சிறப்புவிதியாகவும் முன்னர்கூறிய விதிகள் பொதுவிதியாவுங்கொள்க. எ-று. 17

சல்லியம் இருத்தலின் ஆழம்குறிக்கின்றது.

357 எண்ணியசல்லியத்தினுழமியம்புங்காற்
கண்ணியகண்டத்திற்கடுங்கோட்கட்-கெண்ணுகதிர்
நீண்முழமதாகுமதினிற்குமேன்மற்றவற்றைச்
சாணெனில்நன்மையாற்சாற்று

(இ-ள்.) சல்லியம் எவ்வெக்கோட்களால் நியமிக்கப்பட்டனவோ அவ்வக்கோட்களின் கதிர் எத்தனையுண்டு அத்தனையும் கூறுதலால் சாண் 2-கொண்டது முழமாம் என்கிறவகையிலே எண்ணியவட்டம்முழமாகவும் சேஷித்துநின்றது உள்ளபடியே சாணுகவுங்கொண்டுநட்பாட்சியுச்சம்பகை நீசத்திலே ஏறுவன குறைவன அறிந்து இத்தனைமுழம் இத்தனைசாண் ஆழத்திலே இருக்கிறது என்றுசல்லியம் இருத்தலின் ஆழம்குறிக்கப்படும் எ-று. நிலநன்மையாற் சாற்றுஎன்றுசிறப்பித்தவதனுல் உச்சக்கோட்களின்கதிர் சாணுகவும் ஆட்சிக்கோட்களின் கதிர்முழமாகவும்நட்புக்கோட்களின் கதிர் ஆண்மட்டாகவும், பகைநீசக்கோட்களின் கதிர்பாதாளமாகவும் வருவித்துரைத்துக்கொள்க. எ-று.

சல்லியம்இருத்தலின் ஆழம்வேறொருவகையாற்
குறிக்கின்றது.

358 ஆய்ந்தமனையகலநீளமளந்தகோல்
வாய்ந்தவைதம்முள்ளேதாமாறித்-தோய்ந்த
வெருதெறிதேட்கீந்த முழமாமொழிந்து
வரும்வற்றையாரிரண்டின்மாறு

இதுவுமது.

369 மாறியேமுன்முறையிற் கொண்டதுசாண்மற்றெழிந்த
தீயாண்டுன்மாறியந் தீந்தங்குலமாய்த்-தேறி
யெனைத்தாமுழஞ்சாணேடங்குலங் கொண்டாழ
மினைத்தாகுமென்ப தியம்பு.

இவை 2-ம் ஒரு தொடர்.

(இ-ள்.) சல்லியம் வினவினமனையின் அகலநீளங்களைத்தனி த்தனியே சிறுகோலால் அளந்து அத்தொகை 2-னையும் ஒன்றி லே ஒன்றாகப் பெருக்கி 28-க்கு ஈந்தவட்டம் முழமாம்மீந்தசேஷ த்தைப் 12-ற் பெருக்கி 28-க்கு ஈந்த வட்டம் அங்குலமாம் இவ் வகையைக்கொண்டு முழமும் சாணும் அங்குலமும் எத்தனையாம் என்றறிந்து இத்தனை முதம் இத்தனை சாண் இத்தனை அங்குலம் என்று சல்லியம் இருத்தலின் ஆழம் குறிக்கப்படும் எ-று. அகல நீளம் என்றது கிழக்கு மேற்கும் வடக்கு தெற்குமாம் கோல் என்றது பவுத்திரவிரல் மட்டமாக அளந்ததாகிய முழம் 2-கொ ண்டதாம் ரிஷபம் முதல் விருச்சிகவரையினும் ஆனதறிக்கால்-28 ஆம் ஆகவே எருத்தெறிதேட்கீந்த என்றனர் எ-று. 19-20

சல்லியகாண்டம் முற்றிற்று.

பதினாறுவது

# கீழ்நீர்க்காண்டம்.

முதற்பிரிவு.

நீர் உண்டென்பது பொதுவியாதியாக உணர்த்தி உடனே மடங்
காநீர் உண்டென்றும் கீழ் நீர் உண்டென்றும்
பிரித் துணர்த்துகின்றனர்.

360 குடமீன்மகரங் குளிரேறுகோற்றே
ளுடனேழ்சலத்தின் வடிவாமடவாய்
பிறைசுங்கனுகிற் பெருநீர்பொன்புந்தி
யுறைகீள்நீராமென் றறி.

(இ-ள்.) உதயம் ஆரூடம் நீர்க்கீழ் ஆனவை ரிஷபம் கடகம் துலாம் விருச்சிகம் மகரம் கும்பம் மீனம் இவைகளாகில் நீர்உண்டென்றும் அவற்றிற் சந்திரன் இவைகள் நிற்கினும் அவற்றை நோக்கினும் மடங்கா நீர் உண்டென்றும் புதன் குரு இவைகள் நிற்கினும் அவற்றை நோக்கினும் கீழ் நீர் உண்டென்றும் சொல்லப்படும் எ-று. இன்னவை என்னுது பொதுப்படக் கூறினமையால் எல்லாவற்றிற்கும் பொதுமையதாகிய உதயம் ஆரூடம்ஆகிய இவற்றையும் நீர்க்குரிமையாயுள்ள நீர்க்கீழையும் குறிப்பித்ததாம் என்பது கொண்டு உதயம் ஆரூடம் நீர்க்கீழ் ஆனவைஎன்பது பெற்றும் மடங்கா நீராவது வடிக்கவடிக்க வடிதலின்றிய நீராம்கீழ் நீராவது வடித்தளவிலே வடிகின்ற நீராம் இக்காண்டத்தைக் கீழ் நீர்க்காண்டம் என்றதாவது ஆற்று நீர் ஏறிநீர்களைக் கூருது கீழிருந்து தோன்றுகின்ற நீரைக் கூறுகின்ற காண்டம் என்றதாம் கீழிருந்தென்றதைப் பூமியின் கீழிருந்தென்றுபொருளுரைத்துக்கொள்க எ-று. 1

மேல் உணர்த்திய மடங்காநீரை வேறொருவகையா னெடுத்
துணர்த்தி நீரின்மையையும் கீழூற்று மேலூற்றுகளையும்
உணர்த்து கின்றனர்.

361 காரியிரவிசேய் காணினுநீரில்லை
நேராவுகாணி நெடுநீரா-நீருடைக்கோள்
கீழாகிற்கீழ்நீரா மேலாகின்மேனீராந்
தாழாநிலவலிதாற் சாற்று.

(இ-ள்.) உதயம் ஆரூடம் நீர்க்கீழ்களிற் பாம்பு நிற்கினும் அவற்றை நோக்கினும் மடங்கா நீர்உண்டென்றும் சூரியன் அங்காரகன்சனி இவைகள் நிற்கினும் அவற்றை நோக்கினும் நீர் இல்லையென்றும் நீர்க்கோட்கள் ஆரூடத்தில் நின்று நீரல்லாத கோட்கள் கவிப்பில் நிற்கிற் கீழூற்றென்றும் நீர்க்கோட்கள்கவிப்பில் நின்று நீரல்லாத கோட்கள் ஆரூடத்தில் நிற்கில் மேலூற்றென்றும் சொல்லப்படும்-எ-று. கவிப்பு ஆரூடத்திற்குக்குடை போல்வதால் அக்கவிப்பைமேலென்றும்ஆரூடத்தைக் கீழென்றும் பொருள்படுத்திக்கூறினாராகக் கண்டுகொள்க நிலவலிதாற் சாற்று என்றவதனால் ஊற்றுகளின் திடநுட்பங்களைநட்பாட்சியுச்சம் பகைநீசங்களாலே தேறிச் சொல்லப்படும் தாழாஎன்று சிறப்பித்தவதனால் ஊற்றுகளின் பக்கங்களை அவற்றைநியமிக்கப் பட்ட கோட்களின் திக்குகளிலேசொல்லப்படும் இச்செய்யுளிலேகீழ் நீரென்று கூறி உடனே மேனீரென்றும் கூறியவதனால் முறையே கீழூற்று மேலூற்று என்பது பெற்றும் கீழ்நீர் என்றது கீழ்நீர்தான் என்றும் மேனீர்தான் என்றது மேனீர் தான் என்றும் வாதிப்பாறுமுளர் மேனீராவது தோன்றிமறைகின்ற நீராம். எ-று. 2

மேல் உணர்த்திய கீழூற்றுமேலூற்றுகள் மாறுபாடாமாறு உணர்த்துகின்றது.

362 சாற்றியநீரில்கோள் கீழாகிநீருடைக்கோ
ளேற்றதற்குமேல்வந்தேனுமாகி-லாற்றரவ
மேனீரங்கில்லையெனுவெண்குடையிற்றீயனவேற்
றுல்நீரங்கில்லை யெனுச்சாற்று

(இ-ள்.) பாம்பு உதயத்தில் நின்றவிடத்து நீர்க்கோட்கள் ஆரூடத்தில் நின்று நீரல்லாத கோட்கள் கவிப்பில் நிற்கில் மேலூற்றென்றும் நீர்க்கோட்கள் கவிப்பில் நின்று நீரல்லாத கோட்கள் ஆரூடத்தில் நிற்கிற்கீழூற்றென்றும் இங்ஙனம் மாறுபடுத்திச்சொல்லப்படும் எ-று. பாம்பு உதயத்தில்நிற்கவே கீழூற்றுமேலூற்றாகவும் மேலூற்று கீழூற்றாகவும் மாறுபடும் என்பது கருத்து எ-று. 3

ஊற்றுகட்குப் புறநடை உணர்த்துகின்றது.

363 நீர்நிலனுநீர்கோளுஞ்சேரிலந்நீர்நிலன்மேற்
பாரிலிணடயூற்றும்பரிந்துரைக்க-வோருங்கா
ணீர்நிலனுநீரில்கோணின்றிடுதனுச்சயமே
லோருங்கீழூற்றென்றுறை.

(இ-ள்.) உதயம் ஆரூடம் நீர்க்கீழ் ஆனவை நீரிராசிகளாய் அவற்றில் நீர்க்கோட்கள் நிற்கில் மேலூற்றென்னும் நீரல்லாத கோட்கள்நிற்கிற் கீழூற்றென்றும் சொல்லப்படும்-எ-று. இடையிலே ஊறுகின்ற ஊற்றையும் மேலூற்றென்றே சொல்லுதல்விதி என்றது தெரிவித்தற்பொருட்டு மேலூற்றென்றுகூறி அதனையே மறுதலித்து இடையூற்றென்றும் கூறினர். எ-று. 4

2-ம், பிரிவு.

மடங்காநீர் கீழ்நீர் இவைகளை உணர்த்தின்றது.

364. பொன்னுமதியும் புணர்ந்தொருகண்டத்திற்
றுன்னிற்கிணறுநெடுநீரா-மன்னு
மதிவெள்ளியுண்டேன் மலைமேலுங் கீழ்நீர்
விதிவகையானுதல் விளம்பு.

(இ-ள்.) கண்டங்களிலே நின்ற சந்திரனைக்குருகூடி நிற்கினும் நோக்கினும்மடங்காநீர் உண்டென்றும் சுக்கிரன் கூடி நிற்கினும் நோக்கினும் கீழ்நீர்உண்டென்றும் சொல்லப்படும்-எ-று. விதிவகையானதால் விளம்பு என்றவமயால் குருநின்ற நாளறையிலே கீழ்நீர் உண்டென்றும் தெரிந்துகொள்க. எ-று. 5

மேல் உணர்த்திய மடங்காநீரை வேறொருவகையானெடுத்துணர்த்தி உடனே பழங்கிணறு உணர்ததுகின்றனர்-

365 சாரதியும்பீதகனுந்தன்வதிபுங்கண்டத்து
ணேரிழ்பழங்கிணறுநேர்வாருந்-தேறிற
பரிவேடம்பானாதியோடுள்ளுரைக்காணிற்
பெறிதாநீரென்றும்பெறும்.

(இ-ள்.) கண்டங்களிலே நின்ற சந்திரனைப்பரிவேடம் கூடி நிற்கினும் நோக்கினும் மடங்காநீர் உண்டென்றும் புதன்குருகூடி நிற்கினும் நோக்கினும் பழங்கிணறு உண்டென்றும் செரல்லப்படும் எ-று. குருவுக்குமடங்கா நீருண்டென்று முற்கூறி இங்கே பழங்கிணறுண்டென்று துவாபட்சம் கூறியவதனால் இவ் 2-யுமே சொல்லப்படும் இங்ஙனம் சொல்லப்படும் என்றற்குகிணறு நெடு நீராம் என்று முன்னே தானே எச்சரித்தும் இருக்கின்லனர் காண்க வருவனவற்றுள்ளும் இங்ஙனமே யூகிக்கப்படும் எ-று.

மேல்உணர்த்திய மடங்காநீரை வேறொருவகையானெடுத்
துணர்த்தி உடனேபழங்குழிகளும் ஓடையும்
உணர்த்துகின்றனர்.

366. வில்லோடுவெட்டம் வியன்றாமநுட்பங்க
ளொல்கிற்பழங்குழிக ளோடையாஞ்-சொல்லிய
சுங்கன்மதியாகிற் சோர்வின்றிநீருடைமை
சங்கையில்லாவுகையிற்சாற்று

(இ-ள்.) கண்டங்களிலே சந்திரனுதல்சுக்கிரனுதல்நிற்கினும் அவற்றைநோக்கினும் மடங்காநீர் உண்டென்றும் இந்திரதனுசு பரிவேடம்தூமம் நுட்பம் இவைகள்நிற்கினும் அவற்றைநோக்கினும் பழங்குழிகளாதல் ஓடையாதல் உண்டென்றும் சொல்லப் படும் எ-று. 7

உப்புவரி கரைவலிவு நீர்த்தெளிவு இவைகளை
உணர்த்துகின்றது.

367. உப்புவரியாங்கதிருக்குள்ளுறைதல்வட்டமேல்
செப்புங்கிணறுசிதையாது-தப்பின்
மதிபுகருந்தெண்ணீர்வரையிடத்தேதோன்றும்
விதியானேநீர்கள்விளம்பு

(இ-ள்.) கண்டங்களிலே சூரியன்நிற்கினும் நோக்கினும் உப்புவரிஎன்றும் பரிவேடம்நிற்கினும் நோக்கினும் கரைவலிவு என்றும் சந்திரன்சுக்கிரன் இவைகள்நிற்கினும்நோக்கினும் நீர்த் தெளிவுஎன்றும் சந்திரன்சுக்கிரன் அல்லாதமற்றய கோட்கள் நிற்கினும் நோக்கினும் நீர்த்தெளிவின்மைஎன்றும் சொல்லப் படும்-எ-று. 8

வெள்ளுவரி கரையழிவு இடையூற்றுகீழ்மோளை
இவைகளை உணர்த்துகின்றது.

368. வெள்ளுவரிசேய்க்குமிகவுங்கரையழிவா
மொள்ளியமேதையுளதாகி-லொள்ளிய
கோதையரிதண்டு கூடிலிடையூற்றே
யாதலுங்கீழ்மோளை யறி

(இ-ள்.) கண்டங்களிலே அங்காரகன்நிற்கினும்நோக்கினும் வெள்ளுவரிஎன்றும் புதன்நிற்கினும் நோக்கினும் கரையழிவு

என்றும் அக்கண்டம் மிதுனம் கன்னி சிம்பம் இவைகளாகில் இடையூற்று என்றும்கீழ்மோளை என்றும் சொல்லப்படும் எ-று கீழ்தல்பிளத்தல் மோளையாவது பிளப்பு இதனை மோழையென்று வழங்குகின்றனர் கீழ்பிளப்புமீமிசைப்பதம்புதன் நிற்கினும்நோக்கினும் கரையழிவுஎன்றுபிரித்துக்கூறினமையால் புதனல்லாத கோட்கள் நிற்கினும் நோக்கினும்கரைவலிவு என்றுவருவித்துரைத்துக்கொள்க அறிஎன்று நினைப்பித்தவதனால் எவ்வெக்கோட்களின்நிற்றலும் நோக்கலும் ஆகியசம்பந்தம்உளவோ அவ்வக் கோட்களின்சுவைகளையும் யூகித்துக்கொள்க. எ-று. 9

பெருநீர்மோளை கல் எலும்பு இவைகளை
உணர்த்துகின்றது.

369. கரியவனும்பாம்புமுடனிற்கிற்காணிற்
பெருநீரின்மோளையுளதா-மரிதாகப்
பொன்னோக்கிற்கல்லாம்பிறக்கோட்கணோக்குமே
லென்பாகுமென்பதியம்பு

(இ-ள்.) கண்டங்களிலே சனிபாம்பு இவைகள்நிற்கினும் நோக்கினும் பெருநீர்மோளைஎன்றும் குருநிற்கினும்நோக்கினும் கல்உண்டென்றும் மற்றயகோட்கள் நிற்கினும் நோக்கினும் எலும்பு உண்டென்றும்சொல்லப்படும்-எ-று. 10

கிணற்றினுழக்குறிப்பின் முதற்பங்கில் நீரும் நடுப்பங்கில் நீரும்கடைப்பங்கில்நீரும் உணர்த்தி 8-முழத்திலேநீரும் பாறையடியில்நீரும் திப்பைபடியில்நீரும் ஆகியஇவைகளை உடனுணர்த்துகின்றனர்.

370. தூதன்கடைநீராந்தூய்மதிக்குமுன்புநீ
ரேதில்பகலவனுக் கெண்முழமாந்-தீதின்றிக்
கன்னியுறைபாம்பிற்குப் பாறையாங்காரிதா
னென்னிலொருமேடாகுமென்

(இ-ள்.) கிணற்றினுழக்குறிப்பிற் சந்திரனுக்கு முதற்பங்கில்நீரும்சந்திரனும் புதனும்அல்லாத கோட்களுக்கு நடுப்பங்கில் நீரும் புதனுக்குகடைப்பங்கில்நீரும் சூரியனுக்கு 8-முழத்தில் நீரும் கன்னியில்நின்றபாம்பிற்குப் பாறையடியிற்நீரும் சனிக்குத் திப்பையடியில்நீரும் சொல்லப்படும்-எ-று. 11

கிணற்றினாழம் குறிக்கின்றது.

371 கூவத்தினாழங்குறிக்குங்கால்கோட்கதிர்கண்
மேவுமிராசிவியின்கதிர்க-ளோர்வின்றி
யெத்தனையாஞ்சாணுமுழமுமிசைந்துரைக்க
னத்தனையேயர்ழங்களாம்.

(இ-ள்.) கீழ்நீரை எவ்வெக்கோட்களால் நியமிக்கப்பட்டனவோ அவ்வக்கோட்களின் கதிர்களும்மேற்படி கோட்கள் நின்றுள்ளவை எவ்வெவ்விராசிகளோ அவ்வவ்விராசிகளின் கதிர்களும் எத்தனையோ அத்தனையும் சாண்களாதல் சாண்களைமுழமாக்கி நின்றதைச்சாணாகக்கொண்டு இத்தனைமுழம் இத்தனை சாண்என்று கிணற்றினாழம் குறிக்கப்படும் எ-று. ஆழங்களாம் என்று ஒருமையைப்பன்மையாகக் கூறியவதனால் இதற்குச்சல்லியத்தினாழமும் உரித்தாம் என்பதூஉமகண்டுகொள்க எ-று.

கீழ்நீர்வினவின நிலத்தின்கண்வுள்ள அத்தாட்சி
உணர்த்துகின்றது

372 செக்கதிரோன்கடோகுந்தீக்கோளேன்முள்ளாகுந்
தெங்குபனைபூகந்தேமாபொன்-றிங்கட்கு
வாழைகொடிபுகர்க்குவான் பலவாமலுக்குத்
தாழைபுகல்புற்றரவுசாற்று.

(இ-ள்.) சூரியனுக்குக்காடாம் அங்காரகன்சனிஇவைகட்கு முட்கலாம் பாம்பிற்குத்தாழை புற்று இவைகளாம் சந்திரனுக்கு வாழையாம் புதனுக்குபலாவாம் குருவுக்குத் தென்னைபனைகமுகுமா இவைகளாம் சுக்கிரனுக்குக்கொடிகளாம் எ-று. 13

கிணற்றின் அனுபவம் உணர்த்துகின்றது.

373 நல்லக்கோணன்னயத்தானோக்குமேற்பூமியுஞ்
சொல்லிற்றனேதேயாஞ்சோர்வின்றிச்-சொல்லுங்
கடுங்கோள்கடைநிலனைய்க்காணினிலனே
விடுங்காணவனைவிரைந்து.

(இ-ள்.) கீழ்நீர்க்காகஇதுவரையிற்கூறிய இடங்களிற் சுபக்கோட்கள் நட்பாட்சியுச்சக்கோட்களாக நிற்பினும் அவற்றை நோக்கினும் கிணற்றையுடையான் அனுபவிப்பன் பாபக்கோட்கள் பகைநீசக்கோட்களாய் நிற்கினும் அவற்றை நோக்கினும் பிறர் அனுபவிப்பார் எ-று. 14

இதுவுமது.

374 கொட்டுபொடிருமாண்கூடுவதேற்றீக்கொளுவு
முட்காதுபூமியுடையார்பிறரா-முட்காது
நன்ருங்கோடாமுதித்துநோக்குமேலங்கிலனே
குன்ருப்பலன்கொடுத்தல்கூறு.

(இ-ள்.) மேல்உணர்த்திய இடங்கள் சரவிராசிகளும்உபய விராசிகளும்ாகவே நேரிடினும் அவற்றை நட்பாட்சி யுச்சம் பெற்ற சுபக்கோட்களது நோக்கம் உள்ளவிடத்து உடையான் நன்மை அடைகுவன் என்றும் கிணற்றைத்தானேஅனுபவிப்பன் என்றும் நோக்கம்இல்லாத விடத்துதீமை அடைகுவன் என்றும் சொல்லப்படும் எ-று. சரவிராசிகளேயும் உபயவிராசிகளேயும் பொல்லாங்கு கூறியவதனல் அவ்விடங்கள் ஸ்திரவிராசிளாக இருத்தல் முக்கியமாகக்கெள்க எ-று.

கிணறு இருக்குந் திசையின்பலனே உணர்த்துகின்றது

375 அருக்கனெரிமக்களுயிரகற்றுமாங்கே
யிருக்குநமன்செல்வர்கள்சாமென்க-நெருக்கு
நிருதியடியாரடைவர்நேர்வருணனுகின்
மருவுபயிர்நோவாகும்வந்து.

இதுவுமது.

376 வந்தமுறையேமனைவாழ்வுண்டாகுமிகு
மந்தமிலா தானியமும்பொன்னுகு-முந்திப்
பிரமன்மேற்கூவம்பெருஞ்செல்வஞ்செய்யுந்
துறவுங்கிணறுமெனச்சொல்.

இவை 2-ம் ஒருதொடர்.

(இ-ள்.) உடையான் இருக்கும் ஊர்க்கும்மனைக்கும்கிணறு இருக்குந்திசைகிழக்கு தென்கிழக்காகில் மக்களழிவாம் தெற்காகினும் அதுவேயாம் தென்மேற்காகில் அடிமைகளுண்டாய் மேற்காகிற் பயிர்கள் நோய்கொள்ளும் வடமேற்காகில் குடும்பவிருத்தியாம் வடக்காகில் தானியவிருத்தியாம் வடகிழக்காகில் தனப்பிராப்த்தி யுண்டாம் பிரமஸ்தானமாகில் லட்சிமிகடாட்ச முண்

டாம் எ-று. நூலாசிரியர் கூவம் என்று பலதரமும்சொல்லியவந்ததனால் இவ்விதிகள் அனைத்தும் கிணற்றிற்கே உரித்ததாக ஐயமுறுவாரும் சிலருளர் என்பதுகருதி அவ்வையம் ஒழித்தற்பொருட்டு தூரவுங்கிணறும்என்றார். 16-17

வினவினன் நிலங்கீறுதலிற் பலம் உணர்த்துகின்றது.

377 கூறுஞ்சிறுவிரலிற் கோதையார் தாம்பெருகுஞ்
சீறுமணி விரலிற் சேல்வமாங்-கீறி
லொருவிரலாற் கீறினுற்றபரதேச
மிருவிரலாற் கீறிலியமென்.

(இ-ள்.) கீழ்நீர் வினவினனை அந்நிலத்தைக் கீறிக்காட்டென்றளவிற் சிறுவிரலாற் கீறிற் பெண்பேறுண்டாம் அணிவிரலாற் கீறிற் சம்பத்துண்டாம் நடுவிரலாற்கீறில் தேசசஞ்சாரம் வரும்சுட்டுவிரல் பெருவிரலாற்கீறிற் பொல்லாங்குவிளையும்-எ-று.

கிணற்றிற்குத் துவக்கமாதங்களின் பலன்
உணர்த்துகின்றது.

378 சித்திரைவைகாசியானியு நீர் காட்டு
முத்தமமாகப் பயனருந்து-மத்திபமா
மாடியுமாவணியுமல்லாத கோட்களா
ளுடியுரைகீழ்நீர்நயந்து

(இ-ள்.) கிணற்றிற்குத் துவக்கமாதங்கள்சித்திரை வைகாசி ஆனி இவைகளாகிற் பெருநீருண்டாம் உத்தமமாம் ஆடி ஆவணி இவைகளாகில் அற்பநீருண்டாம் மத்திபமாம் மற்றயமாதங்களாகில் நீரின்மையாம் அதமமாம் இப்படியே கோட்களின் அமைவும் உண்டாதல்கண்டு அறுதி சொல்லப்படும்-எ-று. கோட்களாளுடி யுரை என்றவதனால் மாதங்கள்போலக்கோட்களின் அமைவும் இல்லாதவிடத்து அறுதி சொல்லப்படாவாம் என்பதூஉம் கண்டுகொள்க-எ-று. 19

கீள்நீர்க்காண்டம் முற்றிற்று.

பதினேழாவது

# படைவரவுகாண்டம்

படைவருதலும்வராமையும்உணர்த்துகின்றது.

379 திரிவனதோன்றுங்காற்றிக்கோட்களுந்தில்
வரலும்படைவரல்வராமை-தெரியின்
வலத்ததிருமாண்பாகிவத்திரக்கோளுக்கிற்
றுலக்கவழி மீட்சி யெனச்சொல்

(இ-ள்.) பாபக்கோட்கள் உதயத்திற்கு 5-மிடத்தில் நிற்ற லாவதும் அதனை நோக்கலாவதும் உள்ளவிடத்து மேற்படி உத யம் சரவிராசியாகிற் படைவரும் என்றும் ஸ்திரவிராசியாகில் வராது என்றும் உபயவிராசியாகில் வந்து வழியில் மீண்டுபோம் என்றும் சொல்லப்படும்-எ-று. உபயவிராசியைச்சொல்லுமிடத் தே பாபக்கோட்கள் என்றற்குவக்கிரக்கோள் என்றுகுறிப்பித்த வதனுல்அங்காரகனைக் கொண்டுவந்து வழியில்மீண்டுபோம் என் றதை அறுதி கூறப்படும் வலத்தது ஸ்திரவிராசிக்குப் பெயரு யிற்று எ-று. 1

படைவருதலும் வழியில் மீளுதலும் வேருெருவகையால் எடுத்துணர்த்துகின்றனர்.

380 அலவன்குடங்தேண்மீனன் கெழினுநீர்க்கீழ்
நிலவினுநின்றிடையின்மீளு-நிலவிற்
குருகாரிசேவிரவிகொட்பவற்குறேழி
னெருகிற்படைவருதனேர்.

(இ-ள்.) சரவிராசி உதயமாய் அதிற்சூரியன் அங்காரகன் குரு சனி இவைகள் நிற்கினும் அதனை நோக்கினும்உதயத்திற்கு 6-மிடம் 7-மிடம் இவைகள் ஆரூடமாகினும் படைவரும்என்றும் கடகம் விருச்சிகம் கும்பம் மீனம் இவைகள் உதயமாகினும்நீர்க் கிழாகிலும் வந்து வழியில் மீண்டு போம் என்றும் சொல்லப் படும் எ-று. நெருங்கில் என்றதின் ஙகர ஒற்றுகெட்டது - எ-று.

படைவருதலும் வாராமையும் உணர்த்துகின்றது

381 பாகன்பரிதியோடாற்றிற் படைவரவு
வேகமுடனுண்டாம் விளம்புங்கா-லேகக்

குருவாறு நான்கிவற்றுட்கூடாதார் சேனை
வரவியாதுமில்லைமதி.

(இ-ள்.) உதயம் ஆரூடம் இவற்றுள் சூரியனாதல் நிற்கிற் படைவரும் என்றும் உதயம் ஆரூடம் இவற்றிற்கு 4-மிடத்தி லாதல் 9-மிடத்திலாதல் குருநிற்கில் வராது என்றும் சொல்லப் படும்-எ-று.

படைவருதலும் படைவந்து சிறைசாய்த்துப்போதலும்பொ ருள் பறித்துப்போதலும் உணர்த்துகின்றது.

382. ஐந்தாறு பன்னொன்றிற்பன்னிரண்டு மூன்றிவற்றின்
வந்துசனிதோன்றி நிற்குமேல்-வந்தானே
பெண்ணும் பொருளுங்கொண்டேகு மிரண்டாகிற்
பண்ணும்படை வரவுபார்.

(இ-ள்.) சனி உதயாரூடங்கட்கு 2-மிடத்தில் நிற்கிற்படை வரும்என்றும் 3-5-6-11-12-இவ்விடங்களில் நிற்கிற் படைவந்து சிறைசாய்த்துப்போம பொருள் பறித்துப்போத என்று சொல் லப்படும் எ-று. 4

படைவந்து சிறையும் பொருளும் பரிகொடுத்துப்போதலும் சந்தாதலும் பயம இன்மையும் உணர்த்துகின்றது.

383 ஆறின்கண்வெள்ளியமன்றிச்சந்தாகும
வேறுயநான்கைந்தின் மேல் வருவோன்-கூறுய
பெண்ணும பொருளுங்கொடுத்துப் பிறகுறுமே
ழெண்ணிய தீங்கின்மை யியம்பு.

(இ-ள்.) சுக்கிரன் உதயாரூடங்கட்கு 4-5-இவ்விடங்களில் நிற்கிற்படைவந்து சிறையும் பொருளும் பறிகொடுத்துப்போம் என்றும்6-மிடத்தில் நிற்தற் சந்தாம என்றும 7-மிடத்தில்நிற்கிற பயம் இல்லையென்றும் சொல்லப்படும்-எ-று. 5

படைவாரமையும் படைவந்து சிறைசாய்த்துப்போதல் பொ ருள்பறித்துப்போதலும் மாற்றானுக்கு வலிவு மிகுதலும் உணர்த்துகின்றது.

384. ஐந்திற்சனிவந்தான் வெல்லுமாமாறிரண்டி
லைந்திரண்டுபன்னொன்றிலாகு மேல்-வந்தானே

பெண்பொருள்கொண்டேகும பிறங்கிரண்டுநான்குமுன்
றெண்படையீங்கில்லைவரவென்.

(இ-ள்.) சனி உதயாரூடங்கட்கு 2-3-4-8-இவ்விடங்களில் நிற்கிற்படைவராது என்றும்-0-11-12-இவ்விடங்களில் நிற்கிற் படைவந்து சிறைசாய்த்துப்போம் பொருள் பரித்துப்போம் என்றும் 5-விடத்தில் நிற்கிற் மாற்ருனுக்கு வலிவு மிகும் என்றும் சொல்லப்படும் எ-று. 6

மாற்ருன் கிளையும் படையும் அழிந்துபோதலன்றியும் சிறைபறி
கொடுத்தலும தலைவன் சாதலும உணர்த்துகின்றது.

385. வாளிரவிபன்ஞென்றில் வந்தடையில் வந்தவன்ருன்
கேளிர்படைபெண்ணிழந்து கெட்டோடுமேவாளிரவி
பந்தித்தெழுந்து பகைநீசமாகுமேற்
சந்தித்து நின்றவனேசாம.

(இ-ள்.) சூரியன் உதயரூடங்கட்குப் 11-மிடத்தில் நிற்கிற் மாற்ருன் கிளையும் படையும் அழிந்துபோதலன்றியும் சிறைபறி கொடுப்பன் என்றும் பகைநீசம் பெற்று உதயத்தில் நிற்கில் தலைவன் சாவன்என்றும் சொல்லப்படும்-எ-று. 7

படைவருதலும் வராமையும் வந்து உறவாதலும் பகைகோட
லும் உணர்த்துகின்றது.

368. பார்க்கவனும்பரிதியாறிற் படைவரவுண்
டார்க்குமிவை நட்பாகினட்பாகுஞ்-சீர்த்த
குருவாறு நானகி வற்றுட் கூடாதார் சேனை
வரவியாதுமில்லைமதி.

(இ-ள்.) உதயாரூடங்கட்கு 6-மிடத்திற் சூரியன் சுக்கிரன் இவைநிற்கிற் படைவரும் என்றும் நட்புபெற்மு நிற்கில் உறவாம என்றும்பகைபெற்று நிற்கிற் பகைகொள்ளும் என்றும் 4-6-இவ் விடங்களிற்குரு நிற்கிற் படைவராது என்றும் சொல்லப்படும்-எ-று. நட்பாகினட்பாம எனவே பகையாகிற் பகைகொள்ளும் என்பதுபெற்ரும. 8

படைவந்து உறவாவதுபோல இருந்து நாடுநகரங்களைக் கைக்
கொள்ளுதற்கு வழிபண்ணுதலும் வழியில் மீளுதலும்
உணர்த்துகின்றது.

387. கொட்பின் மதிநிற்கக் கொடபுதயமாகி
னட்பாலர்வந்து நனிகோடல்-கட்கிடமா
முட்குமிருமாண்பின் மதியோரையுற்றெழுமே
லுட்குந் தனிவழியின் மீண்டு.

(இ-ள்.) சந்திரன் சரவிராசியில் நிற்க அச்சரவிராசிதானே உதயமாயின் படைவந்து உறவாவதுபோல் இருந்து நாடுநகரங்களைக் கைக்கொள்ளுதற்கு வழிபண்ணுமென்று முபயவிராசியில் நிற்க அவ்வுபயவிராசிதானே உதயமாயின் வழியில் மீளுமென்றுஞ் சொல்லப்படும் எ-று. 9

தலைவனுக்கு மாற்றானுக்கும் வெற்றிதோல்விகள் காணுமாறு உணர்த்துகின்றது.

388 ஆரூடத்துநட்பாட்சியுச்சக்கோளாகுமேற்
சேரிடத்துநின்றான்செருவெல்லு-நேரடுத்தச்
சிந்தாக்கவிப்பிறசிறந்தாங்கவையாகில்
வந்தாற்கேவென்றிவரும்.

(இ-ள்.) நட்பாட்சியுச்சக் கோட்கள் ஆரூடத்தில் நிற்கில் தலைவன் வெல்லுவன் மாற்றான் தோற்பனென்றும் கவிப்பில் நிற்கில் மாற்றான் வெல்லுவன் தலைவன் தோற்பனென்றுஞ்சொல்லப்படும் எ-று. தலைவன் வெல்லுவனெனவே மாற்றான் தோற்பனென்று மாற்றான் வெல்லுவனெனவே தலைவன் தோற்பனென்றும் வருவிக்கப்பட்டது சேரிடத்துஎன்றதைசேருஇடத்து என்று பிரித்துரைத்துக் கொள்க சேருஇடமாவது யுத்தகளமாம் நின்றானென்றது தலைவனுக்கும் வந்தானென்றது மாற்றானுக்கும் பெயர்களாயிற்று வருவனவற்றுள்ளு மிவை கண்டுகொள்க எ-று

இதுவுமது.

389 வந்தவனினிற்கப்பகைநீசக்கோள்வருமேல்
வந்ததற்குநின்றான்மடிவாகு-முந்திக்
கவிப்பிற்பகைநீசங் காணுமேல்வந்தா
னவிப்பட்டழியுமாங்கே.

(இ-ள்.) பகைநீசக்கோட்கள் ஆரூடத்தில் நிற்கில் தலைவன் தோற்பான் மாற்றான் வெல்லுவனென்றுங் கவிப்பில் நிற்கில்மாற்றான் தோற்பன் தலைவன் வெல்லுவ னென்றுஞ் சொல்லப்படும் எ-று. வந்தவற்கு நின்றான்மடிவாகு மென்றவதனால் மடிவனென்றதைத் தோற்பனென்று பயன்கொடலாயிற்று எ-று. 10

இதுவுமது.

390 குன்றுதவாருடத்திற்கோள்வலிதாய்நிற்குமே
னின்றானெருக்குகளிச்சயமே-நின்றாங்கே

குன்றுக்கவிப்பினிற்கோள்வலிதேற்போர்வலிதாய்ச்
சென்றுனேவெல்லுஞ்செரு.

(இ-ள்.) ஆரூடத்தில்நின்ற கோட்கள் வலிதுள்ளனவாயின் தலைவன் வெல்லுவன் மாற்றான் தோற்பனென்றுங் கவிப்பில் நின்ற கோட்கள் வலிதுள்ளனவாயின் மாற்றான்வெல்லுவன் தலைவன் தோற்பனென்றுஞ் சொல்லப்படும் எ-று. குன்றுதலென்று சிறப்பித்தவதனால் நின்ற கோட்களையேபோல அதிபதிக்கோட்களையுங் கொண்டு சொல்லப்படும் எ-று. 12

இதுவுமது.

391 பாகன்முன்னாகப் பரிதியதுபின்னா
யேகிலிருந்தா னிகல்வெல்லும்-பாகனவன்
பின்னாகமுன்செல்லிற்பேணாதுமேல்வந்த
வொன்னார்க்கே வென்றியுறை.

(இ-ள்.) புதன் சூரியனுக்கு எதிரேநிற்கில்தலைவன் வெல்லுவன மாற்றான் தோற்பனென்றும் பின்னே நிற்கில் மாற்றான் வெல்லுவன் தலைவன் றோற்பனென்றுஞ் சொல்லப்படும் எ-று முன்னாவது ஆரூடவிராசி முதல் 6-மிராசி வரையினுமாம் பின்னாவது 7-மிராசிமுதற் 12-மிராசி வரையினுமாம் எ-று. 13

மேல்உணர்த்திவந்த வெற்றிதோல்விகளுடனே யுத்தமுஞ்சந்துமுணர்த்துகின்றது.

392 முன்னெழுச்சிநற்கோண் முளைவந்தான்றுள்வெல்லான்
பின்னெழுச்சிநின்றான்பேரழியு-முன்னிய
மக்களிற்றீக்கோள்வரிற்போராமற்றியற்றுட்
புக்கநற்கோள்சந்தாகப்பூட்டு.

(இ-ள்.) சுபக்கோட்கள் சிரோதய விராசியினிடமாக உதிக்கில் தலைவன் வெல்லுவன் மாற்றான்றோர்பனெனவும் பிருட்டோதய விராசியினிடமாயுதிப்பன் மாற்றான்வெல்லுவன் றலைவன் றோர்பனெனவு மிருகாலிராசியினிடமாய்ப் பாபக்கோட்கள்உதிக்கில் யுத்தமுண்டெனவுஞ் சுபக்கோட்கள் உதிக்கில் சந்தாமென் சொல்லப்படும் எ-று. சந்தாவது யுத்தத்திலே எதிராது சமாதானத்திற்கு வருமதாம் எ-று. 14

மேல்உணர்த்தியயுத்தமுஞ் சந்தும்வேறொருவகையால்
உணர்த்துகின்றது.

393. கவிழ்ந்தெழுமோரையெழுச்சியிற்றீக்கோண்
மகிழ்ந்துடனுய்வர்ந்தெழுவதேனுங்-கவிழ்ந்த
விலங்கொடுதீக்கோளெழினும்போருண்டா
நலம்படுகோள்சந்தாகநாட்டு

(இ-ள்.) பிருட்டோதயவிராசியினிடமாக அல்லதுநாற்காலி ராசியினிடமாய்ப்பாபக்கோட்கள் உதித்தால் யுத்தமுண்டென வுஞ் சுபக்கோட்கள் உதித்தால் சந்தாமெனவுஞ் சொல்லப்படும் எ-று. கவிழ்ந்தெழுமோரை என்றதைப்பலகாலிராசிஎனினுமொ க்கும். கவிழ்ந்துமகிழ்ந்துஎன்றவற்றுள்ளே விகரத்திற்குக்கிரகம் வந்தது உயிரெதுகையாகக்கொள்க. எ-று. 15

தலைவன்மாற்றானிடம் திறைகொடுத்தலுந் திரைகோடலு
முணர்த்துகின்றது.

394. ஒன்பானேடெட்டேழொருமூன்றிவையெழிந்து
வன்பாயசெவ்வாய்வருமாகி-லன்பிற்
செருவுற்றான்பொன்கொடுக்குஞ்சேய்நில்லாதாகிற்
செருவுற்றான்வெல்லுஞ்செறிந்து.

(இ-ள்.) அங்காரகன் 3-7-8-9 இவைநீங்கலாக மற்றைய இடங்களில்நிற்கில் தலைவன்திறைகொடுப்பன் மேற்படி இடங் களில்நிற்கிற்றிறைகொள்ளுவன் எ-று. இங்கே வெல்லுவனென் றது திறைகொள்ளுவனென்கிறசொல்லை விளக்கிற்று. எ-று. 16

தலைவன்தோல்வியடைதலுஞ் சந்தாதலும்யுத்தம் விளைவித்தலும்
திறைகொடுத்தலும் மாற்றானிராயுதனாலு
முணர்த்துகின்றது.

395. மூன்றைந்தில்வெய்யோன்முரணழியுந்தன்சேனை
தோன்றியதுநற்பாகிற்சந்தாகு-மான்றமைந்த
நான்கெனிற்றான்பொன் கொடுப்பனுன்மூன்றின்மேல்வந்
வான்கருவிபாடாகும்வந்து.

(இ-ள்.) சூரியனுதயாரூடங்கட்கு 3-5-இவ்விடங்களில்நிற் கில் தலைவன் றோற்பனெனவுமச்சூரியனட்புப்பெற்று நிற்கில் சந்

தாவனெனவும் பகைபெற்றுநிற்கில் யுத்தம்விளைவிப்பனெனவும் 4-மிடத்தில்நிற்கிற்றிறைகொடுப்பனெனவும் 12-மிடத்தில்நிற்கில் மாற்ருனிராயதனனெனவுஞ்சொல்லப்படும் எ-று. 17

மாற்ருன்வெற்றியடைதலுஞ் சந்தாதலும் புறங்கொடுத்தலு முணர்த்துகின்றது.

396. தேரோன்சேய்காரியெழுங்காற்றிரும்பாது
நேராகின்மேல்வருவோன்போர்வெல்லு-நேராய
புந்திபுகரெழுங்காறசந்தாகும்பொன்னெழுங்கால்
வந்தவனேகும்வழக்கு.

(இ-ள்.) உதயத்திற்சூரியனங்காரகன்சனி இவைநிற்பினும் நோக்கினு மாற்ருன்வெற்றிபடைவனெனவும் புதன் சுக்கிரன் இவைநிற்கினும் நோக்கினுஞ்சந்தாவனெனவுங் குருநிற்பினும் நோக்கினும் புறங்கொடுப்பனெனவுஞ்சொல்லப்படும்எ-று. புறங் கொடுத்தலாவதுதோற்ருேடுதலாம். எ-று. 18

மாற்ருன்வலிவுகுன்றுதலுஞ்சந்தாதலும் நிராயுதனுகிப்புறங் கொடுத்தலு முணர்த்துகின்றது.

397. ஐந்துமூன்றீராறீரைந்தினிலந்தணன்
வந்தானேல்வந்தான்வலியழியுஞ்-சந்திரண்டிற்
பொன்னிற்கிலாகும்புதன்சசிபன்னென்றின்
மன்னிறகில்வந்தான்போமாய்ந்து

(இ-ள்.) குருஉதயாரூடங்கட்கு 3-5-10-12-இவ்விடங்களில் நிற்கில்மாற்ருன்வலிகுறைவன் 2-மிடத்தில்நிற்கில் சந்தாவன்சந் திரன்புதன்இவை 11-மிடத்தில்நிராயுதனுய்ப்புறங்கொடுப்பன்-

திறைகோடலும் வெற்றியடைதலுமாகிய இவற்றிற்குப்பிறி தோர்விதி உணர்த்துகின்றது.

398. நின்ருன்பொருள்வந்தான்கொள்ளும்புதனைந்திற
சென்ருன்பொருள்கொடுக்குமூன்றிரண்டே-னின்ருறகு
வெற்றியாமாறிரண்டின்மிக்கபதினொன்றேன்
மற்றொருவன்வெல்லும்வழக்கு.

(இ-ள்.) புதன் 5-மிடத்தில் நிற்கில் மாற்றான் தலைவனிடத் தேதிறைகொள்வனெனவும் 2-3-இவ்விடங்களில் நிற்கில்தலைவன் மாற்றானிடத்தேதிறை கொள்வனெனவும் 12-மிடத்தில்நிற்கிற் றலைவனுக்கு வெற்றி எனவும் 11-மிடத்தில் நிற்கில் மாற்றானுக்கு வெற்றியெனவுஞ் சொல்லப்படும் எ-று. 20

மாற்றான்வரவுகேள்விப்படுதலும் தீங்கின்மையு

முணர்த்துகின்றது.

399 மதியாறின்மாற்றான்மருமாற்றமுண்டாம்
விதியாகநான்கைந்தின்மேவிற்-பதியா
யிருந்தவர்க்குத்தீங்கில்லையென்றிவற்றேடெல்லாம்
பொருந்தில்நட்பாய்ந்துபுகல்.

(இ-ள்.) சந்திரன் 6-மிடத்தில் நிற்கில் மாற்றான் வரவு கேள்விப் படுமெனவும் 4-5 இவ்விடங்களில் நிற்கில் தீங்கில்லை யெனவுஞ் சொல்லப்படும் மேற்படி சந்திரநட் பாட்சி யுச்சம் பெற்று நிற்கில் மாற்றான்வரவுகேள்விப்படுதல்மாத்திரமேயன்றி வருதலில்லை யெனவும்பகை நீசம் பெற்று நிற்கில் தீங்குஞ் சிறிது உண்டென்றுஞ் சொல்லப்படும்-எ-று. 21

தலைவனுக்குத்தனியேநலம் தீங்குணர்த்துகின்றது.

400 ஒற்றைநிலைநிற்கிலிருவர்களுநன்மையா
மொற்றைநிலன் வேறுபடிலில்லையா-முற்ற
சுடரோனெழுமுந்நான்கிற்றிங்களிற்கி
விடரேது மின்றேன்றியம்பு.

(இ-ள்.) சூரியன் சந்திரன் இவை 2-மொற்றை யிராசிகளில் நிற்கில் நலமெனவு மிரட்டை யிராசிகளில் நிற்கில் தீங்கு எனவுஞ் சூரியனுதயத்தில் நின்று சந்திரன் 12-மிடத்தில் நிற்கில் நல மெனவுஞ் சந்திரனுதயத்தில் நின்று சூரியன் 12-மிடத்தில் நிற் கில் தீங்கெனவு மிவ்வகையாகவு நலம் தீங்கு சொல்லப்படு எ-று. நலமென்றது வெற்றியாகவும் தீங்கென்றது தோல்வியாக வுரைத்துக்கொள்க வருவனவற்றுள்ளுமிப்படியேயாம். எ-று.

தலைவன் மாற்றானெனு மிருவருகுள் நலம்தீங்கு உணர்த்துகின்றது.

401 நின்றான் முதன் மூன்று நின்றார் காநீர் முதலா
யொன்றியவாறும் வருவாற்கா- வென்றிவற்றுட்
டூங்காகிற்றீங்கோபம் தீங்கன்றி நன்காகி
லாங்கவர்க்குநன்றென்றறை.

(இ-ள்.) ஆரூடமுதல் 3-இராசியு மாரூடத்திற்கு 10-மிராசி முதல் 3-இராசியுமாகிய 6-இராசியும்தலைவனிராசியும் 4-மிராசி முதல் 6-மிராசியுமாற்றானிராசியா மாதலால் சுபக்கோட்கள் நட்பாட்சியுச்சங்களினாலே தேறி எவ்வெவ்விராசிகளில் நின்றனவோ அவ்வவ்விராசிகளுடையார்க்கு நலமென்றும் பாபக்கோட்கள் பகைநீசங்களினாலே தேறலின்றி எவ்வெவ் விராசிகளில் நின்றனவோ அவ்வவ்விராசிகளுடையார்க்குத் தீங்கு எனவுஞ் சொல்லப்படும்-எ-று 23

தலைவன் மாற்றானெனுமிருவருள் யுத்தம் விளைவிப்பவர் இவ்விவரென எடுத்துணர்த்துகின்றனர்.

402 இருபாலுந்தீக்கோட்களேற்றிசைய நிற்கி
லிருபாலும் போர்விளையுமென்க-விருபாலுங்
கோள்வலிதி லொக்கிற்சமனாகுங்கூடாலேற்
கோள்வலிதாற் போர்வலிதாங்கூறு.

(இ-ள்.) மேற்சொல்லிய இருதிறத்திராசிகளினும் பாபக்கோட்களும் வலிதுபெற்ற கோட்களும் தம்மிலேதாமொத்துநிற்கில் யுத்தம் விளைப்பவர் இருதிறத்தார்களுமேயெனவுமொத்து நில்லாதவிடத்து அதுமிகுந்துள்ள இராசிகளுடையாரெனவுஞ் சொல்லப்படும் எ-று. 24

யுத்தத்தினிமித்தமாய்ப் படையெடுத்தலினாட்பல னுணர்த்துகின்றது.

403 அவிட்டநாட்பின்னரைதொட்டாயிலியமீறாய்க்
குவித்த நாட்டிங்களின்றன்கூறும்-புவிக்கெல்லா
மான்றமகமுதலாமவிட்ட முன்னரையுந்
தோன்றுகதிர்நாளாகச்சொல்.

இதுவுமது,

404 தத்தமது நாட்களின் றிடின்மேற்சந்தாகுஞ்
சுத்தமதிநாளிற் சுடர்நிற்கிற்-சத்தியமே
நின்றாற்கு வெற்றிநிறை கதிர்நாட்டிங்களுறிற்
சென்றாற்கு வெற்றியெனச்செப்பு.

இவை-2-ம் தொடர்.

(இ-ள்.) அவிட்டநாள் பின்னரை தொடங்கி ஆயில்நாள் வரையினுமாகிய நாட்கள்-13-அரை-யுஞ் சந்திரன் கூறான நாட்களாம் மகநாள்தொடங்கி அவிட்டநாள் முன்னரைவரையினு மாகிய நாட்கள் 13-அரை-யுஞ் சூரியன் கூறான நாட்களா மாகவே சூரியன்சந்திரன் 2-மவ்வவற்றின் கூறானநாட்களில் அவ் வவைகளாக நிற்குமிடத்துப்படையெடுக்கில் சந்தாமெனவு மாறி நிற்குமிடத்துப் படையெடுத்தால்யுத்தம்விளையுமெனவு மாறி நின்றதிலுஞ் சூரியன் சந்திரன் கூறானநாட்களில் நிற்குமிடத்தில் படையெடுத்தால் தலைவன் வெல்லுவன் மாற்றான்றோற்பனென வுஞ் சந்திரன் சூரியன் கூறானநாட்களில் நிற்குமிடத்துப்படை யெடுத்தால் மாற்றான வெல்லுவன் தலைவன்றோற்பனெனவுஞ் சொல்லப்படும். எ-று. 25

படைவரவுகாண்டம் முற்றிற்று.

பதினெட்டாவது.

## யாத்திரைக் காண்டம்.

காண்டமுதலிய பொருளுணர்த்துகின்றது.

405 யாத்திரையிற் சென்றார் வரவுமியாத்திரையிற்
போத்துழிப்பெற்றபொருட்பேறும்-யாத்திரையிற்
சென்றாங்கடைகுநருந்தீங்கொடுநன்கென்றிவற்றை
யொன்றாயுரைப்பனுவந்து.

(இ-ள்.) யாத்திரைசென்றார்வரவும் விரவில்லாமையுஞ் சென்றவிடத்திலே பொருட்பேறும்பொருட் பேறில்லாமையு மடைவுற்ற பேர்களும் வந்த இடையூறுமிடையூறில்லாமையும் யாத்திரைதிசைமுதலிய மற்றுள்ளனவு மொருகோவையாக்கிச்சொல்லுதலும்-எ-று. 1

அடைவுற்ற பேர்களை யுணர்த்துகிறது.

406 நட்பார்நிலங்களை நட்புக்கோணோக்குமே
னட்பார்பாற்சென்று நயந்துறையு-மொட்டிய
நீசக்கோணீசர்பானோச்சமிக்கோர்பாற்
பேசிற்றேன் மானிடரைப்பேசு.

(இ-ள்.) உதயாரூடமுச்சிகளை நட்புக்கோட்கள் நோக்கில் உரவின் முறையார் அல்லது சினேகிதரெனவு மாட்சிக்கோட்கள் பார்த்தால் தாய் தந்தை முதலியதன்னவரெனவு முச்சக்கோட்கள் பார்த்தால் மேற்பட்டார் அல்லது மேற்குலத்தாரெனவும் பகைக்கோட்கள் பார்த்தால் பகைவரெனவும் நீசக்கோட்கள் பார்த்தால் தனக்குக் கீழ்ப்பட்டவர் அல்லது இழுகுலத்தாரெனவுமடைவுற்ற பேர்களைச்சொல்லப்படும்-எ-று. 2

அடைவுற்ற பேர்களையுங் காரியாகாரியங்களையு முணர்த்துகிறது.

407 ஆணிலத்தையாண்கோட்பனோக்கு மேலாணிடத்தாம்
பேணிப்பெண்கோனோக்கிற் பெண்ணிடத்தாம்-பேணிய
வெப்பொருளாய்த் தோன்றுமிராசியுங்கோளாங்கவர்பா
லப்பொருளாற் சொல்வதறு

இ-ள். உதயாரூடமுச்சிகள் ஆணிராசியாயவற்றை ஆண்கோட்கள்பார்த்தால் ஆணெனவும்பெண்ணிராசியாவற்றைப்பெண்கோட்

கள் நோக்கிப் பெண்ணனவு மடைவுற்றபேர்களையு மேற்படி இராசிகளுங் கோட்களு மெவ்வெவைகளாய்த் தோன்றுகின்றனவோ அவ்வவைகளாமெனவுங் காரியங்களையுஞ் சொல்லப்படும்-எ-று 3

யாத்திரைத்திசை உணர்த்துகின்றது.

406 சுழலுவனதோன்றின்ஞ்சொன்னவற்றைமன்னு
மெழிலானகோட்களெழினுஞ்-சுழலுவன
வேறியிருப்பினுமெஞ்சாமையாந்திசையிற்
சேறல்வருண்மையெனச்செப்பு.

இ-ள். சரவிராசிகளுதித்தலாவது சரக்கோட்களுயத்தில் நிற்றலாவது உதயத்ததிபதிக்கோள் சரவிராசிகளிலேறி நிற்றலாவது வலிதுகொண்டவற்றின் திசையேயாத்திரையென்று சொல்லப்படும்-எ-று-உதயத்ததிபதிக்கோளையேபோல ஆரூடத்ததிபதிக்கோளுச்சியி னதிபதிக்கோளையுங் கொண்டுசொல்லப்படும். 4

யாத்திரையுணர்த்துகின்றது.

407 புகர்மாதிபுதன்பொற் பெயரோன்பொற்பி
னிகராதகெட்பதனுணிற்பி-னிகராத
வுன்னியவத்திசைக்கணூறின்றிப்போய்மீளுந்
துன்னுஞ்செலவுண்மைசொல்.

இ-ள். உதயாரூடமுச்சிகள் சரவிராசியாய் அவற்றிற்சந்திரன் புதன் குரு சுக்கிரனிவைநிற்கினும் நோக்கினும் யாத்திரையுண்டாம்-எ-று-ஊறின்றிப்போய் மீளுமென்று சிறப்பித்தவதால் உதயாரூட முச்சிகளுபய விராசியாய் அவற்றிற்பாபக்கோட்கள் நிற்கில் வழியிலேதாமே மாளுமென்று வருவித்துரைத்துக்கொள்க. 5

யாத்திரையின்மை யுணர்த்துகின்றது.

408 கதிர்சனிசேய்நிற்பவற்றேறேட்டினுமுச்சி
முதிராங்கதனிலொன்றுமேனு-மதிராத
ஒன்றியவத்திசைமேலொன்றுஞ்செலவில்லை
சென்றவனுக்கே தெரியச்செப்பு.

இ-ள். உதயாரூடமுச்சிகள் ஸ்திரவிராசியாய் அவற்றிற்சூரியனங்காரகன் சனிபாம்பு இவைநிற்கினும் நோக்கினும் யாத்திரையின்மையாம்-எ-று. செல்பவனுக்கு என்றது சென்றவனுக்குஎன்று

எதிர்காலத்தை யிறந்தகாலமாய்க் காட்டியவதனல் மிஞ்சிச்சென்ருெருவனுஞ் செல்லாது திரும்பிவிடுவனென்று பொருளுரைத்துக் கொள்க யாத்திரையிலேதானே வந்தாெனருவன் செல்லாது நிற்பனேவென்று வாதிப்பாரைநோக்கி அவனும் நினைத்ததிசை தப்பி வேறெருதிசையிற் செல்லுவனென்று எதிர்மறுத்துக் கூறுவார்போல அத்திசைமேலொன்றுஞ் செலவில்லை யென்ருர். 6

இருப்பிடஞ்சேர்விடங்களின் நன்மைதீமைக
ளுணர்த்துகின்றனர்.

409 தலையானெழுதலெழுங்காலவர்க்கு
நிலையாயிருந்தழியேநன்மை-தொளையாது
பின்னெழுதற்றோன்றுங்கான் மற்றவர்க்குபோந்திடத்திற்
றுன்னுமிகுநன்மையெனச்செல்

இ-ள். சிரோதயவிராசியுதிக்கில் இருப்பிடத்திலே நன்மையெனவுஞ் சேர்விடத்திலே தீமையெனவும் பிருட்டோதய விராசியுதிக்கிற் சேர்விடத்து நன்மையெனவு மிருப்பிடத்துத் தீமையெனவுஞ் சிரபிருட்டோதய விராசியுதிக்கில் இருப்பிடஞ்சேர்விடமாகிய விரண்டிடத்து நன்மைதீமைகள் 2-ம் விரவிவருமெனவுஞ் சொல்லப்படும் எ-று. சிரோதயவிராசியையும் பிருட்டோதயவிராசியையு முதிக்கிலெனவே சிரபிருட்டோதயவிராசியுதிக்கில் என்பதுபெற்றும்.

திருமுகமல்லதுவாய்மொழிஆகிய இவற்றின்
வரவு உணர்த்துகின்றது.

410 மன்னியமுன்றிரண்டின்மக்களிராசியெழத்
துன்னியகோளும்மதுவாய்த்துன்னுமேல்-முன்னுக
வோலைதான்வாசகந்தானெல்லைவருமென்று
மேலையோர்சொற்றவிதி.

இ-ள். உதயாருட முச்சிகட்கு 2-மிடமாதல் 3-மிடமாதல் உதயமாதல் இருகாலிராசிகளாய் அவற்றிலிருகாற்கோட்களே நிற்கில் திருமுகமல்லது வாய்மொழியாகிய இவை யாத்திரைசென்ருர்வருவதற்கு முன்னுக விரைந்துவருமென்றும் நாற்கால்சிறகுக்கால் பலகாற்கோட்கள் நிற்கில் வருவதற்குப்பின்னுலேயாதல் ஆலசியத்திலேயாதல் வருமெனவுஞ் சொல்லப்படும் எ-று இருகாற்கோட்கள் நிற்கில் என்றமையால் நாற்கால் சிறகுக்கால் பலகாற்கோட்கள் நிற்றில் என்பதுபெற்றும். 8

யாத்திரைசென்றார்வரவு உணர்த்தாகின்றது.

411 ஒன்றிரண்டுமூன்றென்பதின்மேலொன்றென்றிவற்று
ளொன்றின்மதிபுகர்பொன்னெண்புலவன் சென்றுடனே
சேருமேற்சென்றார்வருகின்றாரென்றிதனைப்
பாரின்மேலோக்குப்பகர்.

இ-ள். உதயம் 2-3-10-இவ்விடங்களிற் சந்திரன் புதன் குரு சுக்கிரனிவைநிற்கில் வருவரென யாத்திரைசென்றார் வரவுசொல்லப்படும் எ-று. வருவர் என்னாதுவருகின்றார் என்றவதனால் விரைவில் வருவரெனப் பொருளுரைத்துக்கொள்க. 9

யாத்திரைசென்றார்பிணியின்றிவருதலும் பிணிகொண்டு

வருதலுமுணர்த்தாகின்றது.

412 ஆறிரேறைடைந்திலமர்ந்ததுநற்கோளே
ஆறின்றியொல்லைவருமென்க-வாறிரே
டைந்தின்கட்டீக்கோளேலாங்கவர்நோயுற்று
வந்தடையுமென்றேவழுத்து.

இ-ள். உதயாருடமுச்சிகட்கு 5-6-இவ்விடங்களிற் சுபக்கோட்கள் நிற்கில் யாத்திரைசென்றார் பிணியில்லாமல் வருவரென்வும் பாபக்கோட்கள் நிற்கில் பிணிகொண்டு வருவரெனவுஞ் சொல்லப்படும்-எ-று.- 10

யாத்திரைசென்றார் வரவின்விரைவும் விரைவின்மையுமுணர்த்தி
ஒருபெண்ணுந்தாமுமாயின்றே வருவரெனப்பிறி
தோர் விதியுணர்த்துகின்றனர்.

413 வில்லேறுசியம்வியன்ஞெண்டின்வெண்மதிய
மொல்லேவருமாவரவுரைக்க-நல்ல
திருநீரிற்பொன்மதியஞ்சேருமேலன்றே
யொருமானுந்தான்வந்துறும்.

இ-ள். சந்திரன் ரிஷபங் கடகம் சிங்கந்தனுசு இவ்விராசிகளில் நிற்கில் யாத்திரைசென்றார் விரைந்துவருவரெனவு மற்றையவிராசிகளில் நிற்கில் மெல்லென வருவரெனவுஞ் சொல்லப்படுமன்றியுஞ் சந்திரனுங் குருவுமாய்க்கூடி 4-மிடத்தில் நிற்கில் ஒருபெண்ணுந் தாமுமாய் இன்றேவருவரெனச் சொல்லுதலுமாம்-எ-று, 11

யாத்திரைசெல்வார்செலவின்காலமும் யாத்திரைசென்றார் வரவின்காலமு முணர்த்துகிறது.

414 வருத்தநிலத்துமதிபுகர்பொன்மாலோன்
வருத்தசெலவுண்டாகுமண்மேல்-வருத்தூர்க்குச்
சென்றார்திறம்வினவிற்செப்பியகோள்வகையி
னன்றேவருவதறி.

இ-ள். செலவுவரவுகட்கு வருத்திராநின்ற இடங்களிற்சந்திர ன் புதன் குரு சுக்கிரனிவற்றுளெவை நின்றனவோ அவற்றிற்கு வருத்திராநின்றகாலமே யாத்திரைசெல்வார் செலவின்காலமும் யாத்திரை சென்றார் வரவின்காலமுமாகச் சொல்லப்படும்-எ-று. செலவு வரவுகட்கு வருத்திராநின்ற இடங்களாவது முறையேயுச்சி கண்டமும்பாட்டுகண்டமுமா மிதிலேபாபக் கோட்களைக் கூறுமை யால் பாபக்கோட்களின் காலங்களைக் கூறுதொழிக. 12

சென்ற இடத்திலேவந்த இடையூறுகளை யுணர்த்துகிறது.

415 தீக்கோள்பகைநீசஞ்சேருங்காற்சென்றவன்றான்
வாய்த்தபுண்பாடன்றேல்வன்னோயாம்-தீக்கோள்
நிலையுச்சிசேருமேற்சென்றுழிப்பேறில்லை
பகையிழிகேற்புண்பிணியும்பாடு.

இ-ள். யாத்திரையைக்குறித்து இதுவரையிற்கூறிய உச்சிகண்டமும் முதலிய இடங்களிற் சுபக்கோட்கள் பகைநீசம்பெற்று நிற்கில் மேல்நடக்கும்வாறே நடக்கினு மதனுடனே புண்படுதல் அல்லது பிணிகொள்ளுதல் இவையுநடக்குமெனவும் பாபக்கோட்கள் நிற்கில் நடக்குமென்ற காரியங்கள் கெடுதலாமப்பாபக்கோட்களே பகைநீசமும்பெற்றுநிற்கில் நடக்குமென்ற காரியங்கள் கெடுதலன்றியும் புண்படுதல் பிணிகொள்ளுதல் இவைமுதலிய அளவறுந்த இடையூறுகள் வரப்பெறும்-எ-று. புண்படுதலாவது மனம்நோத லாம. 13

சென்றஇடத்திலே இடையூறின்மையுணர்த்தியுடனே காண்டத் தொடக்கமுணர்த்துகிறது

416 சொன்னநிலங்களனைத்திலுநட்கோட்க
டுன்னுமேற்சொன்னவைகள்சோர்வில்லை-யுன்னிய

வெப்பொருளுங்கூறினிசைந்தனபத்தால்வருதன்
முற்படத்தான் கூறன்முறை.

இ-ள், யாத்திரையைக்குறித்து இதுவரையிற்கூறிய உச்சிகண் டமுதலிய இடங்களிற் சுபக்கோட்கள் நட்பாட்சி உச்சம்பெற்று நிற்கில் மேல் நடக்குமென்றவாறே நடக்கு மிடையூறில்லை யாத்திரையைக் குறித்து வினவுகிற காரியங்கள் மற்றெல்லாமுமுச்சி கண்டத்தாலேயே யூகித்துக் சொல்வதாம்-எ-று. 14

யாத்திரைசென்றார் வரவின்மையின்காரண
முணர்த்துகின்றது.

417 இருநிலமுந்தீக்கோளெழுந்தனவேற்சென்றான்
பொருளிழந்தத்தலமே புல்லு-மருளிழந்த
நீரிடந்தீக்கோட்கணின்றனவேனேரலரால்
வாரான்பின்றாழ்ந்து வரும்.

இ-ள். உதயமுமுதயத்திற்கு 2-மிடமுமாகிய இவ்விரண்டிடத்தும் பாபக்கோட்கள்நிற்கில் யாத்திரை சென்றான்கைப் பொருளிழந்து வறுமையாய் அது காரணமாய் வருதலின்றி இருக்கிறானெனவும் மேற்படிபாபக் கோட்கள் 4-மிடத்தில்நிற்கில் சத்துருக்களாலே துன்பம் நேரிட்டு அதுகாரணமாய் வருதலின்றி யிருக்கிறானெனவும் நாட்சென்று வருவனெனவுஞ் சொல்லப்படும். எ-று. தாழ்ந்தே வருமெனத் தேறறங்கொடாமையால் அப்பாபக்கோட்களுக்கு உரியநாட்கள் செல்லாய்விடின் விரைந்து வருவனெனவும் படும். 15

யாத்திரைக்காண்டம் முற்றிற்று.

## பதினெண்பதாவது
## ஆற்றுநீர்வரவு காண்டம்.

ஆற்றுநீர் வரவும்வரவின்மையும் வரவின் பெருக்கமும் பெருக்கமின்மையுமுணர்த்துகின்றது.

418 எழுந்ததற்கேழ்நீரேனீரொழுகுநேர்க்கோள்
வழிந்தொழுகுமாற்றின் வரவி மொழிந்தொழுகு
மேழதனிற்நீக்கோளிசைந்தினிது நிற்கு மெனிற்
றுழுவருகு மெனச்சாற்று.

இ-ள். உதயத்திற்கு எ-மிடம் நீரிராசியாயிருக்கில் ஆற்று நீர் வரவு காண்டம் நீரல்லாத விராசியாயிருக்கில் வரவின்மையாம் மேற்படி நீரிராசியால் நீர்க்கோட்கள் நிற்கில் ஆற்று நீர் பெருக்க ஓடும் எ-று. பெருக்கமும் பெருக்க மின்மையுமாவது முரையெக ரைபுரண்டோடுதலும் கரைபுரண்டோடுதலின்மையுமாம் நீரோட்டத்தை ஒழுகுமென மேன்மேலுஞ் சிறப்பித்தவதனால் ஆருடவலி தாற் கிழக்கோடு மாறெனவும் கவிப்பின் வலிதாற் மேற்கு ஓடுமாறெனவும் பிரித்துணரவும் படுங் கிழக்கு ஓடுமாற்றை நதியெனவும் மேற்கு ஓடு மாற்றை நதமெனவுஞ் சொல்லுதல் வடநூலாசியர் வழக்கம்.

ஆற்றுநீர்வரவினளவை யுணர்த்துகிறது.

419 நல்லியு மீனுநிலநீர் நற்கான் மகரந்
துள்ளியமுக்காற்றுலையரையா-முள்ளிய
காலாகுந்தேளெருதுகற்றுணர்ந்தோர் செற்றிகழ்க்கு
மேலாகுநூலின் விதி.

இ-ள். உதயத்திற்கு எ-மிடம் நீரிராசியாயிருக்கில் என்று மேலுணர்த்தியவாறே அந்நீரிராசி கடகம் மீனமிவைகளாயிருக்கில் முழு ஆறும் மகரங் கும்பமிவைகளாயிருக்கில் முக்கால் ஆறும் துலாமாய் இருக்கில் அரை ஆறும் ரிஷபம் விருச்சிகமிவைகளாய் இருக்கிறகால் ஆறும் நீர்வருமென்று மாற்றுநீர் வரவினளவை சொல்லப்படும். எ-று.

ஆற்றுநீர்வரவுகாண்டம் முற்றிற்று.

இருபதாவது

## மழைவரவு காண்டம்.

மழைபெய்தலும் மழைபெய்யாமையு முணர்த்துகிறது.

420 நீராகுமோரையெழினுமெழுமதனு
ணீரங்கோணிற்கினு நோக்கினுஞ்-சீராக
மாரிவரவுரைக்கடைக்கோளுக்குதயஞ்
சேரின் மழையின்மை செப்பு.

இ-ள். நீர்ராசிகள் உதயமாகினும் நீர்க்கோட்கள் உதயத்தில் நிற்கினு முதயத்தை நோக்கினு மழைபெய்யுமெனவும் நீரல்லாத விராசிகளுதயமாயினும் நீரல்லாத கோட்கள் உதயத்தில் நிற்பினு முதயத்தை நோக்கினு மழை பெய்யாது எனவுஞ் சொல்லப்படும். மேலெபெய்யுமென்றமழையைப் பெருமழையெனவு மறப மழை எனவுமிருவிதமாய்ப்பிரித்துணர்த்துகின்றனர்.

421 மதிவெள்ளியங்நிலத்தைக்காணிலம்மாரி
யதிகமா நீர்நிலனுமற்றே-விதியாகி
வெள்ளைமதிவெள்ளியுமின்றேண் பொன்மான்மேவுங்கால்
வெள்ளை மழையென்றே விளம்பு.

இ-ள். நீர்க்கோட்கள் உதயத்தில் நிற்கினுமுதயத்தை நோக்கினுமென்மேலுணர்த்தியவாறே அந்நீர்க்கோட்கள் சந்திரன் சுக்கிரனிவைகளாய் இருக்கிற் பெருமழையெனவும் புதன் குரு இவைகளாயிருக்கில் அற்பமழை எனவுஞ் சொல்லப்படுமிப்படியே நீரிராசிகளுதயமாயி னென்மேல் உணர்த்தியவாறே அந்நீர்ராசிகள் கடகம் மகரங்கும்பம் மீன மிவைகளாயிருந்தால் பெருமழை எனவும் ரிஷபந்துலாம் விருச்சிக மிவைகளாயிருந்தாலற்பமழ யெனவுஞ் சொல்லுதலாம்-எ-று. வெள்ளைமழை என்றது அற்பமழை என்பதனை விளக்கிற்று. 2

பெருமழை என்றற்குப் பிறிதோர் விதி யுணர்த்துகிறது.

422 பிருட்டோதயம்வந்து கவிப்பினுமன்னப்
பிருட்டோதயக் கோளேக்கிடினும்-பிரட்டில்
பரிவேடநுட்பந்தனுவிலற்றென்றுன்டேற்
பெரிதாகப்பெய்யுமழை.

இ-ள். ஆரூடத்தைப் பிருட்டோதயவிராசி கவிக்கினும் பிருட்டோதயக்கோட்கள் நோக்கினு மவ்வாரூடத்திற் பரிவேடமிந்திரதனுசு நட்பமிவைநிற்கினும் பெருமழைஎன்று சொல்லப்படும் எ-று. கவிக்கினுமெனவே ஆரூடத்தை என்பதுபெற்றும். 3

மழைபெய்தலின்காலவரை உணர்த்துகின்றது.

423 தன்னிலமுநட்புச்சங்கேந்திரக்கோளாய்நிற்கின்
மின்னலுடைமாரிவிரைந்துரைக்க-நன்னீரில்
வெள்ளிபுகிலன்றேபுதனிரண்டின்மூன்றிலுண்டேல்
விள்ளுமளவைவிளம்பு.

இ-ள். மழைபெய்தற்குக்குறித்தசந்திரன் புதன் குரு சுக்கிரனுய கோட்கள் 4-ம் நட்பாட்சியுச்சக்கோட்களா நிற்கினுங் கண்டங்களினதிக் கோட்களாயாதல் கோணங்களினதிபதிக் கோட்களாயாதல் நிற்கினுமழை விரைந்துபெய்யுமெனவும் பகைநீசக்கோட்களாய் நிற்கினும் 6-8-12-மிடங்களினதிபதிக் கோட்களாக நிற்கினுந் தாழ்ந்துபெய்யு மெனவுஞ் சொல்லப்படுமன்றியுஞ் சுக்கிரனீக்ர் கீழ்க்கண்டத்தில் நிற்கில் அன்றேபெய்யுமெனவு மென்றும் புதன் -மிடத்தில் நிற்கில் 2-நாளிற் பெய்யுமெனவும் 3-மிடத்தில் நிற்கில் 3-நாளிற் பெய்யுமெனவுஞ் சொல்லுதலுமாம் எ-று. சுக்கிரனேபோலச் சந்திரனையும் புதனேபோலக் குருவையும் வருவித்துரைத்துக்கொள்க. 4

மழைபெய்யாமைக்கு முதலாவது செய்யுளிற்காட்டியவிதிக்குச்
சிதைவுஞ்சிதைவுப்பயனும் விவரிக்கின்றது.

424 காரியிரவியரவுசேய்கண்டவற்றுட்
சேரின்மழையின்மைதிண்ணமே-நீரேல்
வளியாகுமென்றுரைக்கமற்றதினற்கோளேற்
றுளியாய்ப்பயன்றருதல்சொல்.

இ-ள். நீரல்லாக்கோட்களுதயத்தில் நிற்கினு முதயத்தைநோக்கினு மழைபெய்யாது என்று முதலாவது செய்யுளிற்காட்டிய விதி உண்மையேயாயினு மவ்வுதயம் நீர்ராசியாய் நேரிடில் நீர்வாடையானகாற்று உண்டாமென்று மதனோடு நீர்க்கோட்களுடைய சம்பந்தமுஞ் சந்திக்கில் தூறன்மழையாய்ப் பெய்யுமென்று மிப்படிக்கெல்லா மிடி மின்னல் முதலியவற்றையும் யூகித்துச்சொல்லுதல் விதியாம் எ-று. ஆகவேயுதயமும் நீர்ராசியாயிருத்தல்வேண்டுமென்பதாம் ஆற்றுநீர்வரவு காண்டத்திற்கும் மழைவரவுகாண்டத்திற்கும் பாம்பு நீரல்லாதகோளாய் நின்றமை மிக்கோராற்கேள்வியாதல் வேண்டும். 5

மழைவரவுகாண்டம்-முற்றிற்று.

இருபத்தோராவது

# அஃகமலிவு காண்டம்.

அஃகமலிவும் குறைவும்சமனும் உணர்த்துகின்றது

425 உச்சக்கோணக்கிடனேறும்பகைநீச
மிச்சையாய்க்காணினிழிபாகு-மெச்சிய
வாட்சியுநட்பாகிலங்கிலையேயஃமென்பர்
காட்சியின்மேதக்கவர்.

இ-ள். உதயம் உச்சிகண்டம் ஆகிய இவற்றை உச்சக்கோட்கள்நோக்கில் அஃகம் மலிவாம் என்றும் பகைக்கோட்கள் நீசக்கோட்கள் நோக்கிற் குறைவாம் என்றும் நட்புக்கோட்கள் ஆட்சிக்கோட்கள் நோக்கிற்சமனும் என்றும் சொல்லப்படும்-எ-று. 1

இதுவுமது.

426 சீருடைக்கோளாட்சியினுமுச்சியினுஞ்சேருமேற்
சீருடையத்தாமஃகஞ்சிறப்புரைக்க-நேரடுத்த
பாட்டானிழிதருமாந்தீக்கோள்பகைநீசக்
கேட்டானேயக்கங்கெடும்.

இ-ள். சுபக்கோட்கள் உதயம் உச்சிகண்டம் ஆகிய இவற்றுள் நிற்கில் அக்கம்மலிவாம் என்றும் பாட்டுகண்டத்தில் நிற்கிற்குறைவாம் என்றும் பாபக்கோட்கள் மேற்படி உதயம் உச்சிகண்டம் என்றவற்றுள் நிற்குமாயினும் பகைநீசக்கோட்களாய் நின்றால் மாத்திரம் குறைவாமேயல்லது நட்பாட்சியுச்சக் கோட்களாய் நின்றவிடத்து குறைவாதல் இல்லை சமனும் என்றும் யூகிக்கப்படும்-எ-று. பாபக்கோட்கள் நட்பாட்சியுச்சக்கோட்கள் ஆனவிடத்து சமனாகக்குறிப்பித்தமையால் சுபக்கோட்கள் பகைநீசக்கோட்கள் ஆனவிடத்து அகனாய்சமனாகவே கொள்ளப்படும் சீருடைத்தாமக்கம் என்று மிகுத்துக் கூறியவதனால் அவ்வவற்றிற்குரிய ஆக்கங்களை யூகித்துக்கொள்க. 1

அக்கமலிவுகாண்டம்-முற்றிற்று.

இருபத்திரெண்டாவது

# மரக்கலவரவு காண்டம்.

மரக்கலவரவு உணர்த்தி அம்மரக்கலவரவைத்தானே நேர்வரவென்றும் தங்கலும் திகைத்தலும் ஆகிய வரவென்றும் இரு வகையாகப் பிரித்துணர்த்துகின்றனர்.

427 பீதகன்வெள்ளிபிறைமூன்றிலொன்றிவைதா
ஞேதியநீராயவோரையிடைப்-பேராதுமேல்
வங்கம்வரவுரைக்கமற்றவைகொட்பவற்றுட்
டங்கித்திகைந்துவருந்தான்.

இ-ள். உதயாரூடங்கள் நீர்ராசிகளாய் அவற்றிற்சந்திரன் குரு சுக்கிரன் இவற்றுள் யாதானும் 1-நிற்கில் மரக்கலம்வரும் என்றும் அந்நீர்ராசிகள்தானே ஸ்திரவிராசி உபயவிராசிகளாகில் நேரேவரும் என்றும் சரவிராசிகளாகில் தங்கியாதல் திகைத்தாதல்வரும் என்றும் சொல்லப்படும்-எ-று. உதயாரூடங்களேபோல 3-5-9-இவ்விடங்களையும் கொண்டுசொல்லப்படுமாகப் பஞ்சாங்கரங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன இச்செய்யுளின் கருத்தின்படிக்கு உதயாரூடங்கள் நீரல்லாத இராசிகளாய் அவற்றில் மற்றயகோட்கள் 5-னுள் யாதானும் 1-நிற்கில் மரக்கலம்வரவின்மை என்பதுதானே தோன்றுதலுங்காண்க. 1

மரக்கலம் திசைதப்பிப்போய் வேறொருகரையை
அடுத்தலும் அவ்வடுத்தலும் இன்றிக்காணு தொழிதலும்
முறிந்துபோதலும் உணர்த்துகின்றது.

428 தீக்கோட்கணிற்கிற் சிதறும்பகையாகில்
வாய்க்கும்வரவில்லையாகுமாம்-வாய்த்த
கடுங்கோளதாநீசங்காணுமேல்வங்க
மொடுங்கிவருமென்றுரை.

இ-ள். உதயாரூடங்களிலே பாபக்கோட்கள் நிற்கில் மரக்கலம் திசை தப்பிப்போய் வேறொருகரையை அடுக்கும் என்றும் அப்பாபக்கோட்கள்தானே பகைக்கோட்களாக நிற்கில் திசைதப்பிப் போய் வேறொருகரையை அடுத்தலும் வரவேயாதலால் அவ்வரவு கூட இல்லையாகக் காணுதொழியும் என்றும் நீசக்கோட்களாகநிற்கில் முறிந்துபோம் என்றும் சொல்லப்படும்-எ-று அகல்வாகவருகின்ற மரக்கலத்தை ஒடுங்கிவரும் எனவே முறிந்துபோதும் என்

பதுபெற்றும் முறிந்துபோகின்றதனை முறிந்துபோம் என்றேகூறு
து வாறுபடுத்திக் கூறியவதனால் சிலநாள் மூழ்கிக்கிடந்தாதல் இரு
ளில் மறைந்திருந்தாதல் தோன்றும் எனினும் ஒக்கும். 2

மரக்கலம்மூழ்கிப்போதலும் திசைதப்பிப்போய் நாட்சென்று
தோன்றுதலும் உணர்த்துகின்றது.

429 ஒருங்குதயமாரூடமொன்றின்கண்வந்து
சரந்துறைகோள்காணுற்றதாகி-லொருங்குடனே
மாண்டழியுமென்றுரைப்பர்மற்றவைதான்வானகத்திற்
காண்டறரத்தோன்றுங்கலம்.

இ-ள். இந்திரதனுசுமுதலிய கொட்களுள் 1-உதயத்திலாதல் ஆரூடத்திலாதல் நிற்கில் மரக்கலம்மூழ்கிப்போம் என்றும் வினவின பொழுது அவற்றுள் 1-ஆகாயத்திலுமாகத் தோன்றிநிற்கில் திசைதப்பிப்போய் நாட்சென்று தோன்றும் என்றும் சொல்லப்படும் எ-று. 3

திசைதப்பிப்போதலும் திசைதப்பிப்போய் விரைவிலே
வருதலும் உணர்த்துகின்றது.

430 கொட்பாயவோரைமேற் கொட்பாற்குடைகவிக்கில்
வட்காதுபாடுழந்துவங்கங்கள்-கிட்டாதே
வல்லவர்கட்டாமுரைப்பர்வன்சுங்கன்மூன்றின்க
ணொல்லைவருமென்றேயுரை.

இ-ள். ஆரூடமும் கவிப்பும் சரவிராசிகளாகில் மரக்கலம் திசைதப்பிப்போம் என்றும் மேற்படி ஆரூடத்திற்கும் கவிப்பிற்கும் 3-மிடத்திற் சுக்கிரன்நிற்கில் திசைதப்பிப்போய் விரைவிலேவரும் என்றும் சொல்லப்படும் எ-று. 4

மரக்கலவரவுகாண்டம்-முற்றிற்று.

இருபத்துமூன்றாவது

# மாநிமித்த காண்டம்.

---

இக்காண்டத்திற்குத்தற்சிறப்பு உணர்த்துகின்றனர்.

431 மண்ணவரேகோள்வாய்மதிகதிருமற்றவையே
கண்ணவரிற்கண்டனநட்பாட்சியா-மெண்ணவரு
மட்டவிழ்பூங்கூந்தன்மதிநுதலாய்மாநிமித்தங்
கட்டுரைப்பனிந்நூலுட்கண்டு

இ-ள். மக்கள்தானே கோட்களாகவும் அம்மக்களின்வாய்ச்சொற்கள்தானே ஆரூடமாகவும் உதயமாகவும் கட்புலன்கள்தானே இராசிகள் முதலிய மற்றவைகளாகவும் செய்கைகள் தானே நட்பாட்சியுச்சம் பகைநீசங்களாகவும் கொண்டு மாநிமித்தங்களைக் கட்டுரைத்து இதனை மாநிமித்தகாண்டம் என்கிற பெயருடைத்தாய் இந்நூலினுட் சேர்த்து வைப்பாம் எ-று. எண்ணவருமட்டவிழ்பூங் கூந்தன்மதிநுதலாய் என்றது மகடூஉமுன்னிலை நலந்தீங்குகளை வினவினவிடத்து கோட்களை எதிரிட்டுப்பார்த்தலேபோல மக்களையும் பார்த்தல் வேண்டுவதால் மக்களைக்கோட்களாகவும் முதலிலே ஆரூடத்தை முக்கியமாகப் பிடித்துக்கோடலேபோல மக்களின் வாய்ச்சொற்களையும் கடைப்பிடித்தல் வேண்டுவதால் மக்களின் வாய்ச்சொற்களை ஆரூடமாகவும் மேற்படி வாய்ச்சொற்கள் உதயமேபோல்வதால் அவற்றை உதயமாகவும் கட்புலன்கள் இராசிகள் முதலிய மற்றவைகளேபோலச் சிற்சிலபலன்களை உணர்த்தும் ஆதலால் அவற்றை இராசிகள்முதலிய மற்றவைகளாகவும் நட்பாட்சியுச்சம் பகைநீசங்களைக்கொண்டு பலன் சொல்லுவது போலச் செய்கைகளைக்கொண்டும் அஃது சொல்லவேண்டுவதால் அவற்றை நட்பாட்சியுச்சம் பகை நீசங்களாகவும் கூறினார் என அறிக வாய்ச்சொல் என்றற்கு வாய்என்றும் கட்புலன் என்றற்குக் கண் என்றும் ஆரூடம் என்றற்கு மதி என்று உதயம் என்றற்குக் கதிர் என்றும் நட்பாட்சியுச்சம் பகை நீசங்கள் என்றற்கு நட்பாட்சி என்றும் குறிப்பித்தார் என்பதூஉம் காண்க நிமித்தமாவது நட்டமுட்டி சிந்தனைகளை வாய்ச்சொற்கள் முதலியகுறிப்பினால் உணரப்படுவதாம் 7

இக்காண்டத்தின் வரலாறு உணர்த்துகின்றனர்,

432 இந்திரர்திவாணோர்க்கிறப்பு நிகழ்வெதிர்வு
மந்திரியார்கூறிட்டவிம்மா நிமித்தம்-வந்தனவாற்
கண்டளவுங் கேட்டளவென் காரணமாய்க்கட்டுரைப்ப
னண்டமதி நுதலாய் ஆய்ந்து.

இ-ள். மாநிமித்தமானது இந்திராதி தேவர்கட்குப் பூதபவுஷிய வர்த்தமானங்களைக் குருபகவான் உணர்த்துதற்பொருட்டு ஆதிகாலத்திலே அவரது திருவாக்கிலிருந்து வெளிப்பட்டு வந்தனவாம். ஆதலால் அப்படிக்கு மகிமையாயுள்ள அந்த மாநிமித்தம் சிற்றறிவினையுடைய எம்மாலே சொல்லி முடிவு பெறாதாயினும் கண்டவரையிற் கேட்டவரையிற் சொல்லுதல் கடமையாம் என்பதுகொண்டு அதனைச் சொல்லப்புகுந்தும்-எ-று. அண்டமதிநுதலாய் மகடூவுமுன்னிலை. 2

குலம் உணர்த்துகின்றது.

433 தலையார்கழுத்தந்தநாபியந்தந்தங்கும்
கொலையரசாரங்கூர்முழந்தா-னிலைவணிகர்
மற்றதின்கீழ்வேளாளர் மாக்கரட்டின் கீழ்மயிரு
முற்றபறையென்றுணர்.

இ-ள். உச்சியிலிருந்து கழுத்து வரையிற்றொடிற் பிராமணன் கழுத்தின் கீழிருந்து உந்திவரையிற்றொடில் க்ஷத்திரியன் உந்தியின் கீழிருந்து முழங்கால் வரையிற்றொடில் வைசியன் முழங்காலின் கீழிருந்து கணுக்கால் வரையிற்றொடில் சூத்திரன் கணுக்காலின் கீழிருந்து உள்ளங்கால் வரையிற்றொடில் பஞ்சமன் உரோமந்தொடினும் அதுவேயாம்-எ-று. 3

நிறம் உணர்த்துகின்றது.

434 அங்கஞ்சொறிதல் வெளுப்பாமடிகுய்யஞ்
செங்கைமுகம் பச்சை சிவப்பாகுந்-துங்க
மயிரும்வயிறேகறுப்பரைபொன் கேட்கி
லுயிருமுடலுமெனவோர்.

இ-ள். கால் குய்யம் கை முகம் மயிர் வயிறு அரைஇவ்வைதவிர மற்றய அவயவங்களைத்தொடில் வெண்மை கால் குய்யம் இவைகளைத்தொடிற் பசுமை கை முகம் இவைகளைத்தொடிற் செம்மை மயிர் வயிறு இவைகளைத்தொடிற் கருமை அரையைத்தொடிற் பொன்மை-எ-று. தொடுதல் என்றற்குச் சொறிதல் என்று மாறுபடக் கூறியவதனால் தானே தொடுதல்வேண்டும் அல்லது சொல்லித் தொடுதல்கூடாது என்றும் கேட்கில் என்று வற்புறுத்தியவதனால் நிறம் வினவினவிடத்து அகது சொல்லலாகாது என்றும் உயிரு

முடலு மெனவோர் என்று விகற்பித்தவதனால் இவ்விதி தாதுமூல சீவன்கள் 3-ற் குபரம் என்றும் உய்த்துணர்ந்துகொள்க வரலாறு தாது உடலாம் மூலமும் சீவனும் உயிராம். 4

வருஷாதிகாலகணிதம் கணிக்கின்றது.

435 தலைநூறுமாமுகந்தொண்ணூறுதிண்டோண்
முலைமார்பெண்பான் வயிறேழ்பத்தாம்-கலைசே
ரரையறுபதாசனமைம்பான் குறங்கிற்
கொருநாற்பதாமென்றுரை.

இதுவுமது.

436 மூன்றுபத்தாகுமுழந்தாளதன்கீழே
ழொன்றொருபத்தாகும்பதமுடிற்-றோன்றிய
வாண்டொடுதிங்கடினமுங்கடிகையா
மீண்டுதொடிலென்மனர்.

இவை 2-ம் ஒருதொடர்.

இ-ள். உச்சியிலிருந்து தலைவரையிற்றொடிற், 100-தலையின்கீழிருந்து முகம்வரையிற்றொடில், 90-முகத்தின்கீழிருந்த தோள் மார்புவரையிற்றொடில், 80-மார்பின்கீழிருந்து வயிறுவரைற்றொடில், 70-வயிற்றின்கீழிருந்து அரைவரையிற்றொடில், 90-அரையின் கீழிருந்து அரைவரையிற்றொடில், 60-அரையின் கீழிருந்து ஆசனம் வரையிற்றொடில், 50-ஆசனத்தின் கீழிருந்து துடைவரையிற்றொடில், 40-துடையின் கீழிருந்து முழங்கால்வரையிற்றொடில். 30-முழங்காலின் கீழிருந்து உள்ளங்கால் வரையிற்றொடில், 10-என்று இவ்வகையாக வருஷாதி காலகணிதம் கணிக்கப்படு-எ-று. வருஷாதிகாலகணிதம் கணித்தலின் வரலாறு 100 என்றற்கு வருஷம் வினவினவிடத்து 100-வருஷம் என்றும் மாசம் வினவினவிடத்து 100-மாசம் என்றும் தினம் வினவினவிடத்து 100-தினம் என்றும் கடிகை வினவினவிடத்து 100-கடிகை என்றும் கணிப்பதாம் இப்படியே மற்றவைகளையும் கணித்துக்கொள்க 20-துள்ளகணிதத்தை விலக்கினமையால் 50-துள்ள கணிதத்தோடாதல் 10-துள்ள கணிதத்தோடாதல் சேர்த்துப்பொது வியதியாக எடுத்துரைத்துக் சொல்லுக அஃது இவற்றுள் இல்லையென்று சாதிப்பாருமுளர்.

தாதுமூலசீவன்களை உணர்த்துகின்றது.

437 எடுத்திருக்கின் மூலமெதிர் நீட்டிற்றாது
பிடித்திருக்கிற்சீவனும்பேசிற்-றொடுத்த
வகரமேற்றுதாமிகரமேன்மூல
முகரமேற்சீவனுரை.

இ-ள். யாதானும் ஒன்றை எடுத்துக்கையிலே வைத்து அக்கையை முடக்கிவைத்திராது எதிர் நீட்டு மிடத்து தாதுவாம்எதிர் நீட்டாது முடக்கிவைத்திருந்தவிடத்து மூலமாம் எதிர்நீட்டுதலும் முடக்குதலுமின்றிச் சமனாகவைத்திருந்த விடத்துச் சீவனும் அன்றியும் வினவினசொற்களின் முதலெழுத்து அகரமாக வந்தவிடத்து தாதுவாம் இகரமாக வந்த விடத்து மூலமாம் உகரமாக வந்தவிடத்து சீவனும்-எ-று. 3-றே எழுத்தாகக்கூறினமையால் ஆகார ஐகார ஔகாரங்கள் 3-ம் அகரத்திலும் ஈகார எகர ஏகாரங்கள் 3-ம் இகரத்திலும் ஊகார ஒகர ஓகாரங்கள் 3-ம் உகரத்திலும் ஒடுக்கமாம் என அறிக இவை ஏறிய மெய்யெழுத்துகட்கும் இவற்றை வருவித்துரைத்துக்கொள்க செய்கை முறையிற்கூறியவிதி முட்டிக்குமாத்திரம் எழுத்துமுறையிற்கூறியவிதி நட்டமுட்டி சிந்தனை 3-ற்குமாம் என்பது தானே தோன்றுதலும் காண்க பிடித்திருக்கில் என்றதை இறுக்கிப்பிடித்த விடத்தும் என்று உரைகொள்வாருமுளர். 7

எருக்கள் உணர்த்துகின்றது.

438 கழுத்தாயின் மங்கலமாங்கைவளையாங்காதேற்
குழைத்தானுமுருலேற்கூறை-சுழிதக
வயிறாயிற்கெர்ப்பமதி றாதன் மேற்பட்ட
மெயிறாயிற்றின் பனவாமென்.

இ-ள். நெற்றியைத்தொடிற் பட்டமுதலியவைகளாம் காதுகளைத் தொடிற் குண்டலமுதலியவைகளாம் பற்களைத்தொடிற்றின்பன முதலியவைகளாம் கழுத்தைத்தொடில் மங்கிலியம் முதலியவைகளாம் கைகளைத்தொடில் வளையல் முதலியவைகளாம் வயிற்றைத் தொடிற்கெர்ப்பம் முதலியவைகளாம் தொடைகளைத்தொடிற் கூறை முதலியவைகளாம் எ-று. மங்கிலியம் என்றற்கு மங்கலம் என்று மொழிலைக் குறிப்பித்தவனுல் கழுத்தைத்தொடிற் கலியாணம் முத

லியனவைகளாம் என்று வருவித்துரைக்கப்படும் இப்படியே மற்றவற்றிற்குமாம்உருக்களேபோலக் காரியங்களையும்யூகித்துக்கொள்க.

காரியங்கள் உணர்த்துகின்றது.

439 சுற்றமே கல்வியுயிர்நெஞ்சுதொடினாசி
கற்றலவைகேளாங்கவினாட்சி-மற்றுமவர்
தீபம்பூமாலை சிறந்தன தங்காற்றொடிற்
கோம் பிணக்கென் றுகூறு.

இ-ள். உயிர்நிலையைத்தொடிற் சம்பந்தம் ஆடுவனவற்றையும் நெஞ்சைத்தொடிற் கல்வியையும் நாசியைத்தொடில் மேற்கூறிய 2 ஞேடுயிராசுபோல் வனவற்றையும் தீபம் பூபூமாலை இவற்றைத்தொடில் மேலானகாரியங்களையும் காற்களைத்தொடிற் கோபம் அல்லது பிணக்கையும் நினைத்ததாம் எ-று. 9

நலந்தீங்கு நிமித்தம் உணர்த்துகின்றது.

440 ஓங்குநலந்தருவநற்கோகளொருவர்க்குத்
தீங்குதருவனதீக்கோளே-பாங்கவைக
ணன்னிலமேற்றீக்கோளுநற்கோளாநற்கோளும்
புன்னிலமேற்றீக்கோள்புகல்.

இ-ள். மண்டலக்கோட்களிற் சுபக்கோட்கள் நின்றதிசையில் இக்கில் நலமுண்டாம் பாபக்கோட்கள் நின்றதிசையில் இருக்கில் தீங்குண்டாம் அன்றியும் மேற்படி சுபக்கோட்கள் பகைநீசம்பெற்று நிற்கிற் பாபக்கோட்கள் போல்வனவுமாம் பாபக்கோட்கள்நட்பாட்சி யுச்சம்பெற்று நிற்கிற் சுபக்கோட்கள் போல்வனவுமாம் இவற்றையும் உடன் கருதி நலந்தீங்கு சொல்லுவதாம் எ-று. சுபக்கோட்கள் பகைநீசம் பெற்றதின் பலனாவது நலமுண்டாய்உடனே தீங்குண்டாம் என்றும் நலமுந்தீங்கும் விரவிவரும்என்றும் சொல்லுவதாம். பாபக்கோட்கள் நட்பாட்சியுச்சம் பெற்றதின் பலனாவது தீங்குண்டாய் உடனே நலமுண்டாம் என்றும் நலமுந்தீங்கும்விரவிவரும் என்றும் சொல்லுவதாம் சுபக்கோட்கள் நட்பாட்சியுச்சம் பெற்றதின் பலனாவது நலத்தில் நலமாய் விசேஷிக்கும் என்றும் பாபக்கோட்கள் பகை நீசம் பெற்றதின் பலனாவது தீங்கிற்றீங்காய் விசேஷிக்கும் என்றும் சொல்லுவதாம் இகதுமா நிமித்த காண்டமாதலால் இதனுட்கூறிய கோட்களை மண்டலக்கோட்கள் என்பதுபெற்றும். 10

இதுவுமது.

441. நல்லவலமணுகி னன்றுநவீலிடத்திற்
வெல்லநெருக்குண்ணிற்றீதாகு-மெல்ல
வடுக்கிலடுக்குமருளேயகல
விடுக்கிலிழியாய்விடும்.

இ-ள். வலமே வந்திருந்தவிடத்து நலமுண்டாம் வலமேவந்திருந்தவிடத்தும் நெருக்குண்டிருந்தவிடத்து அல்லது இடமேவந்திருந்தவிடத்து தீங்குண்டாம் அன்றியும் சமீபித்திருந்தவிடத்து நலமுண்டாம் சமீபியாதிருந்தவிடத்து தீங்குண்டாம் எ-று. 11

இதுவுமது.

442 வலக்கண்டலைதோள்புருவந்தொடினு
முலைக்கண்செவிவாய்வயிறு-வலக்கா
லிவைநல்லவேறேயிடந்தொடுவதாகி
லவைவேதனையாமென்.

இ-ள். தலையின் வலப்பக்கம் வலதுபுருவம் வலதுகண் வலது தோள்செவிகள் வாய் முலைக்கண் வயிறு வலதுகால் இவ்வவயவங் களைத்தொடிற் றீங்குண்டாம். 12

இதுவுமது.

443. மேனோக்கிற்சிந்தைபெறத்தருவமேலிறங்கித்
தானோக்கிற்றனூற்றுஞ்சாருதலை-யானு
லனுகுலமேனன்றும்பிரதிகுலமேற்றீதாம்
பனுவலோர்நூலின்பயன்.

இ-ள். நேரேபார்க்கையில் உடனேநலமுண்டாம் இரங்கிப் பார்க்கில் நாட்சென்று நலமுண்டாம் மேலேபார்க்கிற் றீங்குண்டாம் அன்றியும்யாதானும் ஒன்றைச் சார்ந்திருந்து பார்த்தவிடத்து அனுகூலமான காரியங்கட்குநலம் என்று பிரதிகூலமான காயங்கட்குத் தீங்குஎன்றும்சொல்லப்படுவதாம் எ-று. 13

இதுவுமது.

444. உடைகழுத்துவேண்டுற்றுடுக்குமேற்செல்வ
மிடைகாலிரண்டிலெழுந்தோநெ-திடர்மேல்

கிடக்குமேனன்றிழியிற்கேடெய்துமேனின்
றிடக்குமேலத்தனைக்கேடென்.

இ-ள். வஸ்திரத்தைக் கழுத்திற்சுற்றிக்கொள்ளில் ஆக்கமுண்டாம் இடையிலும் காற்களிலும் சுற்றிக்கொள்ளில் ஆக்கமழியும் அன்றியும் மேட்டிலேறிக் குந்தியிருக்கில் நலமுண்டாம்மேட்டிலிருந்திறங்கிவரிற் றீங்குண்டாம்யாதானுமொன்றுமேலிருந்துவிழினும் அதுவேயாம்-எ-று ஆக்கத்தைநலமாகவும் ஆக்கமழிதலைதீங்காகவும் பொருளுரைக்கப்படும் வருவனவற்றுள்ளும் இவ்வாறே பொருளுரைத்துக்கொள்க. 14

இதுவுமது.

445. தொகுத்தல்கெடுத்தற்றுளைக்கோடற்றீது
மிகுத்தன்மிகப்போகம்வெற்றி-மிகுத்த
மணக்கூடலுண்டிபெறற்காணுமேலாங்கே
பிணக்கில்லாநன்மைபெறும்.

இ-ள். யாதானும் ஒன்றை விறிவாக்கு மிடத்து போகமுங்காரிய சித்தியும் உண்டாம்நலம் பெருகும் பாலிக்கிரகணம் நிஷேதிக்கை அன்னப்பிராசனம் இவைகளைக்கண்ட விடத்தும் அதையேயாம் சுருக்கிய விடத்தும் அழித்த விடத்தும் இரந்திரமிட்டவிடத்தும் மேற்கூறியபோகமும் காரியசித்தியும் அழிந்துதீங்குவிளையும்-எ-று.

இதுவுமது.

446. காவின்றிக்கண்விலங்கிக்காணல்கரந்தேய்த்தல்
கோணின்றடிபுகுதல்கைகூப்பல்-காணிற்
களவுமின்னேராக்கவிப்புதருஞ்செல்வ
முளவுமின்னேரென்றுரை.

இ-ள். யாதொன்றையும் குறிக்கொள்ளாது கலவரித்துப்பார்த்தலும் கைளைத்தேய்த்தல் முதலியனசெய்தாலும் நின்றவாறே கவிழ்ந்துகாற்களைப்பிடித்துக்கோடலும் அடிக்கடி கைகூப்புதலும் ஆகியஇவற்றைக் கண்டவிடத்து நட்டமுங்காணுது பெண்பேரில்லைகையிலிருக்கிறபொருளும் நட்டமாம்-எ-று கலவரித்தபார்வையை மேற்பார்வை என்பர். 16

இதுவுமது.

447. பாற்றெறித்தனின்றொன்றைப்பார்த்தல்குறிதாய்க்
குரற்குரைத்தல்கூந்தழ்குலைத்தல்-கரத்தை
முறித்திடுதலங்குலிகாற்றேய்த்திடுதன்முன்பே
குறித்தபொருளிழவாய்க்கூறு.

இ-ள். பருக்கைக்கற்களை விட்டெறிதலும் நின்றவாறே ஒன்றைக் குறும்பார்வையாகப் பார்த்தலும் குரலடைத்துப் பேசுதலும் கூந்தலைக்குலைத்தலும் கைகளைமுறித்துக்கோடலும் கால்விரலால் நிலங்கீறுதலும்ஆகிய இவற்றைக்கண்டவிடத்துவினவினான் குறித்தபொருள் வினவுமுன்னேதானே அப்பாற்கடந்துபோய் விட்டனவாம்-எ-று 17

இதுவுமது.

448 மாடுமனிதர்மரநடுவில்வந்திடினுங்
கோடுமொழிதலையே-கூகுடினு-மூடிக்
கிடந்தானேகேட்பினுங்கேடெய்துநாளு
மடந்தைநல்லாய்கூறல்வழக்கு.

இ-ள். வினவிநின்றவிடத்து நடுவே மாடு மனிதர்கள்வரினும் விறகுசுமைவரினும் வினவினான் வாக்கிலிருந்து அபவாக்குகள் பிறக்கினும் முக்காடிட்டுவினவினும் குறித்தபொருள் கைகூடாவாம்.

இதுவுமது.

449. வெஞ்சுடர்தாள்கத்திவிற்கார்முகங்கண்டு
நஞ்சுடையமூலநடுங்குவன்-பஞ்சு
பிதிர்த்திடினுங்கோபம்பெறுகாலந்தீயே
பிதிர்த்திடினுந்தீதென்றுரை.

இ-ள். வினவிநின்றவிடத்து நடுவே வாள்கத்தி வில் இவைமுதலிய ஆயுதங்களைக் கொடுவரினும் நச்சுப்பூடு முதலியனவாகிய பயப்படத்தக்கவற்றைக் கொடுவரினும் பஞ்சு சிந்தவிடினும் நெருப்பு சிந்தவிடினும் தீங்குண்டாம் கோபித்திருக்குமிடத்து வினவினும் அதுவேயாம் எ-று வில் என்றதை ஒளிவாகவும் கார்முகம் என்றதை வில்லாகவும் பொருளுரைத்துக் கொள்க அல்லது மீசைப்பதமாம் எனினும் ஒக்கும். 18

இதுவுமது.

450. மூக்குநீர்சிந்தன்முகஞ்சுழித்தல்வெய்துயிர்த்தல்
வாக்குளறல்கொட்டாவிவாய்விடுத-லார்க்கும்
பிணிவினவிற்றீராப்பெயர்ந்தபொருள்வாரா
துணிபலவுமுற்றாமைசொல்.

இ-ள். மூக்குசிந்துதல் முகஞ்சுழிக்குதல் பெருமூச்செறிதல் உளறிப்பேசுதல் கொட்டாவிவிடுதல் இவைகள் உண்டானவிடத்து பிணிதீராது நட்டம்காணாது கைகூடிவந்தனவும் அழிந்துபோம்-எ

இதுவுமது.

451. முடியாக்கருமம்பொருட்பேறுமுற்றாக்
கெடியாயினவுங்கெடுமே-முடிவி
லிழந்தனபேறில்லையிணிநோய்பெருகு
முழந்தாளிடந்தொடுதன்முன்.

இ-ள். இடது முழங்காலைத் தொடில் நினைத்தகாரியம் நிறைவேறாது பொருட்பேறில்லை நிறைவேறிவந்த காரியமும் அழிந்துபோம் நட்டமும் காணாதுபிணி இரட்டித்தலேயன்றித் தீருதல் இல்லை-எ-று. 21

இதுவுமது.

452. வாழ்வேமணஞ்சுகம்வாணிபம்வான்கருமந்
தாழ்வேயரைபிட்டந்தானிடத்திற்-றாழாத்
தலைமார்பகம்வலக்காற்றொடிற்றமபெண்டீர்க்
கிலையேயிழவேற்றுமென்.

இ-ள். அரையின் இடதுபக்கம் அல்லது இடதுபிட்டம் இவற்றைத்தொடில் இல்வாழ்க்கை கலியாணம் இன்பல்வாணிபம் மற்றுமுள்ள முயற்சிகள் தாழ்வடையும் அல்லது மனையாட்டிக்குச்சேதம்வரும் தலையின் வலதுபக்கம் அல்லதுமார்பின் வலதுபக்கம் வலதுகால் இவற்றைத்தொடில் தாழ்வடையாது-எ-று. 22

நட்டநிமிர்த்தம் உணர்த்துகின்றது.

453. வட்டமாய்க்கேறின்வயிறுதோள்வாய்வதனந்
தொட்டினுங்கெட்டனதான்றோன்றுமாம்-பிட்ட
மரைகானமுதுகுபிடரிகைக்கீழென்
றுரைதானந்தோன்றாமையோர்.

இ-ள். வட்டமாகக்கிறினும் முகம் வாய் கோட்கள் வயிறுஇவற்றைத்தொடினும்நட்டம்காணும் பிடரிகைக்கீழ்நாள் முதுகுஅரைபிட்டங்கள் காற்கள் இவற்றைத்தொடில் நட்டம்காணாது-எ-று. 3

பிணிநிமித்தம் உணர்த்துகின்றது.

454. காட்சிமுடியாதெனந்தோகருமமே
மீட்சியுமின்னன்றிரியுமே-மீட்சி
யிரைவளையாயிங்கிவற்றுளொன்றிவர்களுண்டேற்
சிரைவளைநோய்தீங்குறுதல்செப்பு.

இ-ள். என்ன கண்காட்சி என்றுற்பட்டு முடியாது அய்யோ இதென்ன கருமமோ இன்னமும் ஒருக்கால்எழுந்து உலாவுவரோ என்கிற இவைமுதலிய அபவாக்குகளால் வினவுமிடத்து பிணிதீராது தாவிளையாமே இன்றையில் நாளையில் சவுக்கியந்தானே என்கிற இவைமுதலிய சுபவாக்குகளால் வினவுமிடத்து பிணிதீரும்-எ-று. அபவாக்குகளைக் கூறி இவைமுதலிய அபவாக்குகளால் வினவுமிடத்து பிணிதீராது எனவே சுபவாக்குகளை வருவித்து இவைமுதலிய சுபவாக்குகளால் வினவுமிடத்து பிணிதீரும் என்பது பெற்றும் சிரைவளைநோய் என்றது நாடிகளை ஆதாரமாகக்கொண்டுள்ள பிணி என்கிற பொருளுடைத்து. 24

மரணநிமித்தம் உணர்த்துகின்றது.

455. நாகந்தரித்தார்நடையிலார்நாணமிலார்
சோகமுடையார்சுடர்ப்படையார்-போகந்
துறந்தார்வெறுங்கழுத்தர்துன்னுதார்காண்ட
லிறந்தானென்றெண்ணப்படும்

இ-ள் பாம்பாட்டிகள் முடவர்கள் நாணமற்றவர்கள் துக்கிகள் ஆயுதபாணிகள் துறவுநள் கைம்பெண்கள் பகையாளிகள் இவர்களைக்கண்டவிடத்து மரணமாம்-எ-று. 25

இதுவுமது.

456. நூலைக்கயிற்றைநெருடன்முருக்கியிடல்
காலைக்கையாற்பிடித்தல்கண்ணாக்கன்-மேலைத்
தலையிலீமஞ்சுமத்தற்முன்கிடத்தற்றாங்கல்
கொலைதீமைநோய்மரணங்கூறு.

இ-ள். நூலை நெருடுதல் கயிற்றை முறுக்குதல் கால்களைக் கைகளிலே பிடித்தல் கண்களை அரக்குதல் கட்டையைத் தலையின்பேரிலே எடுத்துக்கொள்ளுதல் படுத்துக்கொண்டு வினவுதல் வினவினவாறே தூங்கிவிழுதல் இவைகள் உண்டானவிடத்து மரணமாம் எ-று கொலையும் தீராப்பிணியும் மரணத்திற்கு ஏதுவாதலால்கொலைதீமை நோய் மரணம் என்றார் வருவனவற்றுள்ளும் இவைகண்டுகொள்க ஈமஞ்சுமத்தற்கு என்று சுமத்தலைக் குறிப்பித்தவதனால் விறகு தலையைக்கண்டவிடத்தும் இவை ஒக்கும். 26

### இதுவுமது.

457 எண்ணைமெய்ப்பூசலெயிறுரிஞ்சன்மைதீர்த்தல்
கண்ணையேமுடல்கதவடைத்தன்-மண்ணசையக்
கோவோடன்மந்தை நிலைகெடுதல்கூர்தருநோய்
சாவோடுகேடுதரும்

இ-ள். எண்ணையிட்டுக்கொள்ளுதல் பற்றுலக்கல்செளளம்ஆதல் கண்மூடுதல் கதவுசாத்துதல் பசுஓடுதல் ஆடுமாடுகளின் மந்தை கலைதல் இவைகளைக் கண்டவிடத்து மரணமாம்-எ-று. 27

### இராசாதிபத்தியநிமித்தம் உணர்த்துகின்றது.

458. கோலமிடுதல்குடைபிடித்தல்கொங்கலர்பூ
மாலையுடையமயிர்முடித்தன்-மாலை
முடிக்கேற்றிவைத்தன்முடிமன்னர்போற்றும்
படிப்பேறுபார்த்திபராம்பார்.

இ-ள் மாமுதலியவற்றாற் கோலமிடுதல் குடைபிடித்தல் மயிர்முடித்தல் பூச்சரம் சூடிக்கொள்ளுதல் இவைகளைக் கண்டவிடத்து இராசாதிபதியாம் எ-று. படிப்பேறு என்று அடைகொடுத்தவதனால் இதனையே கிராமாதி பத்தியத்திற்கும் மண்டலாதி பத்தியத்திற்கும் ஒத்துரைக்கப்படும். 28

### தனாதிபத்திய நிமித்தம் உணர்த்துகின்றது.

459. வையந்திருத்தல்வடிகவழுதன்மற்றொன்றைக்
கைவைத்தல்சிந்தைதனித்திருத்தல்-கையாற்
றழுவன்மொழியின்பந்தாறைருதலுண்டேல்
வழுவினிதிபெறுகும்வைந்து.

இ-ள். பூமியைத் திருத்துதல் உருவெழுதல் மற்றோருருவைக் கைகளிலே வைத்திருத்தல் கனிந்திருத்தல் யாதானும் ஒன்றைத் தழுவிக்கோடல் கனிந்துபேசுதல் இவைகள் உண்டானவிடத்து தனுதிபதியாம் எ-று. 29

சீழ் நீர் நிமித்தம் உணர்த்துகின்றது.

460. பால்வெண்ணை பார்ப்பார்பரிமாப்பகடெருமை
சூல்வெண்சுரபியொடுசூலின்பெண்சாலக்
குடநிரைநீர்பெண்கடலைமுழுக்கதுண்டேற்
றிடநிரைநீர்கூவந்தெளி.

இ-ள். பால்வெண்ணை பார்ப்பார் குதிரை எருது எருமை சினைப்பசு கருப்பிணிநிறை குடம் சூதகப்பெண்கள் இவைகளைக் கண்டவிடத்து மடங்கா நீருண்டாம்-எ-று. 30

சந்துசந்தின்மைகளின் நிமித்தம் உணர்த்துகின்றது.

461. ஒன்றோடொன்றுகூட்டிற்புணர்ச்சியாமொன்றகற்றி
னின்றுபகையாகநேருங்கா-ளொன்று
பிறித்துதிணைக்கிலுறவாமிணைப்பைப்
பிறித்தல்பிறிவாகப்பேசு.

இ-ள். யாதானும் ஒன்றுடனே ஒன்று இருக்கவைக்கிற் சந்தாம் இருதவற்றுள்ளே ஒன்றைநீக்கிவைக்கிற் சந்தின்மையாம் அன்றியும் ஆடைமுதலியன கிழிந்தவற்றை இணைக்கிற்சந்தாம்கிழிக்கிற் சந்தின்மையாம்-எ-று. கிழித்தலேபோல கயிறுமரம்முதலியவற்றை அறுத்தல்பிளத்தல் ஒடித்தல்முதலானவைகளும்கொள்க.

யாத்திரை நிமித்தம் உணர்த்துகின்றது.

462. விரும்புமரைவானரம்வெம்பரிமேலாரோர்
குரும்பைமுலைமடவார்கூட்டம்-விரும்புங்
கொடையாளர்கொற்றப்படையாளர்கூறு
நடையாளரகாண்டநலம்.

இ-ள். மரை வானரம் இவற்றையும் பரியூர்ந்துவருவோர் குமரிப்பெண்கள் தியாகிகள் அரசர்கள் வழிப்போக்கர்கள் இவர்களையும் கண்டவிடத்து யாத்திரை யுண்டாம் எ-று. இவற்றைச் சகுன நிமித்தம்என்னிலும் ஒக்கும் வருவன வற்றுள்ளும் இவை யூகித்துக் கொள்க. 32

இதுவுமது.

463. அல்லற்படுவோரகமோடகந்தையுளார்
கொல்லப்படுவார்குறைப்புண்டார்-நில்லின்
புடைநின்றிகழ்வுடையார்போரிடுவார்தம்மைக்
கடைதலையுங்காண்டல்காண்டல்கடை.

இ-ள். துக்கிகள் கர்மிகள் ஆணவிகள் கொலைஞர் வெட்டுணி கள் சோம்பிகள் கலகக்காரர் இவர்களைக்கண்டவிடத்து யாத்திரை இன்னம் யாம் என்றவாறு. 33

மழை நிமித்தம் உணர்த்துகின்றது.

464. உமிழ்த்தருளித்தலுமிழ்நீரொழுக
விமைத்தன்முடிதாழ்த்திடுத-லிமைத்தளவிற்
கண்ணீர்பொழிந்திடுதல்கார்விருப்பப்பார்விரும்பும்
விண்ணீர்பொழிந்திடுதன்மெய்.

இ-ள். மழைவினவுமிடத்து உமிழ்தல் உமிழ்நீர் தெறித்தல் கடைவாயொழுகல் கண்ணிமைக்குதல் முடிதாழ்க்குதல் கண்ணீ ரொழுகல் இவைகளுண்டானவிடத்து மழைபெய்யும் என்றவாறு. உமிழ்தல் என்றது உமிழ்த்தல் என ஒற்றுமிக்கது கண்ணீர்பொழி ந்திடுதல் என்றது கண்ணீரொழுகல் என்கிறசொல்லை விளக்கிற்று.

மாநிமித்தகாண்டம் முற்றிற்று.

சினேந்திரமாலை,

முற்றுப்பெற்றது.

I. 63791